

இங்கே போயிருக்கிறீர்களா?

சாவி



இங்கே
போயிருக்கிறீர்களா?

சாவி

பூம்புகார் பிரசுரம்
109, மன்னார்சாமி கோவில் தெரு,
சென்னை-600 013.

விலை ரூ. 9-90

முதல் பதிப்பு : மார்ச், 1977.

அச்சிட்டவர்கள் : பி. எல். எஸ். பிரஸ், சென்னை-24.

என்னுரை

சிறு வயதிலிருந்தே எனக்கு ஒரு பழக்கம்; வீட்டில் அடைபட்டிருக்க மாட்டேன்; எங்கேயாவது 'சுருசுரு' வென்று சுற்றிக்கொண்டே இருப்பேன். அது வெறும் சுற்ற லாக இல்லாமல், அங்குள்ள சிறப்புகளை அறிந்து கொள்ள ஓர் ஆர்வத்தை உண்டாக்கக் காரணமாக இருந்தது.

என்னைத் தெரிந்தவர்கள் என்னுடைய அந்தச் சுபா வத்தை, அந்த நாட்களிலேயே பாராட்டினர்கள்; என்னைத் தெரியாதவர்கள் 'ஊர் சுற்றி' என்று சொன்னர்கள். நான் ஊர் சுற்றியோ? உலகம் சுற்றியோ? அப்படிச் சுற்றுவதில் எனக்கு ஒரு சுகம் அன்றும் இருந்தது; இன்றும் இருக்கிறது.

அந்த பழக்கத்திலிருந்து பிறந்த எழுச்சி, எங்கேயாவது சுற்றி எதையாவது புதிதாகத் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற எண்ணத்தை எனக்கு ஏற்படுத்தித் தந்திருக்கிறது. நான் எழுத்தாளனுகி, பத்திரிகையாளனுகி, பத்திரிகை ஆசிரியராகப் பணி ஆற்றத் தொடங்கியது முதல் என்னுள் இருந்து வரும் அந்தப் பழக்கம் மேலும் மிகுந்திருக்கிறது.

பத்திரிகை ஆபீஸ்களில் தரப்பட்டிருக்கும் அறைக்குள் முடங்கிக் கிடப்பது எனக்கு எப்போதுமே பிடிக்காது. வெளிநடப்புகளைப் பார்க்கும் அடக்கம் எனக்குப் பிடிக்காத ஒன்று. எதையும் நேரில் சென்று பார்க்க வேண்டும்; அந்த அனுபவங்களை எழுத வேண்டும் என்ற கொள்கை உடைய வன் நான். அவ்வாறு வெளிவந்து சுற்றியதில் கிடைத்த சுவையான அனுபவங்களை நகைச்சுவையோடு சொல்லத் தொடங்கினேன். அந்தப் புதிய கண்ணேட்டத்தின் ஒரு படைப்புத்தான் ''இங்கே போயிருக்கிறீர்களா?'' என்ற இந்தத் தொகுப்பு.

''இங்கே போயிருக்கிறீர்களா?'' என்று நான் வாசகர் களைப் பார்த்து ஒரு கேள்வியை எழுப்பி விட்டுச் சும்மா இருந்துவிடவில்லை. நான் சென்று வந்த இடங்களில் கண் டதையெல்லாம் ஒரு 'நியூஸ் ரீல்' போலச் சுவையாகச் சொல்லியிருக்கிறேன். நமது நாட்டில் நான் போகாத இடங்கள் இல்லை. சுற்றிப் பார்க்காத பகுதிகள் இல்லை. சென்ற இடங்களில் எல்லாம் எல்லாருக்கும் தெரிந்ததையே திரும்பத் திரும்பச் சொல்லவில்லை. சந்து பொந்துகளில் எல்லாம் புகுந்து புறப்பட்டு, மூலை முடுக்குகளில் எல்லாம் நின்று கவனித்து, அந்த அனுபவங்களை அப்படியே எழுதி யிருக்கிறேன்.

நான் பெங்களூருக்கு எத்தனையோ முறை போயிருக் கிறேன். அங்குள்ள லால்பாக்கின் இயற்கை அழகையும் விதான் சௌதாவின் வனப்பையும் மட்டும் கண்டு களித்து விட்டு வந்து விடுவதில்லை. மல்லேசுவரத்தில் சுடச்சுட மசால் வடை எந்த இடத்தில் கிடைக்கும் என்பதும் எனக்குத் தெரியும்.

எதையும் சரிவரக் கூர்ந்து கவனிக்க வேண்டும்; கவனித் ததை ரசமாகச் சொல்ல வேண்டும்; படிப்பவர்களை அந்த

இடத்திற்கு அழைத்து சென்றுவிட வேண்டும் என்பதுதான் என்னுடைய குறிக்கோள்.

ஏதாவது ஒன்றை எந்த ஊரிலாவது பார்த்தால், அதைப் பார்வைக்கு மட்டும் ஒரு காட்சியாக்கிவிடாமல், அதையே காதுக்கும் மூக்கிற்கும் எப்படியெல்லாம் பயன் படுத்தலாம் என்று நான் திட்டமிடுவேன். உதாரணமாகப் 'பொள்ளாச்சி சந்தை' பற்றி இந்தக் கட்டுரைத் தொகுப் பில் இடம் பெற்றிருக்கும் ஒரு பகுதியில் அந்தச் சந்தையில் புரளுகிற கொங்கு நாட்டு மொழியை அவர்கள் எப்படிப் பேசுகிறுர்களோ அப்படியே தந்திருக்கிறேன். மாடுகள் விற் பனே செய்யும் பகுதியில் அவர்கள் மாட்டு பாஷையிலேயே பணத்திற்கும் ஒரு பரிபாஷையைப் பயன்படுத்துவதையும் குறிப்பிட்டிருக்கிறேன். அதைப்போலவே மூக்கு அனுப வித்த பலாப்பழ வாசனே, கதம்ப மணம் பற்றியும் குறிப் பிட்டிருக்கிறேன்.

உலக நாடுகள் சுற்றிப் பார்த்து இதே குறிக்கோளோடு சிறு சிறு விஷயங்களேயெல்லாம் தேடிக் கண்டு பிடித்துச் சுவையாக வாசகர்களுக்குச் சொல்லவேண்டும் என்பது என் னுடைய நீண்ட நாளேய ஆசை. அது எப்பொழுது நிறை வேறுமோ தெரியாது.

பிரயாணக் கட்டுரையில் ஒரு புதிய முறையைப் பின் பற்றவேண்டும் என்ற என் நெடு நாளேய லட்சியத்திற்கு இந்த 'இங்கே போயிருக்கிறீர்களா?' ஒரு சின்ன வாய்ப்பு.

இந்தப் புது முறைக் கட்டுரைத் தொகுப்பை மிகச் சிறந்த முறையில் அழகாக அச்சிட்டு வெளியிட்டுள்ளார்கள் சென்னே பூம்புகார் பிரசுரத்தார். அவர்கள் மீது எந்தப் புகாரும் சொல்ல முடியாத அளவிற்கு இந்தப் பயண நூல் அமைந்துள்ளது.

அவர்களுக்கு என் நன்றி.

'பொன்னியின் புதல்வர்' என்ற பெயரில் பேராசிரியர் கல்கி அவர்களின் வாழ்க்கை வரலாற்று நூல் எழுதிப் பெரும் புகழ் பெற்றுள்ள என் அருமை நண்பர் திரு. சுந்தர் அவர்கள் இந்தப் புத்தகத்துக்கு முன்னுரை வழங்கியுள்ளார் கள். தமது லண்டன் வாழ்க்கையைப் பற்றி 'ஆங்கில வாழ்க்கை' என்ற தலேப்பில் பல கட்டுரைகள் எழுதியவர். நகைச்சுவையோடு, ரத்னச் சுருக்கமாக அமைந்துள்ள அந் தக் கட்டுரைகளே அவர் 'புதிய டெக்னிக்'கில் எழுதியுள் ளார். அதைக்கூட பூம்புகார் பிரசுரத்தினர் புத்தகமாக வெளியிட்டால் அது தமிழுக்கு அவர்கள் செய்த ஒரு சிறந்த சேவையாக இருக்கும்.

என் வேண்டுகோளுக்கு இணங்கி இப்புத்தகத்துக்கு முன்னுரை எழுதித் தந்த திரு. சுந்தாவுக்கு நன்றி கூறி என்னுரையை முடித்துக் கொள்கிறேன்.

சாவி

ஆசிரியர், தினமணி கதிர்

சென்னே

23-3-77

91/4

ஆனந்தக் கலைஞர்

சுந்தா

இந்த நூலில் உள்ள கட்டுரைகளில் ஒன்று, புது டெல்லியில் பாரத ரத்தினம் நேருஜி வசித்திருந்த ''தீன் மூர்த்தி பவன்'' என்ற புகழாலயம் பற்றியது. அந்த ஆலயத்தையும் டெல்லி நகரின் மற்றக் காட்சிகளையும் சுற்றிப் பார்ப்பதற்காக நூலாசிரியர் சாவி வந்திருந்த போது, என் வீட்டில்தான் தங்கியிருந்தார். அப்போது ஒரு நாள் என் புத்தக அலமாரிகளை அவர் குடைந்து பார்த்து, ''என் சுய வரலாறு'' என்ற மகுடத்துடன் சார்லி சாப்ளின் எழுதிய நூலை உருவி எடுத்து அதைத் தமக்குப் படிக்கக் கொடுக்கும்படிக் கேட்டார். ''படிக்க மட்டும் அல்லாமல் உங்களுக்குச் சொந்தமாகவே தரு கிறேன்'' என்று நான் சொல்லி அதைக் கொடுத்தேன். அப்படிக் கொடுக்கையில் அதன் முகப்புப் பக்கத்தில் நான் எழுதிய வாக்கியம் :

சாவி சாப்ளினுக்கு அன்பளிப்பு

வேடிக்கையாய்ச் சூட்டிய பெயர்தான்; ஆயினும் உண்மையான பாராட்டு இதிலே பொதிந்திருக்கிறது. நகைச்சுவை நடிப்புக் கலையில் சாப்ளின் எப்படியோ, அப்படியே நகைச்சுவை எழுத்துக் கலையில் சாவி சாப்ளின்!

கணப்பொழுதில் புனைந்த இந்தப் பெயருக்கான தோற்றக்கூறு, பல ஆண்டுகளுக்கு முன்பே உண்டான தாகும்.

திடீரென ஒரு நாள் என் வீட்டிற்கு வந்தார் சாவி. ''என்ன காரியமாய் இந்த ஊருக்கு வந்தீர்கள்?'' என்று நான் கேட்டதற்கு, ''சும்மாதான் இப்படி...'' என்று சொல்லிவிட்டு, எங்கள் இருவருக்கும் பிடித்ததும், நாங்கள் இருவரும் பயில்வதுமான நகைச்சுவை இலக்கியம் பற்றிப் பேசத் தொடங்கினர். எழுத்தினல் மட்டும் அல்லாமல் பேச்சினலும் அவர் சிரிப்பு வாணங்களை வெடிக்க வல்லவர் என்பதை அப்போது நான் கண்டு வியந்தேன். மிமிக்ரி யிலும் அவர் தேர்ந்தவர் என்பதை அறிந்து கொண்டது மற்ருெரு வியப்பு. சிலருடைய பேச்சுக்களை அப்படியே முகபாவங்களுடன் கேலிப் போலிப்பு செய்து காட்டினர். சுமார் இரண்டு மணி நேரம் என்னைச் சிரிப்பு அலைகளில் குலுக்கி எடுத்துவிட்டு வந்தது போலவே திடீரெனப் புறப்பட்டு விட்டார். அவரை வழியனுப்புகையில், ஒரு பத்திரிகையின் பெயரைக் குறிப்பிட்டு, ''அதில்தானே இருக்கிறீர்கள்?'' என்று கேட்டேன்.

''இல்லை, அந்த வேலை போய்விட்டது,'' என்று சொல்லிக்கொண்டே அவர் வேகமாய் நடந்தார். பின்னே ஓடிப்போய் என் அனுதாபத்தைத் தெரிவிக்கத் துடித்தேன். ஆனல் வேண்டுமென்றே அதைக் கேட்க விரும்பாதவர் போல் அவர் விரைந்தோடியதால், வாசற்படியில் நின்ற படியே, அவருடைய உருவம் தெருவின் திருப்பத்தில் மறை கிறவரையில் பார்த்துக் கொண்டிருந்தேன். ''இடுக்கண்

வருங்கால் நகுக'' என்ற வாக்கின்படி ஒருவர் உண்மையிலேயே நடந்து கொள்ள முடியும் என்பதை முதல் தடவையாகக் கண்டேன். அப்போது, மேலும் அடுத்தடுத்து அந்த இயல்பை அவரிடம் கண்டுகொண்டே இருந்தேன். அதைக் குறிப்பிட்டு ஒரு சமயம் நான் பேசிய விவரத்தை இங்கே எடுத்துச் சொல்லலாம்—

சாவிக்குப் பெரும் புகழ் அளித்த ''வாஷிங்டனில் திருமணம்'' ஆனந்த விகடனில் தொடர் கதையாய் ஓடிய பின் புத்தகமாய் வெளியானதை அடுத்து, அவர் டெல்லிக்கு வந்திருந்த சமயம் அது. தில்லி தமிழ்ச் சங்கத்தில் அப்போது அவருக்கு ஒரு பாராட்டுக் கூட்டம் நடத்தினேம். அவரை நான் வரவேற்றுப் பேசுகையில், எப்படி அவர் அந்தக் கதையில் பல்வேறு நகைச்சுவை உத்திகளை நயமாய்க் கையாண்டிருக்கிருர் என்பதையும், என்னென்ன அம்சங்களில் அது இணையற்றதோர் நூலாய் விளங்குகிறது என்பதையும் இலக்கிய மதிப்பீட்டு முறையில் எடுத்துச் சொன்னேன். பிறகு, மனத்தத்துவ ஆராய்ச்சி முறையில் கூறினேன்.

''சாவியின் மனத் திண்மைக்கும் எழுத்துத் திறமைக்கும் ஒரு தொடர்பு உண்டு. வாழ்க்கையில் எத்தனையோ துன்பங்கள், தொல்லைகள், கவலைகள், ஏமாற்றங்கள், இவருடைய வாழ்க்கையில் இவை அதிகமாகவே இருந்திருக்கின்றன. ஆனுல், இவற்றினிடையே இவர் அசாதாரண தைரியத்துடனும் நம்பிக்கையுடனும் வளைய வருகிருர். எதுவும் பாதிக்காத விதத்தில், ஓர் ஆனந்த மனநிலையைக் கொண்டிருக்கிருர். இந்த மனநிலையே இவருடைய எழுத்துக்களில் இவ்வளவு மகிழ்ச்சியைப் பெருகி ஓடச்செய்கிறது. இவருடைய கலை ஆனந்த கலை; இதன் மூலம் இவர் சிரிப்பூட்டுகிருர் என்று சொல்வது சாதாரணம்; ஆறுதலும் தேறுதலும் நம்பிக்கையும் ஊட்டுகிருர் என்றுதான் சிறப்பாய்ச் சொல்லவேண்டும்.

ஆனந்தக் கலைஞர் சாவியின் மனத்திண்மைக்குச் சான்ருக இன்னும் சில சம்பவங்களை, இரண்டு ஆண்டுகளுக்கு முன்னுல் அவருடைய மணி விழாவை முன்னிட்டு வெளியான பாராட்டு மலரில் எழுதி இருந்தேன். அவற்றை இங்கே மீண்டும் சொல்ல வேண்டியதில்லை. அந்த மலரில் உள்ள சிறப்பு அம்சம் ஒன்றை மட்டும் சொன்னுல் போதும்.

அந்த மலரின் முதல் மூன்று பக்கங்களில் மூன்று படங்கள். முதல் படத்தில், ''தாய் தந்தை'' என்ற தலைப்புடன் சாவியின் பெற்ருேர்கள்; மூன்ருவது படத்தில், ''தெய்வம்'' என்ற மகுடத்துடன் காஞ்சி பீடாதிபதி; நடுப்பக்கத்தில் குரு என்ற வர்ணனையுடன் கல்கி.

தமது இலக்கிய குருவாகக் கல்கியைக் கொண்டவர் சாவி—இலக்கியம் என்பதன் இரு பொருள்களிலும், சிறு வயதிலேயே கல்கியின் எழுத்தில் மோகம் கொண்ட சாவி, அவரைபோல் களிப்பும் வியப்பும் பொங்க எழுதவேண்டும் எனக் கனவு கண்டார். அவரைப்போல் பத்திரிகைத் தொழிலில் ஈடுபட்டுச் செல்வாக்குடன் சிறக்க வேண்டும் என்றும், அவரிடமே அத்தொழிலைப் பயிலவேண்டும் என்றும் ஆசைப்

பட்டார். எப்படி எல்லாமோ முயற்சிகளும் தந்திரங்களும் செய்து அந்த ஆசையை நிறைவேற்றிக் கொண்டார். முதலில் ஆனந்த விகடனிலும், பின்னர் கல்கி பத்திரிகையிலும் உதவி ஆசிரியராய் இருந்து பத்திரிகைத் தொழிலையும் எழுத்துக்கலையையும் தமது இலக்கிய ஆசானிடமிருந்து நேர்முகமாய்க் கற்றுத் தேர்ந்தார்.

சாவியின் ஆர்வத்தையும் திறமையையும் கல்கி நன்ருகப் பேணி வளர்த்தார்; அவற்றை நன்ருகப் பயன்படுத்திக் கொள்ளவும் செய்தார். அவர் சாவிக்கு அளித்த வாய்ப்புக்களில் அரிதாகவும் பெரிதாகவும் இருந்தது, ''நவகாளி யாத்திரை''.

வங்க நாட்டில் மனிதனை மனிதன் மாய்க்கும் கொடுமை நிகழ்ந்த நவகாளிப் பிரதேசத்தில் அமைதியை நிலைநாட்டுவதற்காக சாந்த மூர்த்தி காந்தி மகாத்மா மேற்கொண்ட பாத யாத்திரையில் கல்கியின் பிரதிநிதியாகவும் நிருபராகவும் சாவி சேர்ந்து கொண்டு செய்த புனிதப்பயணம் அது. அந்த யாத்திரையின் அனுபவங்களை உருக்கமும் நகைச்சுவையும் இழைந்தோட, அவர் கல்கி பத்திரிகையில் எழுதிய கட்டுரைத் தொடர், சிறந்ததோர் எழுத்தாளராக அவரை வாசகர்கள் கொண்டாடும்படி செய்தது. குருவின் பெருமையுடன் கல்கியும் அதைக் கொண்டாடினுர்; எவ்வாறு, எவ்வளவில் என்பதை, அத்தொடர் புத்தக வடிவில் வந்தபோது அதற்குக் கல்கி வழங்கிய அணிந்துரை புலப்படுத்திற்று :

''இந்த நூலில் உள்ள கட்டுரைகள் வெறும் நகைச்சுவைக் கட்டுரைகள் அல்ல; வெறும் பிரயாணக் கட்டுரைகள் அல்ல; சரித்திரத்தில் இடம் பெற வேண்டிய முக்கிய நிகழ்ச்சி பற்றிய தார்மீகக் கட்டுரைகள்; காந்திஜியையும் அவருடைய ஜீவிய தர்மத்தையும் எல்லாரும் அறியத் தெளிவாக்கித் தரும் கட்டுரைகள்; இலக்கியம் என்று சொல்வதற்குரிய ரஸமான கட்டுரைகள்....''

இத்தகைய பாராட்டைப் பெற்ற ''நவகாளி யாத்திரை'', இந்நூலில் இடம் பெற்றுள்ள உள்நாட்டுப் பயணக் கட்டுரைகளுக்கு முன்னேடி; பின்னர் சாவி வெளிநாடுகளில் பயணம் செய்து எழுதியவற்றுக்கும் அப்படியே.

இதில் மொத்தம் உள்ள 31 கட்டுரைகளும் முன்னேடிக்கு மேல் பல வகையில் முன்னேற்றம் கொண்டவை; எல்லாம் சாவியின் ஆனந்தக் கலை வண்ணங்கள்.

இவற்றில் நகைச்சுவை மேலோங்கியுள்ளன. ஆயினும் அது மட்டுமே ஒரு தனிச்சுவையாய் இருக்கவில்லை. பலவிதச் சுவைகளும் ஊடாடுகின்றன. இக்கட்டுரைகள் வர்ணிக்கும் இடங்களும் விதவிதமானவை; வர்ணனைகளும் விதவிதமானவை. இவற்றைப் பயணக் கட்டுரைகள் என்று அல்லாமல், காட்சிக் கட்டுரைகள் அல்லது சொல்லோவியங்கள் என்று வர்ணிப்பதுதான் பொருத்தமாய் இருக்கும்.

இந்தக் கட்டுரைகள் முதலில் ஆனந்த விகடனில் வந்தபோது இவற்றிற்குத் துணையாக ஓவியர் கோபுலுவின்

சித்திரங்கள் வெளியாயின. சாவியுடன் கோபுலு நெடு கிலும் சென்று வரைந்தவை அவை. கட்டுரைகளையும் சித்திரங்களையும் சேர்ந்தாற்போல் பார்த்த ரசிகர்கள், ''முன்பு கல்கியும் மாலியும் போல இப்போது சாவியும் கோபுலுவும்'' என்று மெச்சிப் பேசிக் கொண்டார்கள்.

சாவியும் கோபுலுவும் எவ்வளவோ தாராள மனசு உள்ளவர்கள்தாம். ஆனல் தத்தம் கலைத் திறமையை வெளிப்படுத்தும் முறையில் மிகவும் செட்டும் கட்டுமான ஆசாமிகள். மிகக் குறைவான கோடுகளைக் கொண்டே தான் தமது சித்திரங்களை வரைவார் கோபுலு; மிகக் குறை வான சொற்களைக் கொண்டேதான் தமது கட்டுரைகளை எழுதுவார் சாவி.

சுருக்கமே சுவை; எளிமையே இனிமை; அழகே ஆனந் தம். இம்மூன்றின் உண்மையையும் இந்நூலில் காணலாம். உதாரணங்களாய்ச் சில பகுதிகளை இங்கே கொடுக்க வேண் டிய அவசியம் இல்லை. நீங்களே படித்துப் பார்த்துக் கொள்ளலாம்.

பொதுவாக ஒன்று சொல்லலாம். சாவியின் கட்டுரை கள் கதைகளுக்கு ஒப்பான சுவையுள்ளவை; அவற்றிலே சில கதைகளுக்கும் மேலான சுவையுள்ளவை. இந்த இரண்டு வகைகளும் இந்நூலிலே இருக்கின்றன.

கல்கிக்குப் பிறகு அவருக்கு ஒப்பாக எனது எழுத்தாற் றலுக்கு ஊக்கம் ஊட்டியவர் சாவி. எனது டெல்லி அனு பவக் கட்டுரைகளைத் தமது தினமணி கதிரில் இவர் வெளி யிட்டதைச் சிறப்பாகக் குறிப்பிட வேண்டும். அவற்றைப் படித்துவிட்டுத்தான், கல்கியின் வாழ்க்கை வரலாற்றை எழுதும் பணியில் அவருடைய குமாரர் திரு. ராஜேந்திரன் என்னை ஈடுபடுத்தினர். இதன் விளைவாய் ''பொன்னியின் புதல்வர்'' வரலாற்றை நான் எழுதி முடித்து மனநிறைவு கொண்டுள்ள இவ்வேளையில், தமது இந்த நூலுக்கு அணிந் துரை எழுதும் பெருமையை எனக்குச் சாவி அளித்துள் ளார். உண்மையில் அறிய பெருமை இது.

எவ்வளவு பெருமையாய் இருப்பினும் இவ்வளவு போதும் என் முன்னுரையாக.

இதோ உங்களை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டு நிற்கிருர் ஆனந்தக் கலைஞர், மெரினு கடற்கரையில்! அங் கிருந்து, ''இங்கே போயிருக்கிறீர்களா?'' என்று கேட்டுக் கொண்டே உங்களைப் பல்வேறு இடங்களுக்குக் கூட்டிச் செல்வார். அவற்றில் சில இடங்களுக்கு நீங்கள் ஏற்கனவே போயிருந்தால் என்ன? மீண்டும் அவற்றைச் சாவியின் கண் ணேட்டத்திலும் சொல்லோட்டத்திலும் பார்க்கலாம். போயிராத இடங்களையோ புதுமையைக் காணும் வியப் புடன் கற்பனைக் கண்ணுல் காணலாம்; அவற்றையே பின் னர் நேரில் காண வாய்க்கும்போது, எதை எதை எப்படி எப்படிச் சாவி வர்ணித்தார் என்பதை ஞாபகப்படுத்திக் கொண்டு மகிழலாம்.

ஊம், தொடங்கட்டும் ஆனந்தப் பயணம்!

மெரினு கடற்கரை

1

கறுப்பு நிறத் தார் ரோடு; அதை ஒட்டிச் சிவப்பு நிற சிமெண்டுப் பாதை. அதை அடுத்துப் பச்சை நிறப் பூஞ் செடிகள். அதற்குப் பின்னுல் தங்க நிற மணல் பரப்பு. அதற்கும் பின்னுல் நீலத் திரை கடல்!

நடைபாதையிலிருந்து பிரிந்து செல்லும் இடைவழிகளுக்கு இரு புறத்திலும் சிமெண்டு பெஞ்சுகள். டிரான்ஸிஸ்டருடன் நடை பாதை ஓரத்தில் உட்கார்ந்திருப்பவர்களைக் கடைக்கண்ணுல் கவனித்துக்கொண்டே நடக்கிருேம்.

'வாக்கிங் ஸ்டிக்'குடன் கூடிய வயோதிகர்கள் சிலர் பெஞ்சு களில் உட்கார்ந்து 'பாலிடிக்ஸ்' பேசிக்கொண் டிருக்கிருர்கள்.

''காமராஜுக்கு ஏரோட்ரோமிலே ஏக தடபுடலாமே! ஆருயிரம் மாலையாம்!''

''எத்தனை?''

''ஸிக்ஸ் தௌஸண்ட்!''

''அந்த ஆருயிரம் மாலைகளின் பெருமைகளையும் ஒரே ஒரு மாலை வந்து தட்டிக்கொண்டு போய்விட்டதே!''

''ஆமாம்; ஊரெல்லாம் அதைப்பற்றித்தான் பேச்சு. பாலி டிக்ஸ் வேறே, பர்ஸனுலிடி வேறே, இல்லையா?''

இன்னெரு பெரியவர் காரிலிருந்து இறங்கி வருகிருர்.

''ராகவய்யங்காரா? வாங்கோ . . . ! நேத்து எங்கே இந்தப் பக்கமா வந்தீங்க? யூஷுவலா எட்வர்ட் எலியட்ஸ் ரோட் பக்கமா வருவீங்களே . . . ? ''

''ஆமாம்; அந்தப் பக்கமா ராதாகிருஷ்ணன் வந்தார். டிராபிக் ஜாம்லே மாட்டிக்க வேணுமேன்னு நான் இப்படி வந்தேன் . . .''

மணலில் இறங்கி, கடலை நோக்கி நடக்கிருேம்.

அங்கே பலவிதமான மனிதர்கள் பலவிதமான ஆடைகளுடன் பலவிதமான 'போஸ்'களில் உட்கார்ந்திருக்கிருர்கள் . . .

குனிந்து, சாய்ந்து, ஒருக்களித்து, மல்லாந்து, அண்ணுந்து — எத்தனை எத்தனையோ தினுசாக!

ஒரு படகுக்கு அருகில் போய் நிற்கிருேம்.

வானமும் கடலும் சந்திக்கும் அடிவானம்வரை பார்க்கிறோம்.

அலை ஓசை, கார் ஓசை, ஸ்கூட்டர் சத்தம், ஹாரன் ஒலி, டிரான்ஸிஸ்டர் சங்கீதம் இவ்வளவுக்குமிடையே அமைதியான ஒரு சூழ்நிலை!

கடலை முன்னணியாகவும், படகைப் பின்னணியாகவும் கொண்டு நெருக்கமாக உட்கார்ந்திருக்கும் காதலர் ஜோடி ஒன்று நம் கண்ணில் படுகிறது!

"மல்லீயப் . . . !"

பூக்காரன் ஒருவன் அவர்கள் அருகில் போய் நின்றுகொண்டு பிராணனை வாங்குகிறான், வில்லன் மாதிரி!

அவன் தொலைந்தால் போதும் என்பதற்காகக் காதலர்கள் அவனிடம் பூவை வாங்கிக் கொள்கின்றனர்.

நாமும் காதலர்களுக்கு இடையூறாக இருக்க விருப்பமின்றி அவ்விடத்தைவிட்டு ஓரமாகவே ஈர மணலில் நடக்கிறோம். சில் லென்று அலைகள் நம் கால்களை நனைக்கின்றன.

சற்றுத் தூரத்தில் இரண்டு பேர் பேசிக்கொண்டு போகிறார்கள்.

"இந்தக் காதல் ஜோடிகளெல்லாம் எதுக்கு படகுக்குப் பக்கத் திலே வந்து உட்கார்ந்துகிட்டு சமுத்திரத்தையே வெறிச்சுப் பார்க் கிறாங்க?"

"அதுவா, சம்சாரம் என்னும் சாகரத்தை வாழ்க்கைப் படகைக் கொண்டு கடப்பது எப்படின்னு பாக்கறாங்களோ என்னமோ . . .?"

நம் காதில் விழும் சில குரல்கள்:

"மாலதி! தண்ணிக்குப் போகாதே, பாவாடை தாவணி யெல்லாம் நனைஞ்சுடப் போறது . . ."

"இல்லே பாட்டி! தண்ணி கிட்டே போய்ட்டு வந்துட றேன் . . ." - இது அந்தப் பெண்ணின் பதில்.

"ஏய் ஜாக்கி! ஜூ, ஜூ, ஜூ!"

"ரமேஷ்! வாடா, வீடு கட்டலாம்!"

"மொத்தம் இருக்கிறது நாலு மெர்க்குரி விளக்குங்க; அதுலே மூணு எரியல்லே . . .!"

"கபாலிலே இன்னா ஓடுதுடா . . .?"

"ஆ ரீட்டா ஐஸ்!"

"மாங்கா தேங்கா பட்டாணி சுண்டல்! கை முறுக்கு மிளகு வடை பொட்டாடோ சிப்ஸ்!"

"ஏ மாங்கா தேங்கா! இங்கே வாப்பா!" - ஒருவர் அழைக் கிறார்.

"அது என்னப்பா பொட்டாடோ சிப்ஸ் - உருளைக்கிழங்கு வறுவல்னு தமிழிலே சொல்லேன். அதுக்குமட்டும் என்ன இங்கிலீஷ்? கைமுறுக்கு இருக்கா . . .?"

"இருக்கு . . ."

"என்ன விலை?"

"ரெண்டணு ஒண்ணு!"

"அதென்ன அவ்வளவு விலை?"

"இது நெய் முறுக்கு . . . கை படாமெ தயாரிச்சது!"

"நெய் படாமெ தயாரிச்சதுன்னு சொல்லு . . .!"

இன்னும் சற்றுத் தள்ளிப் போகிறோம்.

ஒருவர் தமது பேரக் குழந்தையுடன் பீச்சுக்கு வந்திருக்கிறார். குழந்தை மணலில் ஓடி விளையாடிக்கொண் டிருக்கிறது. அவர் பட்டாணி சுண்டலை வாங்கி காக்கைகளுக்கு வீசுகிறார். காக்கைகள் தாழ்வாகப் பறந்து வந்து சுண்டல் கீழே விழுமுன் லாகவமாகக் கொத்திக் கொள்கின்றன. இதற்குள் அங்கே காக்கைகள் கூட்டமாகச் சேர்ந்து விடுகின்றன.

குழந்தைக்கு ஒரே குஷி! காக்கைகளைத் துரத்தித் துரத்திப் பிடிக்க முயல்கிறது. காக்கைகளோ தத்திப் பறந்து குழந்தையின் பிடிக்கு அகப்படாமல் ஆட்டம் காட்டுகின்றன.

பெரியவர் குழந்தையைப் பார்த்து, "அதோ அதைப் புடி . . ." என்கிறார்.

இந்தக் காட்சியைப் பார்த்துக்கொண் டிருக்கும்போது யாரோ இரண்டு பேர் பேசிக்கொண்டு போவது காதில் விழுகிறது.

"பெரியவர் இப்பவே குழந்தைக்கு ட்ரெயினிங் கொடுக்கிறார்டா!"

"பீச்சிலே துளிக்கூடக் காத்தைக் காணோமே . . .!"

"தெரிந்துதானே கையோடு விசிறி கொண்டு வந்திருக்கேன் நான்!"

"பட்டாணி, வேர்க்கடலை!"

"இங்கே வாப்பா!"

கூடைக்காரன் வருகிறான்.

"விலை எப்படி?"

"ஆழாக்கு மூணணு!"

"வேர்க்கடலை விலை இறங்கியிருக்கிறதாக ரேடியோவிலே இப்பத்தானே சொன்னான்."

"சொல்லுவான் சாமி! ரேடியோக்காரனுக்கு இன்னா? அவன்

பாட்டுக்கு சொல்லிடறுன் . . . கொத்தவால்சாவடிக்குப் போய்ப் பாரு, தெரியும் . . .''

காலை வலிப்பதால் ஓரிடத்தில் உட்கார்ந்து ஆகாசத்தை அண்ணாந்து பார்க்கிறோம். கழுத்தை வலிப்பதால் கடலைப் பார்க்கிறோம். கடலில் மெதுவாக நகர்ந்து செல்லும் கப்பலைப் பார்க்கிறோம். மாலை மங்கிக் கொஞ்சம் கொஞ்சமாக இருள் கவியத் தொடங்குகிறது. குளுமையான மெர்க்குரி விளக்குகளும் குளுமை இல்லாத மின்சார விளக்குகளும் கடற்கரைப் பகுதியை ஒளி வெள்ளத்தில் ஆழ்த்துகின்றன. அந்தக் கப்பலிலும் விளக்குகள் தெரிகின்றன.

சற்றுத் தூரத்தில் உட்கார்ந்து கொண்டிருக்கும் இரு நண்பர்கள் பேசுகிறுர்கள். அது என்னவென்று கேட்போம்.

''இங்கிருந்து சிங்கப்பூருக்குக் கப்பல்லே எவ்வளவுடா சார்ஜ்?''

''எதுக்குக் கேக்கறே? சிங்கப்பூருக்குப் போகப் போறயா?''

''ஆமாம்; சார்ஜ் சீப்பா இருந்தாப் போகலாம்னு பார்க்கறேன்.''

''எதுக்கு?''

''அங்கே டிரான்ஸிஸ்டர் சீப்பாக் கிடைக்குதாம்!''

''டேய்! ஆகாசத்திலே மொத்தம் எத்தனை நட்சத்திரம் இருக்கும்?''

''அதுவா? இந்த பீச்சிலே இருக்கிற மணலை எண்ணி அதை இரண்டாலே வகுத்தா என்ன வருமோ அவ்வளவு நட்சத்திரம் . . . !''

கும்பலாக ஒரு குடும்பத்தைச் சேர்ந்த நாலைந்து பேர் குழந்தைகளோடு மணலில் நடக்கிறுர்கள்.

குழந்தைகள் ஓடுகின்றன.

''ஓடாதீங்கடா! கீழே விழுந்தா அடிபடும் . . . ''

குழந்தைகள் சிரிக்கின்றன.

''ஏண்டா சிரிக்கறீங்க?''

''இது பீச்சப்பா! மணலாச்சே! மணல்லே எங்காவது அடிபடுமா?''

''இன்னுப்பா பீச்சிலே ரொம்பக் கூட்டத்தையே காணேம்?''

''தேதி பதினஞ்சுதானே? சினிமா டிராமா போயிருப்பாங்க . . இருபது தேதிக்கு மேலே இங்கே பாருங்களேன் கூட்டத்தை!''

ஒருவர் தனிமையில் உட்கார்ந்து மணலை அழித்து அழித்து எழுதிக்கொண்டிருக்கிறுர். அவர் மனத்தில் ஓடும் எண்ணங்களை

யெல்லாம் கை எழுத்து வடிவமாக்கிக்கொண்டிருக்கிறது. மெது வாக எட்டிப் பார்க்கிறோம். ஒரு தடவை ஸ்ரீராமஜயம். மற்றொரு தடவை ஏதோ கோலம். இன்னொரு முறை கே. வி. என்ற ஆங்கில எழுத்துக்கள். அதையும் அழித்துவிட்டு லெட்டர் என்று எழுதுகிறார். அதையும் அழித்துவிட்டு மதுரை என்று எழுதுகிறார். அதையும் அழித்துவிட்டு 'நோ லீவ்' என்று எழுதுகிறார் . . .

காலேஜ் மாணவிகள் ஐந்தாறு பேர் வருகிறார்கள். கலகல வென்று ஒரே சிரிப்பு! சுற்றியுள்ள அத்தனை பேருடைய கவனமும் அவர்கள் பக்கம் திரும்புகிறது.

"டேய் விளையாடாதீங்கடா. கண்ணிலே மணல் விழறது . . . .'' - விளையாடிக் கொண்டிருக்கும் குழந்தைகளை அதட்டுகிறாள் தாய்.

"ரிட்டா ஐஸ் . . .''

''அம்மா ஐஸ்க்ரீம்மா . . . ! '' - தாயைத் தொந்தரவு செய் கிறார்கள் குழந்தைகள்.

''தொந்தரவு பண்ணக்கூடாது! போய் விளையாடுங்க!''

மணலில் ஒரு சுற்றுச் சுற்றிவிட்டு காந்தி சிலைப் பக்கம் செல் கிறோம். பாண்டு வாத்தியக் கோஷ்டியின் இனிமையான இன்னி சையைச் சற்று நேரம் கேட்கிறோம். மீண்டும் சிமெண்டுத் தரை நடை பாதைக்குச் சென்று நடக்கிறோம்.

அதே பெஞ்சுகளில் அதே ஆசாமிகள் இன்னும் பேசிக்கொண் டிருக்கிறார்கள். ஒருவர் சொல்கிறார்:

''அரிசி விலையெல்லாம் குறைக்கப் போறாங்க போலிருக்கே.. !''

"அரிசி விலை குறைஞ்சுட்டா ஆயிடுத்தா? மத்த சாமான்கள் விலை குறைய வேணுமா? கொத்தவரைக்காய் கெட்ட கேடு கிலோ ஒரு ரூபாய் என்கிறான். எல்லாம் ஒரே காஸ்ட்லி!"

''இந்த மெட்ராஸிலே இலவசமா வாங்கக்கூடியது ஒண்ணே ஒண்ணுதான் ஸார். . .! ''

"என்ன அது?''

"பீச்சுக் காற்று!''

மிருகக் காட்சிச்சாலை

2

"வேர்க்கடலை! பட்டாணி . . .!"

"பட்டாணி . . . வேர்க்கடலை . . .!"

"அர்ஷிப்பொரி . . . வாளப்பளம்!"

"குரங்குங்களுக்கு, யானைங்களுக்கு, கிளிங்களுக்கு அல்லாத் துக்கும் போடலாம்; நீங்களும் ஸாப்பட்லாம்."

சென்னை மிருகக் காட்சிச்சாலை வாசலில் உள்ள தள்ளு வண்டி வியாபாரிகளின் கூக்குரல் இது.

காட்சிச் சாலைக்குள் செல்ல கால் ரூபாய் கொடுத்து டிக்கெட் வாங்கிக் கொள்கிறோம் - கால் வலிக்கும் சேர்த்துத்தான்!

உள்ளே நுழைந்ததும், சீருடை அணிந்த பள்ளிக் குழந்தைகள் பலர் தங்கள் 'டீச்சர் அம்மா'வுடன் அங்கே வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பது தெரிகிறது.

இன்னும் சற்று தூரம் சென்றதும் குழந்தை குட்டிகளோடு கூடிய குடும்பங்கள், திருப்பதிக்குச் சென்று வந்துள்ள ஆந்திரர்கள், செங்காங்கடை, புளியாந்தோப்பு, மீர்ஸாப்பேட்டை, ஜாம் பஜார் போன்ற பகுதிகளிலிருந்து வந்துள்ள மக்கள், புதிதாகக் கலியாண மான தம்பதிகள், கலியாணமாகாத ஜோடிகள் - இவ்வளவு பேரும் அங்குமிங்கும் திரிந்துகொண் டிருப்பதைக் காண்கிறோம்.

காட்சிச் சாலைக்குள் நுழையும்போதே பட்சிகளின் பல்வேறு இனிய குரல்கள் நம்மை வரவேற்கின்றன, காக்கைகளின் குரலைத் தவிர!

"க்வீக் . . . க்வீக்!"

"கா . . . கா . . . கா . . . கா!"

"கீ . . . கீ . . . கீ . . . கீ!"

"கூ . . . கூ . . . கூ . . . கூ!"

இவை யாவும் பட்சிகளின் குரல்.

"கெ! கே! கை . . . !"

"கொ! கோ! கௌ!"

பட்சிகள் கத்துவதைத் தொடர்ந்து ஒரு பையன் பாடத்தைப் பூர்த்தி செய்கிறான்!

''கா ஆ ஆவ் . . .'' — மயில் ஒன்று கர்ண கடூரமாகக் கத்து கிறது.

''ஆவ்வ்வ் . . .'' — காலில் முள் தைத்து விட்டதால் அதே பையன் அலறுகிறுன்.

பஞ்ச வர்ணக் கிளிகளையும் மற்றுமுள்ள பட்சிகளையும் பார்த்துக்கொண்டே செல்லும்போது ஒரு கூண்டில் ஒரு ஜோடிக் காதல் பறவைகள் உட்கார்ந்து கொண்டிருப்பது தெரிகிறது.

அந்தக் கூண்டுக்கு முன்னுலுள்ள கூட்டத்தில் ஒருவர் கேட் கிருர்:

''இந்தப் பறவைங்க ரெண்டும் காதல் பண்ணுமல் சும்மாவே உட்கார்ந்துகிட்டிருக்குதுங்களே . . . .!''

''ஆமாம்; அதுங்களுக்குக் காதலிக்க நேரமில்லை''—கூட்டத்தில் இன்னெருவர் பதில் கூறுகிருர்.

சிறுத்தைகள், சிங்கங்கள், மனிதக் குரங்குகள் இவற்றின் கூண்டுகளைச் சுற்றிலும் கம்பிகள் போட்டுத் தடுத்து வைத்திருக் கிருர்கள்.

''கூண்டைச் சுற்றியிருக்கும் கிருதிகளைத் தாண்டி யாரும் உள்ளே வராதீர்கள்!'' என்று அங்கே போர்டுகளும் போட்டிருக்கிருர்கள். சிறுவர்கள் சிலர் அந்தக் கம்பிகளுக்குள் உடம்பை வளைத்துப் புகுந்து உள்ளே எட்டிப் பார்க்கின்றனர்.

''டேய், உள்ளே போவாதீங்க . . .'' - டீச்சர் அம்மாள் எச் சரிக்கிருள்.

''போனு என்னவாம்?'' — சிறுவன் கேட்கிருன்.

''அந்த மிருகங்களெல்லாம் பயப்படும்! அதுக்காகச் சொல் றேண்டா!'' - டீச்சர் அம்மாள் பதில் சொல்கிருள்.

சிங்கங்களும், சிறுத்தைகளும், புலிகளும் நல்ல உறக்கத்தில் ஆழ்ந்து கிடக்கின்றன.

''சிங்கம் தூங்குதுடா!''

''ஆமாண்டோய்!''

''உஸ் . . . சத்தம் போடாதீங்க. எளுந்திருச்சிடப் போவுது . . . !''

'திரு எம். ஜி. ராமச்சந்திரன் அன்பளிப்பு', 'பரோடா மகா ராஜா அன்பளிப்பு', 'திரு கே. சந்தானம் அன்பளிப்பு', 'திரு எம். பக்தவத்சலம் அன்பளிப்பு' என்று ஆங்காங்கே கூண்டுக்கு வெளியே போர்டுகள் எழுதிப் போடப்பட்டிருக்கின்றன.

''பாருடா, எம்ஜியார் குடுத்திருக்காரு சிங்கம்! சிவாஜி குடுப் பாரா?'' - ஒரு சிறுவன் கேட்கிருன்.

''எல்லாம் குடுப்பாரு. . . .'' - இன்னொரு சிறுவன் பதில் கூறுகிறான்.

''எம்ஜியார், சிங்கத்தோட சண்டைபோட்டா சிங்கம் தோத்துடுங்கறேன். 'பெட்' ஒரு ருவாடா!''

''இல்லே, ஜெயிச்சுடுங்கறேன்; 'பெட்' ரெண்டு ரூவாடா.''

''போடா!''

''போடா!''

''போடா!''

ஒரு பையன் சிங்கத்தைக் குச்சியால் குத்திக் குத்தி எழுப்புகிறான். சிங்கம், 'உர்ர்ர்' என்று உறுமிக்கொண்டே அந்தச் சிறுவனைத் திரும்பிப் பார்க்கிறது. எங்கெங்கோ வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்த கூட்டமெல்லாம் சிங்கத்தின் உறுமலைக் கேட்டுவிட்டு அங்கே ஓடி வருகிறது.

காவல்காரர் சிறுவனை எச்சரிக்கிறார்:

''தம்பி, சாக்கிரதை! இதே நெல்சன் சிங்கம் மூணு மாசத்துக்கு முன்னாலே ஒரு ஆளை அடிச்சு கை போயிடுச்சு. இப்படித்தான் விளையாட்டா அந்த ஆள் கூண்டுக்குள்ளே கையை விட்டான். அப்படியே 'லபக்'குனு கவ்விடுச்சு . . . ''

'திரு எஸ். ராமசாமிப் படையாட்சி அவர்களால் திறந்து வைக்கப்பட்டது' என்று ஒரு கூண்டுக்கு வெளியே ஆங்கிலத்தில் எழுதி வைக்கப்பட்டுள்ள போர்டை வாசிக்கிறோம்.

ஒருவர் கேட்கிறார்:

''ஏன் ஸார்! திறந்து வெச்சதா எழுதியிருக்காங்களே . . . கூண்டைத் திறந்து வெச்சதும் மிருகங்களெல்லாம் வெளியே ஓடிப் போயிருக்குமே? ஹி ஹி ஹி!''

சுற்றி நிற்பவர்கள் சிரிக்கிறார்கள்!

''டேய், டேய்! இத பாருங்கடா தண்ணிக்குள்ளே . . . '' - ஒரு பையன் கூவி அழைக்கிறான்.

சிறுவர்கள் அத்தனை பேரும் அங்கே ஓடுகிறார்கள். சில ஆந்திரர்கள் பின்தொடர நாமும் போகிறோம்.

அங்கே நம் காதில் விழும் சில வார்த்தைகள்:

''இன்னாடி அது? இந்தா பெரிசு தலையை நீட்டிகினு கீது . . . ?''

''எங்கேடி?''

''ஓரத்துலே பாரு!''

''அது இன்னாவாம்?''

''முதலை.''

''ஸெத்தூட்ஸா? அப்டி கெடக்குதே!''

"க்கும் . . . நல்லா ஸாவுமே . . . ஆளை முளுங்கிட்டுதான் ஸாவும் . . ."

"பாஸி புட்சி கெடக்குதடி முதுகெல்லாம். கண்ணை பாத்தியா அதுக்கு . . .?"

"ஏம்மா, ஸெத்த காலேஸுலே கூட மொதலே இருக்குமா?" - ஒரு பெண்.

"இது ஸெத்தூஸுனு அங்கே கொண்டு போய் வெச்சுடு வாங்க . . ."

"எங்கடி அந்தப் பொண்ணு அம்மாக்கண்ணு . . . ?"

"காலு நோவுதுன்னு அங்கேயே குந்திக்கிச்சி . . ."

"அடி கூப்பிட்றி அந்தப் பொண்ணை . . . அது பாக்கட்டும் . . ."

"அதி ஏமி அதி?" - ஒரு ஆந்திரர்.

"மொசலு . . மொசலு!" - இன்னொரு ஆந்திரர்.

"வாங்க, வாங்க! நேரம் ஆவல்லே?" - ஒரு குடும்பஸ்தர் தம் குடுபத்தினரை அழைக்கிறார். அவர்களோடு நாமும் போகிறோம்,

வழியில் சிலர் களைப்புத் தீர மர நிழலில் உட்கார்ந்து இளைப்பாறுகின்றனர். சிலர் பசி தீர தங்கள் கையோடு கொண்டு வந்துள்ள சிற்றுண்டிகளைத் தீர்த்துக் கட்டுகின்றனர்.

இன்னொரு பக்கத்தில் இரண்டு ஒட்டகங்கள் அசை போட்டுக் கொண்டு நிற்கின்றன.

"இதுவாப்பா ஒட்டகம்?"

"ஆமாண்டா—பார்த்தா தெரியல்லே? 'ஒ' மாதிரி வளைஞ்சு வளைஞ்சு கோணலா இருக்குதே! அதுக்காகத்தான் இதுக்கு ஒட்டகம்னு பேர் வச்சிருக்கா. ஒட்டகத்துக்கு முதல் எழுத்து 'ஒ' தானே?"

"ஒட்டகம் இன்னு ஸாப்டும் . . .?" - ஒரு பெண்மணி இன்னொருத்தியைக் கேட்கிறாள்.

"வேப்பிலே . . ."

"ஐயோ, கஸ்க்குமே!"

"கஸ்கட்டுமே! ஒட்டகம் ஸாப்டுது. நீயா துண்ணப் போறே! அதுக்கென்னமோ மூஞ்சியை அப்படி வெச்சுக்கறயே!"

"இதோ பார்த்தீங்களா வரிக் குதிரை?"

"இதை யார் அன்பளிப்பா கொடுத்திருப்பாங்க?"

"வரியைப் பார்த்தா தெரியலேயா? டி. டி. கே. தான் கொடுத்திருப்பாரு."

''அழகழகாப் போட்டிருக்காரே வரி!''
''யாரு, டி. டி. கே.யா?''
''இல்லே கடவுள்!''

''டேய்! ரெண்டு கரடி பாருங்கடா, இங்கே!''
''எங்கே, எங்கே?''
''பெண் கரடி ஒண்ணு; ஆண் கரடி ஒண்ணு!''
''ஆண் கரடன்னு சொல்லு. பெண் கரடி...!''
''கரடி ரெண்டு கால்லே நடக்குமா?''
''ஏன் நடக்காது? ஸர்க்கஸ்லே போய்ப் பாரு ; நடக்கும்.''

கிண்கிணி ஓசை கேட்கிறது. அந்த ஓசையைத் தொடர்ந்து யானை ஒன்று மெதுவாக ஆடி அசைந்து வருகிறது.

''ஆனே வரும் பின்னே மணியோசை வரும் முன்னே .....''
''ஆனே வருதுடோய்!''
''ஆமாண்டா! பெரிய ஆனேடா!''

அந்த யானை தண்ணீர்க் குழாயண்டை வந்து துதிக்கையால் தானே குழாயைத் திறந்து தண்ணீரை உறிஞ்சி உறிஞ்சி வாயில் கொட்டிக் கொள்கிறது. கூட்டமெல்லாம் யானையைச் சூழ்ந்து கொண்டு நிற்கிறது.

''ஆனே 'பெல்' கட்டிகினு உந்தி'' - ஆந்திரச் சிறுவன் கூறுகிறான்.

''யானேக்கு தெலுங்கிலே என்ன பேருப்பா?'' - தமிழ்ச் சிறுவன் தன் தந்தையைக் கேட்கிறான்.

''அர்ரம்டா!''

''குதிரைக்கு குர்ரம்ன ஆனேக்கு அர்ரமா?'' - யரோ ஒருவர்.

''தண்ணியை உள்ளுக்கு இஸுக்கும் பாரேன். அப்புறம் தும்பிக்கையை வாயண்டை கொண்டுபோய் வச்சிகினு ஒரு மூச்சு விட்டுதுன்ன அவ்வளவு தண்ணியும் வாய்க்குள்ளாற போயிடும் . .''

''அப்பா, நான் ஆனே மேலே ஏறிக்கிறேம்பா, ஆசையா இருக்குது . , .'' - ஒரு பையன் அழுகிறான்.

''ஆனேக்காரரே! இந்தப் பையனே ஆனே மேலே ஏத்தி சவாரி வர்ரத்துக்கு எவ்வளவு கொடுக்கணும்?'' - பையனின் தந்தை பாகனேக் கேட்கிறார்.

''இருபது பைசா!''

''சரி, ஏறிக்கோடா! சும்மா அளுவாதே! நச்சு பண்றான் . . ''

பாகன் பையனைத் தூக்கி யானை மேல் உட்கார வைக்கிறான். பையன் மீண்டும் அழுகிறான்.

"அதான் ஏத்திட்டேனே, இன்னம் ஏன் அழுவறே?"

"இறங்கிடறேம்பா! பயமாயிருக்குதுப்பா . . ."

"இதுக்காடா இருபது பைசா!" இப்போது பையனின் தந்தை மூக்கால் அழுதுகொண்டே காசுகளை யானையிடம் கொடுக்கிறார். அது தன் துதிக்கையால் வாங்கிப் பாகனிடம் கொடுக்கிறது.

"பாவம்! யானைக்குக் கொஞ்சம் பொரி கொடுக்கலாமா?" - கூட்டத்தில் ஓர் ஆசாமி.

"யானைப் பசிக்குச் சோளப் பொரியாம்! அதெல்லாம் அதுக்கு பத்துமா?"

"யானை வேறே இன்னா சாப்பிடும்?"

"புல்லுதான் . . . தழைங்கதான் . . . லாரி லாரியா புல்லுக் கட்டுங்க வந்துகிட்டே இருக்குதே பாக்கல்லே! . . . இருக்கறத்துக்குள்ளேயே யானையும் காண்டாமிருகமும்தான் பெரிசு. ஆனா அதுங்க மாமிசம் சாப்பிடறதில்லே. காண்டாமிருகத்துக்கும், யானைக்கும் உள்ள பலம் வேறே எதுக்கு உண்டு? மாமிசம் சாப்பிடற மனுஷங்க இந்த யானையையும், காண்டாமிருகத்தையும் பார்த்தாவது தெரிஞ்சுக்க வேணும்?"

"யானை, புலி, கரடி இதெல்லாம் கூட மிருகம்தானே டீச்சர்?" - ஒரு சிறுமி கேட்கிறாள்.

"ஆமாம் . . . அதுலே என்ன சந்தேகம் வந்துட்டுது உனக்கு?"

"அப்படின்னா யானை மிருகம், புலி மிருகம், கரடி மிருகம்னு அதுக்கெல்லாம் பேர் இல்லியே, இதுக்குமட்டும் ஏன் காண்டா மிருகம்னு பேர் வைச்சாங்க?" - ஒரு பையனின் கேள்வி.

"அது அப்படித்தான். சும்மா வரமாட்டே நீ?" - இது டீச்சர் அம்மாள்.

"டீச்சர் . . . !"

"இன்னடா?"

"அது இன்னா டீச்சர்?"

"கொக்கு!"

"அது ஏன் ஒத்தைக் காலைத் தூக்கிக்கிட்டு நிக்குது?"

"போடா! அது என்னவோ தெரியல்லே!"

"இது தெரியல்லியே டீச்சர் உங்களுக்கு? இரட்டைக் காலையும் தூக்கிகிட்டா அது கீழே விழுந்துடாதா?"

எல்லாவற்றையும் பார்த்து முடிந்ததும், வயது முதிர்ந்த காவல்காரர் ஒருவரைச் சந்தித்துப் பேச்சுக் கொடுக்கிறோம்.

"நீ எத்தனை வருஷமா இங்கே வேலை செய்யறே?"

"முப்பத்து மூணுலேருந்து செய்யறேன் சார். முப்பத்திரண்டிலே என் தகப்பனாரு ரிடய்டாயிட்டாரு . . ."

''எது வரைக்கும் படிச்சிருக்கே?''

''மூணாங் கிளாஸ் வரைக்கும்தான். இந்த மிருகங்களோட பழகறத்துக்கு அந்தப் படிப்பு போதாதா?''

''உனக்கு இங்கே என்ன வேலே?''

''வேலேயா, ஸார்? காலேயிலே வந்ததும் க்ளீன் பண்ணணும். மாத்தி மாத்தி தீனி ரேஷன் போடணும். சிம்பாஞ்சிக்கு மலே வாழைப் பழம், பாலு, ஆப்பிள் இதான் டயட். காலேயிலே பத்தரை மணிக்கு ஒரு தரம், மறுபடியும் ரெண்டரை மணிக்கு ஒரு தரம். சிம்பாஞ்சி, சீட்டா; லெப்பெட், லயனு இதெல்லாம் நான் பார்த்துக்கறேன். இப்ப என்ன ஸார் ஜூ? வெள்ளேக்காரன் காலத்துலே பாக்கணும்! இந்த இடமெல்லாம் குளுகுளுன்னு இருக்கும். இப்ப எல்லாம் போயிடிச்சு. எவாகேஸன் டயதுத்துலே ஷூட்டிங் பண்ணிடலே. . . ? பாம் கீம் போட்டுடுவாங்கன்னு அறுபத்தெட்டு உருப்படிங்க காலி. அப்புறம்தான் ஜாம் நகர் ராஜா எட்டு சிங்கம், மூணு சிறுத்தை, ஒரு புலி, பன்னிரண்டு உருப்படி கொடுத்தார். நான் வேலேக்கு வந்தப்போ ஜூவுக்குள்ளே வரதுக்கு அரையணு தான் ஸார் சார்ஜு. அப்புறம் ஒரணு ஆச்சு. இன்னும் கொஞ்ச நாள் பொறுத்து ரெண்டணு ஆச்சு. கார்ப்பரேசன் ஆபீஸ் வந்தப்பறம் நாலணு ஆச்சு. மாருமே இருக்கறது ஒண்ணுதான் ஸார் . . .''

''என்னப்பா அது?''

''என் சம்பளம் . . . !''

சென்ட்ரல் ஸ்டேஷன்

3

இடம்: சென்ட்ரல் ஸ்டேஷன். நேரம்: மாலை மணி ஏழு.

"டிரிங் . . . டக் . . ." - ஒரு டாக்சி வந்து நிற்கிறது.

"டிரிங் . . . டக் . . ." - இன்னொரு டாக்சி.

டாக்சியை அடுத்துக் கார், கார்களை அடுத்து ஆட்டோ ரிக்ஷாக்கள் - பலவிதமான பெட்டி படுக்கைகள், கூஜாக்கள், மூட்டைகள்.

ஸ்டேஷன் வராந்தாவில் பெட்டிகளும் படுக்கைகளும் வந்து குவிந்துகொண்டே யிருந்தன. அவற்றுக்கிடையே கால் வைக்க இடமில்லை.

சிலர் போர்ட்டர்களைத் தேடுகிறார்கள். சிலர் கீழே இறக்கி வைத்த மூட்டைகளை எண்ணிப் பார்க்கிறார்கள். நீலச் சட்டைப் போர்ட்டர்கள், சிவப்பு நிறத் துணியைத் தலையிலே சுற்றிக் கொண்டு பரபரப்புடன் இங்குமங்கும் அலைகிறார்கள்.

"டேய் கோவிஞ்சாமி! அதோ பார் ஆட்டோ ரிக்ஷாவிலே ஒரு கிராக்கி வருது!" - ஒரு போர்ட்டர் மற்றொரு போர்ட்டருக்குச் சொல்கிறான்.

"வெத்து ஆள்டா! மூட்டை இல்லே!"

எல்லோருக்கும் ரயிலுக்குப் போகிற அவசரம். எல்லோருடைய முகத்திலும் ஒருவிதப் பரபரப்பு! எல்லோருடைய நடையிலும் ஒரு வேகம்!

பல தேசத்து மனிதர்கள்!
பல்வேறு வயதினர்!
பல்வேறு மொழியினர்!
பல வித முகங்கள்!
பல வித ஆடைகள்!
பல வித உணர்ச்சிகள்!

ஸ்டேஷனுக்குள்ளே விசாலமான பெரிய கூடம். அந்தப் பெரிய கூடத்தை அடைத்துக்கொண்டு பெரிய கூட்டம்.

ரயில் எஞ்சின்களின் சத்தம், அவை விடும் புகை! பிரயாணிகளின் சத்தம், அவர்கள் விடும் புகை! டிராலிகளின் ஓசை, போர்ட்

டர்களின் சத்தம்! குழந்தைகளின் அலறல் - இவ்வளவையும் மீறிக் கொண்டு ஓர் அசரீரி வாக்கு எழுகிறது.

''Cochin Express will be leaving platform number five . . .''

''கொச்சின் எக்ஸ்பிரஸ் பிளாட்பாரம் நெம்பர் ஐந்திலிருந்து இன்னும் கொஞ்ச நேரத்தில் புறப்படும்.''

''கொச்சின் எக்ஸ்பிரஸ் அஞ்சாம் பிளாட்பாரத்திலிருந்து கொறைச்ச நேரத்திலே புறப்படன்னு . . . . . !''

'ஜக' 'ஜக'வென்று ஓர் இரைச்சல். ஐந்தாம் நம்பர் பிளாட்பாரம் முழுவதும் வழி அனுப்ப வந்தவர்கள் நிற்கிறார்கள்.

''டிங் . . . டாங் . . . டிங் டாங் டிங் டாங்.''

முதல் மணி அடிக்கப்படுகிறது. பரபரப்பு அதிகமாகிறது. நம் காதுகளில் துண்டு துண்டாகச் சில வார்த்தைகள் விழுகின்றன.

''ஓரம் . . . வழி!''

''சாம்பார் சாதம் — தயிர் சாதம் . . .''

''மெயில், ஆனந்த விகடன் . . .''

''ஐஸ்கிரீம் . . .''

''வல்லையா அவங்க இன்னும்?''

''இன்னும் காணோம்! . . . . . .''

''டாக்சி கெடைச்சிருக்காதுப்பா . . .''

''ஹியர் இஸ் தி கம்பார்ட்மெண்ட்! கமான்!''

''இவட உண்டு . . . ரிசர்வேஷன் . . .''

''எவ்வட? எவ்வட?''

''ஏமண்டி . . . ஈ பண்டி பெஜவாடா போத்தாதா?'' - ஆந்திரக்காரர் ஒருவர் வண்டிக்குள் ஏறுகிறார்.

''போய்யா! போய்யா! பெஜவாடாவுமில்லே! காக்கிநாடாவுமில்லே . . . கிழே இறங்கய்யா! சுருட்டை ஊதிக்கிட்டு வந்துட்டாரு . .'' - இது பதில்.

''ஏமண்டோய், எந்துக்கு ஜகடம் வேஸ்தாரு? பெஜவாடா எக்கட உண்டாதி? செப்பண்டி!''

''பெஜவாடா ஆந்திராவிலே உண்டாதி! போ! போ!''

''டேய் துரைக்கண்ணு! சேலத்துக்கு மூணு மணிக்கு போவுதாண்டா ரயிலு! முழிச்சிக்கிட்டிருந்து இறங்கிடு . . . தூங்கிடப் போறே! அரக்கோணத்திலே டீ வாங்கிக் குடிச்சுக்கோ!''

''ஏண்டி! உங்க நாத்தனாருக்கு இது எத்தனாவது மாசம்னு சொன்னே?'' - வழி அனுப்ப வந்த ஒரு பாட்டியம்மாள் ரயிலில் உட்கார்ந்திருக்கும் பெண்ணிடம் கேட்கிறார்.

"டேய்! வேளா வேளைக்குச் சாப்பிடு. ஓட்டலுக்குப் போகாதே. அவரைப் போய்ப் பாரு. அட்மிஷன் வாங்கிக் கொடுப் பாரு! அடிக்கடி லெட்டர் போடு... டிக்கட் பத்திரமா வச்சிருக் கியா? பெட்டியைத் தலைப்பக்கமா எடுத்து வெச்சுக்கோ ... ஜாக் கிரதை!" - தந்தை மகனிடம் சொல்கிறார்.

"விசாலத்தை நான் விசாரிச்சதா சொல்றயா? அவளோ தூரம் போயிட்டு அவளைப் பார்க்காம வந்துடாதேடீ!" - பாட்டியம் மாள் தொடர்கிறாள்.

மணி ஏழே கால்.

கொச்சி எக்ஸ்பிரஸ் ஊதிக்கொண்டே நகர்கிறது.

"மாமிக்கு டாடா சொல்லும்மா!" - ஒருவர் தம் குழந்தைக்குக் கையைத் தூக்கிப் பிடித்து ஆட்டுகிறார்.

"டாட்டா! டாட்டா!" - எல்லோர் கண்களும் கலங்கியிருக் கின்றன. ஐந்தாம் நம்பர் பிளாட்பாரம் ஒரே நிமிஷத்தில் வெறிச் சென்றாகி விடுகிறது.

போர்ட்டர்களும் தள்ளு வண்டி வியாபாரிகளும் வேறு பிளாட்பாரத்துக்கு மாறுகிறார்கள். நாமும் மாறுகிறோம். அங்கே நீலகிரி எக்ஸ்பிரஸ் நிற்கிறது.

"டூ ருபீஸ் ஸார்!" - இது ஒரு போர்ட்டர்.

"ட்ரிப்ளிகேன்லேருந்து சென்ட்ரலுக்கு வர டாக்சிக்கு ஒண்ணே கால் ரூபா கொடுத்தேன். இங்கே வாசல்லேருந்து பிளாட்பாரத் துக்கு வரத்துக்கு உனக்கு ரெண்டு ரூபாயா?"

"வில்லிவாக்கத்துக்கு இங்கேருந்து மூணணா சார் ரயில் டிக்கட்! அதுவா கணக்கு? மனிசனுக்கும் வண்டிக்கும் வித்தியாசம் இல்லையா! கஸ்டத்தைப் பாத்துக் குடு சார்!"

"ஒன் ருபிதான் கொடுப்பேன்."

"வேணும் சார். நீயே வெச்சுக்கோ."

"இன்னாப்பா இது? மூட்டைகளை லேடீஸ் கம்பார்ட்மெண்ட் டிலே கொண்டு வந்து வெச்சுட்டயே!" - அவர் கேட்கிறார்.

"நீ இங்கே ஏறவே, நானும் வெச்சேன்."

"இது லேடீஸ் வண்டின்னு தெரியாதா உனக்கு? வேறே கம்பார்ட்மெண்டுக்கு தூக்கு ..."

"டூ எய்ட் குடுக்கணும் சார்! அப்பத்தான் வருவேன்!"

"சரி தூக்கப்பா .. நேரமாச்சு!"

ஒருவர் முதல் வகுப்புக் கம்பார்ட்மெண்டில் ஒட்டப்பட் டுள்ள ரிஸர்வேஷன் பெயர் லிஸ்டைப் பார்க்கிறார். தம்முடைய

பெயரில் இனிஷியல் தவருக இருப்பதைக் கண்டு கோபம் வந்து விடுகிறது அவருக்கு.

"சே! ஹோப்லஸ் ரெயில்வேஸ் . . . ! இனிஷியலே மாத்திப் போட்டிருக்கான். இந்த லட்சணத்திற்கு ரிஸர்வேஷனுக்கு எக்ஸ்ட்ரா சார்ஜ் வேறே!"

''கூ ஊ ஊ ஊ . . . !''

ஏதோ ஒரு என்ஜின் ஊதுகிறது. பிளாட்பாரம் பெஞ்சுமீது உட்கார்ந்துள்ள ஒரு சிறுமியும் சிறுவனும் தங்கள் காதுகளே விரல்களால் அடைத்து அடைத்து அந்த சத்தத்தை அனுபவிக்கிருர்கள்.

"அப்பா! எனக்கு ஐஸ்கிரீம்பா'' - ஒரு குழந்தை கேட்கிறது.

''சீ கழுதை! டான்சில்ஸ் வரும்!'' - இது அப்பா.

''அப்பா! எனக்கு பெப்பர்மெண்ட்டுப்பா!'' - அதே குழந்தை.

''சீ! கழுதை! சிரங்கு வரும்!'' - அதே அப்பா.

''குழந்தை கேட்கிறது. வாங்கிக் கொடுங்கோன்ணு . . . .'' - இது அவர் மனேவி.

''நீ பேசாதே! எனக்குக் கோபம் வரும்.''

பிளாட்பாரத்தில் ஒரு குழாய்க்குப் பக்கத்தில் 'குடிப்பதற்கு மட்டும்' என்று எழுதியிருக்கிறது. ஆனுல் குழாயடியில் இரண்டு மூன்று பேர் குளித்துக்கொண் டிருக்கிருர்கள்!

"நீங்கள் எதுவரைக்கும்?'' - ஒருவர் தம் நண்பரிடம் விசாரிக்கிருர்.

''கோயம்புத்தூர் போறேன் . . . '' - இன்னொருவர்.

"எந்தக் கம்பார்ட்மெண்ட் ரிசர்வ் பண்ணி யிருக்கீங்க?''

''ஏ. சி. - ஏர்கண்டிஷன்! நீங்க?''

"நான் ஓ. சி.! ரயில்வே பாஸ்!''

ரயில் புறப்பட இன்னும் இரண்டே நிமிஷங்கள் இருக்கின்றன.

ஒரு மூன்ரும் வகுப்புப் பிரயாணி அவசரம் அவசரமாக ஓடி வருகிருர். ஒவ்வொரு பெட்டியாகப் பார்த்துக்கொண்டு போகிருர்.

"இது கார்டு வண்டி! முன்ணுலே போங்க சார்!'' - முன்ஞல் போகிருர்.

"இது லேடீஸ் கம்பார்ட்மெண்ட்.'' - இன்னும் சற்று முன்ஞல் போகிருர்.

''இது பார்சல் வேன்.'' - அடுத்த பெட்டிக்குப் போகிருர்.

''இது மெயில் வேன்." - அதற்கும் அடுத்த பெட்டிக்குப் போகிருர்.

''இது மிலிட்டரி காரேஜ்!'' - அடுத்தது பஸ்ட் கிளாஸ் கம்பார்ட்மெண்ட்!

"அட ராமச்சந்திரா! இவ்வளவு பெரிய வண்டியில் எனக்கென்று ஒரு கம்பார்ட்மெண்ட்கூடக் கிடையாதா?"

"இரண்டு பெட்டி போட்டிருக்காங்க. ஒண்ணைச் சேலத்திலே கட் பண்ணிடுவாங்க. இன்னொண்ணு புல்லாயிடுச்சு! ..." - ஒரு போர்ட்டர் கொடுக்கும் தகவல் இது!

இரண்டாம் வகுப்பு கம்பார்ட்மெண்ட்டுக்கு எதிரில் ஆங்கிலோ இந்தியப் பெண்கள் இருவர் நிற்கிறார்கள். ரயிலில் பிரயாணம் செய்யப் போகும் தங்கள் கணவன்மார்களை (மிலிட்டரியைச் சேர்ந்தவர்கள்) வழி அனுப்ப வந்திருக்கிறார்கள். அந்த இரண்டு ஜோடிகளும் ரயில் புறப்படும் வரை பேசவேயில்லை. ஒருவரை யொருவர் கட்டிப் பிடித்து முத்தம் கொடுத்துக் கொண்டிருக்கும்போது பேச்சுக்கு நேரமேது? சிலர் இக் காட்சியைக் கடைக் கண்ணால் கவனித்தபடியே பிளாட்பாரத்தில் உலாவுகிறார்கள்.

மற்றொரு காட்சி. முதல் வகுப்புப் பெட்டிக்கருகில் ஒரு சிறு கூட்டம். அந்தக் கூட்டத்தின் நடுவில் யாரோ ஒரு பிரமுகர் நிற்கிறார். அவர் கழுத்தில் ரோஜா மாலையைப் போடுகிறார் கூட்டத்தில் ஒருவர். கை தட்டல்! கை குலுக்கல்! கையாட்டல்!

அந்தப் பிரமுகர் யார் என்பதை அறிந்துகொள்ளும் ஆவலில் சம்பந்தமில்லாதவர்கள் சிலர் அங்கு போய் நிற்கிறார்கள்.

"யாராம்டா அது?"

"தெரியல்லே. நாளைக்குப் பேப்பர்லே பார்த்தா தெரிஞ்சுடுது." - இது யாரோ இரண்டு பேருடைய சம்பாஷணை!

வண்டி நகர்கிறது. போர்ட்டர்களும் தள்ளு வண்டிக்காரர்களும், இன்னொரு பிளாட்பாரத்திற்கு மாறுகிறார்கள். வழி அனுப்ப வந்தவர்கள் வீடு திரும்புகிறார்கள். அந்த ஆங்கிலோ இந்தியப் பெண்மணிகள் உட்பட! நாமும் திரும்புகிறோம், பிளாட்பாரத்தில் உதிர்ந்து கிடக்கும் ரோஜா இதழ்களைப் பார்த்துக் கொண்டே!

கொத்தவால் சாவடி

4

இப்போது மலையப்பெருமாள் தெரு என்னும் குறுகலான சந்து வழியாகக் கொத்தவால் சாவடியை நோக்கி 'அடி அடி'யாக நகர்ந்துகொண் டிருக்கிறோம். நெரிசல் சொல்லிச் சாத்தியமில்லை.

மணிபர்ஸ் ஜாக்கிரதை!

சக்திவேல், ராஜேசுவரன், மனோகரன், தயாநிதி, குமரன் இவர்கள் ஐவரும் நாம் முன்னேற முடியாமல் தெருவை அடைத்துக் கொண்டு நிற்கிறார்கள். யாரோ என்று யோசிக்காதீர்கள். லாரிகளின் பெயர்கள்! வெங்காயச் சருகு, வாழை இலைச் சருகு, பச்சை வாழைப் பட்டை, மலை வாழைப் பழத் தோல், அழுகின தக்காளி, தேங்காய் மட்டை, வைக்கோல் இவ்வளவும் மழைத் தண்ணீரில் நனைந்து, கறுப்பு மண்ணுடன் கலந்து, அடிபட்டு, மிதிபட்டு, 'சத சத'வென்று ......! அடாடா! அந்த கோரத்தை என்ன சொல்ல ...?

"முருகேசா! பச்சை மொளகாயை முன்னாலே நகரச் சொல்லு'' — ஒரு லாரி டிரைவர் முன்னால் நிற்கும் இன்னொரு லாரி டிரைவரிடம் சொல்கிறார். முன்னால் இருக்கும் டிரைவர் அதைப் பச்சை மிளகாய் லாரி டிரைவருக்கு அஞ்சல் செய்கிறார்.

லாரிகள் அடைத்துக்கொண்டது போக, மிஞ்சி இருக்கும் இடுக்கு வழிகளில் மக்கள் எதிரும் புதிருமாக நகர்ந்துகொண் டிருக்கிறார்கள்.

சிலர், ஒருவர்மீது ஒருவர் பச்சைக் குதிரை தாண்டிக்கொண் டிருக்கிறார்கள். பின் பக்கம் வரும் கூட்டம் நம்மீது சாடுகிறது. முன் பக்கம் வரும் கூட்டம் நம்மீது மோதுகிறது.

''கூலி, கூலி, கூலி!''

கூலிக்காரர்கள் தலைக்கு மேலே கூடையைத் தூக்கிக்கொண்டு வருகிறார்கள். அவர்கள் எப்படியோ இந்த நெருக்கடியில் புகுந்து புறப்பட்டு வேகமாய்ப் போய்விடுகிறார்கள்.

''கூலி சார்! கூலி வேணுமா?'' - ஒரு கூடைக்காரன் நம்மை விசாரிக்கிறான்.

''ஆமாம்பா! என்னைத் தூக்கிக் கூடையிலே வைத்துக்கொண்டு போய் கொத்தவால் சாவடிக்குள் விட்டு விடு!'' என்கிறேன் நான்.

''டடடடர்ர்ர்! டடடடர்ர்ர்ர் . . . !''

ஒரு லாரி பின் பக்கம் நகர்கிறது.

''வாத்தியாரே! மெதுவா லெப்டுலே ஓடிச்சுக்கோ!'' - லாரிக்குப் பின்னால் நிற்கும் 'க்ளீனர்' டிரைவருக்குக் குரல் கொடுக்கிறார்.

அந்த லாரிக்குப் பின்னால் மிதந்துகொண் டிருக்கும் கூட்டம் மேலும் பின்னுக்குச் சாய்கிறது.

''ஏன்ய்யா இப்படி மாடு மாதிரி வந்து மோதறே!''-ஓர் ஆசாமி கத்துகிறார்.

''மோதறது நிஜமாகவே ஒரு மாடு தான்யா! திரும்பிப் பாரு . . .'' - இன்னொருவர்.

மோதப்பட்டவர் திரும்பிப் பார்க்கிறார். கோயில் காளை ஒன்று சாவகாசமாக அசை போட்டுக்கொண்டு வாலை வீசியபடி நிற்கிறது. மக்களின் அவசரம், இட நெருக்கடி எதையுமே லட்சியம் செய்யாமல்!

''இன்னய்யா இது! மன்சன் நடக்கறதுக்கே வழியைக் காணோம். இதுலே மாட்டை வேறே உட்டுடறாங்களே!'' - இது ஒருவர்.

''யாரைக் கேக்கறே அந்தக் கேள்வி?'' - இது வேறொருவர்.

கொத்தவால் சாவடிபற்றிச் சில தகவல்கள்

இந்த மார்க்கெட் தொடங்கி இருநூறு ஆண்டு காலமாகிறது.

வியாபாரிகள், தரகர்கள், கூலிகள், வண்டிக்காரர்கள் எல்லோருமாகச் சேர்ந்து இங்கே மூவாயிரம் பேருக்குப் பிழைப்பு நடக்கிறது.

தஞ்சாவூர், கேரளா, மைசூர் இவ்விடங்களிலிருந்து நாள் ஒன்றுக்கு லட்சம் தேங்காய்கள் இங்கு வருகின்றன. பங்களூரிலிருந்தும் நீலகிரியிலிருந்தும் வரும் உருளைக் கிழங்கு மூட்டைகள் ஆயிரம். பெல்லாரியிலிருந்தும் கடப்பையிலிருந்தும் வரும் வெங்காய மூட்டைகள் (மூட்டை ஒன்றுக்கு எழுபது கிலோ) இரண்டாயிரம். தக்காளிக் கூடைகள் ஐந்நூறு (கூடை ஒன்றுக்கு பதினைந்து கிலோ.)

நகரியிலிருந்து கருவேப்பிலையும், நெல்லூரிலிருந்து பச்சை மிளகாயும், வாணியம்பாடி, ஆம்பூர், திருப்பத்தூரிலிருந்து கத்தரிக் காயும் வருகின்றன.

இங்கிருந்து அந்தமானுக்குக் காய்கறிகள் போகின்றன.

இங்கு வியாபாரம் தொடங்கும் நேரம் விடியற்காலம் மணி மூன்று!

அப்படியும் இப்படியுமாக, இடிபட்டு அடிபட்டு, கொத்த வால் சாவடியின் கிழக்கு வாயிலை நெருங்குகிறோம்.

''தவனம் ஆறேணு! . . . தவனம் . . . ஆறேணு!''

''சவரன் ஆறேணு! சவரன் ஆறேணு!'' — வியாபாரிகளின் கூச்சல்.

இங்கே, தவனம் என்பது பீன்ஸைக் குறிக்கும். சவரன் என்பது சாம்பார் வெங்காயத்தைக் குறிக்கும்.

''ஸாமி! இந்தா கருவேப்பலே! . . . சகாயம் - சகாய வெலே . . . புடி, புடி! இன்னடி என் சக்களத்தி! அதான் நான் குடுத்துக்கினு கீறனே! இவ வேறே வந்துட்டா குறுக்கே . . . இந்தா ஸாமி! நீ புடி. அக்காம்! அவ கிடக்கறு!'' - கருவேப்பிலேக்காரி பேசுகிறுள்.

''புதின! புதின! புதின!—அணவுக்கு ஆறு கட்டு.'' புதினக் காரன் கூவுகிறுன்.

''ஓரம்! ஓரம்! ஓரம்!'' — மூட்டை தூக்கி வருபவர்கள்.

''ப்பா. போ, போ!''—பின்னல் வருபவர்கள்.

''வா, வா, வா!'' — வியாபாரிகள்.

நம் காதில் விழும் சில வார்த்தைகள்:

''இந்தா ஓரணவுக்கு புதின கொடு!''

''வேறே காசு குடு! அணவுங்க போவ மாட்டேங்குது . . .''

''தூக்குயா—தூக்குயா— கூடையை வழிலே வெச்சுகிட்டு . .''

''மணி இன்ன, சார்!''

''ஒரு ரூபாய்க்ரு இல்லேண்ட்டேன்ன நீ முக்கா ரூவாய்க்குக் கேக்கறயே . . . !''

''ஏலகிரி தக்காளிங்க; தோல் கனம். நாள்பட நிக்கும் . . ''

''இதோடா! பத்து ரூவா நோட்டை வச்சிக்கினு அஞ்சு பலம் வெண்டைக்கா வோணுமாண்டா . . .''

''ஆவ், ஆ . . . பூ . . . ஈ . . .'' — தலேமீது கூடை நிறையத் தக்காளிக்சுாய்களைச் சுமந்துகொண்டு நிற்கும் ஓர் ஊமை சத்தம் போடுகிறுன்.

''ஏ ஊமை! இப்படி கொட்டுகினு வில்லு. . . . நிமஸ்துலே தீந்து போவுது பாரு . . .''

''வாங்கற மூஞ்சியைப் பாரு! இது சாப்படறவன் வேறே கீரான் . . . . . நீ போ! பொல்லாத வெண்டைக்காய் வாங்க வந்துட்டே. . . !''

''சேனே என்னப்பா விலே?''

''பத்தணு!''

''சரி போடு!''

வியாபாரி எடை போடுகிறுன்.

"என்னப்பா இது? கிலோவா பத்தணு?'' வாங்க வந்தவர் கேட்கிருர்.

''பின்னே இன்னு? வீசைன்னு நினேச்சுக்கினியா? வீசை காலமெல்லாம் 'எகிறி'ப் போச்சு, சாமி!''

"இங்கிலீஷ் வெஜிடபிள் பஜார், ஆனியன் பஜார், வாழைக்காய் பஜார், பரங்கிக்காய் பஜார் என்று ஒவ்வொரு சந்துக்கும் ஒரு பெயர் எழுதி வைத்திருக்கிருர்கள். இந்தச் சந்துகளேச் சுற்றி வருவதற்குள் நம் பாடு பெரும்பாடாகி விடுகிறது. இதைக் 'கொத்தவால் பஜார்' என்று சொல்வதைக் காட்டிலும் 'கொத்தவால் பேஜார்' என்று சொன்ஞல் ரொம்பப் பொருத்தமா யிருக்கும்!'' - நான் சொல்கிறேன்.

காலே வலிப்பதால் ஒரு ராடிஷ் வியாபாரியின் கடையிலுள்ள திண்ணேமீது போய் அமர்கிருேம்.

"உங்க கடையிலே இங்கிலீஷ் வெஜிடபிள் மட்டுந்தான் விற்கிறீர்களா?''

"ஆமாங்க, ராடிஷ், கேபேஜ், கேரட், நூல்கோல் இல்லேயா இப்டி . . .''

''இந்தக் கடைக்கு என்ன வாடகை?''

''முப்பது ரூபாங்க! கதவு கிடையாது. கன்னிகா பரமேச்வரி தேவஸ்தானம் தர்மத்துக்குதான் போவுது பணமெல்லாம். ஆறே கால் ரூபாயிலேருந்து முப்பது ரூவா வரைக்கும் இடத்துக்குத் தகுந்தாப்பலே வாடகை வசூல் பண்ருங்க. இது தவிர கூலிங்களுக்கு நாள் ஒண்ணுக்கு நாலு பைசா டிக்கட்டு. லாரிக்கு ஒரு ரூபா சுங்க வரி, சைகிளுக்கு ஆறு பைசா! அதுக்குத் தகுந்த சௌகரியந்தான் இல்லே. உங்களேப் பார்த்தா பேப்பர்காருங்க மாதிரி தெரியுதே!'' - சிரிக்கிருர்.

''என்ன சௌகரியம் வேணுங்கறீங்க?'' - நான் கேட்கிறேன்.

''முக்கியமா குழாய் வசதி, குப்பையை ஒழுங்கா வார்ரதில்லே. காண்ட்ராக்ட்காரன் தன் இஷ்டத்துக்கு வாரிக்கருன். பாக்கிறீங்களே தெரியலேயா? எவ்வளவு 'கலீஜா' இருக்குது. வாடகை வசூல் பண்ணி, தர்ம காரியங்க பண்ருங்களே ஒழிய, வாடகை கொடுக்கற கடைக்காரங்களுக்கு வசதி செய்யணுமேங்கற எண்ணம் இல்லீங்க ... வியாபாரிங்களுக்குள்ளேயும் ஒத்துமை கெடையாது.''

''ஏன் இல்லே! எல்லாரும் ஒற்றுமையா ஒரே மாதிரி வெலே தானே சொல்றீங்க?''

"நல்லாச் சொன்னீங்க, மெய்தான் . . . நீங்க சொல்ற மாதிரி அதிலே தாங்க ஒத்துமை இருக்குது . . ."

"இந்தச் சின்ன இடத்துலே என்ன சௌகரியம் செய்து கொடுக்க முடியும்?" — நான் கேட்கிறேன்.

"அப்படிக் கேளுங்க. நான் சொல்றேன் வழி - இந்தக் கொத்தவால் சாவடி வியாபாரத்தை இங்கே எதுக்குங்க வெச்சிருக்கணும்? வேறே எடத்துக்கு மாத்தட்டுமே! கவுர்மெண்டு செய்யணும். ஒரு நாள் மந்திரி மஜீதே வந்து பாத்தாரு. ஒண்ணும் சொகம் இல்லே. இப்ப ஜூ இருக்குதுங்களே, ஜூ, அதாங்க மிருகக் காட்சிச் சாலை, அதை கிண்டி ராஜபவனுக்கு மாத்தறதா ஒரு பிளான் இருக்குது. அப்ப இந்தக் கொத்தவால் சாவடியை இப்ப ஜூ இருக்கிற இடத்துக்கு மாத்திடட்டுமே. ரொம்ப சௌகரியமான இடம். எவ்வளவோ லாரிங்க வேணும்னாலும் வந்து நிக்கலாம். மெட்ராஸ் ஒல்டுக்கும் செண்ட்ரான பிளேசு . . . நாலா திசைக்கும் வண்டிங்க போக வழி இருக்குது. பக்கத்திலே செண்ட்ரல் ஸ்டேஷன். பங்களூரிலிருந்து கூட்ஸ் வண்டி வர்ரத்துக்கும் வசதி. கூட்ஸிலே வர்ர வெஜிடபிள்ஸை அப்படியே இறக்கிக்கலாம். இப்ப பாருங்க. லாரி வர முடியாமல் எவ்வளவோ அவஸ்தை . . . .?' வண்டிக்காரங்களுக்கு எடைஞ்சல், வர்றவங்களுக்கு எடைஞ்சல், கடைக்காரங்களுக்கு எடைஞ்சல். இதெல்லாம் பேப்பர்லே எழுதிப் போடுங்க . . . !"

"ஆகட்டும்" என்று கூறிவிட்டுக் கடைக்காரரிடம் விடை பெற்றுக்கொண்டு மேற்கே கிடங்குத் தெருப் பக்கம் செல்லும் வாயிற்படி வழியாக வெளியேறுகிறோம்.

"நூறு ஒண்ணேகால் ரூவா - எலுமிச்சம்பழம் . . . . சவரன்! சவரன்! சாமி! பழத்தைப் பாரு சாமி . . . . . . !"

சமையலுக்கு வேண்டிய பஞ்சரத்னங்களில் ஒன்றாகிய எலுமிச்சம் பழம் இந்த வாயிற்படியில் எந்த நாளிலும் கிடைக்கும். மற்ற நாலு ரத்னங்களான கருவேப்பிலை, கொத்துமல்லி, இஞ்சி, பச்சைமிளகாய் - கிழக்கு வாயிற்படியில் எப்போதும் கிடைக்கும்.

அப்பா! ஒரு மாதிரி வெளியே வந்து சேருகிறோம். புத்தம் புதிய உருளைக்கிழங்கு போல் உள்ளே செல்பவர்கள் அடிபட்டு, நசுங்கிய தக்காளி மாதிரி வெளியே வருகிறோம்.

கொத்தவால் சாவடி

இன்றைய மார்க்கெட் நிலவரம்: ரொம்ப மோசம்.

மூர் மார்க்கெட்

5

பய்லெட் நிப்பு — பிளாக்பர்ட் கிளிப்பு — பார்க்கர் பாடி — ஷீபர் மூடி! —

வெவ்வேறு ஜாதிப் பேனுக்களின் வெவ்வேறு பாகங்களை ஒன்ருக இணைத்து, ஒரு முழு பௌண்டன் பேனுவாக உருவாக்கி விடுகிருர் மூர் மார்க்கெட் பேனு வியாபாரி!

அதைப் போலவே, பல்வேறு வகைப் பொருள்களும் பல்வேறு வகை வியாபாரிகளும் இணைந்து நெருங்கி இயங்கும் இடத்துக்கு மூர் மார்க்கெட் என்று பெயர்! பழைய புத்தகங்கள், பழைய இரும்புகள், பழைய துணிகள், பழைய பாட்டில்கள், பழைய பாத்திரங்கள், பழைய கிராமபோன் பெட்டிகள்! — இங்கே கிடைக்காத 'ஸெகண்ட் ஹாண்ட்' சாமான்களே கிடையாது! சூரியனுக்கும் சந்திரனுக்கும் 'ஸெகண்ட் ஹாண்ட்' கிடையாதாகையால் அந்த இரண்டு மட்டும் இன்னும் இந்த மார்க்கெட்டுக்கு வந்து சேரவில்லை.

சங்கீதக்காரர்களுக்குத் திருவையாறு எப்படியோ, குதிரைப் பந்தயக்காரர்களுக்கு கிண்டி எப்படியோ அப்படி எழுத்தாளர் களுக்கு மூர் மார்க்கெட்!

பள்ளிக்கூடச் சிறுவன் முதல் பார்வை மங்கிய வயோதிகர் வரை இந்த இடத்துக்கு ஒரு முறையாவது வந்து போகாமலிருக்க மாட்டார்கள்!

பள்ளிகூடச் சிறுவன் வருவது பாதி விலைக்குப் பாட புத்தகம் வாங்க. பார்வை இழந்தவர் வருவது பழைய மூக்குக் கண்ணுடி வாங்க!

கூட்டமும், கூக்குரலும், நெருக்கடியும் சேர்ந்த சூழ்நிலையாகை யால் இங்கே பிக்பாகெட்டுகளின் நடமாட்டம் அதிகம். ஆகையால் போலீஸாரின் கண்காணிப்பும் அதிகம்!

இப்போது நாம் முன்னெச்சரிக்கையுடன் மணிபர்ஸுகளை எடுத்து மடியில் வைத்துக்கொண்டு மூர் மார்க்கெட்டுக்குள் செல் கிறோம்.

மார்க்கெட்டின் வெளி வட்டாரத்தில் பல குரல்கள் நம் காதில் விழுகின்றன. அவற்றில் ஒன்று:

"இங்கிலீஸ்காரன் சாப்பிட்டதெல்லாம் ஏளைப்பட்டவங்க சாப்பிடட்டும். எடு ஒரெணு, ரெண்டணு!"

அதென்ன அத்தகைய அதிசயப் பொருள் என்று ஆவலுடன் எட்டிப் பார்க்கிறோம். வேறென்றுமில்லை; பேரிக்காய்! அந்த இங்கிலீஸ்காரங்களே சாப்பிடட்டும் என்று மேலே நடக்கிறோம்!

"ஆரஞ்சு ஒரெணு - கமலா ஆரெணு!"

பழக் கூடைக்காரியின் அல்லது குடைக்காரியின் கர்ண கடூரமான கூப்பாடு இது.

ஆரஞ்சு இனிக்குமோ என்னவோ, அவள் கத்துகிற கத்தலில் நம் காது புளிக்கிறது! அந்த இடத்தைவிட்டுப் பத்தடி நகர்ந்து செல்வதற்குள் இருபது வியாபாரிகள் நம்மைச் சுற்றிச் சூழ்ந்துகொள்கிறார்கள். பல்பொடி, பௌண்டன் பேனா, பாச்சை உருண்டை, பிளாஸ்டிக் பெல்ட்! — இப்படி எத்தனை இல்லை?

'மூர் அங்காடி' என்ற பெயரைத் தாங்கியுள்ள மூர் மார்க்கெட் நம் கண்ணில் படுகிறது. இதற்கு அஸ்திவாரம் போட்டது 1898ஆம் ஆண்டில். கட்டி முடிக்கப் பெற்றது 1900இல். அப்போதைய முனிசிபாலிடியின் தலைவராக இருந்தவர் லெப்டினண்ட் கர்னல் ஸர் ஜார்ஜ் மூர் என்பவராகையால், அவர் பெயரிலேயே இந்த மார்க்கெட் தோற்றுவிக்கப்பட்டது.

முதலில், அந்தக் கட்டடத்தின் வெளிப் பிராகாரத்தைச் சுற்றி வருவோம்,

'ஷேக்ஸ்பியர், கம்பன், காளிதாசன், வுட்ஹவுஸ், ஸாமர்ஸெட் மாம், ஆர்னல்ட் பென்னெட், ஹெமிங்வே, அகாதா கிறிஸ்டி, மாப்பஸான், தாகூர், காண்டேகர், கல்கி, கருணாநிதி எல்லோரையும் இங்கே சந்திக்கிறோம். அவர்களிடம் சிறிது நேரம் உரையாடுகிறோம் — பழைய புத்தகங்கள் விற்கப்படும் ஸெகண்ட் ஹாண்ட் ஷாப்புகளில்தான்!

நமக்குப் பிடித்த புத்தகம் ஒன்றைத் தேடி எடுத்து அதன் விலையை விசாரிக்கும்போது, கடைக்காரர் கூறும் விலை நம்மை வியப்பிலாழ்த்துகிறது.

"இங்கே பாதி விலைக்குப் புத்தகம் கிடைக்கும் என்கிறார்களே? நீங்க சொல்லும் விலை அசல் விலையைவிட அதிகமாயிருக்கிறதே!"

"உண்மைதான், ஸார்! ஆனால் இந்தப் புத்தகம் இப்போது அவுட் ஆஃப் பிரிண்ட். புதுப் புத்தகம் கிடைப்பதில்லை யாகையால் தான் அசல் விலையைவிட அதிகம்!" என்கிறார் வியாபாரி. வேறு

வழி இல்லாததால் அந்தப் பழைய புத்தகத்தைப் புதிய விலை கொடுத்து வாங்கிக்கொள்கிறோம்.

உள் வட்டத்தில், பெரும்பாலும் நாகரிக நாரீமணிகளுக்கு வேண்டிய துணிமணிகளும் அலங்காரப் பொருள்களும் ஆடம்பரச் சாமான்களும் நிறைந்து கிடக்கின்றன!

அந்த அலங்கார மணிகளையும் அவற்றை வாங்கும் நாரீமணிகளையும் கண்ணோட்டமிட்டபடியே ஒரு 'ரவுண்டு' வருகிறோம்.

"காதுக்குப் போட்டுக்கிற ஜிமிக்கி பாத்தீங்களா, பளபளான்னு மின்னுது!" - ஒரு தொழிலாளியின் மனைவி தன் கணவரிடம் கூறுகிறாள்.

"இதெல்லாம் ட்ராமாகாரிசிங்க போட்டுக்கற கதையா யிருக்குது." - இது அந்தத் தொழிலாளி.

"இதெல்லாம் நாம்பகூடத்தான் போட்டுக்கலாம். பின்னே எதுக்காக இந்தக் கடை வெச்சிருக்காங்களாம்?"-அவள் கேட்கிறாள். அதைக் காதில் போட்டுக் கொள்ளாமல் நடக்கிறார் அந்தத் தொழிலாளி.

வளைக்கடை, செருப்புக் கடை, ரிப்பன் கடை, துணிக் கடை இவ்வளவு ஆபத்துக்களையும் கடந்து செல்வதற்குள் அந்தத் தொழிலாளி, பாவம், வெகு பாடுபட்டுப் போகிறார். அவருக்காக இரங்கிக் கொண்டே நாம் படிகளில் இறங்கி வெளியே போகிறோம்.

"எது எடுத்தாலும் முக்கா ரூபா! எது எடுத்தாலும் முக்கா ரூபா!" பல சாமான்களைத் தள்ளு வண்டியில் வைத்துக்கொண்டு கத்துகிறார் ஒரு வியாபாரி. அவரைச் சுற்றி ஒரு கூட்டம்.

இன்னும் சற்று தூரத்தில் சாப்பாட்டுக் கூடைக்காரி ஒருத்தி சோற்று வியாபாரம் நடத்திக் கொண்டிருக்கிறாள். அவளைச் சுற்றிலும் ஏழை மக்களும், ஈக்களும், நாய்களும் சூழ்ந்துகொண் டிருக்கின்றன. பகலில் தொழிற்சாலைக்குச் சுமந்து செல்லும் காரியர் சாப்பாடுகளில் மிச்சமானவற்றை ஒன்று திரட்டிக் கதம்பமாக்கிய சாப்பாடு இப்பொழுது விற்பனையாகிக் கொண்டிருக்கிறது!

"இன்னும்மே ஸோரு இப்படி இருக்குதே! ருஜியே இல்லியே . . .! தலையில் ஹாட்டு வைத்த ரிக்ஷாக்காரன் சாப்பிட்டுக்கொண்டே கேட்கிறான்.

"பின்னே எப்படி இருக்குமாம்! ஸெகண்ட் ஹாண்ட் ஸாப்பாடுதானே!" இது கூடைக்காரியின் பதில்.

"புடி, புடி, புடி! உடாதே - மடக்கு! ஓடறும் பார்! திருடன் திருடன் . . ."

ஜேப்படித் திருடன் ஒருவன் தலைதெறிக்க ஓடுகிறான். அவனைத்

துரத்திக்கொண்டு ஐந்தாறு பேர் ஓடி வருகிறார்கள். திருடனைப் பிடித்து விடுகிறார்கள்.

''மணிப் பர்ஸை மரியாதையா கொடுத்துடு!'' - மிரட்டுகிறார் கான்ஸ்டபிள்.

திருடன் எடுத்துக் கொடுக்கும் மணிப் பர்ஸைப் போலீஸ்காரர் திறந்து பார்க்கிறார். அதில் முக்கால் ரூபாய் மட்டுமே இருக்கிறது.

“இதை எந்தக் கூட்டத்திலேடா எடுத்தே?'' போலீஸ்காரர் கேட்கிறார்.

“எது எடுத்தாலும் முக்கால் ரூபா கூட்டத்திலே எடுத்தேன்!'' திருடனின் பதில்.

''சரிதான்; டேசனுக்கு வா, பேசிக்குவோம்.'' - போலீஸார் அவனைத் தள்ளிக்கொண்டு போகிறார்கள்.

இன்னொரு காட்சி. கப்பலிலிருந்து வந்துள்ள நேவி ஆசாமி, வெளிநாட்டுக்காரர் ஒருவர் வருகிறார். ரிக்ஷாக்காரர்கள் அவரைச் சுற்றிக்கொண்டு, “வா ஸார்! ஒன் ரவுண்டு மூர்மார்க்கெட் டூ ருபீஸ். நம்ம வண்டிலே ஏறிக்கோ ஸார்!'' அந்தக் கப்பல் துரை ஒரு ரிக்ஷாவில் ஏறிக்கொள்கிறார்.

''டாய்! ராஜு, பையனுக்கு அட்சுதுடா சான்ஸ், ரெண்டு ரூபா. அலேக்கா தூக்கினு பூட்டான் பாரு தொரையை!'' - ஸ்டாண்டிலுள்ள ரிக்ஷாக்காரன் தன் சகாவிடம் கூறுகிறான்.

''இப்போதைக்கு மனக் குழப்பமாயிருக்குதே தவிர, அது பத்தி சோர்ந்து போகக்கூடாது - தொழில் முன்னேற்றமில்லை. படிப்பினால் மேன்மையில்லை - அதற்கேற்ற தனரேகை இல்லை . . . எப்படியென்றால் சுக்ரமேடு சரியில்லை.'' - கைரேகை பார்ப்பவர் சக்கைப் போடாகப் போட்டுக்கொண் டிருக்கிறார். அவரைச் சுற்றி ஒரு கூட்டம்.

நகர்கிறோம்.

எதிரில் வரும் இரண்டு பேர் பேசிக்கொள்கிறார்கள்.

''நாளைக்கு சீட்டுப் பணம் எடுத்து மார்பாடி கிட்டே வெச்சிருக்கிற மோந்தரத்தை மூட்டு என் மாமியாக் கையிலே குடுக்கல்லே, எம் பேரு அர்ஜுனன் இல்லேபா!'' - அர்ஜுனன் என்பவர் பக்கத்தில் வரும் தன் தோழரிடம் கூறும் வார்த்தை இது.

''இப்போ எங்கே போவோம் அத்தைச் சொல்லு நீ, . .'' - அந்தத் தோழர் கேட்கிறார்.

திடீரென்று ஒரு கம்பீரமான குரல்: “பாவிகளே, நீங்கள் எங்கே செல்கிறீர்கள்? உங்கள் ஆத்மா எங்கே போகிறது? நாளை உங்கள் நாளல்ல; சிந்தித்துப் பாருங்கள் . . . ஐந்து நயாபைசா கொடுத்து இந்தப் புத்தகத்தை வாங்கிப் பாருங்கள் . . .”

மதப் பிரசாரகர் ஒருவர் ஒலி பெருக்கிக் குழலின் உதவியுடன் பேசிக் கொண்டிருக்கிறுர்.

அர்ஜுனனும் அவன் தோழனும் அதைக் கேட்டு விழிக்கிறுர்கள்.

''இதென்னடா . . . போவ சொல்லவே அபசகுனம் . . .'' - தோழன் சொல்கிருன்.

ஒரு சிறு கூட்டம். அந்தக் கூட்டத்தின் நடுவில் இரண்டு பேர் நிற்கிருர்கள். ஒருவர் மதப் பிரசாரகர். மற்ருெருவர் மொழி பெயர்ப்பாளர்.

''First, my friend, you must realise you are a sinner.'

''நண்பா, நீர் ஒரு பாவி என்பதை நீர் முதலாவதாக உணர வேண்டும்.'' - மொழி பெயர்ப்பாளர்.

'Because you are a sinner, you are condemned to die.'

''ஏனெனில், நீர் ஒரு பாவி. இறந்து போகத் தீர்க்கப் பட்டவர் . . .''

''ஹா ஹா ஹா ஹா! டடும் டடும் டடும் . . .'' - செப்பிடு வித்தைக்காரர் கூவி அழைக்கிருர். அங்கே போகிருேம்.

''நான் செய்யப் போவது என்ன வென்ருல் . . . டடும் . . . இங்கே கட்டி வைத்திருக்கிற பாம்புக்கும் கீரிக்கும் . . . டடும் . . . சண்டை விடப் போறதில்லே . . . டடும் . . . பின்னே என்ன செய்யப் போகிறேன் என்ருல் . . . டடும் . . . கீரியையும் பாம்பையும் விளையாட விடப் போகிறேன்... டடும் . . . கீரிப்பிள்ளைக்கும் பாம்புக்கும் சண்டை விடப்போறதா சொல்லி . . . டடும் . . . உங்களைக் கடைசி வரைக்கும் காக்க வைத்து . . . டடும், காசு வசூல் பண்றது ஏமாத்து வேலே - டடும். அதைப்போல டடும் . . . தினமும் சண்டைவிட்டுக்கிட்டிருந்தால் டடும் . . . கீரிப்பிள்ளையானது . . . டடும் தினமும் ஒரு பாம்பைக் கடித்துப் போட்டுவிடும், டடும் . . . அப்படின்ஞ நான் தினமும் ஒரு பாம்பு புடிச்சுக்கிட்டு வரணும், டடும் . . . இது நடக்கிற காரியமா? டடும் . . . அதஞலே கீரிப்பிள்ளை பாம்பு சண்டைங்கறது சுத்த ஹம்பக் . . . டடும்! ஆகையாலே எல்லோரும் என் பேச்சை நம்புங்க . . . . டடும். காட்டிலே வாழும் பாம்பும் கீரியும் மனிசன் பேச்சைக் கேட்டு ஒத்துமையா விளையாடப் போறதுதான் வித்தை! - டடும். கடிச்சுப் போடறதிலே வித்தையில்லே! டடும் . . . ஆகையாலே நான் செய்யப் போறதுதான் வித்தை! . . . என் பேச்சை நம்பு! டடும் . . . இங்கே கூடியிருக்கும் அத்தனை கனதனவான்களும், பெரிய மனுஷாளும் கொஞ்ச நேரம் நிண்ணு பார்க்கணும். டடும் . . . இப்போ எல்லோரும் ஒரு தபா பலமா கை தட்டணும், டடும் . . . ஹா ஹா ஹா ஹா . . .!''

கிளி ஜோசியம், மூலிகை வியாபாரம், தேள்கடி மருந்து, இரட்டைத் தலைக் குழந்தை எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டு கடைசியாக இரும்புச் சாமான் கடைத் தெருவுக்குள் நுழைகிறோம்.

அங்கே, கடிகாரச் சாமான்கள். சைகிள் சாமான்கள், பம்பு செட்டுகள், டெலிபோன் கருவிகள், ரேடியோக் கருவிகள், (ரோடு எஞ்சின் ரயில் எஞ்சினைத் தவிர) எல்லாச் சாமான்களும் அக்கு வேறு ஆணி வேறாகப் பிரித்துப் போடப்பட்டிருக்கின்றன.

ஒருவர் தம் நண்பரை விசாரிக்கிறார்! "எங்கே ஸார் அலைஞ்சிக் கிட்டிருக்கீங்க இப்படி?"

"எங்க வீட்டுக் கடிகாரத்துக்கு ஸெகண்ட் ஹாண்ட் ஒடிஞ்சு போச்சு ஸார். அது இங்கே கிடைக்குமான்னு பார்க்கறேன்." - அந்த நண்பர்.

"மோரு, மோரு!"

பானையில் மோர் வைத்துக்கொண்டு கூவுகிறாள் ஒருத்தி. ஒரு சிறுவன் தன் தந்தையைக் கேட்கிறான். "எதுக்குப்பா மோர் விற்கிறா?"

"இது மோர் மார்க்கெட்டாச்சே! எல்லாம்தான் விற்பா ..." என்கிறார் பையனுக்கு அப்பா!

நாம் வெளியே போகுமுன் சட்டைப் பையைத் தொட்டு மணிபர்ஸ் இருக்கிறதா என்று பார்க்கிறோம். 'ஐயோ! அதைக் காணவில்லையே!' ஒரு கணம் திடுக்கிட்டு நிற்கிறோம். ஆ! அடுத்த கணந்தான் ஞாபகம் வருகிறது. உள்ளே வரும்போது அதை எடுத்து மடியில் வைத்துக்கொண்டோமல்லவா?

அம்மாடி! - பெருமூச்சு விட்டுக்கொண்டே நிம்மதியாக வீடு வந்து சேர்கிறோம்!

சர்க்கஸ்

6

பாண்டு வாத்தியம் முழங்குகிறது. கலியாண ஊர்வலம் அல்ல.

ஆண்களும், பெண்களும், குழந்தைகளும் கும்பல் கும்பலாக டாக்சிகளிலும், ரிக்ஷாக்களிலும் வந்து கூடுகிறார்கள். - கடற்கரையல்ல.

ஆயிரக்கணக்கான பேர் சுற்றிலும் வட்டமாக உட்கார்ந்தபடி வைத்த கண் வாங்காமல் வேடிக்கை பார்க்கிறார்கள். - கிரிக்கெட் மார்ட்ச் அல்ல.

சிங்கம், புலி, யானை, கரடி, மான், குரங்கு, ஒட்டகம், வரிக் குதிரை - இவ்வளவும் இருக்கின்றன. - மிருகக் காட்சிச் சாலை அல்ல.

குண்டு விழுந்து வெடிக்கிறது. துப்பாக்கிச் சத்தம் கேட்கிறது. கத்திகள் வீசப்படுகின்றன. பீரங்கி வருகிறது. - ஜீப் வண்டி பறக்கிறது - யுத்தகளமல்ல.

புலியும் மானும் ஒன்றாகத் தண்ணீர் குடிக்கின்றன. ஆடும் சிங்கமும் அருகருகே நின்று கண் சிமிட்டுகின்றன. - புராணக் கதை அல்ல.

பெரிய பெரிய மின்சாரக் குட விளக்குகள் கண்ணைப் பறிக்கும் ஒளியுடன் கூடாரத்தின் உச்சியிலே ஊசலாடிக் கொண்டிருக்கின்றன.

ஓங்கி உயர்ந்த நெடுங் கம்பங்கள்; அவற்றை இழுத்துப் பிடித்துக்கொண்டு நிற்கும் தேர் வடம் போன்ற வலிமை மிக்க கயிற்றுக் கம்பிகள்.

"டம் . . . டொக் . . . டங் . . ."

கடப்பாறைகளை மண்ணுக்குள் ஆழமாகச் செலுத்துவதற்காக அவற்றின்மீது சம்மட்டிகளால் அடிக்கப்படும் சத்தம் இது.

கறுப்பு நிஜாரும் வெள்ளைச் சட்டையும் அணிந்த பணியாட்கள் - நூற்றுக்கணக்கான பேர் - இங்குமங்கும் சுற்றிச் சுழன்று சர்க்கஸ் காட்சிகளுக்குப் பூர்வாங்கமான பின்னணி வேலைகளைச் சுறுசுறுப்புடன் செய்துகொண்டிருக்கிறார்கள்.

சிங்கம் கர்ஜிக்கிறது!

வானம் குமுறுகிறது.

ரயில் என்ஜின் ஊதுகிறது.

சிங்கம் கர்ஜிப்பது பின்னால் உள்ள மிருகக் காட்சிச் சாலையில். ரயில் என்ஜின் ஊதுவது சென்ட்ரல் ஸ்டேஷனில். வானம் குமுறுவது - மழை மேகம் கூடுவதால்!

சோடா, சிகரெட், விசிறி விற்பனையாளர்கள் போடும் கூச்சல் அவ்வளவு சத்தங்களையும் அமுக்கிவிடுகின்றன!

மணி அடிக்கப்பட்டு, முதல் காட்சி ஆரம்பமாகிறது. மினு மினுக்கும் கவர்ச்சி உடைகளணிந்து வண்ணத்துப் பூச்சிகளைப் போல் ஓடி வருகிறார்கள் சர்க்கஸ் சுந்தரிகள்! உடம்பிலே பூசியது போன்று வெள்ளை உடை அணிந்த ஆண்கள் அவர்களைப் பின்தொடர்ந்து வருகின்றனர்.

அடுத்த கணம் கோமாளி உட்பட அவ்வளவு பேரையும் கூடாரத்தின் உச்சியிலே பார்க்கிறோம்.

ரசிகர்களின் இதயம் பட படக்கிறது.

பார் விளையாட்டு தொடங்குகிறது. ஆண்களும், பெண்களும் தாவித் தாவி ஊசலாடுகிறார்கள். விண்ணிலே மிதக்கிறார்கள். குட்டிக் கரணம் போடுகிறார்கள். போட்டுக்கொண்டே இன்னொரு கம்பிக்குப் பாய்கிறார்கள்.

"அடடா! ரொம்ப ஜோருங்க! இந்த மாதிரி 'பல்டி'யை நான் பார்த்ததே இல்லைங்க!" ரசிகர்களில் ஒருவர் பக்கத்திலுள்ள ஜிப்பாக்காரரிடம் கூறுகிறார்.

"நீங்க என்னங்க! நம் அரசியல்வாதிங்க அடிக்கிற 'பல்டி'யை விடவா இது!" - இது ஜிப்பாக்காரர்.

"சோடா, கலர், சிகரெட், விசிறி!"

"என்னப்பா, கொஞ்சம் தள்ளிப் போகமாட்டீங்களா? உங்க சர்க்கஸே பெரிய சர்க்கஸாப் போச்சே!"

குறுக்கும் நெடுக்கும் அலையும் பீடி சோடா விற்பனையாளர்களைப் பார்த்து ஒருவர் கோபிக்கிறார்.

ஏழெட்டு யானைகள் வருகின்றன. வட்டத்துக்குள் சுற்றிச் சுற்றி வருகின்றன.

'ரிங்' குக்குள் துளி இடமில்லாமல் அடைத்துக்கொண்டு நிற்கின்றன. யானைகளைத் தவிர வேறு எதுவுமே நம் கண்ணில் படுவதில்லை.

அப்படியிருந்தும் ரசிகர் ஒருவர் தம்முடைய குழந்தை எங்கே யானைகளைப் பார்க்காமல் இருந்துவிடுமோ என்ற ஐயத்தில், "யானை பாரும்மா, யானை!" என்று அக் குழந்தையின் முதுகில் தட்டுகிறார்.

யானைகள் ஒன்றின் முதுகின்மேல் இன்னொன்றாகத் தம் முன்னங்கால்களை ஊன்றி நிற்கின்றன.

"டேய், குப்புசாமி! யானைங்க ஏண்டா முதுகு மேலே நிக்குது? கீழே தாராளமா இடமிருக்குதே!"

"அதுங்களுக்கு அறிவு இல்லேடா — நீ கொஞ்சம் இரைஞ்சு சொல்லு. நானையிலிருந்து நிக்காது .. போடா குதர்க்கம்!" -இது குப்புசாமி.

ஜைனுக்காரர் ஒருவர் வருகிறார். நாலு தட்டுகளை நாலு நீண்ட குச்சிகளின் நுனியில் வைத்துச் சுழற்றுகிறார். சுழற்றிக் கொண்டே உடம்பை மல்லாந்து வளைந்து கீழே உள்ள விளக்கில் சிகரெட் பற்ற வைக்கிறார். இந்த அதிசயத்தைக் கண்டு வியந்து கொண்டிருக்கும்போதே குடம் போன்ற கனமான குண்டு ஒன்றில் மூன்று கத்திகளைச் செருகி அதை ஒரு கம்பிலே வைத்து உயரத் தூக்கி நிறுத்தி 'பாலன்ஸ்' செய்கிறார். பளபளக்கும் கத்தி முனைகள் கீழ்நோக்கி நிற்கின்றன. அம்பு வழுக்கிக் குடம் கீழே விழுந்தால் சைனுக்காரரின் கதி — அம்மம்மா! நினைக்கவே பயமாயிருக்கிறது.

டமார்!

ஐயோ இதென்ன! ஒரு கணம் நம் இதயமே நின்றுவிடுகிறது. குடம் கீழே விழுந்தே விடுகிறது. அதிலிருந்து ஒரு வெடிச் சத்தம் கிளம்புகிறது. மூன்று கத்திகளும் தரையிலே பாய்ந்து குத்திட்டு நிற்கின்றன. சைனுக்காரர் குடத்துக்குக் கீழே, கத்திகளுக்கிடையே உள்ள இடை வெளியில் நிம்மதியாகக் கால் நீட்டிப் படுத்துக் கொண்டிருக்கிறார், ஒரு விபத்துமின்றி!

இவ்வளவும் ஒரு நொடிப் பொழுதில் நடந்துவிடுகின்றன . . .

அடுத்த கணம் அவர் எழுந்து போகிறார். நம் இதயம் மறுபடி யும் வேலை செய்யத் தொடங்குகிறது.

அடுத்தாற்போல் கரடி வருகிறது. அது சும்மா வரவில்லை. மோட்டார் சைக்கிள் விட்டுக்கொண்டு வருகிறது!

அப்புறம் . . .?

குதிரை வருகிறது. சும்மா வரவில்லை. மூன்று சக்கர சைக் கிளைப் 'பெடல்' செய்துகொண்டு வருகிறது.

பின்னர் . . ?

குரங்கு வருகிறது. சும்மா வரவில்லை. ரிக்ஷாவில் ஒரு குட்டிக் குரங்கை வைத்து இழுத்துக்கொண்டு வருகிறது.

அப்புறம்? . . .

சிறுவர்கள் சிறுமிகள் வருகிறார்கள்.

சும்மா வரவில்லை. சக்கரம்போல் உடலை வளைத்துச் சுழன்று

கொண்டே வருகிறார்கள். சுழல்வது சக்கரமேதானோ என்றுகூட ஒரு கணம் பிரமிக்கிறோம்.

பிறகு . . .?

ஜீப்பிலே வருகிறார் ஒருவர். சும்மா வரவில்லை. உடைந்த மரப் பாலத்தை ஒரே 'ஜம்ப்'பில் தாண்டிக்கொண்டு வருகிறார்.

குட்டி 'பபூன்'கள் வருகிறார்கள். அவர்களும் சும்மா வரவில்லை. ஒருவரையொருவர் பிணைத்துக்கொண்டு தவளைகள்போல் தத்திக் கொண்டு வந்து நம்மைச் சிரிக்க வைக்கிறார்கள்!

சர்க்கஸ் காட்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போதே, பணியாட்கள் கூடாரத்தின்மேல் வேலை செய்வது, லைட்டுகளை இழுப்பது, வலைகளை அவிழ்ப்பது, கூண்டுக் கம்பிகளைக் கொண்டு வந்து சேர்ப்பது போன்ற வேலைகள் 'மளமள'வென்று நடைபெறு கின்றன.

காட்சி முடியப் போகிற நேரம். இவ்வளவு நேரமும் வாய் மூடி மௌனிகளாக உட்கார்ந்திருந்த ரசிக மக்களுக்குத் திடீரென்று சர்க்கஸ் பைத்தியம் பிடித்துவிடுகிறது. எல்லோரும் ஆளுக்கொரு நாற்காலியாகத் தூக்கித் தலைக்குமேல் பிடித்துக்கொண்டு 'பாலன்ஸ்' செய்கிறார்கள்!—

இத்தனை நேரமாக சர்க்கஸ் செய்தவர்களை ரசிகர்கள் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தார்களே? இப்போது ரசிகர்களின் சர்க்கஸை சர்க்கஸ்காரர்கள் வேடிக்கை பார்க்கிறார்கள்.

வேறு ஒன்றுமில்லை. திடீரென மழை பிடித்துக்கொண்டு கொட்டு கொட்டென்று கொட்டுகிறது. அதனால் மழைக்குப் பாது காப்பாக நாற்காலிகளைத் தங்கள் தலைமீது பிடித்துக்கொள்கிறார் கள் ரசிகர்கள்! அவ்வளவுதான்.

பாண்டு வாத்தியக்காரர்கள் சந்தர்ப்பத்துக்கேற்றபடி வாசிக் கத் தெரிந்தவர்கள் ஆயிற்றே? மழை கொட்டத் தொடங்கியதும், "கொட்டு கொட்டுன்னு கொட்டுது பாரு அங்கே!" என்ற பாட்டை வாசிக்கிறார்கள்!

சரி; ஜெமினி சர்க்கஸ் சொந்தக்காரரான திரு சகாதேவனைக் கண்டு பேசுவோம்.

"ஜெமினி என்று ஏன் பெயர் வைத்துக்கொண்டீர்கள்?"

"ஜெமினி சக்ரதாரியில் நான் நடித்திருக்கிறேன். அதனால் இந்தப் பெயரை வைத்துக்கொண்டேன்."

"ஜெமினி சந்திரலேகாவில் ஒரு சர்க்கஸ் காட்டுகிறார்களே— அந்த சர்க்கஸ் தங்களுடையதுதானா?"

"இல்லை; அது வேறு கம்பெனி."

"யானைகளைக் கட்டித் தீனி போடுவது என்பார்கள். நீங்கள் நிஜமாகவே யானைகளைக் கட்டித் தீனி போட்டுக் கொண்டிருக்கிறீர்கள் இல்லையா?"

"ஆமாம்; இங்கே நானூறு பேர் வேலை செய்கிறார்கள். தினம் ஒன்றுக்கு சாப்பாட்டுக்கும் தீனிக்கும் சம்பளத்துக்கும் மட்டும் மூவாயிரம் ரூபாய் செலவாகிறது."

"துஷ்ட மிருகங்களோடு எப்படித்தான் பழகுகிறீர்களோ? உயிருக்கு ஆபத்தான வேலைகளையெல்லாம் செய்கிறீர்களே; எப்போதாவது ஏதாவது அதிசயம் நடந்திருக்கிறதா?"

"ஓ! நடந்திருக்கிறதே!"

"என்ன அது?"

"இந்த சர்க்கஸ் தொடங்கி பத்து வருஷ காலம் ஆகிறது. ஆனால் இன்று வரை ஒரு விபத்துக்கூட நடந்ததில்லை. அதுவே அதிசயம்தானே!"

"சிங்கம்தானே உங்களுக்கு எதிரி?"

"இல்லை!"

"யானையா?"

"இல்லை!"

"புலியா?"

"அதுவும் இல்லை."

"வேறு என்ன?"

"மழையும் காற்றும்தான். மழையைக்கூடச் சமாளித்து விடலாம். காற்றுதான் எங்களுக்குப் பெரிய எதிரி."

"உங்கள் கம்பெனி ரஷ்யாவுக்குப் போகப் போவதாகப் பத்திரிகையில் படித்தேன்."

"ஆமாம்; ரஷ்ய சர்க்கார் அழைத்திருக்கிறார்கள். மூன்று மாதம் அங்கே தங்கப் போகிறோம். அதேபோல் ரஷ்யாவிலிருந்தும் இங்கே வரப்போகிறார்கள்."

ஒரு வீடு மாற்றினால் சாமான்களை ஓர் ஒழுங்குக்குக் கொண்டு வருவதற்குள் பெரும்பாடு படவேண்டியிருக்கிறது. ஆயிரம் விதமான சாமான்களை வைத்துக்கொண்டு எப்படித்தான் அடிக்கடி ஊர் ஊராக மாற்றிக் கொண்டிருக்கிறீர்களோ?'

"ம் . . . சர்க்கஸ்காரர்களுக்கு அதெல்லாம் ஒரு பொருட்டே இல்லை . . . " என்கிறார் சகாதேவன்.

மழை விடுகிறது. மக்கள் எல்லோரும் கூடாரத்தைவிட்டு வெளியேறுகிறார்கள்.

ஒருவர் கால் சறுக்கிக் கீழே விழுந்து விடுகிறார்!

"நல்ல சர்க்கஸ்டா இது!" — கூட்டத்தில் ஒரு குரல்.

டெஸ்ட் மாட்ச்

7

நாற்பதாயிரம் இதயங்கள் 'பட்! பட்!' என்று அடித்துக் கொள்கின்றன!

எண்பதாயிரம் கண்கள் இமை கொட்டாமல் உற்றுப் பார்க்கின்றன.

ஒரு வெட்டவெளியின் நட்ட நடுவே இரண்டு பேர் வந்து நிற்கிருர்கள். அவர்களில் ஒருவர் காசைச் சுண்டிப் போடுகிருர். சுற்றிலும் உட்கார்ந்திருப்பவர்கள் அவரையே ஆவலுடன் பார்க்கிருர்கள்.

"இண்டியா ......!" - சில குரல்கள்!

"இண்டியா!" - ஆயிரம் குரல்கள்!

"இண்டியா ......!" - ஆயிரமாயிரம் குரல்கள்!

"ஃபோர்த் டைம் வின்னிங் தி டாஸ்!" - மகிழ்ச்சி தாங்காத ரசிகர் ஒருவர் தம் பக்கத்திலுள்ள நண்பரின் மூதுகில் ஓங்கி அறைகிருர்.

"போடா இடியட்! அதுக்கு என் முதுகை ஏண்டா பிளக்கிறே?"

"இப்ப பாருடா! நம்ப இண்டியன் டீம் பிளந்து கட்டப் போகுது!"

"பிப்பி பீம்! பிப்பி பீம்! பிப்பி பீம்!" - ஒரு மிலிடரி வாத்தியம் முழங்குகிறது!

"ஜங் சக்! ஜங் சக்! ஜங் சக் .....!"

"ஜில் ... ஜில் ... ஜில் ....."

"ஜிங் ஜிங் ஜிங் ......"

"டும் டும் டும் டும் டும் ......"

"பாம்! பாம்! பாம்!"

"சர்க் ... சர்க் ... சர்க் ..."

நாலா திசைகளிலிருந்தும் எழும் தாள வாத்திய இசை ஒலிகள்!

"அதோ அம்பயர்ஸ்!"

"இப்போ வரப் போருங்க பார் கண்ட்ராக்டரும் ஜெயசிம்மாவும் பாட்டை எடுத்துக்கிட்டு ..."

"ஜெயசிம்மாவுக்குக் கையிலே அடி! உம்ரிகர் வராங்கறேன்."

''இல்லேங்கறேன்! என்ன பெட்?''

''அது சரி! 'இண்டியன்ஸ் டாஸ் வின் பண்ணு பத்து ரூபாய் தரேன்'னு பெட் கட்டினியே, கொண்டா அந்தப் பணத்தை!''

''இந்த டெஸ்ட் முடியறதுக்குள்ளே ஆயிரம் 'பெட்' கட்டப் போறோம். கடைசியில் மொத்தமாக் கணக்கை 'அட்ஜஸ்ட்' பண்ணிடலாம் . . .''

''பார்த்தாயா, நான் சொன்னபடியே ஜெயசிம்மாதான் வரான்.''

'N' பிளாக்கிலிருந்து ஒரு கட்டைக் குரல் 'V' பிளாக்கில் உட்கார்ந்திருப்பவரைப் பார்த்துக் கேட்கிறது:

''ரங்காச்சாரி! இன்னைக்கு என்ன டிபன் கொண்டு வந் திருக்கே!''

''புளியோதரை!''

''வெரி குட்! நான் லஞ்சு டயத்துக்கு வந்துடறேன்.''

''போடா ஓசி!''

'N' பிளாக்கில் உட்கார்ந்திருப்பவர்களில் பெரும்பாலோர் 'காம்ப்ளிமெண்டரி' என்னும் 'ஃப்ரீ பாஸ்'காரர்கள்.

இதை அறிந்த அடுத்த பிளாக் ரசிகர்கள் 'என்' பிளாக் ஆசாமி களைப் பார்த்துக் கேலி செய்கிறார்கள்:

''ஓசி! ஓசி!'' — சில குரல்கள்.

''ஓசி! ஓசி!'' — பல குரல்கள் கோரஸில்!

'என்' பிளாக் ஆசாமிகள் சிரிக்கிறார்கள்!

''ஓசி! சிரிக்காதே!'' - இது அடுத்த பிளாக்.

''போடா தூசி! அழச் சொல்றியா?'' - இது 'என்' பிளாக்.

''ஹை! ஹை! ஹை!''

''சர்க், சர்க்! சர்க்!''

ஸ்மித் பந்து வீசுகிறார். கண்ட்ராக்டர் பாட்டை வீசுகிறார்.

''ஹவ் இஸ் இட்?''

கோடைக்கால மழையைப்போல் ஒரே சமயத்தில் சேர்ந்து ஒலிக்கும் மக்களின் குரலை அச்சிடுவதற்கு வேண்டிய அவ்வளவு பெரிய 'டைப்' நம்மிடம் இல்லை!

''ஜிங்கிரி . . . ஜிங்கிரி ஜிக்! . . .''

''ஹை! ஹை . . . ஹை!''

''டப் . . . டப் . . . டப்!''

''சரக்! சரக்! சரக்!''

ரன்கள் இல்லாத 'மெய்டன் ஓவர்' ஒன்றை ரசிகர்கள் கொண் டாடி மகிழும் விதம் இது.

"போல்ட்!''

"ஜெயசிம்மா அவுட்! ஹாய் . . . ஊய் . . . பன்னிரண்டே ரன்!"

''ஜலஜிங்! ஜலஜிங்!''

கார்ப்பரேஷன் ஸ்டேடியமே அல்லோலகல்லோலப்படுகிறது. அடுத்து வருகிறார் மஞ்ச்ரேகர்.

''கமான் மஞ்ச்ரேகர்!'' — குதிரைப் பந்தயங்களில் கத்திக் கத்திப் பழக்கப்பட்ட ஆசாமி இவர்.

பதின்மூன்றே ரன்களில் மஞ்ச்ரேகரும் அவுட்டாகிவிடுகிறார். ஸ்டேடியம் திமிலோகப்படுகிறது.

"பதிமூணு அன்லக்கி நம்பர், ஸார்!''

"ஆமாம்; பன்னிரண்டு மட்டும் வாழ்ந்ததாக்கும்!''

''பட்டோடி வராண்டோய்!''

''கமான் பட்டோடி!'' — குதிரைப் பந்தய ஆசாமி கூறுகிறார்.

''சர்க் . . . சர்க் . . . சர்க் . . . சர்க்!"

"மஞ்ச்ரேகர் இப்படிப் போயிடுவான்னு நினைக்கல்லே, ஸார்! டில்லியிலே 189 போட்டான் ஸார்!''

"தட் இஸ் கிரிக்கெட்! கல்கத்தாவிலே வின் அடிக்கிற குதிரை, மெட்ராஸிலே மண்ணைக் கவ்விடும், ஸார்!" — குதிரைப் பந்தய ஆசாமியின் விமரிசனம்!

"நேத்து இந்த மஞ்ச்ரேகர் நூறு போடுவான், ஒரு ரன்னுக்கு ஒரு வேர்க்கடலை சாப்பிடலாம்னு ஆசையோடு நூறு வேர்க்கடலை வாங்கி வெச்சேன், ஸார்! ஹூம்! பதிமூணே கடலைதான் தின்ன முடிஞ்சுது . . .''

''மிச்சக் கடலையை என்ன செய்தீங்க?''

''இன்னும் பதினாறு கடலை சேர்த்து வாங்கி நூத்திமூணு கடலையாத் தின்னுட்டேன்.''

"ஏன்?''

"பட்டோடி நூத்திமூணு போட்டானே!"

"போறுங்க பார் ,சிவப்பு பெல்ட்டுங்க, கூல் டிரிங்க் எடுத்துக்கிட்டு, சீர் வரிசை மாதிரி . . .!''

''அதுக்குள்ளே டிரிங்க் டயம் வந்துட்டுதா?''

"இந்த வருஷம் தேவலையே. இரண்டே டயம் தானே டிரிங்க் . . . !"

"சிவாஜி டோய்!''

"எங்கே? எங்கே?"

''பெவிலியன் பக்கம் பார் . . . ''

"பைஞகுலரை எடு . . . !"
"ஜெமினி கணேசன்கூட வந்திருக்காண்டா!"
"யாரு, காதல் மன்னனு!"
"ஆமாம்; காதல் மன்னி சாவித்திரிகூட வந்திருக்காங் களே . . . !"

"கூ ஊ ஊ ஊ . . ." - சென்ட்ரல் ஸ்டேஷனில் ரயில் என்ஜின் போடும் சத்தம்!
"நம்மவங்க ஃபீல்டிங் எப்படி இருக்கு பார்த்தயா!"
"நெருப்பு!"
"புகை! புகை!"
"பொறி பறக்குது!"
"அப்ப ஃபயர் என்ஜினைக் கூப்பிடுங்களேன் . . ."
"எதுக்கு? ஃபீல்டிங் நெருப்பாயிருக்குன்னு சொன்னேன் . . ."
"புகை புகைன்னுங்களே!"
"ரயில் என்ஜின்லேருந்து வர புகையைச் சொல்லி யிருப்பாங்க; அதோ பாரு, சுருள் சுருளா வருது!"
"பொறி பறக்குதுன்னுங்களே!"
"எங்கேயாவது பாப்கார்ன் பொறி பறந்திருக்கும்!"
"அட சட்!"

"ஆ!" - எல்லோரும் வாயைப் பிளக்கிருர்கள்!
"ஸிக்ஸர்! ஸிக்ஸர்!"
அம்பயர் தம் கைகளிரண்டையும் உயரத் தூக்குகிருர்.
"பவுண்டரி லைனைச் சுருக்கிஞ நான் கூடத்தான் ஸிக்ஸர் அடிப் பேன் . . ."
"ஆமாம்! இந்த ஸ்மித்துங்க ரெண்டு பேரும் எதுக்கு இப்படி ஸிக்ஸராத் தூக்கருங்க?"
"கிட்டே அடிச்சா பந்தை மடக்கிப் பிடிச்சுடருங்களே நம்ம வங்க!"
". . . . For the first time Knight from the garden end to Engineer - on the run - bowls to Engineer on the leg stick short of a length . . . . ."
டிரான்ஸிஸ்டரிலிருந்து வரும் காமண்ட்டரி இது.
"யார் பேசறது? ஆனந்த ராவா?"
"குரல் தெரியலே? — விஜிடா!"
"அது சரி; இந்த நைட் எதுக்கு போல் பண்றதுக்கு ஸ்கிரீன் வரைக்கும் போய் வரார்!"
"அந்தக் கேள்வி நைட்டைக் கேளு!"

"எதுக்குடா 'பிச்'சுக்கு இரண்டு பக்கமும் ஸ்கிரீன் போட்டிருக் காங்க?"

"இல்லேன்ன நைட் போல் பண்றப்போ ஸ்கிரீனுக்கும் அப்பால் தாண்டிப் போயிடுவாரே, அவரைத் தடுக்கத்தான்!"

"ஆரஞ்சு! ஆரஞ்சு!"

"ஆரஞ்சு எவ்வளோப்பா?"

"ஆறஞ்சு முப்பது! இது தெரியாதா?" - பக்கத்திலுள்ளவர் கேட்கிறார்.

"ஒண்ணு நாலணுங்க!"

"இது வரைக்கும் எவ்வளவு வித்திருப்பே? செஞ்சுரி போட்டிருப் பாயா?"

"பட்டோடி ரன்னையே மிஞ்சிட்டேங்க!"

"சரி! ஒரு ஆரஞ்சு போடு . . ."

"வீசிப் போடட்டுமா? காச் புடிப்பீங்களா?"

"ஹலோ! ரிச்சர்ட்ஸன் - 13, பார்பர் - 16, பாரிங்டன் - 20, டெக்ஸ்டர் - 2 . . . ." - பிரஸ் ரிப்போர்ட்டர் தமது காரியால யத்துக்குப் போன் செய்கிறார்.

ஆரஞ்சுத் தோல்கள், காகிதங்கள் வீசப்படுகின்றன! ஆங் காங்கே காக்கைகள் பறக்கின்றன! — லஞ்சு டயம் பரபரப்பு!

"ரங்காச்சாரி! இன்றைக்கு என்னடா டிபன் கொண்டு வந் திருக்கே?"

"அரிசி உப்புமாடா. இந்த டல் கேமுக்கு அது போதும்."

"லாக் வராண்டா . . ."

"எதுக்கு உப்புமாவுக்கா!"

"கண்ட்ராக்டர் அந்தப் பந்தை எப்படிப் புடிச்சான் பார்த் தயா?"

"அது சரி; சாயந்தரம் நம் டிரிப்ளிகேன் பஸ்ஸைப் பிடிச்சா கணுமே; அதுக்கு என்ன சொல்றே?"

ஒரு சின்ன வாண்டுப் பயல். வயசு ஆறு இருக்கும். அவன் சொல்கிறான்:

"அப்பா! என் 'லைப்'லே இந்த மாதிரி கேம் (Game) பார்த்த தில்லேப்பா. நட்கர்னி போலிங் பெஸ்ட்டுப்பா!"

அம்பயர் இரண்டு கைகளையும் உயரத் தூக்கறாரே! மறுபடி யும் யாராவது ஸிக்ஸர் அடிச்சாங்களா?"

''அட நீ ஒண்ணு! அவர் கையைத் தூக்கிச் சோம்பல் முறிக்கிருரு . . ''

யாரோ ஒருவர் 428 என்கிருர். 428ஆம் நெம்பர் கான்ஸ்டபிள் திரும்பிப் பார்க்கிருர்.

"உன்னைக் கூப்பிடல்லேய்யா! நான் ஸ்கோர் சொன்னேன்."

லாக் ஒரு பந்தை ஓங்கி அடிக்கிருர். பந்து ஆகாசத்தில் பறக்கிறது. நட்கர்னி ஓடி வந்து அதைக் காச் பிடித்து லாக்கை அவுட்டாக்கி ஆட்டத்தை முடிக்கிருர். அவ்வளவுதான். நாற்பதாயிரம் பேரும் எழுந்து நிற்கிருர்கள். ஸ்டேடியமே 'ஜேஜே' என்றிருக்கிறது. பட்டாசு வெடிகள் காதைப் பிளக்கின்றன. ஆரவாரம்! கோஷம்! கரகோஷம்! சந்தோஷம்!

''ரப்பர்! ரப்பர்!''

''இந்தியா ரப்பர் வின் பண்ணிட்டுது. ஹிஸ்டாரிக் ஈவண்ட்! இண்டியாவுக்கு ஸெகண்ட் விக்டரி!''

''ரகுபதி ராகவ ராஜா ராம்
பதித பாவன சீதாராம்
'லாக்'கு பந்தை அடிச்சாராம்
நட்கர்னி பிடிச்சுப் போட்டாராம்.''

ஜங் சக் ஜங் சக் ஜங் சக்!
பிப்பிபீம் பிப்பிபீம் பிப்பிபீம்!

பெங்களூர் ரேஸ் கிளப்

8

வட்டமான மாபெரும் மைதானம். அதைச் சுற்றிலும் உயர மான காம்பவுண்டுச் சுவர். அதன் முகப்பு வாயிலே அடைகிறோம். நமக்கு முன்பாகவே பல பேர் கார்களிலும், ஆட்டோக்களிலும், சைக்கிள்களிலும், நடையாகவும் ஓட்டமாகவும் அங்கே வந்து கூடிக்கொண் டிருக்கிறார்கள். எல்லோருடைய நடையிலும் ஒரு பரபரப்பு! முகத்திலே அசுவக் களை!

ஒவ்வொருவர் கையிலும் பகவத் கீதை போன்ற சிறு புத்தகம்! அந்தப் புத்தகத்துக்குள் அவர்கள் வழிபடும் குதிரைகளின் நாமாக் கள், எடை, நடை, பாவனை, ஜாதகம் இத்தியாதி இத்தியாதி . . . !

நாமும் ஒரு அசுவ கீதையை வாங்கிக்கொண்டு உள்ளே நுழை கிறோம்.

அவ்வளவு பேரையும் கவர்ந்திழுக்கக்கூடிய அத்தகைய புண்ணிய காரியம் அங்கே என்ன நடக்கிறது?

பெங்களூர் ரேஸ் கிளப்பார் நடத்தும் அசுவமேத யாகம்தான். அந்த யாகத்தைக் காணவும், அதில் நேரடியாகப் பங்கு கொள்ள வும் பல்லாயிரக்கணக்கான தேவர்களும் தேவியர்களும் குழுமியிருக் கிறார்கள்.

தேவர்கள் இமை கொட்டுவதில்லையென்றும் அவர்களுடைய கால்கள் பூமியில் பதிவதில்லை யென்றும் புராணங்களில் படித்திருக் கிறோமல்லவா? அந்த அதிசயக் காட்சியை இங்கே நேரிலேயே காண் கிறோம்.

குதிரைகள் ஓடும்போது இந்த தேவர்களும் தேவிகளும்கூடக் கண்ணிமைப்பதில்லை. அவர்களுடைய கால்களும் பூமியில் நிலைப்ப தில்லை. நின்ற இடத்தில் நிற்காமல் ஓடிக்கொண்டே இருப்பார்கள்! சாடிக்கொண்டே இருப்பார்கள்!

ஒருவர் அசுவ கீதையைக் கையில் வைத்துக்கொண்டு 'ஓம் சக்தி! ம் சக்தி!' என்று ஜபித்துக் கொண்டிருக்கிறார். அவருக்குப் பின் னால் நிற்பவர் அவருடன் சேர்ந்துகொண்டு 'ஆம் சக்தி! ஆம் சக்தி!' என்று பாராயணம் செய்கிறார்.

'ஓம் சக்தி' என்பது ஒரு குதிரையின் பெயர்! ஜபம் செய்பவர் அதன்மீது 'வின்'னுக்குப் பணம் கட்டியவர். 'ஆம் சக்தி' என்ப

வர் 'பிளேஸு'க்குக் கட்டியவர். அவர்களிருவரின் ஜபமும், பாராயணமும் வீண் போகவில்லை. வின்னுக்கு முப்பது ரூபாயும் பிளேஸுக்குப் பதினேழு ரூபாயும் கிடைக்கிறது.

மூன்ருவது ரேஸ் முடிந்து நாலாவது ரேஸ் ஆரம்பமாகப் போகிறது. நாலாவது ரேஸில் ஓடப் போகும் குதிரைகளின் பெயரும், சவாரி செய்யப் போகும் ஜாக்கிகளின் பெயரும் போர்டுக்கு வருகின்றன; பணம் கட்டப்போகிறவர்களின் பார்வைக்காக குதிரைகள் 'பாடக்'குக்கு வருகின்றன. தேவர்களும் தேவியர்களும் குதிரைகளை இமை கொட்டாமல் பார்க்கிருர்கள்.

"லேடி ஜிப்ரால்டர், நாட் பேட், பால்மா, டாப்கிளாஸ், ஹைலெவல், மைகா பிரின்ஸெஸ் போத் ஆர் குட்" என்று தேவ தேவியர்கள் பேசிக்கொள்வது காதில் விழுகிறது. அதோ, அசரீரி வாக்கு ஒலிக்கிறது.

"யுவர் அட்டென்ஷன் ப்ளீஸ்! நௌ தி ஹார்ஸெஸ் ஆர் லீவிங் தி பாடக் அண்ட் ஆன் தி வே டு தி ஸ்டார்ட்டிங் ப்ளேஸ். ப்ளீஸ் பர்ச்சேஸ் யுவர் டிக்கட்ஸ் நௌ . . . . .!" - எல்லோரும் டிக்கட்டுகள் வாங்குமிடத்தை நோக்கி விரைகின்றனர். நாமும் தொடர்கிருேம்.

சில சம்பாஷணைகள்:

"ஹவ் ஈஸ் பால்மா?"

"ஒண்டர்புல்!"

"ஏமண்டோய்! குர்ரம் எட்ல உண்டாதி?" - ஓர் ஆந்திரர் கேட்கிருர்.

"சூசேதானிகி பாக உண்டாதி! . . . ரன்னிங்லோ சூட வலா . . ." - இன்னெரு ஆந்திரர் பதில் கூறுகிருர்.

"மூரனே நம்பர் ஒந்து பிளேஸ் டிக்கட் தெகது நோடு . . ."

"என்னங்க, மூணுவது ரேஸிலே 'எஸ்குயர்' என்ன குடுத்துதுங்க?" - ஒரு தமிழர்.

"பெரிய ஏமாத்தத்தைக் கொடுத்துதுங்க . . ." — சலிப்புடன் மற்றவர்.

"ஏழாவது ரேஸ்லே என்ன கட்டப் போறீங்க?"

"நடையைக் கட்டப் போறேன். ஏன்யா வயிற்றெரிச்சலைக் கிளப்பறே . . . ?"

புக்கிங் பக்கமாகச் செல்கிருேம்.

"ஐ பெட் த்ரீ டைம்ஸ் பால்மா . . ." - ஒரு புக்கியின் குரல்.

"ஐ பெட் மைகா பிரின்ஸஸ் - ஸிக்ஸ் டைம்ஸ்!" - இது இன்னெரு புக்கி.

''ஏன் ஸார்! மைகா பிரின்ஸஸ் ட்ரை பண்ணிப் பாருங்களேன் . . . வெரிகுட் ஹார்ஸ் . . .'' - ஒருவர் தம் நண்பரிடம் கூறுகிறார்.

''இல்லே வேண்டாம். மூணுவது ரேஸ்லேயே பணம் பூராவும் போயிட்டுது. கத்திக் கத்தி தொண்டையும் போயிட்டுது . . .''

''அப்படின்னு நாலாவது ரேஸிலே கட்டவே போறதில்லையா?''

''கட்டறதுக்கு என்ன இருக்கு? தொண்டைதான் இருக்கு!''

புக்கி ஒருவர் அடிக்கடி பைனுகுலரை எடுத்து அடுத்த புக்கி போர்டில் என்ன எழுதியிருக்கிறார் என்று பார்க்கிறார். உடனே இவரும் தம் போர்டை அழித்து எழுதுகிறார்.

டிடிங் . . . டிடிங் . . . டிடிங் . . .

நாலாவது ரேஸ் ஆரம்பமாகிவிட்டது என்பதை மணிச் சத்தம் அறிவிக்கிறது.

''பால்மா லீடிங் . . . ஃபாலோட் பை லேடி ஜிப்ரால்டர் . . .'' - அசரீரி வாக்கு அலறுகிறது.

''பட பட பட பட பட்'' - இது குதிரைகள் ஓடிவரும் சத்தமல்ல. பணம் கட்டியவர்கள் இதயம் அடித்துக்கொள்ளும் சத்தம்! பணம் கட்டிவிட்டு வேலிக்குப் பக்கத்தில் வந்து நிற்கும் பல்லாயிரக் கணக்கான பேரும் சேர்ந்து கூக்குரலிடுகின்றனர்.

''கமான் பால்மா . . . . . . !''

''கமான் லேடி ஜிப்ரால்டர்!''

''கமான் ஹை லெவல்!''

சிலர் உணர்ச்சி வசப்பட்டுக் கைகளை உயர்த்திக் கத்துகிறார்கள். சிலர் குதிக்கிறார்கள். வேறு சிலர் பைத்தியம் பிடித்த மாதிரி உடம்பை வகிகரித்துக்கொள்கிறார்கள்.

எந்தக் குதிரைமீதும் பணம் கட்டாத ஒருவர் மட்டும், 'எனி ஹார்ஸ், கமான்!'' என்று உற்சாகமாகக் கூவுகிறார்.

கடைசியில் பால்மா ஜெயிக்கிறது. பால்மாமீது பணம் கட்டியவர்கள் முகம் மலர்கிறது. மற்றக் குதிரைகள்மீது பணம் கட்டியவர்கள் முகம் குதிரை முகம் மாதிரி மாறுகிறது.

இரட்டை நாடி சரீரம் படைத்தவர் ஒருவர் சொல்கிறார்:

''நான் மட்டும் ஜாக்கியாயிருந்தா அந்த மைகா பிரின்ஸஸை எப்படி ஓட்டியிருப்பேன், தெரியுமா?''

''மைகா பிரின்ஸஸ் ரொம்பத் தண்ணி குடிச்சுட்டுதாம் . . .''

''பங்களூராச்சே . . . !''

''போன வருஷம் ரேஸ்லே அந்த ஜாக்கி என்ன பண்ணினுன் தெரியுமா? மவுண்ட் எவரெஸ்ட் மேலே ஏறி பே ஆப் பெங்கால்லே விழுந்தான் . . . அவனை நம்பவே கூடாது . . . கிட்ட வரப்போலகானைப் புடிச்சு வலிப்பான். ரொம்ப டிரிக்ஸ்காரன் அவன்!

இந்தியா ஓல்டுக்கும் குதிரை கூடவே சுத்தி வரவனுச்சே நான். எனக்குத் தெரியுமே ஜாக்கிங்க சங்கதி . . .'' - மெட்ராஸ் ஆசாமி ஒருவர் சொல்கிறுர்.

வேெறொரு சம்பாஷணை:

"முதல் ரேஸிலே ரெண்டே குதிரைதானே ஓடிச்சு? நீங்க எது மேலே கட்டினீங்க?''

''எது மேலேயும் கட்டல்லே. ஒரே குதிரை மட்டும் ஓடற ரேஸிலேதான் கட்டப் போறேன். அப்பத்தான் நிச்சயமா 'வின்' அடிக்கலாம்.''

''என்ன ஸார் ரொம்ப வருத்தமா இருக்கீங்க? ஏதாவது பணங்கட்டிப் போயிடுத்தோ . . .?''

''இல்லே; போன ரேஸிலே சும்மா மானசீகமாவே ஒரு குதிரை மீது பணம் கட்டினேன். அதிலே என்னடான்னு? ஆயிரம் ரூபாய் வந்துட்டது . . .''

''அதுக்கு வருத்தப்படுவானேன்? நிஜமாகவே கட்டாமல் போயிட்டமேன்னு வருத்தப்படறீங்களா?''

''இல்லே ஸார்! அடுத்த ரேஸிலும் மானசீகமாக் கட்டப் போறேன். வந்த பணம் போயிடப் போறதே என்று வருத்தமா யிருக்கு . . .''

"யுவர் அட்டென்ஷன் ப்ளீஸ்! நௌ தி ஹார்ஸெஸ் ஆர் லீவிங் தி பாடக் . . ."

மீண்டும் கூட்டத்தில் பரபரப்பு. இங்குமங்கும் ஓடுதல் — சாடுதல். புக்கிகளின் கூக்குரல்!

''அஞ்சாவது ரேஸ்லே என்ன வருங்க?'' - ஒருவர் கேள்வி.

''மழை வருங்க . . .'' - மற்றவர் பதில்.

''ரேஸுலே வந்தாத்தான் பணம் போகுதுன்னு தெரியுதே! திரும்பத் திரும்ப இங்கேயே ஏன் வந்துகிட்டிருக்கீங்க . . .?''

''என்னங்க பண்றது? இங்கே விட்ட பணத்தை இங்கேதானே எடுக்கணும்?''

மீண்டும் பாடக்கிலிருந்து புக்கிகள் பக்கம் செல்கிறோம். இடையில், ''டிக்ஸன் டிஸப்பாயிண்டட் மி வெரி மச்! ராபர்ட்ப்ரூஸ் டாப் கிளாஸ் ஹார்ஸ்! தட் இஸ் தி இன்பர்மேஷன்'' - ஒரு ஆங்கிலோ இந்திய அழகி மற்றொரு கந்தர்வப் பெண்ணிடம் கூறுவது நம் காதில் விழுகிறது.

டிடிங் . . . டிடிங் . . . டிடிங்.

ஐந்தாவது ரேஸ் ஆரம்பமாகிறது. மீண்டும் ஆரவாரம். அந்தப் பருத்த மனிதர் பின்னுல் போய் நிற்கிறோம். அவர் முகத்தில் கவலையும் ஆவலும் பரபரப்பும் தாண்டவமாடுகின்றன.

வைத்த கண் வாங்காமல் குதிரைகள் ஓடி வருவதையே பார்த்தபடி 'கமான் கமான்' என்று கத்துகிறுர். குதிரைகள் 'வின்னிங் போஸ்ட்'டை நெருங்கும் சமயம் பார்த்து அவருக்குப் பின்ஞல் வந்து நிற்கும் நண்பர் அவருடைய கண்களைத் தமது இரு கைகளாலும் பொத்திக்கொண்டு, 'நான் யார் சொல்லு பார்க்கலாம்' என்கிறுர். பருத்த மனிதர் துள்ளிக்கொண்டு அவர் கைகளைப் பிடித்து உதறிவிட்டு, ''அட சட்! இப்பத்தாஞ விளையாடறதுக்கு சமயம்?'' என்று கோபிக்கிறுர்.

"என்னடா ஆச்சு?'' - ஓர் ஆசாமியின் கேள்வி.

''போச்சுடா . . .'' - முகத்தைக் குதிரை மாதிரி தொங்கப் போட்டுக்கொண்டு பதில் கூறுகிறுர் மற்றவர்.

''நான் அப்பவே 'கரேஜ்'லே (Courage) கட்டாதே'டான்னு 'டிஸ்கரேஜ்' பண்ணேன். நீ கேட்டாயா?''

அன்றைய பந்தயம் ஒரு வழியாக முடிவடைகிறது. ரேஸ் மைதானம் முழுதும் பத்து ரூபாய்களும் ஐந்து ரூபாய்களுமாக இறைந்து கிடக்கின்றன. நோட்டுகளல்ல; தோற்றுப் போன ரேஸ் டிக்கட்டுகள்!

"நௌ தி பீபிள் ஆர் லீவிங் தி ரேஸ் கோர்ஸ் . . ." — இது ஒலிக்காத அசரீரி.

நாலு போலீஸ்காரர்கள் ஒரு ஆசாமியை பந்தோபஸ்தாகச் சூழ்ந்து அழைத்துச் செல்கிறுர்கள்.

''அந்த மனிதர் என்ன தப்புச் செய்தார்? போலீஸார் ஏன் அவரை அழைத்துச் செல்கிறுர்கள்?'' - நாம் வியப்புடன் விசாரிக்கிறேம்.

''இவருக்கு ட்ரிபிள் ஈவண்ட்லே பத்தாயிரம் ரூபாய் பணம் வந்துட்டுது. அதஞலே அவரை பத்திரமா அழைத்துக்கொண்டு போய் வீடு சேர்ப்பது போலீஸார் வேலையாச்சே! இல்லாட்டா பிக்பாக்கெடுங்க அந்த ஆளைக் கொத்திக்கிட்டுப் போயிடுவாங்களே. பத்தாயிரமாச்சே! ஹ்ம் . . . எனக்கு வந்திருக்க வேண்டியது. ஸெகண்ட் 'லெக்' தவறிப் போச்சு . . . ''

"ஓகோ! விஷயம் அப்படியா?'' என்று சொல்லிக்கொண்டே வெளியேறுகிறேம்.

அசுவமேத யாகம் முடிகிறது. யாகத்தின் பலன்? பலருக்குச் சில துளி; சிலருக்குப் பெருவெள்ளம்!

நெய்வேலி

9

நெய்வேலி டவுன்ஷிப்!

நெய்வேலியிலிருந்து ஏழெட்டு மைல் தூரத்திலுள்ள டவுன் ஷிப்புக்குப் போக பஸ் பிடித்தாக வேண்டும். பஸ்களுக்கு நம்பர் கொடுத்திருக்கிறார்கள். என்ன கொடுத்து என்ன? அந்தப் பஸ்கள் வந்தால்தானே அவற்றைப் பிடிக்க முடியும்?

நெய்வேலி பஸ் ஸ்டாண்டில் பஸ்ஸுக்காகக் காத்திருந்து டவுன் ஷிப்பை அடைவதற்கு அப்படி ஒன்றும் அதிக நேரம் ஆவதில்லை. சென்னையில் புறப்படும் கேரவல் விமானம் டில்லி போய்ச் சேருகிற நேரம்தான் ஆகிறது! ஒரு வேளை கேரவல் அரை மணி முன்னதாகப் போய்ச் சேரலாம். அவ்வளவுதான் வித்தியாசம்.

நானும் நண்பரும் பஸ் ஸ்டாண்டில் வெகு நேரமாய்க் காத் திருக்கிறோம்.

''எப்படியும் டவுன்ஷிப்புக்குப் போக ஏதாவது வண்டி கிடைத்தே தீரும்'' என்கிறார் நண்பர்.

''எப்படி?'' - நான் கேட்கிறேன்.

''இப்படியே மணிக்கணக்கில் நின்றுகொண் டிருந்தால் பசி மயக்கம் ஏற்பட்டுக் கீழே சுருண்டு விழுவோம். டவுன்ஷிப் ஆஸ்பத் திரிக்குத் தகவல் எட்டியதும் ஆம்புலன்ஸ் கொண்டு வந்து நம்மை ஏற்றிச் செல்வார்கள் அல்லவா?'' என்கிறார் அவர். இதற்குள் நாம் எதிர்பார்க்கும் பஸ் வந்துவிடுவதால் அதைக் கண்டு மயக்கம் போடத் தோன்றுகிறது! அப்படிச் செய்யாமல் பஸ்ஸில் ஏறிக் கொள்கிறோம்.

டவுன்ஷிப்பில் நாம் எந்த பஸ் ஸ்டாப்பில் இறங்க வேண்டு மென்று தெரியாததால் ஏதோ ஓரிடத்தில் இறங்கி வைக்கிறோம். சுற்று முற்றும் பார்க்கும்போது எல்லா ரோடுகளும், எல்லா வீடு களும் ஒரே மாதிரி தோற்றமளிக்கின்றன.

நாம் போக வேண்டிய வீட்டைத் தேடி வீதி வீதியாக அலை கிறோம். 'திருப்பதியில் மொட்டைத் தாதனைக் கண்டாயா?' என்கிற கதைதான்! வெயில் கடுமையாக இருப்பதால் அனல் வீசு

கிறது. ஆகவே, இந்தப் புதிய டவுன்ஷிப்புக்கு நாமாகவே அனல் வேலி என்ற பெயரைச் சூட்டுகிறோம்.

அங்குள்ள வீதிகளுக்கு கூழாங்கல் தெரு, வெண்டைக்காய் வீதி, சுண்டைக்காய் லேன் என்று கண்டபடி பெயர் வைத்திருக்கிறார்களே, அதையெல்லாம் அவர்கள் நம்மைக் கேட்டுக் கொண்டா வைத்தார்கள்?

நாம் போக வேண்டிய வீட்டைக் கண்டுபிடிப்பதற்குள் அநேகமாக டவுன்ஷிப்பிலுள்ள 8560 வீடுகளையும் ஒன்று விடாமல் சுற்றிப் பார்த்து முடித்து விடுகிறோம்.

வீதிகளும் சாலைகளும் விசாலமாகவும், நீளமாகவும் இருக்கின்றன. அங்கப் பிரதட்சணம் செய்யலாமா என்றுகூட ஆசையாயிருக்கிறது. யாராவது எதிரே வந்தால் அவர்களை விலாசம் விசாரிக்கலாம் என்றால், ஆள் நடமாட்டமே இல்லை. தப்பித் தவறி யாராவது எப்போதாவது வந்தாலும் அவர்களும் நம்மைப்போல் விலாசம் விசாரிப்பவர்களாய்த்தான் இருக்கிறார்கள்!

கடைசியில் நாம் செல்ல வேண்டிய வீட்டை ஒரு வழியாகக் கண்டுபிடிக்கிறோம். 'வாருங்கள் வாருங்கள்' என்று நெய்வேலி நண்பர் நம்மை வரவேற்கிறார்.

"உங்கள் வீட்டைக் கண்டுபிடிப்பதற்குள் பெரும்பாடாகி விட்டது சார்! ஒரே ஒரு நாள் வருவதற்கே நாங்கள் இத்தனை பாடு பட்டோமே, நீங்கள் தினம் தினம் எப்படித்தான் கண்டுபிடித்துக் கொண்டு வருகிறீர்களோ?" என்று அந்த நண்பரிடம் கேட்கிறோம். நண்பர் சிரிக்கிறார். குடிப்பதற்குத் தண்ணீர் கேட்கிறோம்.

"இந்த ஊரில் தண்ணீர்ப் பிரச்னைதான் பெரிய பிரச்னை!" என்கிறார் நண்பர்.

"இங்கேதான் பாதாளத்திலுள்ள தண்ணீர் மேல்நோக்கிப் பீறிக்கொண்டு வருகிறதாமே, அப்புறம் என்ன பிரச்னை?"

"அதைத்தான் சொல்கிறேன். மற்ற இடங்களில் தண்ணீர்ப் பிரச்னை என்றால் தண்ணீர் இல்லாத பிரச்னைதான். இங்கே அதிகப்படி தண்ணீர் எங்களுக்குப் பிரச்னையாயிருக்கிறது. இந்த ஊர்க்காரர்கள் குழாயை மூடுவதே கிடையாது. இருபத்துநாலு மணி நேரமும் தண்ணீர் கொட்டியபடியேதான்!" என்கிறார்.

"நெய்வேலியில் எங்கே பார்த்தாலும் கரி மலைகளாய்க் குவிந்து கிடக்கும் என்றல்லவா எண்ணிக்கொண்டிருந்தேன்? இங்கே துளி கரிகூடக் கண்ணில் படவில்லையே...!" என்கிறார் சென்னை நண்பர்.

"கவலைப்படாதீர்கள். சென்னைக்கு நாம் ரயிலில்தான் திரும்பிப் போகப் போகிறோம். ரயில் ஓடும்போது கரித் துண்டு கண்ணில் படும்" என்று சமாதானம் கூறுகிறேன்.

பப்ளிக் ரிலேஷன் ஆபீஸர் அய்யாத்துரை ஆசிர்வாதம் அவர்களை கெஸ்ட் ஹவுஸில் சந்திக்கிறோம்.

அவரைக் கண்டதும், ''கரிச் சுரங்கம் பார்க்கலாமா?'' என்று துடிக்கிறார் சென்னை நண்பர்.

கோலார் தங்க வயலைப்போல இங்கேயும் பூமிக்குள் சுரங்கப் பாதை வெட்டி கரி எடுத்துக்கொண் டிருப்பார்கள் என்று எண்ணிக் கொண்டு போகிறோம். ஆனால் இங்கே சுமார் ஒன்றே கால் மைல் நீளத்துக்கு; ஒரு பர்லாங் அகலத்துக்கு, 180 அடி ஆழத்துக்கு ஒரு பெரிய குளம் வெட்டி வைத்திருக்கிறார்கள். வெட்டிய மண்ணை யெல்லாம் வேறொரு பக்கம் மலையாகக் குவித்திருக்கிறார்கள்.

''அதோ கீழே கறுப்பாகத் தெரிகிறது பாருங்கள், அவ்வளவும் கரிதான்!'' என்கிறார் ஆசிர்வாதம்.

''இவ்வளவு கரி இங்கே எப்படி வந்தது?'' என்று விசாரிக்கிறோம்.

''பல லட்சம் ஆண்டுகளுக்கு முன்னால் இங்கே காடுகள் இருந்திருக்க வேண்டும். பூகம்பம் ஏற்பட்டு அந்தக் காடுகளை விழுங்கியிருக்க வேண்டும். பூமிக்குள் அமுங்கிப்போன அந்தக் காடுகள் தான் இத்தனை காலத்துக்குப் பிறகு கரியாகி இருக்கின்றன. இங்கே நூறு சதுர மைல் விஸ்தீரணத்துக்குக் கரிப் படிவம் இருக்கிறது. இங்குள்ள 200 கோடி டன் கரியை வெட்டி எடுக்க நூறு வருஷ காலம் ஆகலாம்'' என்கிறார் ஆசிர்வாதம்.

''வடிக்கட்டிய காப்பித்தூள் மாதிரி அல்லவா இருக்கிறது நிறம்?'' என்கிறேன் நான்.

''உரக்கச் சொல்லாதீர்கள்; அப்புறம் காப்பித் தூளோடு இதைக் கலத்து விற்க ஆரம்பித்து விடுவார்கள்! இதை உயர்ந்த ரகக் கரி என்று சொல்ல முடியாது. ஆங்கிலத்தில் இதை 'Dwarf Member of The Coal Family' என்று சொல்லுவார்கள்.''

'''பக்கெட் வீல் எக்ஸ்கவேடர்' என்னும் மண் துருவி இயந்திரம் துருவித் தரும் கரிகளைப் பக்கெட்டுகள் ஏந்திக்கொண்டு போய் கன்வேயரில் சேர்த்துவிடும்.''

''இந்த இயந்திரத்தை ராட்சத இயந்திரம் என்று கூறுவதை நான் ஆட்சேபிக்கிறேன். ஆக்க வேலை செய்யும் இதை ராட்சதன் என்று எப்படிச் சொல்ல முடியும்? ராட்சதன் அழிவு வேலையைச் செய்பவனல்லவா?'' என்கிறேன் நான்.

''அதோ கரிப்படிவங்களுக்கு மேலே வெள்ளையாகத் தெரிகிறதே அதுதான் வெள்ளைக் களி மண். பாருங்கள், கறுப்பும் வெள்ளையும் நேர் விரோதமான வர்ணங்களாயினும், இந்த இடத்தில் அவை இரண்டும் எவ்வளவு ஒற்றுமையாக இருக்கின்றன'' என்கிறார் ஆசிர்வாதம்.

ஓரிடத்தில் பெரிய பெரிய குழாய்கள் பூமிக்குள்ளிருக்கும் தண்ணீரை வெளியே கொண்டு வந்து கொட்டிக் கொண்டிருக்கின்றன.

"இந்தக் குழாய்கள் இருபத்து நாலு மணி நேரமும் வேலை செய்து கொண்டிருக்க வேண்டும். மின்சாரம் தவறினாலும் குழாய்கள் வேலை செய்வது நிற்கக்கூடாது . . ."

"நின்றால் . . .?"

"நாம் இந்த இடத்தில் நிற்க மாட்டோம். கரிப்படிவத்தின் கீழ் உள்ள தண்ணீர் மேலே பீறிட்டுக்கொண்டு வந்துவிடும் . . ."

"ஐயையோ!"

"பயப்படாதீர்கள். அதற்குத்தான் டீஸல் பவர் ஸ்டேஷன் ஒன்று வைத்திருக்கிறோம். தர்மல் பவர் ஸ்டேஷன் வேலை செய்யத் தவறினால் அடுத்த சில விநாடிகளுக்குள் டீஸல் வேலை செய்யத் தொடங்கி விடும்" என்கிறார் ஆசீர்வாதம்.

பச்சையும் நீலமுமாகக் கொட்டிக் கொண்டிருக்கும் அந்தப் பாதாள கங்கையைக் கையில் ஏந்திப் பார்க்கிறோம். ஸ்படிகம் போல் தெளிவாக இருக்கிறது. அருந்தினாலோ அமுதமாயிருக்கிறது!

துல்லியமாக, தூய்மையாக வந்து விழும் அந்தத் தண்ணீர் பூமிக்கடியில் எப்படித்தான் அவ்வளவு சுத்தமாக இருக்கிறதோ என்று வியக்கிறோம்.

குழாய்கள் கொண்டு வந்து கொட்டும் அத்தனை தண்ணீரும் ஒன்றாகச் சேர்ந்து ஒரு பெரிய சிமெண்டுக் கால்வாயின் வழியாக ஓடி வரும்போது நீல நிற வானமே தண்ணீராக மாறி ஓடுகிறதோ என்று தோன்றுகிறது.

கரிச் சுரங்கத்தைப் பார்த்து முடித்ததும் டவுன்ஷிப்பை ஒரு ரவுண்டு வருகிறோம். டவுன்ஷிப்பில் மூன்று லேடீஸ் கிளப்புகள் இருக்கின்றன. வைகை லேடீஸ் கிளப், காவேரி லேடீஸ் கிளப், பவானி லேடீஸ் கிளப் என்று அவற்றுக்குப் பெயர் சூட்டியிருக்கிறார்கள்.

வைகை லேடீஸ் கிளப்புக்குப் போய்ப் பார்க்கிறோம்.

இங்குள்ள பெண்மணிகள் சுத்த அசடுகளாக இருக்கிறார்கள். லேடீஸ் கிளப் என்றால் அங்கே கூடி வம்பு பேச வேண்டாமோ? இவர்கள் தையல் வேலை செய்துகொண்டும், டைப் ரைட்டிங், இந்தி கற்றுக்கொண்டும், பொழுதை வீணாக்கிக் கொண்டிருக்கிறார்கள்!

லேடீஸ் கிளப்புகளைத் தவிர பள்ளிக்கூடங்கள், கூட்டுறவுப் பண்டக சாலைகள், காய்கறிக் கடைகள், காண்டீன்கள், சலூன்கள் ரெஸ்ட் ஹவுஸுகள் இவ்வளவும் இருக்கின்றன.

''நெய்வேலியில் கிடைக்காதது எதுவுமே இல்லை யல்லவா!'' என்று கேட்கிறோம்.

''பாலுக்குத்தான் பஞ்சமாயிருக்கிறது'' என்கிறார் நெய்வேலி நண்பர்.

''இவ்வளவு தண்ணீர் கொட்டும் ஊரில் பாலுக்குப் பஞ்சம் வருவானேன்!'' என்கிறேன் நான்.

''நெய்வேலியிலேயே உயர்வானது எது?'' என்று கேட்கிறார் என்னுடன் வந்த நண்பர்.

"அதோ தெரிகிறதே, மண் மேடு அதுதான். ஆனால் அதைக் காட்டிலும் உயர்வானது ஒன்று இருக்கிறது'' என்கிறார் நெய்வேலி நண்பர்.

''என்ன அது?''

''விலை வாசி!'' என்கிறார் நண்பர்.

''இந்தாருங்கள் சாம்பிள் பழுப்புக் கரி'' என்று கூறி ஒரு சிறு கட்டிக் கரியைக் கொடுக்கிறார் ஆசீர்வாதம்.

"நீங்கள் ரொம்ப நல்லவர்கள். தாராளமாக சாம்பிள் கொடுக்கிறீர்கள்!" என்கிறேன் நான்.

"இதென்ன பிரமாதம்! இந்த இடத்தில் இது விளைகிறது; கொடுக்கிறோம்" என்கிறார் ஆசீர்வாதம்.

''கோலாருக்குப் போயிருந்தோம். அங்கே கூடத்தான் தங்கம் விளைகிறது. ஆனால் ஒரு சின்னத் துண்டை எடுத்து சாம்பிள் கொடுத்து அனுப்புவதற்கு அவர்களுக்கு மனம் வரவில்லையே!" என்கிறேன் நான்!

பங்களூர்

10

பங்களூர் என்ன விலே தெரியுமா? மூன்று லட்சம் ரூபாய்! ஆமாம்; மூன்றே லட்சம் ரூபாய்க்குத்தான் சிக்கதேவராஜ உடையார் 1687ஆம் ஆண்டில் பங்களூரை மராட்டியரிடமிருந்து விலேக்கு வாங்கினுர். அப்புறம் ஹைதர் அலி வந்து பங்களூரை அவரிடமிருந்து கைப்பற்றி விட்டார்.

இந்தச் சேதியை அறிந்தபோது நான் மிகவும் வருத்தப்பட்டேன். காரணம்: ஹைதர் அலி பங்களூரைக் கைப்பற்றியதற்காக அல்ல. அந்தக் காலத்தில் நான் மூன்று லட்சம் ரூபாயுடன் பிறக்காமல் போனேனே என்பதற்காகத்தான்! பிறந்திருந்தால் பங்களூரை நானல்லவா விலேக்கு வாங்கிப் போட்டிருப்பேன்?

அப்படி வாங்காமற் போனதும் ஒரு விதத்தில் நல்லதாய்ப் போயிற்று! வாங்கியிருந்தால் அந்தப் பொல்லாத ஹைதர் அலி பங்களூரை என்னிடமிருந்து தட்டிக்கொண்டு போயிருப்பானே?

இரண்டு வாரங்களுக்கு முன்னுல் நான் பங்களூர் போயிருந்தேன். பங்களூரை விலேக்கு வாங்குவதற்கு அல்ல. அந்த நோக்கமே எனக்கு இப்போது இல்லே. ஏனெனில் இப்போது என்னிடம் அவ்வளவு பணம் கிடையாது!

பங்களூருக்குப் போனுல் கன்னடம் தெரிந்திருக்க வேண்டும் என்பது கட்டாயமில்லே. அங்குள்ளவர்களில் பெரும்பாலோர் தமிழ்தான் பேசுகிறுர்கள். கன்னடத்தைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள்கூடத் தமிழ் பேசத் தெரிந்து கொண்டிருக்கிறுர்கள். ஆனுல் அவர்கள் பேசும் தமிழ் ரொம்ப ரொம்ப வேடிக்கையாக இருக்கிறது!

'நாங்களுக்கு எரடு ரூபாய் கொடுத்தாரு' என்று அவர்கள் கூறினுல், 'எங்களுக்கு இரண்டு ரூபாய் கொடுத்தார்' என்று நாம் அர்த்தம் செய்துகொள்ள வேண்டும்!

கேரள ராஜ்யத்தில் ஒரு டம்ளர் தண்ணீரை வெள்ளம் என்று கூறுவதுபோல், கன்னட ராஜ்யத்தில் இரண்டு பேராயிருந்தாலும் அவர்களே 'எரடு ஜனம்' என்று சொல்லுகிறுர்கள்.

அல்ஸூர் பகுதியில் தமிழ் மக்களே அதிகமாக வாழ்கிறுர்கள்,

அவர்களில் பெரும்பாலும் வட ஆற்காடு முதலியார் வகுப்பைச் சேர்ந்தவர்கள்.

அவர்கள் பேசும் தமிழோ இன்னும் வேடிக்கையா யிருக்கிறது.

'அப்படியா?' என்பதை 'ஆமாரு?' என்றும், 'அவரோடு வந்தார்' என்பதை 'அவர் ஜோடியிலே வந்தாரு' என்றும், மாம்பழத்தை 'மாங்காப் பழம்' என்றும் கூறுகிறார்கள்.

பங்களூரில் கன்னடக்காரர்களைக் காட்டிலும், வெளி ராஜ்யத்தைச் சேர்ந்தவர்கள் அதிகம் பேர் இருக்கிறார்கள். கன்னடம், தமிழ், தெலுங்கு, இந்தி ஆகிய நாலு மொழிக்காரர்களும் இங்கே வசிப்பதால் இந்த நான்கு மொழி சினிமாக்களும் பங்களூரில் காட்டப்படுகின்றன. 'கண்டோன்மெண்ட் ஏரியா'வில் இங்கிலீஷ் சினிமாக்களே அதிகம். ஏனெனில், இது ஒரு காலத்தில் வெள்ளைக்காரர்கள் ஆதிக்கத்தில் இராணுவ ஸ்தலமாக இருந்தது. இப்போது ஸிடியும் கண்டோன்மெண்ட்டும் ஒன்றாக இணைந்துவிட்டன.

கெம்பகௌடா சர்க்கிள் என்பது பங்களூர் ஸிடியில் ஒரு முக்கியமான இடம். சினிமாக் கொட்டகைகளும், பஸ் ஸ்டாண்டுகளும் மலிந்து கிடக்குமிடம். இங்கே நடைபாதைகளில் நிற்கும் க்யூ வரிசைகளில், 'எது சினிமாவுக்குப் போகிற 'க்யூ', எது பஸ்ஸுக்குப் போகிற 'க்யூ' ' என்று கண்டுபிடிப்பதற்குத் தனித் திறமை வேண்டும்.

மாலை வேளைகளில் சினிமா விடுகிற நேரம், ஆபீஸ் விடுகிற நேரம், கல்லூரிகள் விடுகிற நேரம் எல்லாம் ஒன்றாகச் சேர்ந்து விடுவதால் கெம்பகௌடாவில் அத்தனை கூட்டங்களும் மூன்றறக் கலந்துவிடுகின்றன.

சிடியில், சிக்பெட் என்றொரு பகுதி இருக்கிறது. இங்கே கிடைக்காத பொருள்களே கிடையாது. இங்கே கூடும் கூட்டத்தைப் பற்றியோ சொல்லிச் சாத்தியமில்லை. சிக்பெட்டைப்பற்றிக் கேள்விப்படும்போது, 'இங்கே ஒருமுறை போய் வரலாமா?' என்று தோன்றும். போன பிறகு, 'அந்தக் கூட்டத்திலிருந்து தப்பிப் போய்விடலாமா?' என்றும் தோன்றும்.

பங்களூர் பஸ் போக்குவரத்தை மோசம் என்று கூறுவது சரியில்லை. 'ரொம்ப மோசம்' என்று கூறுவதுதான் சரி. ஆனாலும், பங்களூர் பஸ் போக்குவரத்தில் நம்முடைய பாராட்டுதலுக்குரிய ஏற்பாடு ஒன்றும் இருக்கிறது. அதாவது, அங்கே பெண்களை முன் ஸீட்டுகளில் உட்கார வைக்கிறார்கள். அது மட்டுமல்ல; முன் பக்கம் உள்ள வழியாகவே அவர்களை பஸ்ஸுக்குள் ஏறிச் செல்லவும் அனுமதிக்கிறார்கள்.

பங்களூர்க்காரர்களை அடையாளம் கண்டுபிடிப்பது ரொம்பச் சுலபம். வயதானவர்களாயிருந்தால் கோட்டு, சரிகைத் தலைப் பாகை அல்லது தொப்பி அணிந்திருப்பார்கள். இளம் வயதினர் களாயிருந்தால் மிக நாகரிகமாகவும், கவர்ச்சிகரமாகவும் டிரஸ் செய்து கொண்டிருப்பார்கள். டிரஸ்ஸிலிருந்து அவர்களை யார் என்று கண்டுகொள்ள முடியவில்லை என்றால் அவர்கள் பெயர் என்னவென்று தெரிந்துகொண்டால் போதும்.

பெயர்களின் கடைசியில் அண்ணா, அப்பா, அய்யா என்று இந்த மூன்றில் ஏதாவது ஒன்று வந்தால், அவர்கள் நிச்சயம் கன்னடக் காரர்களாகத்தான் இருப்பார்கள். சில பெயர்களைப் பாருங்கள்:

வீரண்ணா, புட்டண்ணா, ராமண்ணா, தாசப்பா, யக்ஞப்பா, நிஜ லிங்கப்பா, பசவய்யா, ஹனுமந்தய்யா, சௌடய்யா!

இப்போது நாம் புகழ்பெற்ற லால்பாக் தோட்டத்துக்குச் செல்கிறோம்.

பஸ்ஸில் இடம் கிடைக்காதாகையால், ஆட்டோ ரிக்ஷா ஒன்றைப் பிடித்துக்கொண்டு - ஆமாம்! பிடித்துக்கொண்டுதான்; இல்லையென்றால் அது ஆடுகிற ஆட்டத்திலும் ஓடுகிற ஓட்டத்திலும் நாம் கீழே விழுந்து விடுவோம்! - புறப்படுகிறோம். இவற்றை ஆட்டோ ரிக்ஷாக்கள் என்று கூறுவதைக் காட்டிலும், 'ஆட்ட ரிக்ஷாக்கள்' என்று அழைப்பது சாலப் பொருந்தும். அல்லது 'முது கெலும்பு முறித்தான்' என்று கூறினால் மிக மிகப் பொருத்தமே!

பங்களூரில் சைக்கிள்களும் ஆட்டோ ரிக்ஷாக்களும் அதிகம். ஆட்டோ ரிக்ஷாக்கள் மட்டும் மொத்தம் ஆயிரத்தைந்நூறுக்கு மேல் இருப்பதாகச் சொல்கிறார்கள்.

பங்களூர் ரோடுகள் நம்முடைய வாழ்க்கையை எப்போதும் ஞாபகப்படுத்திக் கொண்டிருக்கின்றன. நம்முடைய வாழ்க்கையைப் போலவே அந்த ரோடுகள் ஏற்றமும் இறக்கமும் (Ups and Downs) கொண்டவையா யிருப்பதைத்தான் சொல் கிறேன்.

பங்களூரில் சரித்திர காலக் கட்டடங்கள் அதிகம் இல்லை. நவீன முறையில் கட்டப்பட்டுள்ள புதிய கட்டடங்களே நிறைய இருக் கின்றன. இந்தக் கட்டடங்கள் யாவும் எதிர்காலத்தைப்பற்றிச் சொல்பவைதான். அவற்றுள் விதான் சௌதா, இண்டியன் இன்ஸ்டி டியூட் ஆஃப் ஸயன்ஸ் போன்றவை முக்கியமானவை.

பங்களூரில் எந்த வீட்டு மாடியிலிருந்து பார்த்தாலும் விதான் சௌதாவின் பிரம்மாண்ட கோபுரம் கண்ணில் படாமலிருக்காது. இந்தக் கோபுரம் கண்ட்டோன்மெண்டையும் ஸிடியையும் இணைக் கும் மிகப் பெரிய கப்பன் பார்க்கை ஒட்டினாற் போலுள்ளது.

இந்தக் கட்டடத்தைக் காணும்போது நமக்கு முன்னுள் முதலமைச்சர் திரு ஹனுமந்தய்யாவின் ஞாபகம் வராமற் போகாது.

இதோ லால்பாக் வந்துவிட்டது. ஆட்டோ ரிக்ஷாவை விட்டு இறங்கி உள்ளே செல்வோம்.

இங்கு புஷ்பக் காட்சி நடைபெறுவதால், பெண்கள் கூட்டம் கூட்டமாக வந்து கொண்டிருக்கின்றனர்.

நாகரிகமாக உடையணிந்து, அழகு மிக்க அரம்பையர்போல் காட்சியளிக்கும் பெண்களை பெங்களூரில் எந்த இடத்துக்குப் போனுலும் காணலாம். இந்த ஊரில் பெண்கள் கூட்டம் சற்று அதிகமாகவே இருக்கிறது. இவர்கள் எல்லோருமே ஏதாவது ஒரு தொழிற்சாலையிலோ, அலுவலகத்திலோ பணிபுரிகிறவர்கள்தான். இந்துஸ்தான் விமானத் தொழிற்சாலை, இந்துஸ்தான் மெஷின் டூல்ஸ், டெலிபோன் தொழிற்சாலை, பாரத் எலெக்ட்ரானிக்ஸ் போன்ற பெரிய பெரிய ஸ்தாபனங்கள் பங்களூரில்தான் இருக்கின்றன. மாலை வேளைகளில் இங்கே போய்ப் பார்த்தால் பெண்கள் கூட்டம் பட்டாம் பூச்சிகள் பறந்து வருவதைப்போல் விதம் விதமாக வண்ணம் வண்ணமாகப் பறந்து வருவதைக் காணலாம்.

இந்த ஊருக்கு பங்களூர் என்ற பெயர் எப்படி ஏற்பட்டது என்பதற்குப் பல காரணங்கள் கூறுகிருர்கள். அது எதுவாயிருந்தாலும் இதைப் பெங்களூர் என்பதைவிடப் 'பெண்களூர்' என்று கூறுவது ரொம்பப் பொருத்தமாக இருக்கும்!

லால்பாக் கண்ணுடி மாளிகைக்குள் பூக்கள் மயமாயிருக்கின்றன. அந்தப் பூக்களைச் சுற்றிலும் பட்டாம் பூச்சிகள் பறப்பது போல் பெண்கள் கூட்டம் சுற்றிக் கொண்டிருக்கின்றன.

புஷ்பக் காட்சியை ஒட்டிப் பெண்களுக்கு வேண்டிய சில கடைகளும் வந்திருக்கின்றன.

பிரெஞ்சு நாட்டு மங்கையொருத்தி குஞ்சலம், சவுரி முதலிய அழகு சாதனப் பொருள்கள் விற்கும் கடை ஒன்றுக்கு முன்னுல் போய் நின்றுகொண்டு 'ஹௌ மச் திஸ்?' என்று ஒரு குஞ்சலத்தைக் காட்டி விசாரிக்கிருள்.

"டூ ருபீஸ்!" என்கிருன் கடைக்காரன்.

"வெரி நைஸ்! ஐ டேக் ஒன்" என்று ஒன்றை மகிழ்ச்சியோடு எடுத்துக் கொள்ளுகிருள் அவள்.

"இன்னய்யா, அம்மா குஞ்சலம் வெச்சுக்கப் போருங்களாமா?" என்று பக்கத்துக் கடைக்காரன் குஞ்சலக் கடைக்காரனைக் கேட்டுவிட்டுக் கண் சிமிட்டுகிருன்!

புஷ்பக் காட்சியைப் பார்த்து முடிந்ததும், அருகிலுள்ள ஓர் உயரமான பாறை மேட்டின்மீது ஏறிச் செல்கிருேம். அங்கே

கல்லாலேயே கட்டப்பட்ட மண்டபம் ஒன்று இருக்கிறது.

''இதுதான் கெம்பகௌடா என்னும் வீரனுல் கட்டப்பட்டது. இதைப்போல் அவன் நாலு திக்கிலும் நாலு மண்டபங்கள் கட்டியிருக்கிறுன்'' என்கிறுர் எங்களுக்கு வழி காட்ட வந்த நண்பர்.

''அது யார் கெம்பகௌடா?''

''அவர்தான் பங்களூரை முதல் முதல் கண்டுபிடித்தவர். 1537ஆம் ஆண்டில் அவர் பங்களூரைக் கண்டு பிடித்தபோது இந்த நகரத்தின் எல்லே இதற்குமேல் போகாது என்று நாலு திக்கிலும் நாலு மண்டபங்களே எல்லேயாகக் கட்டி வைத்தார். இப்போது பசவங்குடி எக்ஸ்டென்ஷன், மல்லேசுவரம், ராஜாஜி நகர், ஜய நகர் ஜலஹல்லி, சேஷாத்ரிபுரம் என்று அவர் கட்டி வைத்த எல்லே மண்டபங்களேக் கடந்து வெகு தூரம் போய்விட்டது. இப்போது பங்களூரின் பரப்பளவு 35 சதுர மைல்!''

''கெம்பகௌடா இப்போது பங்களூரை வந்து பார்த்தால் என்ன செய்வார்?'' என்று கேட்கிறுர் நண்பர்.

''என்ன செய்வார்? புதிதாக இன்னும் சற்றுத் தொலேவில் கொண்டுபோய் மேலும் நாலு எல்லே மண்டபங்களேக் கட்டி வைப்பார்!'' என்கிறேன் நான்.

லால்பாக்கிலிருந்து ஸிடி மார்க்கெட்டுக்குப் போகிறேம். இந்த மார்க்கெட்டில் 'பங்களூர் வெஜிடபிள்ஸ்' என்று பெருமையாகச் சொல்லிக் கொள்ளப்படும் இங்கிலீஷ் கறிகாய்கள் ஏராளமாகக் கிடைக்கும். இந்த மார்க்கெட்டை பங்களூர் நகரத்தின் இதயம் என்று சொல்லுகிறுர்கள். இவ்வளவு காய்கறிகளும் உணவுப் பொருள்களும் விற்கப்படும் இந்த இடத்தை நகரத்தின் இதயம் என்பதைவிட வயிற்றுப் பகுதி என்று சொல்வது பொருத்தமாயிருக்குமல்லவா?

ஸிடி மார்க்கெட்டைப் போலவே கண்ட்டோன்மெண்ட்டிலும் ஒரு மார்க்கெட் இருக்கிறது. இதற்கு ரஸ்ஸல் மார்க்கெட் என்று பெயர். பங்களூரில் எல்லாமே இரட்டை இரட்டையாகத்தான் இருக்கின்றன. ஸிடி ஸ்டேஷன், கண்ட்டோன்மெண்ட் ஸ்டேஷன், ஸிடி மார்க்கெட், கண்ட்டோன்மெண்ட் மார்க்கெட், லால் பாக், கப்பன் பார்க் இப்படி எல்லாமே இரட்டைதான்!

வீர வள்ளாள மகாராஜா ஒரு சமயம் இப்போது பங்களூர் உள்ள பகுதியின் வழியாகப் பிரயாணம் செய்து கொண்டிருந்தார். காட்டுப் பிரதேசமானதால், வழி தெரியாமல் அலேந்துவிட்டுக் கடைசியில் ஒரு குடிசைக்குள் புகுந்து, அந்தக் குடிசையிலிருந்த கிழவியைப் பார்த்து, ''தாயே, பசிக்கிறது; சாப்பிடுவதற்கு ஏதாவது கொடுங்கள்!'' என்று கேட்டார்.

அவள் வெந்த கடலைக்காயை அரசனிடம் கொடுத்துப் புசிக்கச் சொன்னாள்.

வெந்த கடலை என்பதைக் கன்னடத்தில் 'பெண்டகாலு' என்று கூறுவதால் 'பெண்டகாலூரு' என்ற பெயர் அந்த இடத்துக்கு ஏற்பட்டு, அதுவே பெங்களூராயிற்று என்று கூறப்படுகிறது.

அதற்கு ஆதாரமாகப் பங்களூரைச் சுற்றிலும் நிறையக் கடலைக் காய்கள் பயிரிடப்படுவதைப் பார்க்கிறோம். பல வருடங்களுக்குமுன் அந்தப் பயிர்களை இராக் காலங்களில் ஏதோ ஒன்று வந்து அழித்துவிட்டுப் போய்க் கொண்டிருந்ததாம். ஒரு நாள் விவசாயிகள் இரவில் மறைந்திருந்து பார்த்தபோது மாபெரும் மாடு ஒன்று வந்து மேய்ந்து கொண்டிருப்பது தெரிந்தது. அந்த மாடு பசவங்குடியிலுள்ள நந்தி பகவான்தான் என்றும் தெரிந்தது. அது முதல் பசவங்குடியில் ஆண்டுதோறும் கார்த்திகை மாதம் கடைசி சோமவாரத்தன்று நந்திக்கு வேர்க்கடலை பூஜை செய்து வருகிறார்கள். பசவங்குடியிலுள்ள நந்தி பத்து அடி உயரமும் பதினாறு அடி நீளமும் இருக்கிறது. இவ்வளவு பெரிய நந்தியை அடியோடு மறைக்கும் அளவுக்கு அதன்மீது வேர்க்கடலையால் அபிஷேகம் செய்வார்கள். கார்த்திகை மாதம் வேர்க்கடலை சாகுபடி காலமானதால் ஆண்டுதோறும் இந்த மாதத்தில் பூஜையும் உற்சவமும் நடந்து வருகிறதாம்.

கன்னட ராஜ்யத்தின் தலைநகரமாக விளங்கும் பங்களூரில் இல்லாத தொழிற்சாலைகளே கிடையாது. இந்த ஊரைக் காணவும் இந்த ஊரின் மிதமான குளிரை அனுபவிக்கவும் யாத்ரீகர்கள் வெளி நாடுகளிலிருந்தும் வெளி ராஜ்யங்களிலிருந்தும் ஆண்டு முழுதும் வந்துகொண்டே யிருக்கிறார்கள்.

காவேரித் தண்ணீர், மின்சாரம், தங்கம், யானைத் தந்தம் - இந்த நான்கும் கிடைப்பது மைசூர் ராஜ்யத்தில்தான்.

பங்களூரில் நாம் அதிகமாகக் காண்பது சோம்பேறித்தனம். குறைவாகக் காண்பது உழைப்பு!

பாண்டிச்சேரி

11

பாண்டிச்சேரி அல்லது புதுச்சேரி என்று சொன்னால் காதுக்கு என்னவோ போல் இருக்கிறதல்லவா? ஆகையால் இப்போது 'சேரி ஒழிப்பு இயக்கம்' ஒன்று நடத்தி உடனடியாக அந்தச் 'சேரி' களை ஒழித்துக் கட்டி, 'பாண்டி', 'புதுவை' என்று மட்டும் குறிப் பிடப் போகிறேன். காரியம் எவ்வளவு எளிதாக முடிந்து விட்டது பார்த்தீர்களா?

முன்னெல்லாம் புதுச்சேரிக்குப் போகிறார்கள் என்றால், கடன் காரர்களுக்கு 'டிமிக்கி' கொடுத்தவர்கள் என்றோ, பிரிட்டிஷ் ஆட்சியின் பிடியிலிருந்து தப்பிச் செல்லும் அரசியல் வாதிகள் என்றோதான் அர்த்தம்.

இப்போதெல்லாம் பாண்டிச்சேரிக்குப் போகிறார்கள் என்றால், என்ன புன்முறுவல் பூக்கிறார்கள்? வேறொன்றுமில்லை — அரவிந்த ஆசிரமம் பார்க்கப் போகிறார்கள் என்று அர்த்தம்!

இப்போது நாம் புதுவைக்குப் புறப்படுகிறோம்.

நாலைந்து சர்ச்சுகள், நேர் நேரான வீதிகள், தென்னந் தோப்புக் கள், அழகிய கடற்கரை, அதை அடுத்துப் பெரியதொரு பூங்கா, அரவிந்தர் ஆசிரமம் — இவ்வளவுக்கும் இடையே குறுக்கிலும் நெடுக்கிலும் ஓடும் சாக்கடைகள்! — இதுதான் புதுவை!

வீதிகளும் அவற்றின் ஒரங்களில் ஓடும் சாக்கடைகளும் மிக ஒழுங்காக, வரிசையாக, நேராக, ரூல் போட்டது போல் அமைந் துள்ளன.

பிரெஞ்சுக்காரர்கள் இந்த ஊரை ஆண்டு வந்தபோது புதுவை யைப்பற்றி 'வீதி ஒழுங்கே தவிர, நீதி ஒழுங்கில்லை' என்று கூறுவ துண்டு. புதுவை நகரத்தில் சுமார் முப்பது தெருக்கள் கிழக்கு மேற்காகவும், பெரு வீதிகள் வடக்கு தெற்காகவும் அமைந்துள்ளன. இந்த வீதிகள் ஒரே சீராக ஒன்றையொன்று பின்னித் தொடர்பு கொள்ளும் அழகு ஒன்றே போதும்!

செஞ்சிச் சாலை வாய்க்கால் என்பது புதுவை நகரை இரண்டு

பகுதிகளாகப் பிரித்துச் செல்கிறது. இந்த வாய்க்காலின் மேற்குப் பகுதியைக் கறுப்பர் நகரம் என்றும், கடற்கரையை ஒட்டினாற் போலுள்ள கிழக்குப் பகுதியை வெள்ளையர் நகரம் என்றும் அந்தக் காலத்தில் சொல்லி வந்தார்கள்.

இப்போது நகரத்தின் கழிவு நீர் இந்த செஞ்சிச்சாலை வாய்க்கால் வழியாகத்தான் சென்று கடலில் கலக்கிறது. எல்லோரும் சற்று நேரம் மூக்கைப் பிடித்துக்கொண்டு, அல்லது மூச்சைப் பிடித்துக்கொண்டு, கண்களையும் மூடிக்கொண்டு வாய்க்காலின் அந்தப் பக்கம் போய்ச் சேருகிறோம்.

சற்றே கண்களைத் திறந்து பார்த்தால் நம் கண்களில்,

Rue Dupleix	—	துப்ளேக்ஸ் வீதி
Quai de Ambur	—	ஆம்பூர் சாலை
Quai de Gingy	—	செஞ்சிச் சாலை
Rue D'Orleans	—	ஓர்லியன் வீதி

முதலிய பெயர்கள் தென்படுகின்றன. பிரெஞ்சு மொழியில் ரூயே என்றால் வீதி என்றும், க்வாய் என்றால் சாலை என்றும் தெரிந்து கொள்கிறோம்.

வாய்க்காலைத் தாண்டிச் சென்றதுமே, தூய்மையும் அமைதியும் குடிகொண்ட அரவிந்த ஆசிரமத்தின் கட்டடங்கள் பலவற்றைப் பார்க்கிறோம். மகான் அரவிந்தரின் சமாதி இங்கே உள்ளது. அனுமதியின்றி ஆசிரமத்தைக் காண முடியாதாகையால் வெளியிலிருந்தபடியே தரிசித்துக்கொண்டு செல்கிறோம். ஆசிரமத்தைச் சேர்ந்தவர்கள் பலரை அந்தப் பூங்காவிலும், கடற்கரையிலும், கடை வீதிகளிலும் சந்திக்கிறோம். அநேகமாக அவர்கள் எல்லோருமே அரை நிஜார் அணிந்து கொண்டிருக்கிறார்கள்.

"இவர்கள் அரை நிஜார் அணிவதற்கு என்ன காரணம்?" என்று புதுவை நண்பரை விசாரித்தால், "முழு நிஜார் அணிவதற்கு என்ன காரணமோ அதே காரணம்தான் அரை நிஜார் அணிவதற்கும்" என்கிறார் அவர்.

கலங்கரை விளக்கம், டூப்ளே சிலை, கடற்கரை, துறைமுகம், அதை ஒட்டினாற் போல் கான்க்ரீட் நடை பாதை இவ்வளவும் அடுத்தடுத்து வெகு சமீபத்தில் இருக்கின்றன.

கடற்கரையில் உலாவுவதற்கென்று ஆண்களும் பெண்களும் ஜோடி ஜோடியாகவும், கூட்டம் கூட்டமாகவும் மாலை வேளைகளில் வந்துவிடுகிறார்கள். இந்த 'உலாவுதலும் குலாவுதலும்' இரவு ஒன்பது மணி வரை நீடிக்கிறது. இங்கே போடப்பட்டுள்ள

கான்க்ரீட் ரோடின் மொத்த நீளமே 1500 மீட்டர்தான். ஆகை யால் ஒரு முறை பார்த்தவர்களையே திரும்பத் திரும்பச் சந்திக் கிறோம்.

கடலையும், கடலோரம் அமைந்துள்ள கைப்பிடிச் சுவரையும், அந்தச் சுவர்மீது அமர்ந்துள்ள இளம் காதலர்களையும், கடலை நோக்கி நிற்கும் கட்டடங்களையும் பார்க்கும்போது பம்பாயிலுள்ள 'மெரைன் டிரைவ்' ஞாபகத்துக்கு வருகிறது.

முதல் முதல் 'பிரான்சுவா மர்த்தேன்' என்னும் பிரெஞ்சுக் காரன்தான் புதுவைக்கு வந்தான். அப்போது தென்னாட்டுப் பகுதியில் ஆட்சி புரிந்துகொண்டிருந்த ஷெர்கான் லோடிக்குப் பண முடை அதிகமாயிருந்தது. மர்த்தேன் சில ஆயிரம் பகோடா நாணயங்களை ஷெர்கான் லோடிக்குக் கொடுத்து புதுவையை விலைக்கு வாங்கிக்கொண்டான். அப்புறம்தான் டூப்ளே புதுவை கவர்னராகப் பதவி ஏற்றான்.

டூப்ளே சிலைக்கு ஆதாரமாகவும் அருகாமையிலும் சிற்ப வேலைப் பாடுகள் மிக்க கற்றூண்கள் பல காணப்படுகின்றன. செஞ்சி அரசர் இவற்றை தூப்ளேக்கு அன்பளிப்பாகக் கொடுத்தார் என்று கூறப்படுகிறது. இருக்கலாம்; ஆனால் செஞ்சி அரசர் டூப்ளே சிலையின் காலடியில் வைப்பதற்காக அவற்றைக் கொடுத்திருக்க மாட்டார் என்பது நிச்சயம்.

முத்தால்பேட்டை என்பது புதுவைக்கு வடக்கே ஒரு மைல் தொலைவில் இருக்கிறது. இங்குதான் பாரதியார் பாடிய சித்தாந்தச் சாமியாரின் சமாதி இருக்கிறது. இதனருகே உள்ள தென்னை மரங்களும் மாமரங்களும் சூழ்ந்த சோலைக்குத்தான் பாரதி யார் அடிக்கடி வருவது வழக்கமாம். 'கண்ணன் பாட்டு', 'பிழைத்த தென்னந்தோப்பு', 'குயில் பாட்டு' முதலிய பாடல்களைப் பாடியதும் இங்கேதான் என்று சொல்கிறார்கள்.

ஈசுவரன் கோயில் வீதி, பாரதியார் வீதி என்ற இரண்டு தெருக் களும் மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் ஞாபகச் சின்னங்களாகப் புதுவையில் உள்ளன. அவர் குடி இருந்தது ஈசுவரன் கோயில் வீதி யில்தான் என்றாலும் 'பாரதியார் வீதி' என்ற பெயர் வேறொரு தெருவுக்கே சூட்டப்பட்டுள்ளது — அதாவது ரூயி பாரதி!

பாரதிதாசனைத் தமிழகத்துக்கு ஈன்ற பெருமையும் புதுவை யைச் சேர்ந்ததுதான். பாரதியார் குடியிருந்த வீட்டைப் போய்ப் பார்க்கிறோம். கிலமாகிக் கிடக்கும் அந்த வீட்டைக் காணும்

போது 'பாழ் பட்டு நின்றதாமோர் பாரதி வீடு தன்னை . . .' என்று நம்மையறியாமல் நம் வாய் முணுமுணுக்கிறது.

பாரதிக்கும் அரவிந்தருக்கும் மட்டும் புதுவை அடைக்கலம் தரவில்லை. வ. வே. சு. ஐயர், வழக்கறிஞர் துரைசாமி ஐயர், புரட்சி வீரர் மாடசாமி, சுப்பிரமணிய சிவா போன்றோர்களுக்கும் காப்பு அளித்திருக்கிறது.

மாபெரும் அறிஞர்களும் கவிஞர்களும் மகான்களும் நடமாடிய புதுவை மண்ணில் நடக்கும்போது நம்மை யறியாமலேயே நம் நெஞ்சத்தில் பேருவகை ஏற்படுகின்றது. அந்தப் பெருமிதத்துடன் ஊர் திரும்புகிறோம்.

'சாக்கடைகள் அதிகம், டீக்கடைகள் குறைவு' — புதுவையைப்பற்றிய புது மொழி இது!

கல்பாத்தி தேரோட்டம்

12

கல்பாத்தி, சாத்தபுரம் வீதி.

''டம... டம... டம... டம... டங்... டங்... டங்...!'' - ஆறு பேர் 'ஜம்பை' கொட்டி முழக்குகிறார்கள். நூறு பேர் அவர்களைச் சுற்றி நின்று கும்மாளம் போடுகிறார்கள்.

இன்னொரு புறம் உள்ளூர் நாதஸ்வரக்காரர்கள் சக்கைப்போடு போட்டுக் கொண்டிருக்கின்றனர்.

வீதியெங்கும் கூட்டம், கும்மாளம், எக்காளம், ஆனந்தம், ஆரவாரம், உற்சாகம், உல்லாசம், சந்தோஷம்!

வீதியின் இருபுறங்களிலும் பழைய காலத்துத் திண்ணை வீடுகள். வாயிற்படிகளிலும் திண்ணைகளிலும் பெண்கள் கூட்டம்; விட்டங்களைப் பிடித்தவண்ணம் வேடிக்கை பார்க்கிறார்கள்.

''ஹேய்...! ஹாய்...! ஹூய்...!''

''ஹா ஆ ஆ ஆ ஆ ஆ...''

''ஹம்ம்ம்ம்ம்...''

தெருவிலே எழும் உற்சாக ஆரவாரங்களின் சில 'சாம்பிள்'கள் இவை:

''டமார்!''

''டம்மார்!''

''டம்ம்மார்!'' - வெடிச் சத்தங்கள் அடுத்தடுத்துக் கிளம்பி ஊரையே செவிடுபடுத்துகின்றன. அவை ஓய்ந்ததும், அந்தச் சத்தத்தில் அமுங்கிப் போயிருந்த திருவிழா ஒலிகள் மீண்டும் தலை காட்டுகின்றன.

தெருக்கோடியில் கோயிலுக்கருகில் நிற்கும் தேர் வீதிவலம் புறப்படத் தயாராயிருக்கிறது.

வடம்பிடித்து இழுக்கப் போகிறவர்கள் தேருக்கு முன்னால் ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறார்கள்.

''சீதாராமன் எங்காய்?'' - ஒரு கம்பீரமான குரல்.

''தேருக்கு 'சென்ன' வெக்கப் போயிருப்பான்!'' - இன்னொரு குரல்.

தேர் நகரும்போது முட்டுக்கட்டை வைப்பதைச் 'சென்ன வைப்பது' என்கிறார்கள் அங்குள்ளவர்கள்!

''சீதாராமன் சென்ன வைப்பதில் 'எக்ஸ்பர்ட்'டாக்கம்! ரொம்ப நல்லவன். தேருக்குத்தான் சென்ன வைப்பான். வேறு யாருக்கும் வைக்க மாட்டான் . . .'' - சாத்தபுரம் வாசிகள் கூறுகிறார்கள்.

"என்ன கூட்டம் பார்த்தீர்களா? எள்ளுப் போட்டால் கீழே விழாது போலிருக்கே? தேர்க் கூட்டம் திருவிழாக் கூட்டம் என்கிறார்களே, சரியாய்த்தான் இருக்கிறது'' என்கிறார் நண்பர்.

''சுற்று வட்டம் அறுபது மைல் தூரத்திலிருந்தெல்லாம் கூட்டம் வருமாக்கம். கோயம்பத்தூர், மெட்ராஸ் பக்கமிருந்தெல்லாம் தேர் பார்க்க வருவாளாக்கம் . . .'' — சாத்தபுரம் வாசி ஒருவர் பெருமையுடன் சொல்லிக்கொள்கிறார்.

''அதோ! ஆனே வந்தாச்சு!''

''யானே எதுக்கு இந்தக் கூட்டத்திலே வருகிறது?''

''ஆனேதான் தேரைத் தள்ளுமாக்கம்.''

''ஆட்கள் இழுக்கமாட்டார்களா?''

"அவாள் இழுத்தால் தேர் நகராது. பார்த்தால் சின்னத் தேர் மாதிரி இருக்கும். இழுத்தால் ரொம்ப கனமாயிருக்குமாக்கம் . . .''

''இந்தக் கூட்டத்துக்குள்ளே யானே எப்படி வர முடியும்? எள்ளுப் போட இடமில்லேயே . . . !''

''வயிறு புடைக்கச் சாப்பிட்டாலும் பால் பாயசம் வரும் போது வயிற்றில் இடம் கிடைத்து விடுகிறதில்லேயா? அந்த மாதிரி இந்த யானேக்கும் இடம் கிடைத்துவிடும்!''

தெருக்கோடியில் அசைந்தாடி வருகிறது யானே. கூட்டத்தில் ஒரே பரபரப்பு!

"ஆனே! ஆனே! ஆனே! ஆனே!''

யானேயும் ரயில் என்ஜினும் எத்தனே முறை பார்த்தாலும் அலுக்காதோ?

எப்படியோ கூட்டத்துள் புகுந்து தேருக்குப் பின்னுல் போய் சக்கரத்தருகில் நிற்கிறது யானே. இன்னொரு சக்கரத்துக்குப் பின்னுல் குட்டி யானே ஒன்று . . .

''டம டம டம டம டங் டங் டங்''

யானேகள் காதுகளிரண்டையும் ஜம்பை வாத்திய ஒலிக்கு ஏற்ப ஆட்டி வீசுகின்றன!

யானேப்பாகன் அதனிடம் ஏதோ சொல்கிறுன். அது அவன் கூறுவதைக் காதில் போட்டுக்கொண்டதாகத் தெரியவில்லே. 'எல்

லாம் எனக்குத் தெரியும்; நீ ஒன்றும் சொல்ல வேண்டாம்' என்பது போல் ஓர் அலட்சியம்!

திடீரென்று தெருவிலே ஒரு வாண்டுப் பயலைக்கூடக் காணோம்! என்ன ஆச்சரியம்! அவ்வளவு பிள்ளைகளும் எங்கே போய்விட்டார்கள்? அடடே! தேர்மீது ஏறிக்கொண்டு விட்டார்களோ!

''ஏய்! ஏதுக்குடா மணி அழறான்?'' - ஒரு குரல்.

''தேர்மீது ஏற்றி விடணுமாம்!'' - இன்னொரு குரல்.

''ஏற்றி விடேன்!''

''ஏற்றியாச்சு! மறுபடியும் அழறான்.''

''ஏதுக்கு . . .!''

''இப்ப இறக்கி விடணுங்கறான். அங்கிருந்து பார்த்தால் யானை தெரியலையாம்!''

''அதுக்கென்ன செய்யலாம்? யானையைத் தேர்மேலே ஏற்றி விடலாமா?''

''ஹா . . . ஆஆஆஆஆ . . . !'' - தெருவெங்கும் அலை ஓசை போன்ற பேரிரைச்சல்.

தேர் புறப்பட்டாச்சு . . .!

யானை தன் தலையைத் தாழ்த்தி மண்டையைச் சக்கரத்தின் அடியில் கொண்டுபோய் வைத்துக்கொண்டு ஒரு தள்ளு தள்ளுகிறது.

தேர் நகர்கிறது.

''இன்னம் கூடி . . . கொஞ்சம்கூடி - தள்ளேணம்.'' யானைப்பாகன் யானையிடம் சொல்கிறான். தலையை எடுக்காமல் தள்ளிக்கொண்டே போகும் யானை தேர்ச் சக்கரம் துதிக்கையில் படும்போதுதான் நிறுத்துகிறது. இதற்குள் தேர் பாதித் தெருவுக்குப் போய்விடுகிறது.

ஜம்பை கொட்டி, கூச்சலிட்டு, வடமிழுத்து, சென்ன வைத்து தாங்களே தேரை இழுத்து விட்டதுபோல் அட்டகாசம் செய்துவிடுகிறார்கள் சாத்தபுரம் வாசிகள்!

தேரைத் தள்ளிவிட்ட யானையோ தனக்கும் அந்த நிகழ்ச்சிக்கும் எதுவுமே சம்பந்தமில்லாததுபோல் காதை ஆட்டிக்கொண்டு நிற்கிறது!

மணி பத்தரை. தேரோட்டம் அத்துடன் நின்றுவிடுகிறது.

''ஏன் நிறுத்தி விட்டார்கள்?'' - நான் சாத்தபுரம் நண்பரைக் கேட்கிறேன்.

''ஓ! அதுவா! மறுபடியும் மூன்று மணிக்குத்தான் தொடரும். நீங்கள் தொடர் கதையைப் பாதியில் நிறுத்திவிட்டுத் 'தொடரும்' என்று போடுவதில்லையா? அந்த மாதிரிதான். இப்போது தேருக்கு

முன்னுல் சூறைத் தேங்காய் உடைப்பார்கள். இன்னும் கொஞ்ச நேரத்தில் ஏழைகளுக்குச் சாப்பாடு போடுவார்கள்.''

''சாப்பாடா! கேரளத்தில் அரிசிப் பஞ்சம் தலைவிரித்தாடுகிற இந்த நேரத்திலா? அப்படி எத்தனை பேருக்குப் போடுவார்கள்?''

''இருபது மூட்டை அரிசி வடித்திருக்கிறோம். மாலை மூணு மணிவரை சாப்பாட்டுப் பந்தி நடந்தபடியேதான், நூறு மூட்டை, இருநூறு மூட்டை அரிசி வடித்துப் போட்ட காலம் உண்டு. இப்போதுதான் பஞ்சம் வந்துவிட்டதே! அதனுல் இருபது மூட்டையோடு நிறுத்திக் கொள்கிறோம்.''

''இந்த அரிசிப் பஞ்ச காலத்தில் இவ்வளவு பேருக்குப் போடுகிறீர்களே, அதுவே புண்ணியம்தான்.''

''அரிசிப் பஞ்சமா? யார் சொன்னது? அரிசி நிறைய இருக்கிறது. ஏழைகளுக்குத்தான் இங்கே பஞ்சம் வந்துவிட்டது. முன் மாதிரி அவ்வளவு பேர் சாப்பிட வருவதில்லை.''

திண்ணைகளில் சாப்பாட்டுப் பந்தி நடக்கிறது. ஏழைகள் வரிசை வரிசையாக உட்கார்ந்து சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள். வாழைக்காய் கறி, ஓலன், மோர்க் குழம்பு, பாயசம், பப்படம் எல்லாம் வருகின்றன. அந்த ஏழைகளில் சிலர் மைனர் சங்கிலி போட்டுக் கொண்டிருக்கிறார்கள். சிலர் தங்க மோதிரம் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். பாவம்! கல்பாத்தி ஏழைகளுக்கு வைர மோதிரம் போட்டுக் கொள்ளும் அளவுக்கு வசதி இல்லை போலிருக்கிறது!

''ரமணி! சிவராமன் எங்காய்?''

''ஷேக்கான் நாதஸ்வரம் கேட்கப் போயிருப்பான் . . . .''

''கொஞ்சம் கூடி ஓலன் சாதிக்கட்டுமோடாய்?''

தேருக்கு முன்னுல் சூறைத் தேங்காய் அடிக்கும் இடத்துக்குச் செல்கிறோம்.

தேங்காய் அடிப்பவர்களைச் சுற்றிப் பெரும் கூட்டம் 'திமுதிமு' வென்று சூழ்ந்து கொண்டிருக்கிறது. சிதறும் தேங்காய்களைப் பொறுக்கிச் சாக்குப் பைகளில் போட்டுக் கட்டிக்கொண்டு போகிறார்கள். ஒவ்வொருவருக்கும் குறைந்தது ஒரு மூட்டை காய்களாவது கிடைக்கின்றன!

''இங்கெல்லாம் தேங்காய் என்னுய் விலாய்?'' - நான் கேட்கிறேன்.

''இங்கே விலை யொண்ணும் குறைச்சல் இல்லாய்! காய் ஒண்ணு எட்டணுவாக்கம்!'' - நண்பர் சொல்கிறார்.

மறுபடியும் மூன்று மணிக்கு 'ஜம்பை' கொட்டி தேர் இழுக்க ஆரம்பிக்கின்றனர். ''அடாடா! நேற்று வராமல் போய்விட்டீர்களே . . .?'' - கல்பாத்திக்காரர் என்னைக் கேட்கிருர்.

''நேற்று என்ன விசேஷம்?''

''தேர்ச் சக்கரம் பள்ளத்தில் இறங்கிவிட்டது. குட்டி யானையால் அதைத் தள்ள முடியவில்லை . . .''

''நான் வந்திருந்தால் மட்டும் முடியுமா, என்ன? என்னுலும் தள்ள முடியாதே . . . !''

''கரும்பு தின்று கொண்டிருந்த குட்டி யானையைக் கண்ட பெரிய யானைக்குக் கோபம் வந்துவிட்டது. அந்தக் குட்டி யானையை அப்படியே ஒரு வீட்டின் சுவரில் கொண்டு போய் மோதியது. அவ்வளவுதான். தேய்காய் உடைத்த மாதிரி சுற்றியிருந்த கூட்டம் சிதறி ஓடியது. நல்லவேளை யாருக்கும் எந்தவிதமான ஆபத்தும் இல்லை. அப்புறம் பெரிய யானை கட்டுக்கடங்காமல் ஓட ஆரம்பித்துவிடவே எல்லோரும் பயந்துவிட்டோம். போலீஸார் வந்தார்கள்! ஊரே அல்லோலகல்லோலம்! கடைசியில் ஒரு கொலை விழுந்த பிறகு தான் யானை ஓட்டத்தைத் தடுத்து நிறுத்த முடிந்தது.''

''கொலையா?''

''ஆமாம்; வாழைப்பழக் குலை ஒன்றை எடுத்து ஓடும் யானைக்கு முன்னுல் வீசினுரே பார்க்கலாம் ஒருவர்! உடனே யானை ஓடுவதை நிறுத்திவிட்டு வாழைப்பழக் குலையைத் தின்ன ஆரம்பித்துவிட்டது. இந்தச் சமயம் பார்த்து யானைப்பாகன் தந்திரமாக அதன் பின்னங் கால்களைச் சங்கிலியால் பிணைத்துவிட்டான் . . . .''

''இந்த நியூஸ் பேப்பர்லே வந்திருக்கே . . . ! நான் பார்த்தேனே!''

''என்னதான் பேப்பர்லே பார்த்தாலும் நேரிலே பாக்கற மாதிரி ஆகுமா?''

''டம . . . டம . . . டம . . . டம . . . டங் . . . டங் . . . டங் . . . !''

''ஸார்! வாங்கோ! மேளம் போட்டாச்சு. தேர் கிளம்பியாச்சு. மணி மூணரையாக்கம்!''

''ஹாய் . . . ஹஊய் . . . ஹேய்!''

யானைகள் இரண்டும் பின் சக்கரங்களைத் தலையால் மோதித் தள்ளுகின்றன. தள்ளிக்கொண்டே போய்த் தெருக்கோடித் திருப்பத்தில் தேரை லாகவமாகத் திருப்புகின்றன.

''பழைய கல்பாத்தி, புதிய கல்பாத்தி, சாத்தபுரம் இம்மூன்று ஊர்த் தேர்களும் வெவ்வேறு திசையிலிருந்து வந்து சேரும். அவை

மூன்றும் தெருச் சந்தியில் வந்து கூடும்போது விசுவநாதன், கிருஷ்ணன், கணபதி மூன்று பேரையும் ஒரே இடத்தில் பார்த்து விடலாம்.''

''அது யார் அந்த மூன்று பேர்?''

''உற்சவ விக்கிரகங்கள்!''

மணி ஐந்து. சாத்தபுரம் தேர் கல்பாத்திக்குள் பிரவேசிக்கிறது. கல்பாத்திக்காரர்கள் தேர் மீது வாழைப்பழங்களை விட்டெறிகிறார்கள்! வில்லினின்று புறப்படும் அம்புகள் போல் பாய்ந்து வரும் அந்த வாழைப்பழங்கள் தேர் மீது போய் விழுகின்றன.

''எதற்காக வாழைப்பழங்களை வீசுகிறார்கள்?'' - நான் கேட்கிறேன்.

''இதெல்லாம் அவர்களுக்கு ஒரு விளையாட்டு! வேண்டாமென்றால் கேட்க மாட்டார்கள். அந்தப் பழங்கள் கீழே விழுந்து சில சமயம் சென்ன வைப்பவர்கள் காலை வாரிவிடுவதும் உண்டு . . . !''

பொழுது சாய்ந்ததும், மெல்ல மெல்ல இருள் கவியத் தொடங்குகிறது. மின்சார விளக்குகள் இருந்தும் அவை எரிவதில்லை. மின்சாரக் கம்பிகள்மீது தேர் மோதி ஆபத்து உண்டாகக் கூடாது என்பதற்காக 'கரெண்ட்' விடுவதில்லை. எனவே, பெண்மணிகள் குத்துவிளக்குகளை ஏற்றிக்கொண்டு வந்து திண்ணைகளில் வைக்கிறார்கள். அப்போது தீப ஒளியில் அவர்களுடைய பட்டாடைகளும் தங்க ஆபரணங்களும் பளபளக்கின்றன. அமைதியும் அழகும் மிக்க அந்த இடத்தைக் காணும்போது ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்திய பழமையான ஒரு கிராமத்துக்குள் வாழ்வது போன்ற உணர்வு தோன்றுகிறது. யானைகளும் மனிதர்களும் நிழற் படங்களாக மாறி நகர்கிறார்கள்.

''தேர் தெருக்கோடிக்கு வந்தாச்சு . . . !'' - இந்த ஒரு வார்த்தையை எல்லோரும் திரும்பத் திரும்பச் சொல்கிறார்கள்.

''தேர் தெருக்கோடிக்கு வருவதில் அவ்வளவு ஆச்சரியமென்ன?''

கூட்டமெல்லாம் தெருக் கோடியை நோக்கிச் சாடுகிறது.

தெருக்கோடிக்கு வத்ததும் யானை அந்தத் தேரை ஒரு 'புஷ்' கொடுத்துத் தள்ளுகிறது. ஒரே புஷ்தான்! அத்தத் தேர் கடகட வென்று ஓடி நிலையில் போய்ச் சேர்ந்து விடுகிறது. நடுவில் எங்கும் நிற்பதில்லை. அந்தக் கோடியிலிருந்து இந்தக் கோடிவரை ஒரே ஓட்டம்தான்!

அந்தத் தேரோடுகூட ஜனங்களும் ஓடுகிறார்கள். நாமும் ஓடுகிறோம். தேர் நிலையில் போய் நின்றதும் எல்லோர் முகத்திலும் மகத்தான காரியத்தைச் சாதித்துவிட்டது போன்ற வெற்றிப் பெரு

மிதம்! அந்த யானைகள் மட்டும் தாங்கள் ஒன்றுமே செய்யாதது போல் முகத்தை வைத்துக்கொண்டு போகின்றன.

"ஆக் வா ஆஆஆஆஆஆஆஆ . . ." என்று ஒவ்வொருவராக மூச்சுப் பிடித்துக் கூவுகிறார்கள். அவர்கள் குரல் அடங்கியதும், "ஹாய்! ஹாய்! ஹாய்!" என்று சுற்றியுள்ளவர்கள் குதி போட்டு டவலை ஆகாசத்தில் தூக்கி எறிந்து கும்மாளம் போடுகிறார்கள். கடைசியில் விநாயகரைத் தேரிலிருந்து இறக்கி அபிஷேகம் செய்கிறார்கள்.

அப்புறம் விடியற்காலை வரை நாதஸ்வரக் கச்சேரி. அதற்கப்புறம் மீண்டும் உற்சவம்!

இராத்திரி பூராவும் யாரும் தூங்குவதில்லை. ஒரே உற்சாகம் தான்! கேளிக்கை, வேடிக்கை, கொம்மாளம், எக்காளம்தான்!

குருவாயூர்

13

மிகவும் குறுகலான ஒரு வீதி. அதை வீதி என்பதைக் காட்டிலும் சந்து என்று கூறுவது பொருத்தமாயிருக்கும். அந்தச் சந்துக்குள்தான் குருவாயூர் பஸ் ஸ்டான்ட் இடம் பெற்றுள்ளது. ஆகவே, ஸ்டாண்டை நோக்கி வரும் பஸ்களும், ஸ்டாண்டிலிருந்து புறப்படும் பஸ்களும் அந்தச் சந்து வழியாகவே வந்து போக வேண்டியிருக்கின்றன. சிற்சில சமயங்களில் அந்தச் சந்தில் பஸ்கள் எதிரும் புதிருமாக வருவதும், அப்படி வரும்போது அவை அங்கச் சேதம் எதுவுமின்றி ஒன்றை ஒன்று கடந்து செல்வதும் ஆச்சரியமா யிருக்கிறது!

நாம் இப்போது அந்தச் சந்து வழியாகப் போய்க் கொண்டிருக்கிறோம். சற்று தூரத்தில் கோயில் தெரிகிறது.

"இந்தக் கோயிலை இந்த ஊரில் அமைக்க வேண்டும் என்று முதல் முதல் எந்த பிரகஸ்பதிக்குத் தோன்றியதோ?" - நான் கேட்கிறேன்.

"தேவலோக குருவான சாட்சாத் அசல் பிரகஸ்பதிக்கேதான் தோன்றியது! அவரும் வாயு பகவானும் சேர்ந்துதான் துவாரகையிலிருந்த கிருஷ்ணனுடைய விக்கிரகத்தை இங்கே கொண்டுவந்து பிரதிஷ்டை செய்தார்கள்" என்கிறார் நண்பர்.

"அப்படியா! இந்தச் சந்துக்குள் வாயு பகவானால்தான் புகுந்து வரமுடியும். ரொம்ப சரி; துவாரகையிலிருந்த கிருஷ்ணனை இங்கே எதற்காகக் கொண்டு வந்தார்கள்?"

"கிருஷ்ணாவதாரத்தின் நோக்கம் பூர்த்தியானதும், துவாரகை, சமுத்திரத்தில் மூழ்கிக்கொண்டிருந்தது. அப்போது அங்கிருந்த விக்கிரகத்தை பிரகஸ்பதியும், வாயு பகவானும் இங்கே கொண்டு வந்தார்கள். குருவும், வாயுவும் சேர்ந்து வந்து பிரதிஷ்டை செய்ததால் இந்த ஸ்தலத்துக்கு குருவாயூர் என்ற பெயர் உண்டாயிற்று....!"

"அப்படியா? இதெல்லாம் உமக்கு எப்படித்தெரிந்தது...?"

"குருவாயூர் ஸ்தல புராணத்தின் மூலமாகத் தெரிந்தது."

அருகாமையில் உள்ள விடுதி ஒன்றில் போய்த் தங்குகிறோம்.

"விடியற்காலம் மூன்றரை மணிக்குள் சந்நிதி திறந்து விடு

வார்கள். நிர்மால்ய தரிசனத்துக்குப் போக வேண்டாமா?'' — நண்பர் கேட்கிறார்.

''திவ்யமாகப் போக வேண்டும்; அதற்காகத்தானே வந்திருக்கிறோம்.''

"அப்படியானால் இரண்டு மணிக்கே எழுந்து ஸ்நானம் செய்து விட வேண்டும். கோயிலுக்குப் போகும்போது சட்டை, பனியன் எதுவும் கூடாது . . .''

மணி மூன்று; நண்பரும் நானும் ஸ்நானத்தை முடித்துக் கொண்டு கோயிலுக்குப் புறப்படுகிறோம். உடம்புக்கு இதமான லேசான குளிர். காகங்கள் இரண்டொன்று கரைகின்றன. அங்கங்கே கடைகளின் செருகுக் கதவுகளைத் திறந்து கொண்டிருக்கிறார்கள். விபூதி, அரைத்த சந்தனம், சுவாமி படங்கள் கூடிய கடை ஒன்று திறந்து வைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கடையில் கொஞ்சம் சந்தனம் வாங்கி நெற்றியில் இட்டுக்கொண்டு கண்ணாடியில் பார்க்கிறோம். எங்கள் முகத்தில் 'மலபார் களை' சொட்டுகிறது!

திருக்குளத்தை வலமாகச் சுற்றிக்கொண்டு கிழக்குப் பக்கத்திலுள்ள சந்நிதி வாயிலை அடைகிறோம். கோயிலையும், குளத்தையும் சுற்றி குப்பை, கூளம், தும்பு, தூசி எதுவுமே இல்லை. துப்புரவாக, தூய்மையாக வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஸ்படிகம் போன்ற குளத்து நீரைக் காணும்போதே அதில் மூழ்கிக் குளிக்க வேண்டும்போல் ஆசை உண்டாகிறது. ஆனால், ஏற்கெனவே குளித்துவிட்ட காரணமும் குளிரும் சேர்ந்துகொண்டு அந்த ஆசையைத் தடுத்துவிடுகின்றன!

ஆலய மணியின் ஓங்கார நாதம் நம் செவிகளை நிரப்பி, இதயத்தைக் குளிர வைக்கிறது.

''ஹரே ஏ ஏ ஏ ஏ ஏ கிருஷ்ணா! குருவாயூரப்பா! ஆ ஆ ஆ ஆ! நாராயணா!'' - பக்தர்களின் கோஷம் ஆலயமெங்கும் கேட்கிறது. எல்லோருடைய நெற்றியிலும் சந்தனம். தோளிலே துண்டு. மேனியிலே தூய்மை!

''பூம் ம் ம் ம் ம் ம் ம் . . . !'' - சங்கம் முழங்குகிறது.

''டாங் . . டாங் . . . டாங்!'' — மணியோசை கேட்கிறது.

துவஜஸ்தம்பத்துக்கு முன்னாலும், பின்னாலும், பக்கங்களிலும் சந்நிதி முழுக்கத் துளி இடமில்லாதபடி பக்தர்கள் கூட்டம்தான். ஆனாலும் யாரும் ஆண்டவனை மறைப்பதில்லை! துவஜஸ்தம்பம்கூட மறைப்பதில்லை! மறைக்க முடிவதில்லை! சந்நிதி அமைப்பு அப்படி! தேவ மகாசிற்பி விசுவகர்மா நிர்மாணித்த கோயில் ஆயிற்றே!

இதோ, நடை திறக்கிறார்கள்.

''அவட நோக்கு! அவட நோக்கு!''

''ஹரே ஏ ஏ ஏ கிருஷ்ணு . . .! குருவாயூரப்பா ஆ ஆ ஆ . . .!''

முன் தினம் அணிவித்த சந்தனக் காப்பு, ஆடை ஆபரணங்கள், மலர் மாலைகளுடன் காட்சி தரும் ஆண்டவனைக் கண் குளிரக் கண்டு களிக்கிறோம். இதைத்தான் நிர்மால்ய தரிசனம் என்கிறார்கள். திருவாபரணங்களைக் களைந்ததும் விசுவரூப தரிசனம் நடக்கிறது. பின்னர் தைல அபிஷேகம். அது முடிந்ததும் நைவேத்தியம். இரவெல்லாம் பட்டினி கிடந்த கோபாலனுக்குப் பசி எடுக்காதா? நெற்பொரியும், வாழைப் பழமும், சர்க்கரையும் கலந்து நைவேத்தியமாக வைக்கிறார்கள். நைவேத்தியத்துக்குப் பிறகு கிருஷ்ணனுடைய தோற்றத்தில் பசி தீர்ந்த 'புஷ்டி' தெரிகிறது! சற்று நேரத்துக்கெல்லாம், உஷப் பூஜை நடந்து, மீண்டும் நடை திறக்கப்படுகிறது. குருவாயூரப்பன் இப்போது வேறு தோற்றத்தில் தரிசனம் தருகிறார்.

திரு முடியில் மயில் பீலி! நெற்றியில் திலகம்! இடையில் தங்க அரைஞாண்! கையில் ஓடக் குழல்! அரையில் மஞ்சள் பட்டாடை!

'கிருஷ்ண கிருஷ்ண கிருஷ்ணு ஆ ஆ ஆ ஆ!' குருவாயூரப்பனின் தோற்றம் கண்டு நாம் மெய் சிலிர்க்கிறோம். கண்களில் ஆனந்தக் கண்ணீர் பெருக்கெடுக்கிறது. அந்தக் காட்சியைக் காணாத கண் என்ன கண்ணே!

நாதஸ்வர இசை! ஜயதேவரின் அஷ்டபதி கானம்! இடக்கை வாத்திய முழக்கம் கேட்கிறது. இப்போது பிரசன்ன பூஜை நடக்கிறது! இந்தப் பூஜை முடிந்ததும் சீவேலி ஆரம்பமாகும். உற்சவ மூர்த்தியை யானைமீது எழுந்தருளச் செய்து மேளவாத்தியத்துடன் கோயிலைப் பிரதட்சணம் செய்வதைத்தான் சீவேலி என்கிறார்கள்.

குருவாயூர் வாசி ஒருவர் கூறுகிறார்: ''உஷப் பூஜை, பந்தீரடிப் பூஜை, உச்ச பூஜை, அத்தாழப் பூஜை என்னும் நாலு காலப் பூஜைகளில், பந்தீரடிப் பூஜைக்கு மட்டும் சீவேலி கிடையாது. மற்ற மூன்று வேளைகளிலும் சீவேலி உண்டு.''

குருவாயூரப்பனை உள்ளம் குளிரப் பார்த்தாயிற்று. இப்போது யானைப் பந்தலில் துவஜஸ்தம்பத்தின் அருகில் போய் நின்று அங்கே நடைபெறும் நிகழ்ச்சிகளைச் சற்று நேரம் வேடிக்கை பார்க்கிறோம். திருமணம், துலாபாரம், அன்னப் பிராசனம், குந்துமணி இறைத்தல் ஆகிய சடங்குகள் இங்கேதான் நடக்கின்றன.

மேளம் வாசித்துக்கொண்டே இருக்கிறார்கள். மண மகனும், மணப் பெண்ணும் ஜோடி ஜோடியாக வந்து மாலை மாற்றிக் கொண்டே இருக்கிறார்கள்.

''தினமும் ஏழெட்டுத் திருமணங்கள் நடக்கின்றன. சில நாட்களில் இன்னும் அதிகமாகக்கூட நடக்கும். ஏழைகளுக்கு ரொம்ப

வசதி: இப்பவெல்லாம் சினிமா ஸ்டார்ஸெல்லாம்கூட இங்கே வந்து கல்யாணம் செய்து கொள்கிறார்கள்! அப்போது பார்க்க வேண்டுமே இந்த இடத்தில் கூட்டத்தை . . .!'' - குருவாயூர்க்காரர் கூறுகிறார்.

''அர்ச்சனை டிக்கட் எவ்விட கிட்டும்?'' - ஒரு குரல்.

''இவ்விட சோதிக்கா . . . '' - இன்னொரு குரல்.

''இந்தா அச்சுதன்! ஒரு சிறிய குட்டிக்கு வெண்ணெய் கொண்டு வா . . .''

''ஜானகி அம்மாள் 46 இளநீர்.''

''கேசவன் நாயகருக்கு கருணைக்கிழங்கு . . .''

வேறொன்றுமில்லை; துலாபாரம் நடக்கிறது. பிரார்த்தனை செய்துகொண்டவர்கள் ஒரு தட்டில் ஏறி உட்கார்ந்து கொள்கிறார்கள். அவர்களின் எடைக்குச் சரியாக மற்றொரு தட்டில் இளநீர், வாழைப்பழம், சர்க்கரை, சேனைக் கிழங்கு, சந்தனக்கட்டை, வெண்ணெய் முதலியவற்றை வைத்து எடை போடுகிறார்கள் . . . எடை போடப்படும் பண்டங்களுக்கு விலையாகக் கொடுக்கப்படும் பணம் கோயிலைச் சேரும். புண்ணியம் பக்தர்களைச் சேரும்.

பால் பாயசம், நெய்ப் பாயசம், திருமதுரம், மோர்க் குழம்பு, எரிசேரி, பழப் பிரதமன், பாலடைப் பிரதமன், இலையடை இவை யாவும் குருவாயூர்க் கோவிலுக்குள்ளேயே தயாராகும் பிரசாதங்கள்!

நானும் நண்பரும் ஆளுக்கு ஒரு டம்ளர் பால் பாயசம் வாங்கிச் சாப்பிடுகிறோம். ஆ! ஒன்னாங்கிளாஸாக்கும்!

ஜெண்டை, மத்தளம், கொம்பு, குழல் முதலிய வாத்தியங்கள் ஒலிக்கின்றன.

உச்ச பூஜை தரிசனத்தை முடித்துக்கொண்டு வெளிப் பிராகாரத்தின் வழியாகக் கோயிலை வலம் வருகிறோம். கூத்தம்பலம், தர்ம சாஸ்தா கோயில், பத்தாயப்புரை, உக்கிராண சாலை இவ்வளவும் வெளிப் பிராகாரங்களில் இடம் பெற்றுள்ளன.

நாலம்பலம் என்னும் உள் பிராகாரத்தின் வழியாகச் சுற்றி வரும்போது மடைப்பள்ளி, சரஸ்வதி அறை, கணபதி கோயில், கீழ் சாந்திக்காரர்கள் சந்தனம் அரைக்குமிடம், அம்பலவாசிகள் மாலை கட்டுமிடம், அனந்தசயன சித்திரக் காட்சி, கோயில் கிணறு, பிரசாத கூடம், வாதில் மாடம் எல்லாவற்றையும் பார்க்கிறோம்.

வெளியே வந்தால், கிழக்கு நடைப்புரையில் கிருஷ்ணனுடைய பல்வேறு தோற்றம் கொண்ட படங்கள் கூரைக்குக் கீழ், மேல் பக்கச் சுவர்களை அலங்கரிக்கின்றன. மகாத்மா காந்தி, 'குருவாயூர்

பத்மநாபன்' என்னும் கோயில் யானை, பாகவதப் பிரசங்க மணிகளான குஞ்சிக்காவு நம்பூதிரிப்பாடு, வாழக்குன்னம் வாசுதேவன், சேங்காலிபுரம் அனந்தராம தீட்சதர் இவர்களுடைய படங்களும் அங்கே இடம் பெற்றுள்ளன.

கோயிலைச் சேர்ந்த இன்னொரு பகுதிக்குச் செல்கிறோம்.

அங்கே மாடியில் ஓர் அறைக்குள் கிருஷ்ணன் ஆட்டத்துக்கு ஒத்திகை நடந்து கொண்டிருக்கிறது. எண்பத்து மூன்று வயதான கிழவர் ஒருவர் பத்து இருபது சீடர்களுடன் சேர்ந்து ஆடிக்கொண்டிருக்கிறார். கதக்களியைப் போன்றதொரு அபூர்வ நாட்டிய நாடகம் அது என்றும், கிருஷ்ணன் சரித்திரத்தை மட்டும் நடிப்பதால் கிருஷ்ணன் ஆட்டம் என்றும் கூறுகிறார்கள். கிருஷ்ணன் ஆட்டம் கேரளத்திலேயே இந்த இடம் ஒன்றில்தான் கற்றுத் தரப்படுகிறதாம்.

பிள்ளைகளுக்கெல்லாம் ஆடி ஆடிக் களைத்துப்போய் மூச்சு வாங்குகிறது.

அந்த வாலிப வயோதிகரான அச்சுதன் நாயர் முகத்தில் மட்டும் துளிக் களைப்பும் தெரியவில்லை.

''இந்த வயதில் நீங்களெல்லாம் இப்படி ஆடுவீர்களா?'' - அச்சுதன் நாயரின் சீடர்களைப் பார்த்து நான் கேட்கிறேன்.

''முதலாவது, நாங்கள் அத்தனை வயது உயிருடன் இருப்போமா என்பதே சந்தேகம்!'' என்கிறார்கள் அவர்கள். அச்சுதன் நாயர் பாலகோபாலனைப்போல் துள்ளி ஆடுவதையும் வேய்ங்குழல் எடுத்து ஊதுவதையும் நமது புகைப்படக்காரர் படம் எடுத்துக் கொள்கிறார்.

''ஒன்பது வயதில் ஆடத் தொடங்கினேன். இன்னமும் ஆடிக் கொண்டிருக்கிறேன். நானா ஆடுகிறேன்? அந்தக் கிருஷ்ணன்தான் என்னை ஆட்டுவிக்கிறார்!'' என்கிறார் அச்சுதன் நாயர்.

''சீவேலி! சீவேலி!'' - ஒரு குரல்.

''ஓ! இதோ வந்தாச்சு!'' அச்சுதன் நாயரும் அவருடைய சீடர்களும் சீவேலியில் கலந்துகொள்ள விரைந்து செல்கிறார்கள். நாமும் உடன் செல்கிறோம்.

இரவு அத்தாழ பூஜை தரிசனத்துக்காக மீண்டும் கோயிலுக்குச் செல்கிறோம். மேற்கு வாயிலுக்கருகில் பிராகாரத்துக்குள் பிரசங்கி ஒருவர் குழந்தைகளுக்கு ராமாயணம் கதை சொல்லிக் கொண்டிருக்கிறார். அவரைச் சுற்றிலும் உட்கார்ந்தவண்ணம் கதை கேட்கும் குழந்தைகளின் ஆர்வம் மிக்க கண்கள் குத்து விளக்

கின் ஒளியில் பளிச்சிட்டுப் பிரகாசிக்கின்றன. பாகவதர் சொல்கிறார்:

''விசுவாமித்திர மகரிஷி ஆரம்பிச்ச ஆ யாகம் . . . . . . ஆ யாகத்தை ரட்சிக்க ஸ்ரீ ராமரும் லட்சுமணரும் . . . அப்போள் . . . பகவான் . . . ராட்சச ராஜாவாயான ராவணன் பரஞோ . . . ஆ துஷ்டாத்மாக்களாயுள்ள மனுஷனே, என்னேயும் என் வம்சத்தையும் அவமானிச்ச ஆ மனிஷனே . . . ''

மணியோசை அத்தாழ பூஜை நடப்பதை அறிவிக்கிறது.

கோயிலுக்குள் சென்று கடைசியாக ஒரு முறை குருவாயூரப்பனைக் கண் நிறைய, இதயம் கனிய தரிசித்துவிட்டு விடுதிக்குத் திரும்புகிறோம். எத்தனை முறை தரிசித்தாலும் நம் மனத்தில் ஒரு குறை இருந்துகொண்டே யிருக்கிறது. அது வேறொன்றுமல்ல. குருவாயூரப்பனை மீண்டும் ஒரு முறை பார்க்க வேண்டுமென்பது தான்.

திருக்கழுக்குன்றம்

14

''ஜம்மென்று பன்னிரண்டு மணிக்குப் பறந்து வந்து இறங்கும். மறுபடியும் பத்து நிமிஷத்துக்கெல்லாம் புறப்பட்டுவிடும்.''

''வைக்கவுண்டைவிட வேகமாகப் போகுமா?''

''ஆமாம்.''

''பூஷா, விதாதா இரண்டுமே சேர்ந்தாப்போல்தான் வருமா?''

''ஒன்று வந்து இறங்கிய சற்று நேரத்துக்கெல்லாம் மற்ருென் றும் வரும்.''

பூஷா - விதாதாவைப் பார்க்க வந்தவர்கள் எல்லோரும் ஆகாயத்தையே ஆவலுடன் உற்று நோக்குகிருர்கள்.

''சிந்தாதரிப்பேட்டை லக்ஷ்மண ஸா தர்மம். இடது பக்கம் வலது பக்கம் கருங்கல் கைப்பிடிச் சுவர் உள்பட ஆறு படிகள்.''

படிக்கட்டுகள் கட்டி தர்மம் செய்தவர்கள் எல்லோரும் தங்கள் பெயர்களை ஆங்காங்கே கல்லிலே பொறித்து வைத்திருக்கிருர்கள்.

நெட்டுக்குத்தலாக உள்ள படிக்கட்டுகள்மீது ஏறிச் செல்வதற் குள் நமக்கு மேல் மூச்சு வாங்குகிறது. பாதி வழியிலேயே திரும்பிப் போய்விடலாமா என்றுகூடத் தோன்றுகிறது.

''அப்பனே! என்ஞல் இனி ஒரு அடிகூட எடுத்து வைக்க முடி யாது. எனக்குக் கால் வலி வந்துவிட்டது!'' என்கிருர் ஒருவர்.

''கால் வலிதானே? உச்சிக்கு வந்து சேருவதற்குள் முழு வலி எடுக்கும்! வாருங்கள்!'' என்கிருர் இன்ஞெருவர்.

''ஊபர் ஜானேகி அவுர் கித்னே தூர் ஹை?'' - ஒரு வடக்கத்திக் காரர் கேட்கிருர்.

''கொஞ்ச் தூர் ஹை'' - தமிழர் பதில் கூறுகிருர்!

மலையடிவாரத்தில் நாலைந்து டூரிஸ்ட் பஸ்கள் வந்து நிற்கின்றன. அவற்றிலிருந்து இறங்கிய ஒரு பெருங்கூட்டம் 'மளமள'வென்று மலைமீது ஏறுகிறது. ஐம்பது படிகள் ஏறுவதற்குள், ''யப்பா! நம் மாலே முடியாதப்பா!'' என்று வெற்றிகரமாக வாபசாகப் பார்க் கிருர்கள் அந்தக் கூட்டத்தில் சில வீரர்கள்.

''வீரத் தமிழர்கள் பரம்பரையில் தோன்றிய சிங்கங்களே இமயத்தில் கொடி பொறித்த வீரத் தமிழர்களா நீங்கள்?''

கீழே திரும்பிச் செல்பவர்களைப் பார்த்துக் கேலி செய்கின்றனர். அவர்களிலேயே சிலர்!

நானும் நண்பரும் அடிக்கடி படிக்கட்டுகள்மீது அமர்ந்து ஓய்வு எடுத்துக் கொள்கிறோம்.

''இப்போதுதான் புரிகிறது, பூஷாவும் விதாதாவும் ஏன் பறந்தே இங்கு வருகின்றன என்று'' என்கிறார் நண்பர் கோபுலு.

''ஏன்?''

''ஒவ்வொரு நாளும் படிக்கட்டு ஏறி வருவதென்றால் முடிகிற காரியமா? அதனால் பறந்தே வந்துவிடுகின்றன!''

எங்களுக்கு முன்பாகவே குன்றத்தின் உச்சியில் பல பேர் கூடியிருக்கின்றனர். வெள்ளைக்காரர்கள், ஆந்திரர்கள், கன்னடக்காரர்கள், பஞ்சாபிகள், வங்காளிகள், யார் யாரோ!

"இந்த இடத்தில்தான் சர்க்கரைப் பொங்கல் கொடுப்பார் பண்டாரம்.''

''சர்க்கரைப் பொங்கலா?'' - நாக்கைச் சப்புக் கொட்டுகிறார் ஒருவர்.

''இங்கே உமக்குச் சர்க்கரைப் பொங்கல் சாப்பிட ஆசையாயிருந்தால் அடுத்த யுகத்தில் கழுகாய்ப் பிறந்து வாரும்!'' என்கிறார் அவர் நண்பர்.

"பட்சிங்க வந்து பண்டாரம் கையிலே சர்க்கரைப் பொங்கல் வாங்கித் துண்ணுமா?'' என்று கேட்கிறார் ஒரு தோழர்.

"உக்கும்! வெங்காயம் வருது. அதெல்லாம் சுத்த 'டுப்' பய்யா! வாங்க போவோம் . . .''

''மனுசன் தின்ன சோறு கிடைக்கல்லே. கழுகுக்குச் சர்க்கரைப் பொங்கலாம். இதென்னய்யா சர்க்கார்!'' - இப்படி ஒருவர்!

கூட்டத்தினர் அவ்வளவு பேரும் பாறைமீது ஏறி உட்கார்ந்து கொண்டு வைத்த கண் வாங்காமல் ஆகாயத்தையே பார்க்கின்றனர்.

அப்போது என் காதில் விழுந்த சில குரல்கள்:

''கழுகுங்க வர ஏன் லேட்? மணி பன்னிரண்டரை ஆகப் போவுதே?''

''காசியிலேருந்து வரவேணுமா?''

"அதெல்லாம் சுத்தப் பொய். இங்கெங்காவது கிட்டத்திலே உட்கார்ந்துகிட்டிருக்கும். பண்டாரத்தைக் கண்டதும் ஓடியாரும்'' - ஒரு தோழர்.

''சோடா, கலர்!''

''ஏய் சோடா, இங்கே வாப்பா!'' - சோடாக்காரன் ஓடி வருகிறான்.

''கூப்பிட்டீங்களா?''

''ஆமாம்; கழுகு எத்தனை மணிக்கு வரும்?''

"ரொம்ப நேரமாகும்; ஒரு கலர் சாப்பிடுங்க . . .!"

ஓர் ஊமை வந்து கையை ஆட்டி ஆட்டி, "ஆ! ஆ! ஆ! ஆ! ஆ!" என்று எல்லோரையும் பாறை மேட்டிலிருந்து கீழே இறங்கும் படி விரட்டுகிறான்.

எல்லோரும் கீழே இறங்கி, ஒருவரை ஒருவர் முண்டி இடித்துக் கொண்டு நிற்கிறார்கள் கழுகு தரிசனத்திற்காக.

டப்! . . . டபார்!

அந்த ஊமை ஓர் ஆசனப் பலகையைக் கொண்டுவந்து பாறை மீது அலட்சியமாகப் போடுகிறான்.

"டொங் . . . டொக் . . ."

பின்னோடு ஒரு தவலையைக் கொண்டுவந்து வைக்கிறான் இன்னொருவன்.

"அ! சர்க்கரைப் பொங்கல் வந்துடுச்சுடோய்!"

"டணால் . . . டணீர் . . ."

இது தாம்பாள ஓசை! அடுத்தாற்போல் தண்ணீர்ச் செம்பும் இரண்டு சின்னக் கிண்ணங்களும் வருகின்றன.

இத்தனை நேரம் சோர்ந்து கிடந்த கூட்டத்தில் உற்சாகமும் பரபரப்பும் உண்டாகின்றன.

"பட்சி வரப்போகுது!
பட்சி வரப் போகுது!
பண்டாரம் வரப் போகிறார்!"

"அதோ! கையில் குடையுடன் வருகிறார் ஜனார்த்தன தேசிகர். பதினைந்து ஆண்டு காலமாக இவர்தான் கழுகுகளுக்குப் பொங்கல் கொடுத்து வருகிறார். இவருக்கு முன்னால் இவருடைய தமையனார் ஜம்புலிங்க தேசிகர் கொடுத்துக் கொண்டிருந்தார்."

"இவர் கையிலேயே வந்து திங்குமா?"

"திங்கும்."

"கொத்திப்புடாது . . .?"

"கொத்தாது."

"இப்படி எத்தனை காலமா வருது இந்தக் கழுகுங்க?"

"யுகம் யுகமா வருதுங்க . . ."

"இதே கழுகுங்களா வருது?"

"ஆமாம்; இதே கழுகுங்கதான். பண்டாரங்க மட்டும் மாறு வாங்க. கழுகுங்க மாறுது! சர்க்கரைப் பொங்கலும் மாறுது!"

பண்டாரம் செம்பிலுள்ள தண்ணீரை எடுத்துக் கையைக் கழுவிக் கொள்கிறார். பக்தி சிரத்தையுடன் சூரியனைப் பார்த்து கரம் கூப்பி சிரம் வணங்குகிறார்.

கிழக்கு முகமாக ஆசனத்தில் அமர்கிறார்.

குடையைப் பின்னுக்குத் தள்ளி வைக்கிறார்.

அந்தத் தாம்பாளத்தை மேலும் கீழுமாக இரண்டு முறை தோசையைப் புரட்டிப் போடுவதுபோல் போடுகிறார். கணீர் கணீர் என்ற ஓசையை எழுப்புகிறது அது. கழுகுகளுக்கு அந்த ஓசைதான் 'சிக்னல்!' பொங்கலை மூன்று கவளம் எடுத்துத் தாம் பாளத்தில் போடுகிறார். மீண்டும் ஆகாசத்தைப் பார்க்கிறார். நாமும் பார்க்கிறோம். கழுகுகளைக் காணவில்லை. வடக்கே பார்க் கிறார், தெற்கே பார்க்கிறார்.

டொக்! . . . டக்! . . . டொக்! . . .

கிண்ணத்தை எடுத்துப் பாறைமீது தட்டுகிறார். அந்த ஓசை யைக் கேட்டதும் கூட்டத்தினரின் பேச்சுக் குரல் சற்று அடங்கு கிறது. ஒருவருக்கொருவர் 'ஸ் . . . . உஷ்' என்று அடக்கிக் கொள்கின்றனர்.

''டக்! டக்! . . . டொக் . . . டொக் . . .!''

இரண்டு மூன்று முறை தட்டியதும் மக்களிடையே பூரண அமைதி நிலவுகிறது.

இரண்டு நிமிஷம், ஐந்து நிமிஷம், பத்து நிமிஷம் ஆகிறது. கூட்டத்தில் பேச்சு மூச்சு இல்லை. நிசப்தமாக இருந்து கூர்ந்து கவனிக்கிறார்கள். பட்சிகளைக் காணோம்.

''இங்கு யாரேனும் பாவம் செய்தவர்கள் இருந்தால் பட்சிகள் வராது'' என்கிறார் ஒருவர். ஒவ்வொருவரும் தம்மைத் தவிர மற்ற வர்கள் அனைவரையும் பாபாத்மாக்களாக எண்ணிக் கொள் கின்றனர்.

காத்துக் காத்து கழுகுகளைக் காண மாட்டோமா என்று ஆகி விடுகிறது. 'வராமலேயே இருந்து விடுமோ?' என்ற சந்தேகம் சிலருக்கு.

பண்டாரம் கிண்ணத்தைத் தட்டித் தட்டி அழைக்கிறார்.

''கழுகுகளுக்கு மூக்கில் வியர்க்கும் என்பார்களே! சர்க்கரைப் பொங்கல் வந்து இத்தனை நேரம் ஆகிறதே, இன்னும் காணோமே?'' என்கிறார் ஒருவர்.

''தினமும் சர்க்கரைப் பொங்கல் தின்று அதற்கு அலுத்துப் போயிருக்கும்!''

''அதோ! அதோ வருகிறது!''

அனைவரும் ஆவலோடு பார்க்கிறோம்.

ஒரே ஒரு கழுகு மட்டும் பறந்து வந்து பாறைமீது உட்காரு கிறது. அப்படியும் இப்படியும் தலையைத் திருப்பிப் பார்த்துவிட்டு, பண்டாரத்தை நெருங்கிச் செல்கிறது.

பண்டாரம் பொங்கலைக் கிண்ணத்தில் வைத்து நீட்டுகிறார்; கழுகு தின்கிறது. அவர் கையிலிருந்தும் சாப்பிடுகிறது. நாம் வியந்து

மகிழ்கிறோம். இதற்குள் இரண்டாவது கழுகும் பறந்து வந்து உட்காருகிறது.

''பியூட்டிபுல் லாண்டிங்!'' என்கிறார் ஒரு வெள்ளைக்காரர்.

இரண்டாவது கழுகுக்கும் பொங்கலை எடுத்து வைக்கிறார் தேசிகர். அதுவும் சாப்பிடுகிறது. நம்முடைய மகிழ்ச்சி இரட்டிப்பாகிறது!

பத்தே நிமிடங்களில் இரண்டும் சாப்பிட்டு முடித்துவிட்டு விண்ணிலே விர்ரென்று பறக்கத் தொடங்குகின்றன.

''ஒண்டர்புல் டேக் ஆஃப்!'' என்கிறார் வெள்ளைக்காரர்.

அவ்வளவுதான்; எல்லோரும் பண்டாரத்தைச் சூழ்ந்து கொண்டு, 'பிரசாதம் பிரசாதம்! எனக்கு உனக்கு!' என்று போட்டி போடுகிறார்கள். பண்டாரத்தின் கருத்தெல்லாம் சர்க்கரைப் பொங்கலை விலையாக்குவதில் திரும்புகிறது.

''சார் ஆனு! நாலுகு அணலு, போர் ஆனேஸ்'' என்று எல்லா பாஷைகளிலும் பொங்கலுக்கு விலை கூறுகிறார்.

பட்சி தீர்த்தம் என்னும் திருக்கழுக்குன்றம் பற்றிய ஸ்தல புராணம் கூறுவதாவது:

ஓம்! சிவமயம்!

பிர்ம்மாவின் மானஸீக புத்திரர்கள் எண்மர் சிவபெருமானைக் குறித்து சாரூப பதவியை வேண்டிக் கடுந்தவம் புரிந்தார்கள். சிவ பெருமான் இவர்கள் தவத்துக்கிரங்கி பிரசன்னமாய், ''முனிவர்களே! உமக்கு யாது வேண்டும்?'' என வினவினார். முனிவர்கள் கரங்களைச் சிரமேற் கூப்பி, ''எம் பெருமானே! ஏழையேங்களது தவத்துக்கிரங்கி எழுந்தருளிய பரமதயாநிதி! சாயுச்சிய பதவியை அநுக்கிரகிக்க வேண்டு'' மென்று பிரார்த்தித்தார்கள். பரமசிவம் ஆச்சரியமும் கோபமும் அடைந்து, ''முநிசிரேஷ்டர்காள்! நீங்கள் சாரூப பதவியை யிச்சித்துத் தவஞ்செய்து இப்போது சாயுச்சிய பதவியை வேண்டி நிற்கிறீர்கள். இது சிவத்துரோகம் என்று நினைத்தீர்களில்லை. ஆதலால் இந்த அபராதத்துக்காக நீங்கள் எண்மரும் கழுகுகளாய்ப் பிறந்து உழல்வீர்களாக'' என்று சாபம் கொடுத்தார். முனிவர்கள் திகிலும் அச்சமும் கொண்டு, ''சுவாமி! அடியேங்கள் அறியாமையாற் செய்த குற்றத்தை மன்னித்து ஆட்கொள்ளவேண்டு'' மென்று மீண்டும் பிரார்த்தித்தார்கள். பரமசிவம் இவர்களது பிரார்த்தனைக்கு இயைந்து, ''முநிவர்களே! கழுகுருவத்தோடு பிறந்து யுகத்துக்கு இருவராகத் தவஞ் செய்து சாரூப பதவியைப் பெற்று உய்வீர்களாக'' என அநுக்கிரகித்தார். அவ்வாறே கிரேதாயுகாரம்பத்தில் சண்டன், பிரசண்டன் என்னும் இரு புத்திரர்கள் கழுகுகளாகப் பிறந்து, மோட்சத்தை அடைந்தார்கள்.

திரேதாயுகத்தில் சம்பாதி, சடாயுவென்னும் இரு புத்திரர்கள் கழுகுகளாக அவதரித்தார்கள்.

துவாபர யுகத்தில் சம்புகுந்தன், மாகுத்தன் என்னும் முனிவர்கள் கழுகுகளாகப் பிறந்தனர்.

கலியுகாரம்பத்தில் பூஷா, விதாதா என்கிற கழுகுகளாகப் பிறந்தனர்.

"ஆமாம்; பரமசிவன் அந்த முனிவர்களைக் கழுகுகளாகப் பிறக்கும்படி சபித்ததற்கு என்ன காரணம்?" என்று நண்பரிடம் விசாரித்தேன்.

"இது தெரியவில்லையா? அப்போதுதானே சர்க்கரைப் பொங்கல் சாப்பிட அவை காசியிலிருந்து பறந்து வர முடியும்!" என்றார் நண்பர்!

தேக்கடி

15

தேக்கடி போவதற்கு மூன்று வழிகள் இருக்கின்றன:

1. மதுரை - தேக்கடி மார்க்கம்.
2. கொச்சி - தேக்கடி சாலை.
3. திருவனந்தபுரம் - தேக்கடி ரோடு. இந்த மூன்று பாதைகளையும் இணைக்கின்ற கோட்டயத்துக்கும் தேக்கடிக்கும் இடையே எழுபத்தைந்து மைல் தூரம் இருக்கிறது. அதைத் தவிர மலைகள் இருக்கின்றன. மரங்கள் இருக்கின்றன. தேயிலை, ரப்பர், மிளகு எஸ்டேட்டுகள் இருக்கின்றன. நீர் வீழ்ச்சிகள் இருக்கின்றன.

பசுமையான இயற்கைக் காட்சிகளைப் பார்த்து ரசித்தபடி பஸ்ஸில் பிரயாணம் செய்து கொண்டிருக்கும்போதே தேக்கடி வந்து விடுகிறது.

மலைகள் சூழ்ந்த ஒரு காட்டுப் பிரதேசம். முன்னூறு சதுர மைல் பரப்பளவு கொண்டது. இதன் இதய பாகத்தில் மலைகளுக்கிடையே பெரியாற்றுத் தண்ணீரைத் தேக்கி அணை கட்டியிருக்கிறார்கள். சுற்றியுள்ள மலைக்காடுகளில் வாழும் மிருகங்கள் எப்போதாவது இந்த நீர்த் தேக்கங்களின் ஓரமாக வந்து நின்று மனிதர்களுக்குத் தரிசனம் கொடுக்கின்றன. யானைகளும், மான்களும், காட்டு எருமைகளும் கூட்டங் கூட்டமாக வருமாம். தனியாக வருவதற்கு பயம் போலும்!

இந்த நீர்த் தேக்கத்துக்கிடையே சிறு தீவு ஒன்று இருக்கிறது. 'எடப் பாளையம்' என்று அழைக்கப்படும் இந்தத் தீவில் திருவாங்கூர் மகாராஜா ஒரு பங்களா கட்டி வைத்திருக்கிறார். ஒரு காலத்தில் மகாராஜாவின் கோடை வாசஸ்தலமாக இருந்த அந்த இடம் இப்போது பிரயாணிகள் தங்கும் விடுதியாக மாற்றப்பட்டிருக்கிறது. இந்த பங்களாவில் தங்கினால் ஜன்னல் வழியாகவே காட்டு மிருகங்களைக் காண முடியும் என்று சொல்கிறார்கள். ஜன்னல் வழியாகக் காட்டு மிருகங்களைப் பார்ப்பதற்குத் தேக்கடி போக வேண்டுமா, என்ன? மிருகக் காட்சிச் சாலைகளுக்குப் போனால் எல்லா மிருகங்களையுமே ஜன்னல் வழியாகத்தானே பார்க்கிறோம்?

தேக்கடியில் 'அரண்ய நிவாஸ்' ஓட்டலும் டூரிஸ்ட் பங்களாவும் இருக்கின்றன. மேல்நாட்டு முறையில் நடந்தப்படும் அரண்ய நிவாஸ் ஓட்டலில் தங்கிச் சாப்பிடுவதில் ஒரு சின்ன இடைஞ்சல் தான். ஓட்டல் பில் நம்மைச் சாப்பிட்டு விடுகிறது!

டூரிஸ்ட் பங்களா நமது 'பர்ஸு'க்கு அடக்கமாக இருப்பதோடு சௌகரியமாகவும் இருப்பதால் நாம் அங்கே தங்குகிறோம்.

தேக்கடி போய்ச் சேருவதற்குள் நன்றாக இருட்டி விடுவதால் அந்த நடுக் காட்டில் கிழக்கு மேற்கு தெரியவில்லை.

காலையில், நானும் போட்டோகிராபரும் ஓடத் துறையை நோக்கி நடக்கிறோம்.

''அக்கு . . . அக்கூ . . . கிறீச் . . . கிறீச் . . . கர்ர்ர்ர் . . . கர்ர்ர்ர்ர்ர்! ககக் . . . ககக் . . . கிகிக் குகுக் . . . ஸ்ஸ்ஸ்ஸ்ஸ் . . .!'' - மரங்களின் உச்சியிலிருந்து வரும் பட்சிகளின் குரல். ஆனால், அந்தப் பட்சிகளைப் பார்க்க முடியவில்லை. குளிர் காற்று சிலுசிலு வென்று வீசுகிறது.

திடீரென்று ''டர்மனுலா பனிகுலாடா?'' என்கிறார் நண்பர்.

எனக்கு ஒன்றும் புரியவில்லை. 'ஒரு வேளை பனிக் குல்லாய் கொண்டு வரவில்லை என்கிறாரோ?' என்று யோசிக்கிறேன் நான்.

மறுபடியும் ''டெக்டோனா பிராண்டிஸ்!'' என்கிறார் அவர். இப்போதுதான் அவர் பாஷை புரிகிறது எனக்கு!

''ஓ! 'டெக்டோனா கிராண்டிஸா?' இருக்கட்டும்; இதோ 'கிரனியா டிலயா போலியா' பார்த்தீர்களா?'' என்கிறேன் நான்.

''பார்த்தேன்; அதோ 'லட்டி போலியா' பாருங்கள்'' என்கிறார் அவர்.

நாங்கள் இருவரும் பேசிக் கொள்வது கிரேக்க மொழியோ, லத்தீன் பாஷையோ அல்ல! தேக்கு மரங்கள்மீது, அந்தந்த மரங்களின் பெயரைப் பலகையில் எழுதி வைத்திருக்கிறார்கள். அந்தப் பெயர்களைத்தான் படித்துக்கொண்டு போகிறோம்!

மோட்டார்ப் படகு ஒன்று புறப்படத் தயாராயிருக்கிறது. நாங்கள் இருவரும் அதில் ஏறிக்கொள்கிறோம். எங்களுடன் அந்தப் படகில் வெளியூரிலிருந்து வந்துள்ள பள்ளிக்கூட ஆசிரியர்களும் மாணவர்கள் சிலரும் ஏறிக் கொள்கிறார்கள். அணைக்கட்டு வரை படகில் போய்த் திரும்பி வருவதற்கு மூன்று மணி நேரம் ஆகிறது. இந்த மூன்று மணி நேரத்துக்குள் இடை வழியில் பல மிருகங்களைப் பார்க்க முடியும் என்கிறார்கள்; பார்க்கலாமே!

படகு நிதானமாகச் செல்கிறது.

''ஏன் ஸார், இப்ப புலி வருமா?'' - ஒரு பையன் கேட்கிறான்.

''இப்பவெல்லாம் வராது; உச்சி வேளைக்குத்தான் வரும்.''

''அப்போ எதுக்கு வருது!''

''அப்பத்தான் அதுங்களுக்கு தாகம் எடுக்கும்; தண்ணி குடிக்க வரும்.''

''யானைங்க . . . . ?''

''யானைங்க காலே வேளையிலே வந்துட்டுப் போயிடும்.''

''யானைங்க மட்டும் எதுக்கு காலம்பற வருதுங்க . . . . ?''

''பல் துலக்க வரும்டா!''

மோட்டார்ப் படகு தண்ணீரைக் கிழித்துக்கொண்டு சற்று வேகமாகச் செல்கிறது. இரு பக்கங்களிலும் உள்ள மலைகளைக் கூர்ந்து பார்க்கிறோம், எங்காவது ஏதாவது மிருகங்கள் தென்படுகின்றனவா என்று.

''அதோ தெரிகிறது பாருங்கள்!'' - ஆசிரியர் ஒருவர் சுட்டிக் காட்டுகிறார்.

நாங்கள் எல்லோரும் ஆவலுடன் அவர் காட்டிய இடத்தைப் பார்க்கிறோம்.

''அதுதான் எடப்பாளையம். அங்கேதான் திருவாங்கூர் மகாராஜா பங்களா இருக்கிறது'' என்கிறார் அவர்.

''போங்க ஸார்! புலியோ யானையோ தான் காட்டப் போறீங்கன்னு நினைச்சோம் - . . . !'' பிள்ளைகள் ஏமாற்றத்துடன் கூறுகிறார்கள்.

''காட்டெருதுங்க கூட்டம் கூட்டமா வரும்னு சொன்னீங்களே இப்ப ஒண்ணைக்கூடக் காணோமே, ஸார்!'' ஒரு பையன் கேட்கிறான்.

''அதுங்க நிறைய தடவை மனிதர்களைப் பார்த்துப் பார்த்து அலுத்துப் போயிருக்கும். அதனால்தான் வரக் காணோம்'' — ஆசிரியர் கூறுகிறார்.

''அதோ பாருங்க ஸார்! ஒரு யானை!'' - பையன் ஒருவன் உற்சாகத்தோடு சத்தம் போட்டுக் கூவுகிறான்.

''எங்கே? எங்கே?''

''அதோ பாருங்க! அந்தக் கரையிலே . . .'' - எல்லோரும் அங்கே பார்க்கிறோம். அவன் காட்டிய இடத்தில் ஒரு யானை நின்றுகொண்டிருக்கிறது.

''ஆமாண்டோய்! இப்ப தண்ணிக்குள்ளே இறங்கப் போகுது பாரு!'' - இன்னொரு பையன்.

அந்த யானை அசையவில்லை.

''படகை அதன் பக்கமாக விடய்யா. கிட்டத்திலே போய்ப் பார்க்கலாம்.''

படகுக்காரர் சிரிக்கிறார்.

''ஏன் சிரிக்கிறாய்?''

"அது யானை இல்லை; பாறை! யானை மாதிரி கறுப்பாத் தெரியும். இதோ வருது பாருங்க நிஜ யானை . . . !" - படகுக்காரர் சொல்கிறார். அவர் காட்டிய இடத்தில் நிஜமாகவே ஒரு யானை வந்து கொண்டிருக்கிறது.

அந்த யானை தண்ணீரில் இறங்கி அக்கரைக்கு நீந்திச் செல்கிறது. தண்ணீருக்குள் மூழ்கி மூழ்கித் தலையைத் தூக்கிப் பார்க்கிறது.

"என்ன வேகமா நீஞ்சுது ஸார்!" - ஒரு மாணவன்.

"ஏன் ஸார், யானை நீந்துமா?" - ஒரு பையன்.

"நீஞ்சுதே . . . !" - இது ஆசிரியர்.

படகை யானையின் அருகே செலுத்திக்கொண்டு போய்ப் பார்க்கிறோம். அக்கரையை அடைந்துவிட்ட யானை ஓரத்தில் தண்ணீரிலேயே நின்றுகொண்டு ஏதோ தழைகளைத் துதிக்கையால் எடுத்துச் சுழற்றிச் சுழற்றி வாயில் திணித்துக் கொள்கிறது.

"ஏன் ஸார், யானை எந்தத் தழையை வேண்டுமானாலும் சாப்பிடுமா?" - பையன் கேட்கிறான்.

"சாப்பிடுதே!" - ஆசிரியர் பதில்.

"ஏன் ஸார், யானை ஒத்தையிலே வருமா?" - கேள்வி.

"வந்திருக்குதே!" — பதில்.

"பயமில்லை?"

"பயப்படலையே!"

கொஞ்ச நேரம் அந்த யானையைக் கண் குளிர, ஆசை தீரப் பார்த்த பிறகு அணைக்கட்டு வரை போய்த் திரும்பி வருகிறோம். அந்த யானையைத் தவிர அப்புறம் வேறு ஒரு பிராணியையும் பார்க்க முடியவில்லை.

பிள்ளைகளுக்கு ரொம்ப ஏமாற்றம்!

"என்ன ஸார்! தேக்கடிக்கு வந்து ஒரே ஒரு யானையைத்தான் பார்த்தோம். வேறே ஒண்ணையும் பார்க்க முடியலையே . . ."

"முடியலையே!" - ஆசிரியரும் வருத்தப்படுகிறார்.

படகு கரைக்கு வந்து சேர்கிறது. எல்லோரும் கீழே இறங்கி நடக்கிறோம்.

"டேய்! நாளைக்குப் பள்ளிக்கூடம் போனதும் இந்தக் காட்டைப் பற்றி ஒரு வியாசம் எழுதணும், தெரியுமா" ஆசிரியர் சொல்கிறார்.

"என்ன ஸார் எழுதறது! ஒரே ஒரு காடு. அந்தக் காட்டில் ஒரே ஒரு யானைன்னுதான் எழுதணும் . . . !"

முதுமலை — பண்டிப்பூர்

16

விடியற்காலம் மணி நாலரை. இருளும் குளிரும் ஆட்சி புரியும் இடம்.

நாங்கள் மூன்று பேர் நடக்கிறோம். குளிர் உடம்பைக் குலுக்கி எடுக்கிறது.

''அடாடா! கரடியாகப் பிறக்காமல் போனோமே?'' என்கிறார் நண்பர்.

''உய் . . . ய் . . . ய் . . . ஸ் . . ஸ்'' - இது தேக்கு மரங்களின் சத்தம்!

எங்களுக்கு முன்னால் ஓர் உருவம் - கம்பளிச் சட்டை பனிக் குல்லாயுடன் போகிறது. அடிக்கடி திரும்பிப் பார்த்து கை ஜாடை யால் அழைக்கிறது.

'கட கட் கடகட . . . . . . கட்!' - ஒன்றுமில்லை; குளிரில் என் பற்கள் போடும் சத்தம்!

''ஐயோ பாம்பு!'' - இது நண்பரின் அலறல்.

''எங்கே?''

''காலைக் கடித்துவிட்டது!'' - நண்பர் குனிந்து காலைத் தடவு கிறார். ''பாம்பு இல்லை. முள் குத்திவிட்டது; எடுத்துவிட்டேன்! நடக்கலாம், ஹிஹிஹி!'' என்கிறார் சற்று நேரத்துக்கெல்லாம்.

''உஷ்ஷ்ஷ் . . . பேசாமல் வந்தால்தான் மிருகங்களைக் காட்டு வேன். மான்கள், காட்டெருதுகள் (Bisons) கண்டிப்பாய்ப் பார்க்க லாம். பேசினால் அவை நம் குரல் கேட்டு ஓடிவிடும் . . .'' - இது வழிகாட்டியின் எச்சரிக்கை!

''கண்டிப்பாய்ப் பார்க்கலாமா?''

''பார்க்கலாம்.''

''மான்களும், காட்டெருதுகளும் இருக்குமா?''

''அதோ அங்கு ஒரு பெரிய பாறை தெரிகிறது பாருங்கள். அந்தப் பாறைமீது போய் நின்றுகொண்டால் 'பைஸன்'கள் கூட்டம் கூட்டமாகச் செல்வதைப் பார்க்கலாம்.''

ஆறு அடி உயரத்துக்குப் புற்கள் அடர்ந்து வளர்ந்திருக்கின்றன.

அந்தப் பசும் புற்களில் இரவெல்லாம் பெய்த பனித் துளிகள் தோய்ந்திருக்கின்றன.

வழிகாட்டி புற்களை விலக்கிக்கொண்டே முன்னால் நடக்கிறான். நாங்களும் அவனைப் பின்தொடர்கிறோம்.

வெளியிலே இருட்டு! உடம்பிலே குளிர்! உள்ளத்திலே திகில்! மூச்! பேசக்கூடாது. கப்சிப்! உஷ்!

வழிகாட்டி பாறைமீது நிற்கிறான். நாங்களும் அதன்மீது எப்படியோ ஏறி விடுகிறோம். பாறையின் ஜில்லிப்பு என் காலைப் பிடுங்கித் தின்கிறது.

"ஐயோ! போதுமே. பைஸன் பார்க்க வேண்டாமே!" என்று அலற வேண்டும்போல் தோன்றுகிறது எனக்கு. வாயைத் திறக்க முடியுமா? மூச்!

மணி ஐந்தே கால்.

இரண்டும் கெட்ட இருட்டு அந்தப் பிரதேசமெங்கும் அடைத்துக் கொண்டிருக்கிறது. மலைகளும், வனமும் வானமும் மூன்றறக் கலந்து கிடக்கின்றன. கிழக்கே அடிவானத்தில் எப்போதோ சூரியன் வரும் என்பதற்கு நம்பிக்கையாக லேசான ஒரு பொய் வெளிச்சம்.

"கக்கூ, கிறீச், கீ கீ கீ!" - பட்சிகளின் கலகலப்பு.

வழிகாட்டி கைகளை நெற்றியில் முட்டுக் கொடுத்து தூரத்தில் மிருகங்கள் தெரிகின்றனவா என்று தேடுகிறான். நண்பரும் பைனகுலர் மூலம் தேடுகிறார்.

நண்பர் தூரத்தில் ஓரிடத்தைக் காட்டி, "அதோ! அதோ பைசன் கூட்டம்!" என்று ரகசியக் குரலில் எங்கள் காதுகளில் வார்த்தைகளைக் காற்றாக மாற்றி ஊதுகிறார். வழிகாட்டியும் நானும் பார்க்கிறோம்.

"அதோ கும்பலாகக் குனிந்து மேய்கின்றன பாருங்கள்" என்கிறார் நண்பர். நாங்கள் உற்றுப் பார்க்கிறோம்.

"ஆமாம்; ஒரு கூட்டமாக மேய்கின்றன. அசையாமல் மேய்கின்றன" என்கிறான் வழிகாட்டி.

மூவரும் இதற்குள் பல பைஸன் கூட்டங்களைக் கண்டுபிடித்து விட்டோம். பைனகுலர் மூலம் மாறி மாறிப் பார்த்துக்கொண்டே இருக்கிறோம்.

"ஆகா! பைஸன்கள் எவ்வளவு உயரம்! எத்தனை பெரிய உருவங்கள்! ஆடாமல் அசையாமல் எவ்வளவு சமர்த்தாகப் புல்லை மேய்கின்றன!" அவற்றையே கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

"பைஸன் பார்த்தாயிற்று. மான்களைத்தான் பார்க்க முடிய

வில்லை!'' என்கிறேன் நான் சற்று வருத்தத்துடன்.

''வந்ததற்கு பைஸன்களையாவது பார்க்க முடிந்ததே!'' என்கிறார் நண்பர்.

''மான்களையும் பார்க்கலாம்; பொறுங்கள்'' என்கிறான் வழி காட்டி.

இதற்குள் லேசாக இருள் குறைந்து வெளிச்சம் தலைகாட்டு கிறது.

வெளிச்சத்தில் பைஸன்கள் மேய்வதை நன்றாகப் பார்க்கலாம் என்ற எண்ணத்துடன் அந்தக் காட்டெருதுகள் மேய்ந்துகொண் டிருந்த இடத்தைப் பார்க்கிறோம். என்ன விந்தை! அவ்வளவு பைஸன்களும் பெரிய பெரிய முட்புதர்களாக மாறிக் காட்சியளிக் கின்றன. அடாடா! இவ்வளவு நேரமும் இருட்டில் பைஸன்கள் என்று எண்ணிப் பார்த்துக் கொண்டிருந்தது இந்த முட்புதர்களைத் தானா? நண்பர் முகத்தில் அசடு வழிகிறது. வழிகாட்டியின் முகத்தையே காணோம். அது பனிக் குல்லாய்க்குள் மறைந்து விட்டது!

''பைஸன்கள் பார்க்கவே முடியாதா?'' - இது நண்பரின் கேள்வி.

''ஏன் முடியாது? . . . மீண்டும் இருட்டானதும் இந்தப் புதர் களெல்லாம் பைஸன்களாக மாறும். அப்போது பார்க்கலாம்!'' இது என் பதில்.

''சை! என்ன ஏமாற்றம்! இது ஒரு காடா?'' - நண்பரின் வெறுப்புக் குரல்!

நன்றாகப் பொழுது விடிந்து வெளிச்சமாகிவிட்டது. புற்களை யும், தேக்கு மரங்களையும் தவிர அந்தக் காட்டுக்குள் ஒன்றையுமே காணோம்.

''இந்தக் காட்டில் ஒரு மிருகத்தையும் காணோமே!'' என் கிறேன் நான்.

''நீங்கள் பேசினீர்கள் - சத்தம் போட்டீர்கள். அதனால்தான் மிருகங்கள் வரவில்லை.'' - வழிகாட்டியின் குற்றச்சாட்டு இது.

''அப்படியானால் திரும்பிப் போக வேண்டியதுதானா?''

''வேண்டாம்; விடியற்காலை வேளையில்தான் புல்லில் பனி நீர் இருக்கும். பனி நீரோடு சேர்த்துப் புல்லைச் சாப்பிடுவதற்கு மான் கள் ரொம்பப் பிரியப்படும். ஆகையால் இதுதான் மான்களைப் பார்ப்பதற்குச் சரியான நேரம். எப்படியும் உங்களுக்கு மான்களைக் காட்டாமல் விடுவதில்லை. அங்கே போகலாம் வாருங்கள்'' என்று ஒரு பள்ளத்தாக்கைக் காட்டுகிறார் வழிகாட்டி. அவரோடு நடக் கிறோம்.

அந்த இடத்தில் . . .

நூற்றுக்கணக்கான மான்கள், புள்ளி மான்கள் மேய்ந்துகொண்டிருக்கின்றன. எங்களைக் கண்டுவிட்டு அவை மருண்டு கும்பல் கும்பலாக ஓடுகின்றன. அடாடா! அந்த வேகத்தை - அந்த லாகவத்தை - நான் என்ன சொல்ல!

"மணி ஆறு ஆகிவிட்டது. யானை 'காம்ப்'புக்குப் போய் அங்கிருந்து மீண்டும் காட்டுக்குள் செல்ல வேண்டும்" என்றான் வழிகாட்டி.

யானைமீது ஏறி காட்டுக்குள் சென்று பார்க்க ஏற்கெனவே ஏற்பாடு செய்து வைத்திருந்தோம். காட்டுக்குள் எங்கோ ஓரிடத்தில் புலி படுத்திருப்பதாகவும் எங்களுக்காக முன்கூட்டியே அது இருக்குமிடத்தைப் பார்த்துவிட்டு வந்திருப்பதாகவும் இன்னொரு வழிகாட்டி சொன்னான்.

"ஆண் புலியா? பெண் புலியா?" என்று கேட்டேன்.

"எதற்கு?"

"பெண் புலியானால் அதன் பாலைக் கறந்து காப்பி போட்டுச் சாப்பிடலாம் என்று பார்க்கிறேன்!" என்றேன்.

"பெரிய சூரப்புலி இவர் . . ." - என்றார் நண்பர்.

"யானைமீது ஏறிக் கொள்ளுங்கள்" என்றான் அதன் பாகன். அதன்மீது ஏறி உட்கார்ந்ததும் அது எழுந்து நகர ஆரம்பித்தது.

"எந்தா! அ. உ. எ. திவச - மாலியா . . ." இதெல்லாம் அந்தக் காட்டுக் குறும்பன் யானைப்பாகன் யானையிடம் கூறிய வார்த்தைகள்.

"மிருகங்களைப் பார்க்காவிட்டாலும் பரவாயில்லை. யானை சவாரி கிடைத்ததே அது போதும்" என்றேன்; அதுவே எனக்குப் பெரிய வேடிக்கையாக இருந்தது. ஏதோ நினைவு வந்ததும் எனக்குச் சிரிப்பு வந்துவிட்டது. நான் குபுக்கெனச் சிரித்தேன்.

"உங்களுக்கென்ன வந்துவிட்டது? திடீரென்று ஏன் இப்படிச் சிரிக்கிறீர்கள்?" - நண்பர் கேட்டார்.

"யானைமீது சவாரி செய்யக்கூடிய யோகம் எனக்கிருப்பதாக ஜோசியர்கள் சொல்லிக் கொண்டிருந்தார்கள். அது இன்று பலித்துவிட்டது!" என்றேன்.

"கர் . . . கிர்! - கர் . . . கர் . . . ர்ர்ர் . . . றீக் . . . "

"அதோ! அதோ!"

"என்ன என்ன?"

"மலபார் அணில் . . . !"

இதற்குள் அந்த மபலார் அணில் ஒரு சத்தம் போட்டுவிட்டு மாயமாய் ஓடி மறைந்துவிட்டது.

மணிக்கு மூன்று மைல் நகர்ந்தது யானை.

''அ. உ. எ . . . !'' என்று யானையை அதட்டினுன் குறும்பன். அப்புறம்தான் யானை வேகமாகப் போகத் தொடங்கியது. அதாவது அப்புறம் மணிக்கு முன்றேகால் மைல் வேகம்!

நூற்றுப் பதினுன்கு சதுர மைல் விஸ்தீரணமுள்ள அந்தக் காட்டில் 352 யானைகள், 1378 பைஸன்கள் (Gaur), 1001 புள்ளி மான்கள், பத்து புலிகள், முப்பத்தாறு கரடிகள், ஆறு செந்நாய், பதினேரு முள்ளம் பன்றி, இரண்டு பறக்கும் அணில், 2036 கருங் குரங்குகள் இவ்வளவும் இருப்பதாக சர்க்கார் சென்ஸெஸ் எடுத் திருக்கிருர்கள். ஆனுல் காடு முழுவதும் சுற்றிச் சுற்றி அலைந்து பார்த்தும் எங்களால் அதுவரை ஒரு மிருகத்தைக்கூடப் பார்க்க முடியவில்லை.

''இன்றைக்கு உங்கள் அதிருஷ்டம் ஒன்றும் தென்படவில்லையே'' என்றுன் வழிகாட்டி.

''சரி; இன்னும் கொஞ்ச நேரம் சுற்றிப் பார்க்கலாம்'' என்றேம்.

வழிகாட்டிகள் யானைக்கு முன்னுல் நடந்து போய்க் கொண் டிருந்தார்கள். சில இடங்களில் அந்த உயரமான புற்களுக்கிடை யில் அவர்கள் காணுமல் போய்விடுவார்கள். ஆங்காங்கே புற்கள் அசைவதிலிருந்து அவர்களுடைய போக்கை அறிந்து கொள்வோம்.

முதல் நாள் இரவே காட்டுக்குள் சென்று ஒரு புலி இருக்கு மிடத்தை எங்களுக்காகப் பார்த்து வைத்துவிட்டு வந்திருந்தார்கள் அல்லவா? அந்த இடத்தை அடைந்தபோது அந்தப் புலியைக் காணவில்லை. அது வேறு எங்கோ போய்விட்டிருக்க வேண்டும். வழிகாட்டிகளுக்கு ரொம்ப ஏமாற்றம்!

காட்டெருதுகள் தேடும் முயற்சியில் ஈடுபட்டார்கள். அந்த மிருகங்களின் காலடி, சாணம், புற்கள் கலைந்து கிடக்கும் அலங் கோலம் இவற்றிலிருந்து பைஸன்கள் போயிருக்கும் திக்கை ஊகித்து விடுகிருர்கள். காட்டுக்குள் போகும்போது இடையிடையே கீழே யானைகள் தாண்ட முடியாத ஆழமான கால்வாய்கள் குறுக்கிடு கின்றன. தலைக்கு மேல் மூங்கில் புதர்கள் தடுக்கின்றன. முன்னுல் உட்கார்ந்துள்ள குறும்பன் தன் கூரிய வாளால் அந்த மூங்கில்களை 'சதக்'கென்று ஒரு போடு போட்டு நம்மைக் காப்பாற்றுகிருன். வாய்க்கால்களைக் கடப்பது யானையின் பொறுப்பு. நாம் கீழே விழுந்துவிடாமல் இருக்க அம்பாரியின் கம்பிகளைக் கெட்டியாகப் பிடித்துக் கொள்வது நம்முடைய பொறுப்பு.

மணி பத்தரை. யானை சுற்றுகிறது. வழிகாட்டிகள் மிருகங் களைத் தேடு தேடு என்று தேடுகிருர்கள். ஊஹூம்; சோதனையாக ஒரு குரங்கைக்கூடப் பார்க்க முடியவில்லை.

உரத்துப் பேசவும் வழியில்லை. மிருகங்களைப் பார்க்கவும் முடிய வில்லை. பசி வேறு; யானை மீது எத்தனை நேரம்தான் சவாரி செய் கிறது? போர், படுபோர்!

''ஆ! தெரிந்து போச்சு'' என்றார் நண்பர்.

''என்ன தெரிந்தது?''

''இன்று ஞாயிற்றுக் கிழமையல்லவா? மிருகங்களுக்கு இன்று லீவு. அதனால் எல்லாம் ஹாய்யாக அடுத்த காட்டுக்குப் போயிருக் கும்'' என்றார் நண்பர்.

''அடுத்த காடா! அங்கே எப்படிப் போக முடியும் . . .?''

''இந்தக் காடும் அடுத்த பண்டிப்பூர் காடும் பக்கத்தில் பக்கத் தில் சேர்ந்தேதான் இருக்கின்றன. இயற்கையில் பிரியாத இந்தக் காடுகளைச் சர்க்கார் செயற்கையாகப் பிரித்து வைத்திருக்கிறார்கள். ஒரு குறிப்பிட்ட இடத்திலிருந்து மைசூர் ராஜ்யத்தைச் சேர்ந்த காடு என்கிறார்கள். மிருகங்களுக்கு அதெல்லாம் தெரியுமா? அவை எங்கு வேண்டுமானாலும் எதேச்சையாகச் சுற்றித் திரிகின்றன'' என்றார்.

''அப்படியானால் இவர்கள் எடுத்துள்ள மிருகங்களின் கணக் கெல்லாம் தப்பு என்று சொல்லுங்கள்'' என்றேன்.

''ஆமாம்; இந்தக் காட்டில் சென்ஸஸ் எடுக்கிற மிருகங்கள் மைசூர்க் காட்டிலும் போய் வாழ்கின்றன. இதே மிருகங்களை மைசூர் சர்க்காரும் சென்ஸஸ் எடுத்திருப்பார்கள் அல்லவா?''

''விசிக்ஷூ! விசிக்ஷூ . . .!''

ஏதோ பெரிய பட்சி ஒன்று கத்துவது போன்ற சத்தம்.

''அது என்ன சத்தம்?''

''அ — உ — எ . . . .'' - குறும்பன் யானையை அந்தத் திக்கில் ஓட்டுகிறான்.

''வழிகாட்டிகள் விசிலடிக்கிறார்கள். இது குறும்பனுக்கும் அவர் களுக்கும் சங்கேத மொழி. காட்டிலுள்ள மிருகங்கள் ஏதோ பட்சி கள் கத்துவதாக எண்ணிக்கொள்ளும்'' என்றார் நண்பர்.

ஈர மண்ணில் பைஸன்களின் காலடிகள் தெரிகின்றன. ''பைஸன்கள் இந்தப் பக்கம் எங்கோ இருக்கின்றன'' என்றான் ஒரு வழிகாட்டி. எல்லோர் முகங்களிலும் பெருமகிழ்ச்சி தாண்டவ மாடுகிறது! அப்பாடா! அப்படியும் இப்படியும் காடு பூராவும் அலைந்து, கடைசியாக மணி பதினொன்றரைக்கு அந்தக் காட்டில் பைஸன்கள் எங்கேயோ இருக்கின்றன என்னும் மகத்தான உண்மையைக் கண்டுபிடித்து விட்டோமே! மகிழ்ச்சி இராதா?

''கிறீச், கிறீச், கிறீச், கிறீச், கிர்ர்! கிர்கிர்!'' - கருங் குரங்குகள் உயரத்தில் மரக் கப்புகளையே பாலங்களாகக் கொண்டு

வானத்தில் பாய்ந்தோடிக் கொண்டிருக்கின்றன.

"மேலே குரங்குகள் சலசலப்புச் செய்தால் கீழே எங்கோ புலி நடமாடுகிறது என்று ஊகிக்கலாம்."

எல்லாவற்றையும் இங்கே ஊகிக்க வேண்டியதுதானு?

திக்குத் தெரியாத காட்டில் வழிகாட்டிகள் மிருகங்களைத் தேடித் தேடி அலைந்து கொண்டிருந்தார்கள்.

கடைசியாக . . .

"விசிக்ஷூ! விசிக்ஷூ . . .!" என்று மீண்டும் ஓரிடத்திலிருந்து விசில் வருகிறது.

"அ . . . உ . . . எ . . .!"

யானை நகர்கிறது; அதோடு நாங்களும் நகர்கிறோம்.

அங்கே . . . . . .

பெரிய பைஸன்கள் கூட்டமாக நின்று கொண்டிருந்தன. நிஜமாகவேதான். ஐயோ, என்ன பயங்கரமான தோற்றம்!

"யாரங்கே?" என்பதுபோல் கோபமாக அவை எங்களைப் பார்த்து விழிக்கின்றன. மூச்சு விட்டால் காடே கிடுகிடுக்கும்!

யானை அவற்றை நெருங்குகிறது.

என் வயிற்றில் புளியைக் கரைக்கிறது. வாய்விட்டு அலற முடியாதே. ஐயோ! நான் என்ன செய்வேன்? ஆயிரம் கோடி தெய்வங்களே! அஷ்டதிக் பாலகர்களே! நீங்கள்தான் என்னைக் காப்பாற்ற வேண்டும்.

யானை அவற்றை இன்னும் நெருங்கிப் போய்விட்டது. குறும்பன் பயப்படாதீர்கள்' என்று எங்களைப் பார்த்து சைகை காட்டுகிறுன் ஒரு பைஸனுக்குப் பக்கத்திலேயே போய் நின்றுவிட்டது யானை. அந்த பைஸனின் கொம்புகள் என் காலுக்கு அருகில் நீட்டிக்கொண்டிருக்கின்றன. அப்படியே ஒரு குத்துக் குத்தி என்னை ஆகாசத்தில் தூக்கி அடிக்கலாம். ஆனுல் அந்த அசட்டு பைஸன் என்னைச் சும்மா விட்டுவிட்டது. ஐந்து நிமிஷம் மரண மௌனம் நிலவியது அங்கே. எனக்கு மூச்சே நின்றுவிட்டது. கடைசியில் ஒரு வழியாக யானையை மெதுவாக அங்கிருந்து நகர்த்தினுன் குறும்பன். அப்புறம்தான் கொஞ்சம் மூச்சு வந்தது. சற்று தூரம் போனதும், 'குறும்பா! நீ நீடூழி வாழ்க! ஓட்டு யானையை வேகமாக" என்றேன். ஒரு வழியாகச் சாலைக்குள் நுழைந்த யானை 'காம்ப்பை' நோக்கி நடைபோட்டது.

வழிகாட்டிகள் முகத்தில் புன்சிரிப்பு தவழ்ந்தது. எங்களுக்கு பைஸனுவது காட்ட முடிந்ததே என்ற திருப்தி அவர்களுக்கு. அவர்கள் சொன்னுர்கள்:

"யானைகளும் பைஸன்களும் சிநேகம். அவற்றுக்குள் சண்டை

கிடையாது. ஏனெனில் யானைகள் நீள நீளமான துளிர் மூங்கில் களைக் கொண்டுவந்து பைஸன்களுக்கு ஆகாரமாகப் போடும். அதனால் பைஸன்கள் யானைகளை ஒன்றும் செய்வதில்லை. அதைப் போலவே, குரங்குகளும் மான்களும் சிநேகம். மான்களுக்கு வேண்டிய பழங்களைக் குரங்குகள் மரத்தைக் குலுக்கிக் கீழே உதிரச் செய்யும்.''

''சரி யானையைச் சீக்கிரம் போகச் சொல்லுங்கள்; நேரமாச்சு'' என்றோம்.

. . . வரும் வழியில் ஒரு பயங்கரமான காட்சி! ஒரு பெரிய பைஸனின் எலும்புகளும், குளம்புகளும், கொம்புகளும் துண்டு துண்டாகக் கீழே சிதறிக் கிடந்தன. சில மணி நேரத்துக்கு முன்னர் தான் ஒரு புலிக்கும் ஒரு பைசனுக்கும் அந்த இடத்தில் பெரும் போர் நிகழ்ந்திருக்க வேண்டுமென்று தோன்றியது. மேலே சமுகு கள் வட்டமிட்டுக் கொண்டிருந்தன. பைஸனுக்கும் புலிக்கும் நடந்த போரில் அவற்றின் காலடிகள் அந்த இடம் முழுதும் தாறு மாறாகப் பதிந்திருந்தன. நீளமான புற்கள் நாசப்படுத்தப்பட் டிருந்தன. ரத்தத் துளிகள் வேறு. 1500 பவுண்டு கனமுள்ள அந்த பைசன், புலியிடமிருந்து தன்னைக் காத்துக்கொள்ள பெரும் போர் நிகழ்த்தியிருக்க வேண்டும்! போர் இரண்டு மூன்று தினங்கள் கூடத் தொடர்ந்திருக்கலாம். பாவம்! கடைசியில் பைசன் புலிக் குப் பலியாகி விட்டது. அதனுடைய மாமிசத்தைக் கழுகுகள் பங்கு போட்டுக்கொள்ள வந்திருக்கின்றன . . .

இந்தக் காட்சியை நாங்கள் பார்க்கவில்லை. 23 - 8 - 61 அன்று வன இலாகா அதிகாரி திரு பாஷா அவர்கள் பார்த்ததாகக் கூறு கிறார்.

கடைசியாக, நாங்கள் பார்த்த மிருகங்கள் பின்வருமாறு:

பைசன்கள்
மான்கள்
கருங் குரங்குகள்
மலபார் அணில்
கரடிகள்
புலிகள்
காண்டா மிருகம்
முள்ளம்பன்றிகள்
காட்டுப் பூனைகள்

இவற்றில் முதல் நான்கையும் சென்னை ராஜ்யத்தைச் சேர்ந்த அந்த முதுமலைக் காட்டில் பார்த்தோம். மற்றவற்றை மைசூருக் குப்போய் அங்குள்ள மிருகக் காட்சிச் சாலையில் கண்டோம்!

தியாகய்யர் உற்சவம் — திருவையாறு

17

"வரணும், வரணும்! ஏன் இவ்வளவு லேட்? அடே, கோண்டு! சுப்பா மணி மாமா வந்திருக்கார் பாருடா! இட்லி காப்பி கொண்டா . . ."

"போட் மெயில்லே வந்தேன். காவேரிலே ஸ்நானத்தை முடிச்சுண்டு வரதுக்குள்ளே நேரமாயிடுத்து . . ."

முகூர்த்த காலம் நெருங்க நெருங்க திருமண வீட்டில் நிலவுமே, அந்த மாதிரி ஒரு பரபரப்பு!

இடம்: திருவையாற்றில் ஒரு வீதி.

காலம்: பகுள பஞ்சமி தினம்.

நெற்றியிலே திருநீறு அல்லது திருமண்; கழுத்திலே உருத்திராட்சம் அல்லது துளசி மாலே; கையிலே ஜாலரா அல்லது சிப்ளாக் கட்டை. இடுப்பிலே பஞ்ச கச்சம் அல்லது எக்கச் சக்கம்!

"பிபரே ராம ரஸம் . . ."

மகாராஜபுரம், முசிரி, அரியக்குடி, செம்மங்குடி, லால்குடி எல்லோரும் ராம ரசத்தைக் குடித்துக்கொண்டே பரம வைதிகமாக, பக்தி சிரத்தையுடன் உஞ்சவிருத்தி பஜனே செய்தபடியே ஊர்வலம் போய்க் கொண்டிருக்கிறார்கள்.

மணி எட்டு . . .

ஆராதனே உற்சவப் பந்தலில் ஒரே இட நெருக்கடி. நாதஸ்வர இசையை மீறிக்கொண்டு, நம் காதில் சில வார்த்தைகள் விழுகின்றன.

"பெண்டுகளெல்லாம் அந்தப் பக்கம்."

"கிருஷ்ணய்யர்வாள்! ஒரு தடவைக்கு வெத்திலே சீவல் கொடுப்பேளா?"

"கிட்டப்பா! அங்கே வந்துடட்டுமா? இடம் இருக்கா . . .?"

"இது வித்வான்கள் உட்கார்ர இடமாச்சே . . .!"

"நான்கூட வித்வான்தாண்டா! தமிழ் வித்வான்!"

நேரமாக ஆக, பந்தலுக்குள் இட நெருக்கடியும் அதிகமாகிக் கொண்டே யிருக்கிறது.

"அதோ, செம்மங்குடி வந்துட்டார் . . .!"

"அவர் கழுத்திலே போட்டிண்டிருக்கற மாலே இருபது பவுன் இருக்குமாங்காணும் . . . ?"

"அதோ, ஐயங்காரும் வந்துண்டிருக்கார்!"

"அப்போ தனம் கச்சேரி உண்டுன்னு சொல்லும்."

"ஜி. என். பி.கூட வந்திருக்காரே!"

"அம்பாள் பூஜை, ஆரூடம், ஜோசியம் எல்லாம் ரொம்ப அதிகமாமே இப்போ!"

"சுப்பய்யரைப் பாருங்க . . . !"

"எந்த சுப்பய்யர் . . . ?"

"ஆலத்தூர் சுப்பய்யர்தான். அவர் ஏற்பாடுதானே எல்லாம் . . . !"

"லால்குடி வந்தாச்சு . . . !"

"திருவையாத்துலே இருக்கோம். லால்குடி வந்தாச்சுங்கிறீரே! நாம என்ன ரயில்லயா போயிண்டிருக்கோம்?"

"அட நீர் ஒண்ணு! நான் லால்குடி ஜயராமன் வந்தாச்சுன்னேன்யா!"

"லால்குடிக்குப் பக்கத்திலெ பழனியா?"

"இல்லே; திருச்சி!"

"ஜயராமனுக்குப் பக்கத்திலே சுப்புடுதானேன்னு கேட்டேன்."

"காவேரி ஸ்நானம் காலம்பர எப்படி இருந்தது பார்த்தீரா? குளிச்சதும் குளிர் பறந்து போச்சே!" - மெட்ராஸ்காரர் ஒருவர்.

"டி.டி.கே. அன்னப்போஸ்டா வந்துட்டாராமே! பார்த்தீரா? காமராஜ் டிப்ளமஸியை! எல்லோர் கவனத்தையும் ஸௌத் மெட்ராஸ் பக்கம் திருப்பி வெச்சுட்டு படார்னு அதிர் வேட்டுப் போட்ட மாதிரி திருச்செந்தூர்லே கொண்டு போய் அடிச்சார். என்ன இருந்தாலும் எலெக்ஷன் டாக்டிக்ஸிலே அவரை மிஞ்சிக்க முடியாதய்யா."

"மணி எட்டரை ஆகப் போறதே. பஞ்ச ரத்னக் கீர்த்தனம் எப்போ ஆரம்பமாகும்?"

"நாதஸ்வரம் முடிந்ததும், ப்ளூட் வாசிப்பாங்க. அப்புறம் தான் பஞ்சரத்னம் . ."

"காலேயிலே என்ன ஆகாரம் பண்ணேள்?"

"இட்லி, வடை, சாம்பார், சட்னி, மிளகாய்ப்பொடி . . ."

"பஞ்சரத்னம்னு சொல்லும் . . ."

"மிருதங்க வித்வான்கள் வந்தா நீங்கள்ளாம் இந்த இடத்தை விட்டு எழுந்து அவாளுக்கு இடம் தரணும்" — இது ஆலத்தூர் சுப்பய்யர்.

''ஏய்! நாமும் ஒரு மிருதங்கத்தைக் கொண்டு வராமெ போனேம் . . .''

''நமக்கு வாசிக்கத் தெரியாதே . . .''

''தெரியாட்டா என்ன? இந்த இடத்திலேயே உட்கார்ந்திருக் கலாமே . . . .''

''பூதலூர் கழுத்திலே பாாத்தீமா தங்க டாலரை!''

''அது டாலர் இல்லேய்யா! பந்தல்லேருந்து விழற வெயில் வட்டம். பவுன் மாதிரி ஜொலிக்கிறது!''

''சேதுலாரா ஆஆஆ . . .''

புல்லாங்குழல் இசை ஆரம்பமாகிவிட்டது! பல வித்வான்கள். குழலெடுத்து சேர்ந்து ஊதுகிருர்கள். சற்று நேரம் குழலிசையைக் கேட்டுப் பரவசமடைகிறோம்.

அப்புறம்தான் ஆரம்பமாகிறது பஞ்சரத்னக் கீர்த்தனம்.

''ஜகதா நந்தன . . . . . .''

''தத்திம் தத்திம்! தகதிம் தத்திம் . . .''

எல்லா வித்வான்களின் குரலும் சுருதியுடன் சேர்ந்து இழைந்து ஜம்மென்று கம்பீரமாக ஒலிக்கிறது. அதை அடுத்து, ''எந்தரோ மகானுபாவ'', ''ஸாதிஞ்சநே'' முதலிய கீர்த்தனங் களும் தொடர்கின்றன.

வயலின் வித்வான்கள் கிருஷ்ணன், ராஜமாணிக்கம் பிள்ளை, லால்குடி ஜயராமன் எல்லோரும் நாத அமுதத்தை வாரிப் பொழி கிருர்கள். நந்திகேசுவரர்கள் மத்தளங்களைக் கொட்டி முழக்கு கிருர்கள். இவ்வளவுக்குமிடையே, ஒரே ஒரு கஞ்சிரா வாத்தியம் மட்டும் தனக்கே உரிய ஜிலு ஜிலுப்புடன் பழனியின் கரங்களோடு கொஞ்சிக் குலவுகிறது.

''ஞொய் ஞொய் . . . ஞொய் ஞொய் . . . !''

''அது யாருடா அது . . . ஞொய் ஞொய்ன்னு . . .'' - ஒரு பாட்டியம்மாள் கேட்கிருள்.

''மோர்சிங் வாசிக்கிரு பாட்டி!'' - பேரன் சொல்கிருன்.

''மோர்சிங் ராம்சிங்கெல்லாம் இங்கே எதுக்கு வந்தா? . . .'' - இது பாட்டியின் கேள்வி!

பஞ்ச ரத்னக் கீர்த்தனங்கள் முடிகிறது. எல்லோரும் பகல் சாப் பாட்டுக்குப் புறப்படுகிருர்கள்.

ஒவ்வொருவரும் அவரவர்களுக்குத் தெரிந்த பாட்டை வாயால் முணுமுணுத்துக்கொண்டே தெருவில் நடக்கிருர்கள்.

''கொலுவை யுன்னடே . . . . கோதண்டபாணி . . . இஇஇ . . . .''

''ஈ வஸுத நீ வண்டி தைவமு . . .''

''ஒரஜூப ஜூ . . .''

''ஸாதிஞ்சநே . . . ஓ மநஸா . . .''

''சாயந்திரம் மூணி மணிக்கா கச்சேரியெல்லாம் . . . ?''

''ஆமாம் . . .''

''இன்னிக்கு யார் பாடரு?''

''செம்மங்குடிங்கரு, மகாராஜபுரங்கரு. டெஃபனெட்டா தெரியல்லே . . .''

''எம். எஸ். என்னிக்காம் . . . ?''

''நாளைக்கு மறுநாள். நேஷனல் புரோகிராம் இங்கிருந்து ரிலே ஆறதாம் . . .''

''ஸ்வாமின்னு! உங்களுக்கு எங்கே சாப்பாடு?''

''கல்யாண மாகல்லே . . .''

''உங்க சிநேகிதர் எங்கே?''

''போலீஸ் ஸ்டேஷனுக்குப் போயிருக்கார் . . .''

''எதுக்கு?''

''செருப்பை அங்கே விட்டுட்டு வந்திருக்கார், பத்திரமா யிருக்கும்னு.''

சிலர் ஓட்டலை நோக்கிச் செல்கிறுர்கள். சிலர் கல்யாண மகாலை நோக்கிச் செல்கிறுர்கள். சிலர் தியாகய்யர் வசித்த வீட்டைப் பார்த்துவிட்டு வரச் செல்கிறுர்கள். அவர்களோடு நாமும் தியாகய்யர் வீட்டை நோக்கிச் செல்வோம்.

வீட்டுக்குள் 'கிணு கிணு'வென்ற மணியோசை கேட்கிறது. மிகச் சிறிய வீடு. உள்ளே நுழைகிறோம். தியாகய்யர் குடும்ப பரம்பரையைச் சேர்ந்த சாது மனிதர் ஒருவர் ராமர் படத்துக்குக் கற்பூர ஹாரத்தி காட்டுகிறுர். ராமர் படத்தையும் அவரையும் மாறி மாறிப் பார்க்கிறோம். தியாகய்யரைப் போலவே தோற்றமுடையவரா யிருக்கிறுர். அதனுல் தியாகய்யரையே நேரிலே பார்த்தது போன்ற மனத் திருப்தி அடைகிறோம்.

''இதுதான் தியாகய்யர் பூஜித்த ராமர் படமா?''

''ஆமாம்; ரொம்பப் பழசாகிவிட்டதால் கொஞ்சம் கொஞ்சம் வர்ணம் தீட்டிப் புதுப்பித்திருக்கிறோம் . . .''

''அந்த மகான் வாழ்ந்த இடம் . . . இதுதானு?''

''ஆமாம்; சரபோஜி ராஜா கொடுத்த பொருளுக்கும் பதவிக்கும் ஆசைப்படாமல் ராம சிந்தையிலேயே வாழ்ந்தார். உஞ்ச விருத்தி செய்தே எளிய இல்லற வாழ்க்கை நடத்தினுர். பகவானை ஆராதிக்க சங்கீதத்தையே கருவியாகக் கொண்டார்.

''ராக ஸுதாரஸ - ஸ்வரராக ஸுதா - கீதார்த்தமு - ஸோபில்லு ஸப்தஸ்வர . . .''

"அவர் இயற்றிய இந்தக் கீர்த்தனங்களே அதற்குச் சான்று . . ."

கற்பூர ஹாரத்தியைக் கையிலே ஒற்றிப் பின்னர் கண்ணிலே ஒற்றிக்கொண்டு வெளியே செல்கிறோம்.

"என்னய்யா மோரா இது? சளசளன்னு ஒரே தண்ணியா யிருக்கே?" - சாப்பிடுபவர் கேட்கிறார்.

"காவேரியைப் பழிக்காதிங்கண்ணா!" - இது ஓட்டல் ஸர்வர் கூறும் பதில்.

"கால ஹரணமேலரா ஹரே சீதா ராமா" - இப்படி ஒருவர் பாடுகிறார்.

"இதோ வந்துட்டேன் அண்ணா! பாடாதீங்க . . ." என்கிறான் ஓட்டல் ஸர்வர்!

"மனஸு ஸ்வாதீன மைன . . ."

"என் சங்கராபரணத்தைப் பற்றி உம் அபிப்பிராயம் என்னய்யா?"

"சமாதி கட்டிடலாம் . . ."

"யாருக்கு? எனக்கா?"

"இல்லை; சங்கராபரணத்துக்கே!"

"ஏன்?"

"அதைத்தான் குளோஸ் பண்ணிட்டீரே . . . !"

"போனால் போகட்டும் போடா!" - தெருவில் நடக்கும்போது டீக் கடையிலிருந்து வரும் சங்கீதம் இது!

மணி மூன்று. முதல் கச்சேரி ஆரம்பமாகிறது. ரசிகர்களின் பேச்சுக் குரல் அடங்குகிறது.

மணி மூன்றரை. கச்சேரிக்கு இடையில் கேட்ட ஒரு சம்பாஷணை:

"சுண்ணாம்பு இருக்காய்யா?" - ஒரு ரசிகர் கேட்கிறார். இன்னொரு ரசிகர் தலையை ஆட்டுகிறார்.

"கையிலே ரத்தம் வருதய்யா! சீக்கிரம் கொஞ்சம் சுண்ணாம்பு இருந்தா கொடுங்க . . ."

"த்ஸு த்ஸு . . . அடடா!" என்கிறார் மற்றவர்.

"வலிக்கிறதய்யா . . ."

"ஆகா! ஆகா! அற்புதம்!" என்கிறார் மற்றவர்.

பந்தலுக்குள் லேசாகப் பரவும் புழுதிப் படலம் நேரமாக ஆக அதிகமாகிறது. கச்சேரிகள் முடிந்ததும் அவரவர்கள் காவேரிப் படித்துறையில் போய் நின்றுகொண்டு உடம்பைத் தட்டுகிறார்கள். தலைக்கு ஒரு படி புழுதி வெளியே வருகிறது!

மாலைக் கச்சேரிகளின்போது பல இளம் வித்வான்கள் பாடுகிறார்கள். சில பெரிய வித்வான்களும் பாடுகிறார்கள். சிலவற்றை A.I.R. மைக் அஞ்சல் செய்கிறது. சிலவற்றை அலட்சியம் செய்கிறது. ஆனால் A.R.A. மைக் எல்லா வித்வான்களின் சங்கீதத்தையும் ஏற்று மிகச் சிறந்த முறையில் ரசிகர்களுக்குத் தொண்டு செய்கிறது. ஆனாலும் எத்தனை நேரம் ரசிகர்களால் பந்தலில் அப்படி இப்படி நகராமல் சப்பணம் போட்டு உட்கார்ந்திருக்க முடியும்? சிலர் காலை மாற்றிப் போட்டு உட்காருகிறார்கள். சிலர் தரையிலுள்ள மணலில் 'ஸ்ரீராமஜெயம்' என்று எழுதி எழுதி அழிக்கிறார்கள். சிலர் சிறு சிறு கற்களாகப் பொறுக்கிக் குவித்துக்கொண்டு குறி பார்த்து அடிக்கிறார்கள். சங்கீத வித்வான்களை அல்ல! இன்னொரு கல்மீது!

எல்லாம் முடிந்து, தியாகராஜ ஸ்வாமி கோயிலை வலம் வருகிறோம். நாலு பக்கச் சுவர்களிலும் உள்ள தியாகய்யர் கிருதிகள் நம் கவனத்தைக் கவர்கின்றன. அவற்றுள் முக்கியமானது:

தியாகராஜ ஸ்வாமிகளுக்கு ஸ்ரீராம பிரான் ப்ரத்யக்ஷமான காலத்தில் அவருக்கு ஏற்பட்ட ஆனந்தானுபவத்தை விவரிக்கும் கீர்த்தனை. இன்றும் விவாஹ காலத்தில் திருமாங்கல்ய தாரணம் ஆனவுடன் நாதஸ்வரத்தில் வாசிக்கப்படும் ஆனந்த கீர்த்தனம் இதுவே.

வேதங்களால் வர்ணிக்கப்பட்ட ராமநாமம் சப்த ரூபமாக ராமாவதாரத்திற்கு வெகு காலத்திற்கு முன்பே இந்த உலகத்தில் வியாபித்து, அந்த மங்களகரமான நாமத்திற்கு உகந்த வேத புருஷன் மங்களகரமான மானிட ரூபமெடுத்ததும் அவரைப் போய் அடைந்தது. இந்தத் தத்துவத்தை ருசுப்பிக்கும் முறையில் முதலில் நாமத்திற்கும் பிறகே ரூபத்திற்கும் மங்களம் பாடுகிறார்.

நீநாம ரூபமுலகு நித்யஜய மங்களம்
பவமான ஸுதுடு பட்டுபாதார விந்த முனகு . . .

பதினெட்டாம் பெருக்கு

18

காவிரி எனும் குடகு நாட்டுப் பெண் பதினெட்டு வயது மங்கையைப் போல் ஆடி அசைந்து அடக்கமாக வருகிருள்.

திருச்சி சிந்தாமணிப் படித்துறை.

அங்கே —

பொங்கி வரும் காவிரி மங்கையைக் கண்டு களிக்கவும், அவளுக்கு மஞ்சள் பூசிக் குங்குமம் இட்டு மங்கலப் பொருள்கள் வழங்கி மகிழவும் பெண்கள் கூட்டம் படித்துறையை நோக்கி வெள்ளம் போல் சாடி வருகின்றது.

நாமும் ஆடிப் பெருக்கை நாடிச் செல்கிறோம்.

திருச்சியில் உள்ள மொத்த குதிரை வண்டிகள் எத்தனை என்பதைக் கணக்கெடுக்க வேண்டுமானுல் அதற்கு இதுதான் சரியான நேரம். ஏனெனில் அத்தனை குதிரை வண்டிகளும் ஒன்றன் பின் ஒன்ருக, ஒரே வரிசையாக, படித்துறைக் கருகிலுள்ள சுவர் ஓரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன. வண்டிகளை எண்ணிய பிறகு குதிரைகளின் கணக்கைக் கண்டுபிடிப்பது மிகவும் சுலபம். அதாவது குதிரைகளின் கால்களை எண்ணி அவற்றை நாலால் வகுத்துவிட வேண்டியதுதானே? அவ்வாறு எண்ணி வகுத்துப் பார்க்கும்போது மூன்று கால்கள் மிச்சம் வருவதால் அந்தக் கால்களை என்ன செய்வதென்று தெரியாமல் திண்டாடிப் போகிறோம்!

சிந்தாமணிப் படித் துறைக்குக் கிழக்கிலும் மேற்கிலும், கூப்பிடு தூரத்தில், இரண்டு பாலங்கள் தெரிகின்றன. கிழக்கே ரயில் பாலம். மேற்கே மோட்டார் பாலம்.

ரயில் பாலந்தின்மீது இரு ஓரங்களிலும் போலீஸார் காவல் புரிகின்றனர். காவல் யாருக்காக, எதற்காக என்பது தெரியவில்லை.

''இண்ணக்கி நாலரை மணிக்கில்லே இருக்குது வேடிக்கை!''

கூட்டத்தில் யாரோ ஒருவர் தன் நண்பரிடம் இரைந்து சொல்லிக்கொண்டு போகிருர்.

''என்ன அது!''- அந்த ஆசாமியின் நண்பர் கேட்கிருர்.

''வரப்போகுது பாரேன் . . . ! '' - இது முதல் ஆசாமி,

மேற்கண்ட சம்பாஷணையைக் கேட்கும் நாம், நாலரை மணிக்கு வரப் போகிற அந்த அதிசயம் என்னவென்பதை அறிந்து கொள்ளத் துடிக்கிறோம்.

"மூங்கில் இலை மேலே . . . " என்று ஏற்றப் பாட்டுக்காரன் பாட்டைப் பாதியில் நிறுத்திப் புலவரைத் திணற அடித்த கதை தான்!

"நாலரை மணிக்கு என்ன வரப் போகுதாம்!" - எங்களில் ஒருவர் கேட்கிறார்.

"இன்று ஞாயிற்றுக் கிழமையாச்சே! ராகுகாலம் வரும் . . . " என்கிறார் எங்களில் இன்னொருவர்.

'மஃப்டி போலீஸ்' ஆசாமி எங்களை நிறுத்தி, "ஐயா! உங்களுக்கு எந்த ஊரு?" என்று விசாரிக்கிறார்.

நாங்கள் பதில் கூறத் தயங்குகிறோம்.

"ஏன் தயங்கறீங்க? நீங்க மெட்ராஸ்தானே?"

"ஆமாம்; அது எப்படித் தெரிந்தது?" - நாங்கள் கேட்கிறோம்.

"முகத்திலே எழுதி ஒட்டியிருக்குதே! அதோடு நாலரை மணி சமாசாரம் இன்னுங்கறது உங்களுக்குத் தெரியலையே!"

"அது என்னுங்க?" - ஆவலுடன் கேட்கிறார் நண்பர்.

"அதுவா? நாலரையிலிருந்து அஞ்சு மணிக்குள்ளார திருச்சியிலேருந்து ஸ்ரீரங்கத்துக்கு ஒரு ரயில் போகும். அது பாலத்து மேலே போறப்போ ரயில்லே போறவங்க செயினைப் புடிச்சு இளுத்து வண ்டியை நிறுத்தி 'டபார் டபார்'னு வெள்ளத்திலே குதிப்பாங்க. இதை வேடிக்கை பார்க்க கூட்டம் எக்கச்சக்கமா வரும். ஒவ்வொரு வருசமும் ஏதாவது ஆக்ஸிடெண்ட் ஆயிக்கிட்டே இருக்குது. அதைத் தடுக்கத்தான் போலீஸ் காவல் போட்டிருக்காங்க . . . ." - மஃப்டி போலீஸ்காரர் சொல்கிறார்.

"நீங்க மஃப்டி போலீஸ்தானே!"

"ஆமாம், அது எப்படி உங்களுக்குத் தெரிஞ்சுது?"

"முகத்திலே எழுதி ஒட்டியிருக்குதே!" - நண்பர் சிரித்துக் கொண்டே கூறுகிறார்.

"நான் மஃப்டி போலீசுங்கறதைத்தான் எப்படியோ கண்டு புடிச்சுட்டீங்க. சரி; நான் என்ன ஜாதின்னு சொல்ல முடியுமா?"

"ஓ முடியுமே! முஸ்லிம்!"

"அதான் இல்லேங்கறேன். லுங்கி வேட்டியைப் பார்த்துட்டு முஸ்லிம்னு நினைச்சுட்டீங்க இல்லையா? எனக்குக் காது குத்தியிருக்குதே அதைக் கவனிக்கலையா!" - போலீஸ்காரர் சிரித்துக்கொண்டே கேட்கிறார்.

படித்துறையை நெருங்குகிறோம். அங்கே நாவல் பழம்,

வாழைப்பழம், மாம்பழம், கொய்யாப்பழம், விளாம்பழம், எலுமிச்சம் பழம், பலாப் பழம் இவ்வளவும் வியாபாரத்துக்காகக் குவிந்து கிடக்கின்றன.

காவிரிக் கரையில் நெருக்கமாகச் சூழ்ந்து நிற்கும் மக்கள் கூட்டத்தைப் போல பலாச் சுளேகளே ஈக்கள் மொய்த்துக்கொண் டிருக்கின்றன.

நாம் படித்துறையைப் பாதியாகப் பிரிக்கும் ஓர் உயரமான மேடைமீது ஏறிச் சென்று கவனிக்கிறோம்.

கதம்ப மலர்களின் வாசனேயும், ஊதுவத்தி, சாம்பிராணி, சந்தனம், தாழம்பூ, சூடம் இவற்றின் நறுமணமும் நம் மூக்கைத் துளைக்கின்றன.

காவிரிக்குப் பூசை செய்ய வந்துள்ள பெண்கள் புதுப் புனலாடி, பட்டாடை உடுத்திப் பொட்டிட்டுப் பூச்சூடிப் புதுமைப் பொலிவுடன் காட்சி அளிக்கிறார்கள். சில பெண்கள் நகைகள் காய்த்துக் குலுங்கும் செடிகளைப் போல் தோற்றமளிக்கின்றனர்.

படிக்கட்டுகளுக்கு மஞ்சள் பூசி, குங்குமம் இட்டு, பழங்களும் நவதானியங்களும், காதோலே கருகுமணிகளும் வைத்துப் 'படையல்' நடக்கிறது.

''பட் . . . பட் . . . பட்!'' - நூற்றுக்கணக்கான தேங்காய்கள் உடைபடுகின்றன.

''டப். . டப் . . . டப் . . . '' - பலூன்கள் வெடிக்கும் சத்தம்.

''தப் . . . தப் . . . தப்!'' - துணிகள் துவைக்கப்படுகிற ஓசை!

இடுப்பளவு ஆழத்தில் நாலைந்து பையன்கள் குளிரக் குளிர நின்றுகொண்டிருக்கிறார்கள். அம்மன் பூசைக்கு வேண்டிய காவிரி மண்ணை வெள்ளத்தில் மூழ்கி எடுத்துப் பெண்களிடம் கொடுப்பது இவர்களுடைய ஜோலி! அதற்காக இவர்களுக்குக் கிடைப்பது இரண்டணு கூலி!

படையல் முடிந்ததும், பெண்கள் ஒருவருக்கொருவர் தாலி கட்டிக் கொள்ளுகிறார்கள். ஒரு பெண்ணே மறுபடியும் மறுபடியும் நாலைந்து தாலிகூடக் கட்டிக் கொள்கிறாள். இந்தக் காட்சி நமக்குப் புதுமையாகவும், வேடிக்கையாகவும் இருக்கிறது! ஆனால், மரத்திலுள்ள குரங்குகளுக்கும் வெள்ளத்தில் நிற்கும் பையன்களுக்கும் இது பார்த்துப் பார்த்து அலுத்துப் போன காட்சி!

''அம்மா! மண்ணு காசு குடும்மா!'' என்று குளிரில் நடுங்கிய படியே கேட்கிறான் ஒரு சிறுவன்.

''இருடா! இந்தா நாவப் பழம் தின்னுக்கிட்டிரு. படையல் முடிஞ்சதும் காசு தாரேன் . . . '' என்று கூறி நாவல் பழங்களைக் கொடுக்கிறாள் ஒரு பெண்மணி.

ஒரு பையன் வாய் நிறைய எதையோ அடக்கி வைத்துக் கொண்டிருக்கிருன்.

அந்த மஃப்டி போலீஸ்காரர் வருகிருர். அந்தப் பையனைப் பார்த்து ''டேய்! வாயிலே என்னடா வெச்சிருக்கே? நாவப்பழமா? துப்பு பார்க்கலாம்'' என்கிருர்.

பையன் துப்புகிருன்.

பத்து பைசாக்களும், ஐந்து பைசாக்களுமாக வாயிலிருந்து வந்து விழுகின்றன.

''பார்த்தீங்களா ஸார்! குரங்கு மாதிரி சில்லறையை வாயிலே அடக்கி வெச்சிருக்கானுங்க. தண்ணியிலே முழுவறப்போ காசு பத்திரமாயிருக்கணுமில்லே. அதுக்காகத்தான் . . .'' என்கிருர் கான்ஸ்டபிள்.

அங்கிருந்து நகர்ந்து இன்னொரு பக்கம் போகிருேம்.

"அங்கே பார்த்தீங்களா, ரயில் பாலத்தின் கீழே . . .'' - திடீரென்று ஒரு குரல் கேட்கிறது.

அங்கே பார்க்கிருேம்.

வெள்ளத்தில் நீந்திக் கொண்டிருக்கும் ஆசாமிகள் போலீசாருக்குத் தெரியாமல் பாலத்தின்மீது ஏற முயன்று கொண்டிருக்கிருர்கள். பாலத்தின்மீது நிற்கும் போலீசார் அவர்கள்மீது கற்களை வீசித் தடுக்கிருர்கள். கற்கள் வருகிற நேரம் பார்த்து அந்த நீச்சல்காரர்கள் தண்ணீருக்குள் 'டபக்'கென்று மூழ்கித் தப்பித்துக்கொள்கிருர்கள். இப்படியாகப் போலீசார் கல்லால் அடிப்பதும் அவர்கள் மறைந்து கொள்வதுமாக வேடிக்கை நடக்கிறது.

"நல்ல தமாசுடா இது!'' - கூட்டத்தில் ஒருவர்.

''இப்ப என்ன கண்டே? அஞ்சு மணிக்குப் பார்க்கணும் வேடிக்கையை . . .'' அந்த வேடிக்கையைக் காண மக்கள் இரண்டு மணிக்கே மரங்களின்மீதும், கட்டடங்கள்மீதும் இடம் பிடித்து உட்கார்ந்து விடுகின்றனர். மனிதர்கள் மரங்களை ஆக்கிரமித்துக்கொள்வதால் குரங்குகள் கீழே இறங்கி நடக்கின்றன!

வழி நெடுகப் பெரும் கூட்டம். மேலும் மேலும் வெள்ளம் போல் வந்துகொண்டே இருக்கிறது. பழக் கடைகளும், காதோலைக் கருகுமணிக் கடைகளும் அந்த நெருக்கடியிலும் இடம் பிடித்துக் கொண்டிருக்கின்றன.

"கடையை இந்த இடத்தை விட்டுத் தூக்கப் போறியா, இல்லையா? இல்லேன்னு அப்படியே எல்லாத்தையும் தூக்கி ஆத்துலே போட்டுடுவேன். ஆமாம்; எல்லாம் கொஞ்சம் கொஞ்சமா ஆத்துலே போக வேண்டியதுதானே! மொத்தமாத் தூக்கிப் போட்டுடுவேன் . . .'' என்று போலீஸ்காரர் ஒருவர் விரட்டுகிருர்.

''அம்மா மண்டபத்துக்குப் போய்ப் பார்க்கலாமா?'' - எங்களில் ஒருவர் கேட்கிறார்.

''அங்கேயும் இந்த மாதிரிதானே?''

''இதே மாதிரிதான். ஆனா அங்கே ரங்கநாதன் வருவாரு!''

''யாரு? உங்க பிரண்டா?''

''ஸ்ரீரங்கம் ரங்கநாதரைச் சொல்றேன்யா. நீங்க ஒண்ணு . . .''

பாலத்தைக் கடந்து அம்மா மண்டபத்தை அடைகிறோம். கூட்டம், கூக்குரல், கூப்பாடு! யார் என்ன பேசுகிறார்கள் என்று விளங்கிக் கொள்ள முடியாத ஒரு கதம்பப் பேரிரைச்சல்!

அந்த இரைச்சலையும் மீறிக்கொண்டு நம் காதில் விழும் சில ஒலிகள்:

''பி . . . இ . . . இ . . .!'' - பலூன் சத்தம்!

''கூ . . . ஊ . . . ஊ . . .!'' - ரயில் ஊதுகிறது!

''ஊ . . . ஊ . . . ஊ . . .!'' - பையன் அழுகிறான்!

சிந்தாமணியில் வேறொரு படித்துறை. அங்கே பெரும்பாலும் பிராம்மண சமூகத்தினரே தென்படுகிறார்கள். கட்டுச் சாத மூட்டைகளுடன் குடும்பம் குடும்பமாகக் கூடி நிற்கிறார்கள். சிலர் படித்துறையில் உட்கார்ந்து உல்லாசமாகப் பேசிக்கொண்டே சாப்பிடுகிறார்கள்.

தேங்காய்ச் சாதம், புளியோதரை, எலுமிச்சம் பழச் சாதம், தயிர் சாதம், மோர்க் குழம்பு, அப்பளம், வடை, வடகம், இத்தியாதி . . . இத்தியாதி!

கூஜாக்கள், குடங்கள், வாழை இலைத் துண்டுகள், எவர்சில்வர் தட்டுகள், காரியர்கள், கரண்டிகள் இவ்வளவும் கண்ணில் பளிச்சிடுகின்றன.

சாப்பிடுகிறவர்கள் வார்த்தைகளைச் சாதத்துடன் சேர்த்து விழுங்கி விடுவதால் துண்டு துண்டாகச் சில வார்த்தைகளே நம் காதில் விழுகின்றன. ஆகையால் கோடிட்ட இடங்களைப் பூர்த்தி செய்து கொள்க:

''எங்காத்துலே தேங்காய் சாதம் மோர்க்கு — ''

''எங்காத்திலேயும் அ —''

''மோர்க்குழம்பிலே உப்பு —''

''பரவாயில்லே; தேங்காச் சாதத்திலே உப்பே —''

''அம்மணி பேத்தியாடி —''

''எங்க நாத்தனார் பெண் கல்யாணத்தும்போது வாங்கின —''

''சாப்பிட்டாச்சா மாமி? என்ன . . .''

''வாயிலே வெத்தலை பாக்கைப் பார்த்தாத் —''

"சரோஜா! குழந்தையை மாமா கிட்டே கொடுத்துட்டுக் கையை நீட்டு —"

''மாட்டுப் பெண்ணுக்கு எத்தனை மாசம் —?''

"டேய் நாணு! நீதான் காரியரை வீட்டுக்கு எடுத்துண்டு போகணும்.''

''போப்பா! இப்பத்தான் சாப்பிட்டேன், வயிறு கனமாயிருக்கு.''

''வீட்டிலேருந்து வரச்சே காரியர் கனமாயிருக்குன்னே. இப்போ வயிறு கனமாயிருக்குங்கறே . . .''

''அலமேலு! காரியர் மூடி எங்கேடி? அதைக் காணுமே? . . .''

"நீங்க அதைத்தானே கையிலே வெச்சுண்டு சாப்பிடறேள் . . .''

"விசாலம் மாமி! இன்னிக்கு என்ன தேதி . . .?''

"பதினெட்டாம் பெருக்கு சாப்பிடற ஜோர்லே தேதியை மறந்துட்டேளா?''

"கைகாட்டி சாஞ்சுட்டுதுடோய்! இன்னும் அஞ்சு நிமிஷத்துலே ரயில் வந்துடும் . . .''

எல்லோரும் ரெயிலின் வரவை ஆவலுடன் எதிர்பார்த்து நிற்கிறோம்.

"ஜிகு ஜிகு ஜிகு . . . கூ ஊஊஊ . . . ஜிகு ஜிகு . . .''

''அதோ . . . ரயில் வந்துகிட்டிருக்குது!''

பாலத்தின்மீது ரயில் கம்பீரமாக கூவிக்கொண்டு செல்கிறது. ரயிலின் கூரைமீது ஐந்தாறு ஆசாமிகள் வெள்ளத்தில் குதிப்பதற்குத் தயாராக நின்று கொண்டிருப்பது தெரிகிறது. அவர்களில் சிலர் ரயில்மீது பெட்டிக்குப் பெட்டி தாண்டித் தாண்டி ஓடுகிறார்கள். ஒருவர் ரயில் கூரைமீது பஸ்கி எடுக்கிறார்! அதைக் கண்டு கூட்டத்தில் பெரும் ஆரவாரம்! மகத்தான குதூகலம்!

"சபாஷ்! பஸ்கி எடுக்கிறான் பார்த்தியா?''

''டபார்னு குதிப்பாண்டா . . . ரொம்ப ஜோராயிருக்கும் . . .''

''என்னடா குதிக்க மாட்டேங்கறாங்க. ரயில் ஓடிப் போயிடும்போல இருக்குதே . . . !''

"நடு ஆத்துலே ஆழம் கிடையாது. ஓரமாகப் பார்த்துதான் குதிப்பாங்க . . .''

எல்லோரும் வைத்த கண் வாங்காமல் அவர்களையே பார்க்கிறோம்.

''டபார்! படார்! சடார்! மடார்! குபீர்! டமீர்!'' - கடைசியில் எல்லோரும் ஒவ்வொருவராகக் குதித்து மக்களை மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்த்துகிறார்கள்.

''காப்பி, காப்பி!''

''சேமியா பாயசம்! சேமியா பாயசம்!''

''சோடா கலர்!''

படித் துறையில் கூடியிருப்பவர்களுக்கு இந்த மூன்றும்தான் ஆகாரம். ஆதாரமோ காவேரித் தண்ணீர்!

மதுரை — மீனாட்சி அம்மன் கோயில்

19

நான்மாடக்கூடலின் நடு நாயகமாக விளங்கும் மீனாட்சி அம்மன் ஆலய கிழக்கு கோபுர வாயில்.

விண் மறைக்கும் அந்தக் கோபுரத்தைக் கண் நிறையக் காண் கிறோம்.

''டூரிஸ்ட் கார்' ஒன்று வந்து பின்னால் நிற்கிறது. அதிலிருந்து வெள்ளைக்காரர்கள் - ஆண்களும் பெண்களுமாக - நாலைந்து பேர் இறங்கி வருகிறார்கள். வழிகாட்டி ஒருவன், ''கைய்டு ஸார்! . . . கய்ட்'' என்று கூறிக்கொண்டே அவர்களைப் பின்தொடர்ந்து செல் கிறான். அந்த வேடிக்கையைப் பார்த்துக் கொண்டிருக்கும்போதே மார்வாரிக் கூட்டம் ஒன்று குதிரை வண்டியிலிருந்து இறங்கிக் கோயிலுக்குள் பிரவேசிக்கிறது.

''ஆவோ ஜி, மாராஜ்! தேகோ! அம்மன்கி அர்ச்சன் கர்ணா? இதர் தேகோ! பூஜா சாமான் சப் ஹை . . . !'' - கடைக்காரர் அழைக்கிறார்.

அந்தக் கூட்டம் கடைப் பக்கம் திரும்புகிறது.

நாம் வெளி வாசலைக் கடந்து உள்ளே செல்கிறோம். நாயக்க மன்னர்களின் சிலைகள் ஆங்காங்கே நம்மைக் கைகூப்பி வரவேற் கின்றன. 'கம்'மென்ற கதம்ப மலர்களின் நறுமணம் கமழ்கிறது. வலப் புறம் திரும்பிப் பார்க்கிறோம். ரோஜாப் பூ மாலைகளும் கதம்ப மலர்ச்சரங்களும் கண்ணைப் பறிக்கின்றன.

சில குரல்கள்:

''கீழே படிக்கட்டு தடுக்கிடப் போகுது; பார்த்து வாங்க.''
''ஓம் நமசிவாய! ஜகன்மாதா! தாயே! மீனாட்சி!''
''தூணைப் பார்த்தியா, எம்புட்டு உயரம் . . .?''
''உயரத்திலே பாருங்கறேன் - தூண் நகண்ட்ருக்கு . . .''
''சித்திரங்களைப் பார்த்தியா, அளகளகா . . .''
''சொக்கநாதா . . . !''
''கூப்பிட்டீங்களா?'' - சொக்கநாதன் என்ற பெயருடையவர்.
''இல்லேப்பா, ஆண்டவனைக் கூப்பிட்டேன் . . .''

''கிளி மண்டபத்தாண்டே நில்லுடா . . . சூடம் வாங்கிட்டு இதோ வாரமிண்ணேன். அதுக்குள்ளார ஆளைக் காணுமில்லே . .''

''எங்கே போயிருப்பான் . . . ?''

''முக்குறுணிப் பிள்ளையாரண்டே சூறை அடிக்கிறுங்க; ஒரு வேளை அங்கே நிப்பான்.''

''நல்ல ஆளுப்பா அவன் . . . ''

''இதான் பொத்தாமரைக் குளமா? இதுலே என்ன ஐதீகம்? . . . .''

''சங்கப் பலகை மொதந்துச்சாம்.''

''தண்ணியிலே எந்தப் பலகையைப் போட்டாலும் தான் மொதக்கும். தண்ணி ஏன் இப்படிப் பச்சையாயிருக்குது . . ?''

''பச்சைத் தண்ணியில்லே . . .''

''மணி! மணி! . . .''

டாங்! டாங்! டாங்!

மணி ஓசை கேட்கிறது.

''ஒரு அர்ச்சனை எவ்வளோய்யா?'' யாரோ ஒருவர் கேட்கிறுர்.

''அஞ்சே காலணு . . .'' - இது கவுண்ட்டருக்குள்ளிருந்து டிக்கெட் கொடுப்பவர் குரல்.

''அஞ்சே . . .'' - இழுக்கிறுர் வார்த்தையை ரப்பர் மாதிரி.

''அஞ்சே காலணுய்யா . . . முப்பத்திரண்டு பைசா . . . !'' - சூறை அடித்த மாதிரி பதில் வருகிறது.

''அர்ச்சனை டிக்கெட் வாங்கும் இடத்திலே எவ்வளவு கூட்டம் பார்த்தீங்களா?''

''சாதாரண நாளிலேயே சொல்ல வேணும். எட்டு கிரகங்கள் கூடுதில்லே! அத்தோட தை வெள்ளிக்கிழமை வேறே . . . கூட்டத் துக்குக் கேட்கணுமா?''

''ராமசாமி நாயக்கர், சாமி இல்லே பூதம் இல்லேன்னு சொல்லச் சொல்ல கோயில்லே கூட்டம் அதிகமாயிக்கிட்டே போகுதே . . . !''

''உங்க பேரென்ன . . . ?'' அர்ச்சகர் கேட்கிறுர்.

''ராஜா ராம்சிங் . . .'' - இது ஒரு பக்தரின் பதில்.

''நட்சத்திரம் . . . ?''

''ஹஸ்தம் . . . '' - பதில்.

ஒரு சினிமா விசிறி மற்ருெரு விசிறியைக் கேட்கிறுர்.

''அஜித் சிங் வந்து அர்ச்சனை செஞ்சா என்ன நட்சத்திரம்னு சொல்வார் . . . ?''

''ஜி. வரலட்சுமின்னு சொல்வார் . . . !''

கோயில் மண்டபங்களில் ஆங்காங்கே கலியாணங்கள் நடைபெறுகின்றன. மணப் பெண்ணையும் மண மகனையும் சுற்றிக்கொண்டு சிறு சிறு கூட்டங்கள்.

''முகூர்த்தப் பாயை எடுத்துக்கிட்டு வாங்க; இப்படிப் போடுவம் . . .''

''ஓரகத்தி வந்தாளே, மொயி எயிதினளா?''

"அவ புருசங்காரன் எழுதினரு . . . ரெண்டு ரூவா . . .!''

''கண்ணலப் பொண்ணை இட்டுக்கிட்டு வாங்க ஜல்தி . . . நேரம் ஆவல்லே? அடாடாடாடா! எப்போ முகூர்த்தத்தை முடிக்கிறதாம்! எப்போ பழனிக்குப் போறதாம்! அங்கே என்னத்தை வேடிக்கை பாக்கருங்க பொண்ணும் புள்ளையும்!''

''இன்னொரு கண்ணலத்தை இவங்க வேடிக்கை பாக்கப் போயிட்டாங்க . . .''

இன்னொரு காட்சி:

''யெம்மோவ்! அதிர்சம் குடும்மா!'' - ஒரு சிறுவன் தன் தாயின் தலைப்பைப் பிடித்து இழுத்துக்கொண்டே அழுகிறன். அந்தத் தாய் தன் செல்ல மகனுக்குக் கொடுக்கிறள். அதிரசமல்ல! முதுகிலே . . . !

"ஏன் நிக்கிறீங்க? மாலை கொண்டாங்க . . . மாமங்காரரை வரச் சொல்லு . . . நேரமாவலே? மேளம் ஊதுங்கய்யா . . . . . ''

அம்மன் சந்நிதியில் நிற்கிறோம். பளபளக்கும் பித்தளைக் கிராதிகளின் இருபுறங்களிலும் பக்தர்கள் கூட்டம் நெரித்துக்கொண்டிருக்கிறது. சிலர் உடம்பை வளைத்து கிராதிக்குள் தலையை நீட்டி அம்மனை தரிசிக்கிறார்கள். கற்பூர ஹாரத்தி நடக்கிறது. கிராதிகளுக்குள்ளே ம ட விளக்குகள் எரிகின்றன. எல்லோரும் கன்னத்தில் போட்டுக் கொள்கிறார்கள்.

''தாயே! ஜகதாம்பிகே! . . .''

அர்ச்சகர் கற்பூரத் தட்டுடன் வெளியே வந்து குங்குமப் பிரசாதம் வழங்குகிறார். நெற்றியில் இட்டுக்கொண்டது போக மற்றதைக் கல் தூண் விளிம்புகளில் கையைக் குவித்துத் தட்டுகிறார்கள் பக்தர்கள்.

"அர்ச்சனைக்கு அந்தப் பக்கம் 'கியூ'விலே வாங்க . . . '' - இது கோவில் டவாலிச் சேவகர்.

தாயைத் தரிசித்தாயிற்று. இப்போது தகப்பன் சொக்கப் பனைக் காணச் செல்கிறோம். இடை வழியில் உட்கார்ந்திருக்கும் முக்குறுணிப் பிள்ளையார் நம்மை வரவேற்கிறார்.

'கிணு கிணு'வென்ற மணியோசை கேட்கிறது. சாமியார்

ஒருவர் தூபத் தம்பத்தை நிறுத்திப் பிடித்துக்கொண்டு, சாம்பிராணிப் புகையை வீசிக் கொண்டிருக்கிறார். நம்மிடம் சாம்பிராணியைக் கொடுத்து அதில் போடச் சொல்கிறார். போடுகிறோம். பின்னோடு காசு போடச் சொல்கிறார். போடுகிறோம். சாம்பிராணி, பிள்ளையாருக்கு! காசு சாமியாருக்கு!

சொக்கப்பனைத் தரிசித்ததும் சிற்ப அதிசயங்களையெல்லாம் பார்த்து முடித்துக்கொண்டு வெளிப் பிராகாரத்துக்கு வந்து சேருகிறோம்.

பதினாறுகால் மண்டபத்தில் சிலர் படுத்துத் தூங்குகிறார்கள். இன்னும் சிலர் ஏதேதோ பேசிக் கொண்டிருக்கிறார்கள். இப்போதெல்லாம் சங்கப் பலகை கூடும் இடம் இங்கேதான்! ஊர் அக்கப்போர்களெல்லாம் இங்கே அடிபடுகின்றன! சில பண்டாரங்களும் பரதேசிகளும் பேசுவது நம் காதில் விழுகிறது.

"என்னங்க கிங்கிணி! பேப்பர்லே என்ன போட்டிருக்கான்?"

"கேளுங்க, படிக்கிறேன் . . . "

கிங்கிணிப் பண்டாரம் தலைப்புகளை மட்டும் படிக்கிறார்.

"பதினாறு வயது இளம் பெண்ணை வம்பு செய்த வாலிபன் கைது!"

"தேனீயில் தேர்தல் நிலவரம் . . ."

"காஞ்சிபுரத்தில் அஷ்டக்கிரக பூஜை! நூற்றுக்கணக்கான பரதேசிகளுக்கு இலவச உணவு . . ."

"அடாடா! காஞ்சிபுரத்துலே இல்லாமெ போயிட்டமே!"

"ஏன்? இங்கே என்ன பட்டினியா கிடக்கிறோம்?"

"என்னய்யா பழனி! எங்கேயோ போயிருந்தியே, என்ன ஆச்சு . . .?"

"ஒரு இடத்திலே கேளுங்க . . . . ரெண்டு கப்பரை, ஒரு கிழிசக் குடை, ஒரு அறுந்த கட்டிலு . . . ஏலத்துக்கு வந்துச்சு. பன்னிரண்டு ரூபாய்க்குக் கேட்டேன். அந்த பரதேசிப் பயல் அருணாசலம் இல்லே? அவன் பதிமூணுக்குக் கேட்டு வாங்கிட்டுப் போயிட்டான்யா . . ."

"யாரு சிம்மக்கல் பண்டாரமா?"

"ஆமாங்கறேன்."

"அதென்ன, பவுடர் டப்பாவா . . ? ஃபேஸ் பவுடர் வேறே போட ஆரம்பிச்சுட்டியா?"

"நீங்க ஒண்ணு! இந்த டப்பாவிலே விபூதி அடைச்சு வெச்சிருக்கேன் . . ."

"சூரியன் லாப ஸ்தானத்திலே இருக்கான் . . . !" - மண்டபத்தின் இன்னொரு மூலையில் உட்கார்ந்திருக்கும் ஜோசியர் கூறுகிறார்,

''ஆனு எனக்கு ஒரே நஷ்டமாயிக்கிட்டிருக்குதுங்களே . . .'' - ஜோசியம் பார்ப்பவர்.

''கவலைப் படாதீங்க . . இந்தத் தை மாசம் போனு எல்லாம் சரியாப்போயிடும். அதுவரைக்கும் எட்டாவது வீட்டுக்காரன் செலவு வச்சிக்கிட்டேத்தான் இருப்பான் . . . . எட்டணுக் கொடுங்க'' - இது ஜோசியர்.

இப்போது திருமலை நாயகன் மகால் வாசலில் நிற்கிறோம்.

'கய்டு' பழனிச்சாமி என்பவர் நாம் வெளியூர்க்காரர் என்பதை எப்படியோ ஊகித்துக்கொண்டு நம்மை நெருங்கி வருகிறார்.

''உள்ற வாங்க . . .'' அன்போடு அழைக்கிறார்.

''என்ன பாக்கறீக? உயரம் அம்பத்தெட்டு அடி; சுத்தளவு பதினறு அடி . . . மூணு பேர் சேர்ந்து கை கோத்து அணைச்சாத் தான் தூணை வளைச்சுப் பிடிக்க முடியும். கட்டடத்தைப் பார்த்தீகளா? கடுக்காச் சாறு, கரும்புச் சாறு . . . அரபி நாட்டுச் சுண்ணும்பு . . . பதனி . . . இவ்வளவும் சேர்த்து சாந்து கூட்டிக் கட்டப்பட்டதாச்சே! தூணுக்கு மட்டுதான் சுண்ணும்பு அடிப்பாக. கூரையிலே சுண்ணும்பு புடிக்காது . . .''

''இது கட்டி எத்தனை வருஷம் ஆயிருக்கும்? . . .''

''முன்னூறு வருசத்துக்கு மேலே ஆகுது . . . அஸ்திவாரம் போட்டுக் கட்டடத்தை முடிக்க முப்பத்தாறு வருசம் ஆச்சு . . . கடம்ப வனமாயிருந்த இந்த இடத்தை அழிச்சு வண்டியூர் தெப்பக் குளத்திலேருந்து மண் எடுத்து வந்து கட்டினுக. அப்பத்தான் முக்குறுணிப் பிள்ளையார் கிடைச்சாரு. அவரைக் கோயில்லே பாத்திருப்பீகளே. மண் வெட்டின இடம் பள்ளமாப் போனதும் அதைத் தெப்பக் குளமா மாத்திட்டாரு மகாராஜா. . .''

''எந்த மகாராஜா?''

''திருமலை நாயக்கர்தான். இந்த மண்டகத்திலே தான் (மண்டபத்தின் திரிபு) திருமலை நாயக்கர் தஞ்சாவூர் ராஜா மகளைக் கலியாணம் செஞ்சுக்கிட்டது . . . . இப்போ, இங்கே ராமநாத புரம் செஷன்ஸ் கோர்ட் நடக்குது. இதே இடத்திலேதான் கம்பர் மகன் அம்பிகாபதி அமராவதியைக் காதலிச்சதும்.''

''என்னய்யா 'டூப்' விடறீங்க? நீங்க பார்தீங்களா?''

''என் கண்ணுலே பார்த்தேங்கறேன் . . .''

''பொய் சொல்லாதீங்க . . . ''

''என்னங்க! இவ்வளவெல்லாம் நிஜத்தைச் சொல்லிட்டு இந்தச் சின்ன விசயத்துக்குத்தானு பொய் சொல்லப் போறேன்! சத்தியமாப் பார்த்தேன். தியாகராஜ பாகவதர் அம்பிகாபதியா வந்து, அமராவதி சந்தான லச்சுமியைக் காதல் செய்யருப்பிலே

இங்கேதாங்க ஷூட்டிங் நடந்துது. வாங்க . . கள்ளர் புகுந்த இடத்தைக் காட்றேன் . . .''

அவருடன் போகிறோம்.

''மேலே பாருங்க . . . ''

அண்ணாந்து பார்க்கிறோம்.

''தரையைப் பாருங்க . . .''

தரையைப் பார்க்கிறோம்.

''இந்த இடத்திலே தான் கள்ளருங்க கன்னம் வெச்சு குதிச்சது . . . ராஜாவாகப்பட்டவர் 'யாராவது எங்கள் மாலுக்குள்ளே கன்னம் வெச்சு உள்ளே நுழைஞ்சு இங்குள்ள ஒரு முக்கியமான பொருளை எடுத்துக்கிட்டு போயி காண்பிச்சா அவகளுக்கு இனமாக மான்யம் தரேன்னு தண்டோராப் போட்டாரு. அதைக் கேட்டு அழகர்மலைக் கள்ளங்க பதினெட்டு பேர், ராவோடு ராவா வந்து இந்தக் கூரையிலே கன்னம் வெச்சு, உடும்பை விட்டு, அதில் கயிறு கட்டி இறங்கினாங்க. அந்த நேரம் உள்ளே அந்தப்புரத்திலே ராணிமார்கள் தூங்கிக்கிட்டிருந்தாக. அவங்க அணிஞ்சிருந்த வைர வைடூரியங்களை எடுத்துக்கிட்டுப் போயிட்டாக. ராஜா பேராச்சரியம் கொண்டு அவகளுக்கு வீர கண்டிகை போட்டு நிலம் கொடுத்தாரு. இப்பவும் அந்தக் கள்ள பரம்பரையைச் சேர்ந்தவங்க இருக்காக மருதையிலே . . .''

''அந்தர் ஜாகர் ராணிகே டயமண்ட் லே கயா . . .'' - இன்னொரு 'கய்டு' வடக்கத்திக்காரர்களுக்கு இதே கதையை இந்தியில் சக்கைப் போடாகப் போட்டுக் கொண்டிருக்கிறார்.

'கய்டு' பழனிச்சாமி மேலும் சொல்வார்:

''இதைப் பார்த்தீகளா? இதுதான் இந்த மாலுக்கே சண்ட்ரான பிளேஸ். (ஸெண்டரின் திரிபு) இங்கிருந்து குகை போகுது. இங்கிருந்து மாலுக்கும் கோயிலுக்கும் கலெக்ஷன் (கனெக்ஷனின் திரிபு) இருக்கு. இந்த மாலில் தான் கண்டி ராஜா மகள், தஞ்சாவூர் ராஜா மகள் இரண்டு பேரையும் திருமலை நாயக்கர் கலியாணம் செய்துகிட்டு சந்தோசமா வாழ்ந்தாரு. அந்தச் சிற்பத்தை அங்கே பாருங்க. அவ்வளோதான் . . . புள்ளை குட்டிக்காரன் . . . ஒன்பது குழந்தைங்க இருக்குது. பள்ளிக்கூடத்திலே படிக்கிறாக . . . பார்த்துக் குடுங்க.''

''யாருக்கு? திருமலை நாயக்கருக்கா ஒன்பது குழந்தைங்க?''

''இல்லீங்க முதலாளி! எனக்குத்தான் . . . ''

பழனிச்சாமியிடம் காசைக் கொடுத்துவிட்டுத் திருமலைநாயகர் மகாலிலிருந்து வெளியே வருகிறோம்.

பொள்ளாச்சி சந்தை

20

"முன்னெல்லாம் இந்தக் கொங்கு நாட்டுச் சீமையிலே நினைச்சா கொலே விழும். இரவோடு இரவாக ஆளைச் சீவி மண்ணுக்கடியில் புதைச்சுடுவாங்க. வீரம் அப்படி வளர்ந்தது இங்கே!'' என்று கோவை நண்பர் சொல்லிக் கொண்டிருக்கிறபோதே 'திமு திமு'வென்று நாலைந்து மீசைக்காரர்கள் எங்கள் பின் பக்கத்திலிருந்து ஆவேசமாகக் கையில் கொடுவாளுடன் ஓடி வருகிறுர்கள். அவர்கள் கண்கள் சிவந்திருக்கின்றன.

''எங்கே போறீகய்யா?'' - கோவை நண்பர் கேட்கிறுர்.

"ஷண்டைக்கு . . . !'' கொடுவாளைத் தூக்கிக் காட்டுகின்றனர்.

''பொழுதுக்குத் திரும்பிடுவீகளா?''

''ஆமானுங்க. கொலேயோட திரும்பிடுவோம். தோலும் கொண்டாருவோம் . . ."

சைத்திரிகர் கோபுலுவுக்கும் எனக்கும் உடல் பதறுகிறது. ஆளைக் கொலே செய்து தோலேயும் கொண்டு வருவார்களாமே! என்ன பயங்சரம்!

"ஹாய்! ஹாய்! ஹாய்!''

கட்டை வண்டிகளும் கால்நடைகளும் கிராமத்து மக்களும் சாரி சாரியாய்ப் போய்க்கொண்டே யிருக்கிறுர்கள். எல்லோருடைய முகத்திலும் ஒருவிதப் பரபரப்பும் கவலேக் குறியும் தாண்டவமாடுகின்றன.

''ம் . . . மே . . . ஏ . . . ஏ . . . '' - ஆட்டிடையன் ஒருவன் தோள்மீது படுத்துள்ள ஆடு கதறுகிறது.

''யெப்போவ்! ஆட்டைக் கீளே இறக்கிட்டு என்னைத் தூக்கிக் கோப்போவ் . . . '' - ஆட்டிடையன் மகன் கேட்கிறுன்.

''ஒதை! ஒதைக் களுதை! வாயை மூடிக்கிட்டு வரப் போறியா? களுதைக்கு தோள் சவாரி கேக்குதா?''

சிறுவன் வாயை மூடிக்கொள்கிறுன். போர்க்களத்தை நோக்கிப் படைகள் முன்னேறுவதுபோல் கூட்டம் ஒரே திசையில் சாடிக் கொண்டிருக்கிறது.

''ஓகோ!'' என்று அலை ஓசைபோல் பேரிரைச்சல்.

ஒரு மாபெரும் திடல். இருபத்து மூன்று ஏகர் நிலப்பரப்பு. அதைச் சுற்றிலும் காம்பவுண்டுச் சுவர். திடல் முழுவதும் கறுப்புக் குடைகள். பதினாயிரக்கணக்கான குடைகள். அதற்கும் அப்பால் பாசறைகள் போன்ற கூடாரங்கள். மழைத்துளிகள் ஊசி முனைகள் போல் பிசுபிசுத்துக் கொண்டிருந்தன. கறுப்புக் குடைகளுக்குக் கீழே வியாபாரம் நடந்து கொண்டிருக்கிறது. ஒவ்வொருவர் முகத்திலும் ஏதோ ஒரு பரபரப்பு! எரிச்சல்! அவசரம்!

ஓரிடத்தில் நாலைந்து ஆடுகள் கும்பலாக நிற்கின்றன. ஒருவர் கேட்பார்: ''வெள்ளையைச் சொல்லிப் போடய்யா''

''சலகைத் தட்டைக்கு வாச்சை குறையாது'' (இருபத்தைந்துக்கு ஒரு ரூபாய் குறையாது) என்பார் ஆட்டின் சொந்தக்காரர்.

''இல்லே! சலகை! சலகை!'' என்பார் வாங்குபவர்.

''விலை கூடுதலாச் சொல்லிப் போட்டா எப்டி? முடிவாச் சொல்லிப் போடுவியா?''

''ஜாரிச்சுக்கிட்டு வாங்கய்யா . . .!''

''உன்ற விலைக்கு வராது. வேறே பேச்சு இல்லே . . . சொல்லு . . . புடு சாதகம் பேசாதே. வெட்டட்டுமா? வெட்டிடுவேன் . . .''

''சாரிப்பா . . . வெட்டிக்கோ . . .!''

ஆடுகளின் ரோமத்தைக் கொஞ்சம் வெட்டி எடுக்கிறான் விலை பேசி முடித்தவன்.

ரோமத்தில் கொஞ்சம் வெட்டிவிட்டால் அத்தனை ஆடுகளையும் விலை பேசி வாங்கியாகிவிட்டது என்பது பொருள்.

கொஞ்சம் நகர்ந்து போனால் இன்னொரு காட்சி!

''இன்னும் இரண்டு பீறல் இழுத்துப் போடு.''

''த்சொர்! த்சொர்!'' - பசுமாட்டைக் கறந்து காட்டுகிறார் மாட்டின் சொந்தக்காரர்.

''பத்து ஆளாக்கு தேறும். வெள்ளைக் குட்டை சாதி. காங்கயம் பக்கத்திலேருந்து வாரோம்.''

''விலை சொல்லிப் போடுவியா?''

''காளை முறி . . .'' (இருநூற்றைம்பது ரூபாய்.)

''காளைக்கு சம்மதமா? சொல்லிப் போடு'' (இருநூறுக்குச் சம்மதமா?)

''பசு மாட்டை வைத்துக்கொண்டு, 'காலை முறி! கையை வெட்டு' என்கிறார்களே! இது என்ன கஷ்டம்?'' என்று நாங்கள் விழிக்கிறோம்.

''இதெல்லாம் தரகர்கள் பாஷை; அவர்களுக்குத்தான் அது புரியும்.''

''வண்டிக் கீலேத் தடவு; காளைக்குப் பேச்சு கொடுத்தாச்சு . . . நோட்டை எண்ணிடுவோம்.''

கீலே எடுத்து ஒருவர் பசு மாட்டின்மீது தடவுகிறுர். அதாவது, அந்தப் பசு மாட்டை விலே பேசி முடிந்துவிட்டது என்பதற்கு அடையாளமாக.

இருக்கே நிற்கும் வண்டிகளைத் தாண்டிக்கொண்டு, மாடுகளைத் தள்ளி வழி செய்துகொண்டு அப்பால் நகர்கிறேம். அந்தச் சமயம் பார்த்து ஒரு மாடு தன் வாலே என்மீது வீசி என்னுடைய வெள்ளைச் சட்டையை அழுக்காக்கி விடுகிறது, எனக்குக் கோபம் வருகிறது, நண்பர் சிரிக்கிறுர்!

மற்ெருரு காட்சி!

''இந்தக் களுதைக்கு என்ன வெலே? கேட்டுப் போடு!''

''இது விக்கறதில்லே . . . ஊர்க் களுதை! உள்ளார நுளைஞ் சுட்டது . . .''

தூறல் போட்டுக்கொண்டே யிருக்கிறது. மணி பத்தரை. இதற்குள் ஆயிரக்கணக்கான ஆடு மாடுகள் அந்த இடத்தில் விற்பனை முடிந்து வெளியேறிவிட்டன. மேலும் ஆயிரக்கணக்கான மாடுகள் வியாபாரத்திற்காக உள்ளே வந்துகொண்டே யிருக்கின்றன. சற்று நேரத்துக்கெல்லாம் எருதுகள் விற்பனை தொடங்குகிறது, பசு மாடுகளைக் கறந்து பார்த்து விலே பேசுவதற்குக் காலே வேளை தான் ஏற்ற நேரமாதலால் மணி பத்தரைவரை பசு மாடுகள் பேரம் நடக்கிறது. அப்புறம்தான் எருதுகளைக் கவனிக்கிறுர்கள். தரையெல்லாம் ஒரே சேறு. அத்துடன் மாட்டுச் சாணம் வேறு. காலே வைக்க லாயக்கில்லே.

''வால் பக்கம் சங்குச் சுழி . . பார்த்தியா கவுண்டரய்யா!''

''அதுக்காவ வெலேயைக் கூடுதலாச் சொன்னு முடியுமா?'' வாங்க வந்தவர் போய் விடுகிறுர்.

இன்ெனுருவர் வருகிறுர். ''இந்தாங்க புடியுங்க'' என்று ஒரு கற்றை நோட்டுக்களை என் கையில் ரகசியமாகத் திணிக்கிறுர். நான் பணத்தை வாங்க மறுக்கிறேன். அவர் விடாப்பிடியாகத் திணித்து விட்டுப் போய் அந்த மயிலேக் காளைமீது கீல் எழுத்துப் போடப் போகிறுர்.

''மயிலேக் காளை எனக்குச் சொந்தமில்லேய்யா. அதோ நிக்கருரே அவருடையது. இந்தாங்க பணம்'' என்கிறேன் நான். ''நீங்க மாட்டுக்காரர்னு நெனேச்சுப்போட்டேன்யா'' என்று கூறிக்

கொண்டே பணத்தை என்னிடமிருந்து வாங்கிக்கொண்டு போகிறார் அவர்.

"தள்ளிக்கோ, தள்ளி நில்லு" என்று சொல்லிக் கொண்டே கரும்புக் கழிகள் ஏற்றிய சுமை வண்டியை நாலைந்து பேர் தள்ளிக் கொண்டு வருகிறார்கள். அந்த வண்டிக்கு வழி விடுவதற்காக நாங்கள் விலகி நிற்கிறோம். பின் பக்கத்திலிருந்து ஒரு ஆள் மாடு மாதிரி என்மீது வந்து மோதுகிறான். நான் கோபிக்கிறேன். நண்பர் சிரிக்கிறார்! அதே சமயம் அங்கு வந்த மாடு ஒன்று தன் வாலை வீசி நண்பரின் சட்டையை அழுக்காக்கி விடுகிறது. நண்பர் கோபிக்கிறார். நான் சிரிக்கிறேன்!

ஜனக் கூட்டத்தின் நெரிசலில் புகுந்து, இடிபட்டு, அடிபட்டு நனைந்து, உடை கலைந்து உருக்குலைந்து கொஞ்சம் இடைவெளி உள்ள பக்கத்துக்குப் போய்ச் சேருகிறோம். அங்கே வெல்லக் கட்டிகள் வண்டி வண்டியாக லாரி லாரியாக வந்து குவிந்திருக்கின்றன.

"பொளுதுக்குள்ளார இம்புட்டு வெல்லமும் கரைஞ்சுடும் . ." என்கிறார் கொங்கு நாட்டுக்காரர். அவ்வளவு வெல்லமும் விற்பனையாகிவிடும் என்பதைத்தான் கொங்கு நாட்டு பாஷையில் அப்படிச் சொல்கிறார்கள்!

"கவுண்டரய்யா, நீ அந்தப்பக்கம் போனியா? நான் வடக் காலே பாக்கறேன்."

"நான் தெக்காலே சரக்கு புடிச்சுக்கிட்டிருந்தேன் . . . "

"ஒரு வாய்க்கு பொகலை குடுப்பியா!"

"என்ன கொண்டாந்தே புள்ளே?"

"அரசாணி கொண்டாந்தேன்!"

"வண்டியை அத்தாலே தள்ளி நிறுத்தப்பா. போறவங்க வாறவங்களுக்கு எடைசலா இல்லே . . ?"

"நொய்ய்ய் . . ." - ஒரு பையனின் ஊது குழல் சத்தம்.

"அங்காலே செங்கோடக் கவுண்டரைப் பார்த்தியா?"

"டீ குடிக்கிருரு!"

ஒரு நடுத்தரமான ஆள். எங்களையே சுற்றிச் சுற்றி வருகிறான். அடிக்கடி மறைந்து விடுகிறான். மீண்டும் தலை காட்டுகிறான். யார் அவன்?

போலீஸ்காரர்கள் நாலைந்து பேர் வந்து அவனைப் பிடித்துக் கொண்டு போகிறார்கள்.

"போக்கிறீங்க. கூட்டத்திலேயே இருப்பானுவ. ஏமாந்தா பணத்தைத் தட்டிகிட்டுப் போயிடுவானுவ. இன்னைக்கு இவங்களுக்கு ஒரே வேட்டை! ஆனாலும் போலீசு இவங்களைப் புடிச்சுட்டுப் போயி சாவடியிலே தள்ளிப் போடும். விளாயக் கிளமை பூரா

வெச்சி வெள்ளிக் கிளமை வுட்டுடும்.'' - கொங்கு நாட்டுக் காரரின் 'காமண்ட்டரி' இது!

சைத்திரிகர் கோபுலு அந்தக் கூட்டத்தையும், வண்டிகளையும், மாடுகளையும் படம் வரைகிறார்.

ஒரு போலீஸ்காரர் எங்கள் எதிரில் தோன்றி, ''கொஞ்சம் போலீஸ் சாவடி வரைக்கும் வாறீகளா?'' என்று கூப்பிடுகிறார்.

''எதுக்கு?'' - எங்கள் முகத்தைப் பார்க்க வேண்டுமே அப்போது!

''சாவடிக்கு வாங்கய்யா; பேசிக்குவோம்.''

கான்ஸ்டபிளுடன் நடக்கிறோம்.

சாவடிக்குப் போனதும் அந்தக் கான்ஸ்டபிள் சப் இன்ஸ்பெக்டரிடம் ''இவக தான் ஸார்'' என்கிறார்.

சப் இன்ஸ்பெக்டர் முகத்தில் புன்முறுவல் பூக்கிறது.

''நீங்க பேப்பர்காருங்களா? மழையிலே நின்னு எளுதிக்கிட்டிருக்கிங்களே. கையிலே 'லெதர் பாக்' வேறே வெச்சுக்கிட்டிருக்கீங்க. வாட் ஸார்! எவனாவது பிக்பாக்கெட் அடிச்சுக்கிட்டு போயிட்டா என்ன செய்வீங்க? இப்படி பெஞ்சு மேலே உட்கார்ந்து நிம்மதியா எளுதிக்கிட்டுப் போங்க. இதோ பார்த்தீகளா? இங்கே எத்தனை பிக்பாக்கெட்டுங்களைப் புடிச்சுப் போட்டிருக்கோம். இந்தச் சந்தையிலே ஒவ்வொரு வியாளக்கிளமையும் நாற்பதாயிரம் பேர் கூடறாங்க. பத்து லட்சம் ரூபாய் புரளுது . . . அன்னைக்கு இந்தப் பசங்க கையிலேயும் கொஞ்சம் புரளும் . . .!''

''ரொம்ப தாங்க்ஸ் . . .'' - எழுத வேண்டியவற்றை எழுதிக் கொண்டு சாவடியை விட்டு வெளியேறுகிறோம். சற்று தூரத்தில் பரங்கிமலை என்று தென்படுகிறது. அங்கே, பரங்கிக்காய் (அரசாணி), பூசனிக்காய், தேங்காய், வாழைத் தார் எல்லாம் மலை மலையாகக் குலை குலையாகக் குவிந்து கிடக்கின்றன. கத்தரிக்காய் வெண்டைக் காய் கூடைகளுக்குக் கணக்கு வழக்கே இல்லை.

''கூடை என்ன விலை? . . .''

''ஒண்ணரை ரூவா . . .''

''அம்புட்டு வெலை அதிகம் . . .''

''ஒரு கூடை பாவக்காய்க்கு இந்த வெலை கசக்குதா?''

சற்று நகர்கிறோம். பாத்திரங்கள், ஜவுளி தினுசுகள், தோல்கள் (தண்ணீர் இறைக்கும் கவலைச் சாலுக்குப் போட); நவதானியங்கள், பழ வகைகள், கருப்பட்டி, பருப்பு, உப்பு, மிளகாய் எல்லாம் அம்பாரமாகக் குவிந்து கிடக்கின்றன.

''இந்தச் சந்தை மூலம் முனிசிபாலிடிக்கு வருஷத்தில் இரண்டு லட்சம் ரூபாய் கிடைக்கிறது.'' - இது கொங்கு நாட்டுக்காரர் கொடுக்கும் தகவல்.

''அதெப்படி?''

''சந்தைக்கு ஒரு லாரி வரவேணுமின்னு பத்து ரூபாய் பணம் கட்டணும். அந்த மாதிரி ஒரு மாட்டுக்கு இவ்வளவு, ஒரு ஆட்டுக்கு இவ்வளவு, ஒரு கட்டை வண்டிக்கு இவ்வளவுன்னு கணக்கு வைச்சிருக்காங்க.''

பொழுது மங்கத் தொடங்குகிறது. நாங்கள் சந்தையைவிட்டுத் திரும்புகிறோம். காலையில் சந்தித்த அந்த மீசைக்காரர்களை மறுபடியும் சந்திக்கிறோம். இப்போது அவர்கள் கையில் கொடுவாள் இல்லை. முகத்தில் எரிச்சல் இல்லை. வாழைக் குலையும், ஏற்றச்சால் தோலும் இருக்கின்றன.

''சண்டைக்குப் போய் கொலையோடு தோலோடு திரும்புவோம்'' என்றார்கள் அல்லவா?

பொள்ளாச்சி சந்தை தமிழ் நாட்டிலேயே மிகப் பெரிய சந்தை! அங்கே போகிறவர்கள், மாடு வாங்கி, கோடி வேட்டி வாங்கி, பானை வாங்கி, வெல்லம் வாங்கி, அரிசி பருப்பு வாங்கி, பால் வாங்கி, கரும்பு வாங்கி, பொங்கல், மாட்டுப் பொங்கல் எல்லாம் கொண்டாடிவிட்டு வந்துவிடலாம்!

கோலார் தங்க வயல்

21

இடம்: கோலார் தங்க வயல். நேரம்: பொன்ஞன நேரம்.

நாங்கள் மூன்று பேர் தங்கச் சுரங்க வாயிலின் அருகில் நிற்கிருேம்.

''கையெழுத்துப் போட்டு விட்டீர்களா? இனி உங்கள் உயிருக்கு நாங்கள் பொறுப்பாளி அல்ல; வாருங்கள், சுரங்கத்துக்குள் இறங்கு வோம். இந்தாருங்கள், ஆளுக்கு ஒரு கூடை!'' என்கிருர் சுரங்க அதிகாரி.

''திரும்பி வரும்போது இது நிறையத் தங்கம் கொடுத்தனுப்பு வார்கள் போலிருக்கிறது . . .'' என்கிருர் நண்பர் என் காதோடு.

''ஆமாம்; அப்படித்தான் போலிருக்கிறது'' என்கிறேன் நான்.

"இந்தக் கூடையைத் தலையில் கவிழ்த்துக் கொள்ளுங்கள். இல்லையென்ருல் தலைமீது கற்கள் விழும்."

''அவ்வளவுதாஞ!'' - அடுத்த கணமே மூவரும் தலையில் கூடையைக் கவிழ்த்துக் கொள்கிருேம்!

''சில சமயம் நம்மீது விழும் கல் தலையைக் குடைந்துகொண்டு வயிற்றுக்குள் போய்விடுவதும் உண்டு'' என்கிருர் அதிகாரி.

''அப்ப நீங்க ரெண்டு பேரும் மட்டும் போய்விட்டு வருகிறீர் களா? நான் வெளியிலேயே நிற்கிறேன்.'' - எங்களில் ஒருவர்.

''பயப்படாதீங்கய்யா . . . சும்மா வாங்க. இங்கே பத்தொன்ப தாயிரம் பேர் வேலை செய்கிருேம். நாங்க யாராவது பயப்படு கிருேமா . . .?''

''லிப்ட் கீழே இறங்கத் தயாராக நிற்கிறது; புறப்படலாம்'' ன்கிருர் ஒருவர் வந்து.

''இந்த இடத்திலேதான் ஸார் போன வாரம் ஒரு பெரிய ஆக்ஸிடெண்ட்! பத்திரிகையிலே பார்த்திருப்பீங்களே! டீசல் வண்டி ஒன்று தவறிப்போய் இதில் விழுந்து, 'லிப்ட்' மேலே மோதி, ஒரு ஆளே குளோஸ்!''

''ஸார்! நீங்க இரண்டு பேரும் போயிட்டு வாங்களேன். நான் தங்கம் நிறையப் பார்த்திருக்கேன் . . .'' - எங்களில் இன்ஞெருவர்.

''முன் வைத்த காலைப் பின் வைக்கக்கூடாது. லிப்டிலே ஒரு கால் - தரையிலே ஒரு காலா?'' - நண்பரை 'லிப்ட்'டுக்குள் இழுத்துக்கொள்கிறேன் நான்.

'லிப்ட்' நேர் செங்குத்தாக கீழ்நோக்கிச் செல்கிறது. நானூறு அடி கீழே போனதும், "இங்கேதான் ஸார் ஆக்ஸிடெண்ட் ஆச்சு . . . பணுல்!"

''ஐயோ, அப்பா! மறுபடியும் அதைச் சொல்லாதேயேன்! பயமாயிருக்கு!'' - நண்பர் கெஞ்சுகிறார்.

''என் வயிறு மேலே போகிறதே!'' - இன்னொரு நண்பர் அலறுகிறார்.

''அப்ப சரிதான்; நாம் கீழே போய்க் கொண்டிருக்கிறோம்.''

''மொத்தம் எவ்வளவு அடி தூரம் கீழே இறங்க வேண்டும்?'' - நண்பர் கேட்கிறார்.

''பத்தாயிரம் அடி . . . !'' - பதில்.

"அப்புறம் . . . ?''

"வடக்கிலும், தெற்கிலும், மேற்கிலும், கிழக்கிலும் குகைகள் செல்கின்றன . . . "

''அப்புறம் . . . ?''

"அந்தக் குகைகளிலிருந்து பிரிந்து செல்லும் கிளைக் குகைகள் . . . ''

''அப்புறம் . . . ?''

"இதுவரை இம்மாதிரி குறுக்கிலும் நெடுக்கிலும் அறுநூறு மைல் தூரம் குடைந்தெடுத்திருக்கிறோம்.''

"பத்தாயிரம் அடி ஆழத்துடன் ஏன் நிறுத்திக்கொண்டீர்கள்? இன்னும்கூடக் கீழே வெட்டிக்கொண்டு போகலாமே?'' - நண்பர் கேட்கிறார்.

''இன்னும் கீழே குடைந்துகொண்டே போனால் அந்தப் பக்கம் அமெரிக்கா வந்துவிடுமே! அதற்காகத்தான் இத்தோடு நிறுத்தி விட்டார்கள் போலிருக்கிறது!'' - நண்பர் சொல்கிறார்.

"பூதத்துவ நிபுணர்கள் ஆராய்ந்து பார்த்து, 'இந்த இடத்தில், இவ்வளவு அடி ஆழத்தில் தங்கம் இருக்கிறது' என்று சொல்லுவார்கள். அதன்படி நாங்கள் வெட்டிக்கொண்டு போவோம்.''

'லிப்ட்' பாதாளத்தில் போய் நிற்கிறது. உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு மூவரும் வெளியேறுகிறோம். சுற்றிலும் மின்சார விளக்குகள் எரிகின்றன. கட்டடங்கள் தெரிகின்றன. தண்டவாளங்கள் போகின்றன. ஆங்காங்கே தொழிலாளர்கள் வேலை செய்துகொண் டிருக்கிறார்கள். கடைத் தெருவோ, சினிமாக்

கொட்டகையோ, காப்பி ஓட்டலோ இல்லாத குறைதான். மற்றப் படி அதை ஒரு பாதாள நகரம் என்றே கூறலாம்.

சுரங்க உத்தியோகஸ்தர் ஒரு தொழிலாளியைப் பார்த்துக் கேட்கிருர்: ''ஏழுமலே எங்கேடா?''

''லீவு ஸார்!''

''அவனுக்கு என்ன இன்னைக்கு?''

''பொன்னுக்கு வீங்கியாம். வூட்லே படுத்திருக்கான் ஸார்!''

''சரி; நாம் போவோம். வாங்க!'' - எங்களே அழைக்கிருர் சுரங்க அதிகாரி. அவரைப் பின்பற்றி ஒரு குகைக்குள் நடக்கிருேம்.

நடக்கிருேம், நடக்கிருேம், நடந்துகொண்டே யிருக்கிருேம்.

''இதற்கு முடிவே கிடையாதா?'' என்று கேட்கிருர் நண்பர்.

''நீங்கள் எழுதுவீர்களே தொடர்கதை, அந்த மாதிரிதான் இதுவும்! விஷயம் கிடைக்கிறவரை எழுதிக்கொண்டே இருப்பீர்கள். அது தீர்ந்ததும் நிறுத்தி விடுவீர்கள் அல்லவா? அதைப் போலத் தான் நாங்களும் தங்கம் கிடைக்கிறவரை வெட்டிக்கொண்டே யிருப்போம். தீர்ந்ததும் நிறுத்திவிடுவோம் . . .''

''ஒரு நாளேக்கு இங்கே எவ்வளவு தங்கம் எடுப்பீர்கள்?''

''இரண்டாயிரம் டன் பாறைகளே வெட்டி எடுக்கிருேம். அதிலிருந்து தங்கத்தைப் பிரித்தெடுக்க அப்புறம் எவ்வளவோ பாடு படுகிருேம். ஒரு டன் பாறையை வெட்டி எடுக்க எழுபது ரூபாய் செலவாகிறது.''

''அட கஷ்டமே! குகைக்குள் வந்தால் தங்கத்தைக் கூடை கூடையாக வாரிக்கொண்டு போகலாம் என்றல்லவா எண்ணினேன்? தங்கம் அப்படியே முழுசாகக் கிடைப்பதில்லேயா? அப்படியானுல் எதற்காக இப்படிக் கஷ்டப்படுகிறீர்கள்? பேசாமல் கடையிலே போய் விலே கொடுத்து வாங்கிக் கொள்ளலாமே?''

''பூமியிலிருந்து எடுத்தால்தானே கடைக்கு வரும்?''

''ஒகோ, அது மறந்து போச்சு!''

''இதோ பார்த்தீங்களா? இதெல்லாம் தங்கப் படிவங்கள். இந்தப் படிவங்களே வெட்டி எடுத்து, உடைத்துப் பொடி செய்து, குழம்பாக்கி, வடிக்கட்டிஞல் அதிலிருந்து கொஞ்சம் தங்கம் கிடைக்கும். அதாவது ஒரு டன் பாறைக்கு ஒரு அவுன்ஸ் தங்கம் கிடைக்கும் . .''

''சே! இதென்ன இயற்கை? ரொம்ப மோசம்! தங்கம்னு அப்படியே கட்டி கட்டியாகக் கிடைக்க வேணுமா?'' என்கிருர் நண்பர்.

''ஆமாம்; பூதேவி ஏன் தங்கத்தை இவ்வளவு ரகசியமாகத் தன்னுள் ஒளித்து வைத்திருக்கிருள்?'' - நண்பர் கேட்கிருர்.

''ஸ்திரீகளுக்குத் தங்கம் என்ருல் ரொம்ப ஆசையாயிற்றே! பூதேவியும் ஒரு ஸ்திரீதானே? அதனுல்தான் தங்கத்தை அவ்வளவு பத்திரமாகத் தன் இதயத்தில் வைத்துக்கொண்டிருக்கிருள் . . .'' - சுரங்க அதிகாரி கூறுகிருர்.

இன்னெரு கிளைக் குகைக்குள் திரும்புகிறேம். அதற்குள் ஒரே இருட்டு! கன்னங்கரிய இருட்டு. அட்டைக் கரி! அல்வா மாதிரி துண்டு துண்டாக வெட்டி எடுக்கலாம் போலிருக்கிறது!

''அடடா! இவ்வளவையும் திரட்டி எடுத்தால் எவ்வளவு 'இண்டியன் இங்க்' (சித்திரம் எழுதும் கறுப்பு மசி) செய்யலாம்!'' - என்கிருர் சைத்திரிகர் கோபுலு.

சுரங்க அதிகாரி பாட்டரி லைட்டைப் போடுகிருர். அந்தக் கன்னங்கரிய இருட்டு பூதம் பாட்டரி லைட் வெளிச்சத்தை விழுங்கி விடுகிறது.

மின்சார விளக்கு போடப்பட்ட வேறெரு குகைக்குள் செல்கிறேம். அங்கே நெருப்புக் காற்று வீசுகிறது.

''இங்கே உஷ்ணம் எத்தனை டிகிரி தெரியுமா?''

''தெரியாது . .''

''150 டிகிரி! குழாய் வழியாகக் குளிர்காற்றைக் கொண்டு வந்து உஷ்ணத்தைக் குறைக்கிறேம்.''

''திடீரென்று மின்சாரம் நின்று போனுல் என்ன செய்வீர்கள்?''

''தனியாக ஜெனரேட்டர் வைத்திருக்கிறேம். மின்சாரம் நின்ற முப்பதே வினடிக்குள் ஜெனரேட்டரை இயங்க வைத்து விடுவோம் . . .''

மணி பன்னிரண்டரை. இயந்திர சாலைக்குள் நுழைகிறேம்.

டம் டமார் . . . டம் டமார்!

பாறைகள் உடைபடுகின்றன. உலகத்திலுள்ள ஓசைகளையெல்லாம் ஒன்ருகத் திரட்டி, அதை நாலால் பெருக்கி வெளியே விட்டால் எப்படி இருக்கும்? அத்தகைய பேரிரைச்சல்!

காதுகளில் பஞ்சை அடைத்துக் கொண்டிருந்தபோதிலும், இடி முழக்கம் போன்ற அந்தச் சத்தம் நம்மை அதிர வைக்கிறது. ஒருவருக்கொருவர் கை ஜாடையாலேயே பேசிக் கொள்கிறேம். இயந்திரங்கள் வேலை செய்யும் முறைகளைப்பற்றி கை ஜாடையாலேயே நமக்கு விளக்கம் தருகிருர் நம்முடன் வரும் அதிகாரி. நாம் புரிந்து கொண்டது போல் தலையை ஆட்டிப் பாசாங்கு செய்து விட்டு வெளியே வருகிறேம்.

''இது ஒன்றும் பிரமாதமில்லை. பெண்மணிகள் தங்க நகை வேண்டும் என்று கணவன்மார்கள் காதுகளைத் தொளைக்கிறார்களே, அதைக் காட்டிலுமா இது அதிகம்?'' - இது நண்பர்.

''சார், கோலார் தங்க வயலை விட்டுச் செல்லு முன் நாலு பொன் மொழிகள் சொல்ல வேண்டுமென்று பார்க்கிறேன். முடிய வில்லையே . .'' - நண்பர் வருத்தப்படுகிறார்.

'' . . ம்! எல்லாத் தொழிற்சாலைகளுக்கும் போனால் அந்தந்தத் தொழிற் சாலைகளில் உற்பத்தியாகும் பொருள்களில் கொஞ்சம் கொஞ்சம் 'சாம்பிள்' கொடுப்பார்கள்! இங்கே . . ?'' என்கிறேன் நான் சூசகமாக.

''பாறை உடைக்கும் இடத்துக்குப் போய் வந்தோமல்லவா? காதைக் குப்பென்று அடைத்துக் கொண்டிருக்கிறது?'' என்கிறார் சுரங்க அதிகாரி சாமர்த்தியமாக!

''தங்கக் கட்டிகளை எங்கே வைத்திருக்கிறீர்கள்? அதையாவது காட்டுங்களேன் . . . .'' என்று துடிக்கிறார் நண்பர்.

''அதற்கு முன்னால் இதோ இந்த எடை போடும் தராசைப் பாருங்கள். இது மிக விலை உயர்ந்த தராசு. இதில் எடை போட்டால் துளிப் பிசகு இருக்காது. உங்சள் கையெழுத்து எவ்வளவு 'வெயிட்' உள்ளது என்பதைக்கூட இதில் தெரிந்துகொண்டு விடலாம்.''

''அதெப்படி?''

''முதலில் ஒரு சிறு காகிதத்தை இதில் எடை போட்டுக் கொள்ளுங்கள். பிறகு அந்தக் காகிதத்தில் உங்கள் கையெழுத்தைப் போட்டு மறுபடியும் இதில் எடை போட்டுப் பாருங்கள். அப்போது காகிதத்தின் எடை அதிகமாகக் காட்டும்!''

''நம் கையெழுத்துக்கு எவ்வளவு 'வெயிட்' உண்டு என்பதைக் கண்டுபிடிக்க இன்னொரு வழி கூட இருக்கிறது'' என்கிறார் நண்பர் கோபுலு.

''அது என்ன?''

''நாம் கொடுக்கும் செக்குகள் பாங்குக்குப் போகும்போது. . . !''

''இதுதான் அபரஞ்சி!''

''அபரஞ்சி! ஆ! அபரஞ்சி! ஆகா! அபரஞ்சி! என்ன அழகு! பசும் மஞ்சள் போல் ஜொலிக்கிறதே!''

''அப்படியே சுவரிலிருந்து சுண்ணாம்பு அடையைப் பிய்த்து எடுப்போமே, அம்மாதிரி ஒரு பாறையிலிருந்து இதைப் பிய்த்து எடுத்தோம். அசல் தங்கமாகவே இது சுரங்கத்தில் கிடைத்தது. இம்மாதிரி எடுக்கப்படும் தங்கத்தைத்தான் அபரஞ்சி என்கிறோம்.

அபரஞ்சித் தங்கம் ரொம்ப அபூர்வமாகத்தான் கிடைக்கும் . . .''

''அடாடா! ரொம்ப அழகு! அற்புதம்!'' என்று சொல்லிச் சொல்லி வியக்கிறார் கோபுலு. தம் உள்ளங் கையில் வைத்துப் பார்த்து மகிழ்கிறார்.

இருவரும் பெருமூச்சு விடுகின்றனர்.

''சிறு மூச்சு விடுங்களய்யா!'' என்கிறேன் நான்.

''ஏன்?''

''இந்தச் சின்னத் தங்கத் துண்டுக்கே பெருமூச்சு விட்டால், இன்னும் பெரிய பெரிய தங்கக் கட்டிகளைப் பார்க்கப் போகிறோமே, அப்போது என்ன செய்வீர்கள்?'' என்கிறேன் நான்.

தங்க 'பார்'கள் அடுக்கி வைக்கப்பட்டுள்ள அறைக்குள் செல்கிறோம். தங்கக்கட்டிகளை ஒவ்வொன்றாகத் தொட்டுப் பார்க்கிறோம்.

''இதில் ஒரு கட்டி கிடைத்தால்?'' - தம் ஆசையை வெளியிடுகிறார் நண்பர்.

''ஆசைக்கு ஓரளவு வேண்டும். கொஞ்சமாகக் கேட்டால் கொடுப்பார்கள்!'' என்கிறேன் நான்.

''முடிந்தால் எடுத்துக்கொண்டு போங்களேன். ஆனால் ஒரு நிபந்தனை. ஒரே கையால்தான் தூக்கிக்கொண்டு போகவேண்டும்!' என்கிறார் அதிகாரி.

நாங்கள் ஒவ்வொருவராக இரண்டு கையாலும் தூக்கிப் பார்க்கிறோம். ஊஹூம்; அந்தக் கட்டி அசைந்து கொடுக்கவில்லை. மிகுந்த ஏமாற்றத்துடன் முயற்சியைக் கை விடுகிறோம்.

''சை! இது யாருக்கு வேண்டும் . . .?'' என்கிறேன் நான்.

''ஆமாம் , . . என்ன தங்கம் இது? . . , மஞ்சளா ? . . அப்படி ஒன்றும் ஒசத்தியில்லை! . . .'' - இது கோபுலு.

''பித்தளைகூடத்தான் பளபளக்கிறது, புளி போட்டுத் தேய்த்தால் . . . '' - இது நான்.

''சீ! இந்தத் தங்கம் புளிக்கும். வாங்கய்யா போகலாம் . . ''

பொன்மொழி சொல்ல வேண்டும் என்று துடித்துக் கொண்டிருந்த நண்பர் கடைசியில் சொல்லியே விட்டார்!

தாஜ்மகால்

22

ஆக்ரா கண்டோன்மெண்ட் ஸ்டேஷனில் இறங்கி வெளியே செல்கிறோம்.

'ணிங் . . . ணிங் . . . ணிங்' என்று நூறு சைக்கிள் ரிக்ஷாக்கள் நம்மைச் சூழ்ந்துகொள்ளுகின்றன. அந்த சைக்கிள்களேயும், அவற்றை ஓட்டுகிறவர்களேயும் பார்க்கும்போது ஒருமுறை அவர்களே யமுனேயில் குளிப்பாட்டி அழைத்து வரவேண்டும் போலிருக்கிறது.

அவர்களிடமிருந்து தப்பி ஸ்டேஷன் ரோடில் நடக்கிறோம்.

''ஆகா! கிளி கொஞ்சுகிறதே இந்த இடம்!'' என்று வியக்கிறேன் நான்.

''ஐயோ, சுத்த அழுக்குப் பிடித்த ஊராயிற்றே இது! கன்டோன்மெண்ட் பக்கம் கொஞ்சம் சுமாராயிருக்கும். கோட்டைப் பக்கம் போய்விட்டால், புழுதியும், சாக்கடையும், ஈக்கள் அடை அடையாக மொய்த்துக் கொண்டிருக்கும். இது ஆக்ரா இல்லே. . . . ஆக்ரீ'' என்கிருர் நண்பர்.

''இந்த ரோடில் மட்டும் எப்படி கிளி கொஞ்சுகிறது?'' என்று கேட்கிறேன் நான்.

''அதுவா? ஆயிரக்கணக்கான கிளிகள் இங்குள்ள மரங்களில் வாழ்கின்றன. மரங்களில் இலேகளே தெரியாதபடி அவை அடர்த்தியாக உட்கார்ந்துகொண் டிருக்கின்றன பார்த்தீர்களா? 'கிகிகிகிகிகிகி' என்று எந்நேரமும் இவை கொஞ்சியபடியேதான்!''

''அழுக்குப் பிடித்த இந்த ஊரிலா பளிங்குத் தாஜ்மகால் பளிச்சிட்டு நிற்கிறது?''

''சிப்பிக்குள்ளே வெண்முத்து பளிச்சிடுவதில்லேயா?''

''தாஜ்மகாலே எப்போது பார்க்கப் போகிறோம்?''

''எப்போது வேண்டுமானுலும் பார்க்கலாம். எத்தனே முறை வேண்டுமானுலும் பார்க்கலாம். அந்த அற்புதத்தை ஒரு முறை பார்த்தால் போதாது. ஒரே நாளில் பல சமயங்களில் பார்க்க வேண்டும். ஒவ்வொரு நேரத்தில் அது ஒவ்வொரு மாதிரி பளிச்சிடும். பொழுது விடியும்போது ஒரு மாதிரி, வெய்யில் வேளேயில் ஒரு மாதிரி . . . மாலேயில் ஒரு மாதிரி . . . இந்த உலகில்

தாஜ்மகாலைச் சலிக்காமல் பார்த்து ரசித்த ஆசாமி ஒரே ஒருவர் தான்!''

''யார் அந்த ஆசாமி? ஷாஜஹான்தானே?''

''இல்லை, சந்திரன்! எத்தனை கோணங்கள் உண்டோ அத்தனை கோணங்களில், எத்தனை விதமான ஒளிகள் உண்டோ அத்தனை ஒளிகளில் பார்த்துக் கொண்டிருப்பவன் அவன் ஒருவன்தான்!''

உலக அதிசயங்களில் ஒன்றான தாஜ்மகால் வாசலில் போய் நிற்கிறோம்.

''கய்டு ஸார் கய்டு! சார் ஆனு! போர் அனேஸ்!'' என்று கய்டுகள் நம்மைச் சூழ்ந்துகொள்கின்றனர்.

''கொஞ்சம் பேரம் பேசினால் ரூபாய்க்கு ஐந்து கய்டுகள்கூடக் கிடைப்பார்கள் போலிருக்கிறது!'' என்கிறார் நண்பர்.

இந்தச் சமயம் வெளிநாட்டுக்காரர்கள் ஏழெட்டுப் பேர் டாக்ஸிகளில் வந்து இறங்குகிறார்கள். நல்ல வேளையாக எங்களைச் சூழ்ந்து நின்ற கய்டுகள் அத்தனை பேரும் டாக்ஸிகளை நோக்கி ஓடுகிறார்கள்.

நாமும் அந்த வெளிநாட்டுக்காரர்களுடன் உள்ளே நுழைகிறோம். அந்த வெள்ளைக்காரப் பெண்மணிகளும் ஆடவர்களும் மூன்றடுக்கு முன் வாசல் மண்டபத்துக்குள் நுழைந்து மேலே உள்ள விளக்கைப் பார்க்கிறார்கள்.

''திஸ் லேம்ப் . . . மெட்டல் . . . பர்ஷியன் லேம்ப் . . . ப்ரெஸெண்டட் டு ஷாஜஹான் பை . . . '' என்கிறான் கய்டு.

''ஒண்டர்புல் பீஸ்'' என்கிறாள் ஒரு லேடி.

''சரக் . . . ! சரக் . . . ! சரக்!'' பூட்ஸ் கால்களின் ஒலி.

டிரான்ஸிஸ்டர், காமிரா - இவற்றில் ஏதாவது ஒன்றைத் தூக்கிக்கொண்டு டூரிஸ்ட்டுகள் கும்பல் கும்பலாக வந்துகொண்டிருக்கிறார்கள்.

வெளி வாசலிலிருந்து தாஜ்மகாலைப் பார்க்கிறோம். அதன் பளிங்குத் தோற்றம் நம்மை மயக்கத்தில் ஆழ்த்துகிறது. நம் கால்கள் மெதுவாகத் தாமாகவே அந்தக் கட்டடத்தை நோக்கி நடக்கின்றன.

கீழே பசுமையான புல் தரை - நடு மையத்தில் நீள நீளமான நீர் நிலைகள்! அவற்றில் கம்பீரமாகப் பிரதிபலிக்கும் வெண்மையான தாஜ்மகால் . . . ! இரு பக்கங்களிலும் கரும் பச்சை ஸைப்ரஸ் மரங்கள்! நீர்நிலைகளுக்கு இருபுறங்களிலும் சிமெண்டுப் பாதை! அந்தப் பாதைகளில் ஒய்யாரமாக நடந்து செல்லும் உள்நாட்டுக் காதலர்கள், வெளிநாட்டுக் காதலர்கள், நவ நாகரிக நாரீமணிகள்! அவர்களின் தலையலங்காரம், ஆடையலங்காரம், அவர்கள் பேசுகிற

பேச்சு, வீசுகிற வீச்சு, நடக்கிற நடை எல்லாமே ஒரு சொப்பன புரியில் இருப்பது போன்ற மயக்கத்தையே உண்டாக்குகின்றன.

ஒவ்வொரு காதல் ஜோடியும் தங்களை ஷாஜஹானாகவும் மும்தாஜாகவும் எண்ணிக்கொண்டு நடக்கிறார்கள்!

அந்த மேல் நாட்டுக்காரர்களோடு கூடவே நாமும் தாஜ்மகால் வாசலில் போய் நிற்கிறோம்,

''திஸ் ஈஸ் டாஜ்மகால்!'' என்று தாஜ்மகாலை அவர்களுக்கு அறிமுகப்படுத்தி வைக்கிறார் கய்டு!

''மார்வலெஸ் . . . மார்வலெஸ்!'' என்று வியந்து பாராட்டு கிறார்கள் வெளிநாட்டுக்காரர்கள்.

''இது மார்பிளில் கட்டியதுதானே?'' - நான் நண்பரிடம் கேட் கிறேன்.

''ஆமாம், எல்லாம் வெளிநாட்டிலிருந்து வந்த மார்பிள்ஸ்!''

''அப்படியானால் இது மார்வெலஸ் அல்ல, மார்பிளஸ்!'' என்கிறேன். நண்பர் சிரிக்கிறார்!

''தி மெயின் எண்ட்ரன்ஸ் - ஹைட் - நைண்டி பீட்! ஓவர் தெட் யூ ஸி தி இன்ஸ்க்ரைப்ட் கொரான்'' - இது கய்டு.

''குரான் முழுவதையுமே தாஜ்மகால் பளிங்குக் கற்களில் பதித் திருக்கிறார்கள் . . .'' - நண்பரின் தகவல்.

வாயிலுக்கு மேலே நூறு அடி உயரத்தில் உள்ள எழுத்துக் களும், கீழே கண்ணெதிரே தெரியும் எழுத்துக்களும் ஒரே அளவில் ஒரே மாதிரி தெரியும்படி மேலே உள்ள எழுத்துக்களைப் பெரிதாக வும் கீழே இறங்க இறங்கச் சிறியதாகவும் எழுதியிருக்கிறார்கள். அதனால் கீழே உள்ள எழுத்துக்களைப் போலவே மேலே உள்ள எழுத் துக்களும் ஒன்று போல ஒரே அளவில் சமமாகத் தெரிகின்றன!

''இதைக் கட்டுவதற்குப் பாரசீகம், துருக்கி, பிரான்ஸ், இத்தாலி இந்த நாடுகளிலிருந்து இருபதாயிரம் கட்டடத் தொழிலாளர்கள் வரவழைக்கப்பட்டார்கள்! கட்டி முடிக்க இருபத் திரண்டு வருட காலம் ஆயிற்று . . .!''

''எவ்வளவு பணம் செலவாயிற்றோ?''

''இப்போதைய மதிப்பு இருநூறு கோடி ரூபாய் என்கிறார் கள்!''

''கொஞ்சம் குறைத்துக் கொடுக்க மாட்டார்களாமா?''

''பேரம் பேசினால் கொஞ்சம் குறைக்கலாம். ஒரு ஜோக் தெரியுமா?''

''என்ன அது?''

''பைத்தியம் ஒன்று மற்றொரு பைத்தியத்திடம், 'நான் தாஜ்மகாலை விலைக்கு வாங்கப் போகிறேன்' என்றதாம். உடனே

மற்ருெரு பைத்தியம், 'அதை நான் விற்கப் போவதில்லை' என்று பதில் கூறியதாம். நாம் பேசிக் கொள்வதும் அந்தப் பைத்தியங்களைப் போலத்தான் இருக்கிறது.''

ராணி எலிசபெத் பார்த்து மகிழ்ந்த, நேருஜி வியந்து பாராட்டிய, மிஸஸ் கென்னடி கண்டு களித்த, தாஜ்மகால் என்னும் அந்த ஒப்பற்ற பளிங்குச் சின்னத்துக்குள் நாமும் காலடி எடுத்து வைக்கிருேம்.

அங்குள்ள காவலாளிகள் நம்மைத் தடுத்து நம் பூட்ஸ் கால்களைக் காக்கி உறையினுல் மூடிக் கட்டிய பிறகே உள்ளே அனுமதிக்கிருர்கள்.

உள்ளே, ஷாஜஹானுக்கும் அவனுடைய காதலி மும்தாஜ் மகாலுக்கும், பக்கத்தில் பக்கத்தில் மேடை கட்டி வைத்திருக்கிருர்கள். அந்த இடத்தில் தலைக்கு மேலே உள்ள வெங்காய வடிவ கோபுரத்தின் உட்புறத்தைப் பார்க்கும்போது ஒரு மாபெரும் பளிங்கு வானமே ஆகாசத்தில் கவிந்து கொண்டிருப்பதுபோல் தோன்றுகிறது.

அங்கே ஒரு முஸ்லிம் தோழர் கையில் அரிக்கேன் விளக்குடன் நின்று கொண்டிருக்கிருர். அவரிடம் நாலணு கொடுத்தால் 'ஊஓ' என்று குரல் கொடுத்து எதிரொலியைக் கிளப்புகிருர். அவர் எதிரொலி பதினைந்து விநாடி நேரம் நீடிக்கிறது. யாரோ ஒருவர் நாலணு கொடுக்கிருர். அந்த முஸ்லிம் தோழர் குரல் கொடுக்கிருர். நாம் காலணுச் செலவில்லாமல் காது கொடுத்துச் சத்தத்தைக் கேட்டுவிட்டு வருகிருேம்!

நம் வீட்டு அசட்டுக் குழந்தைகளுக்குப் புத்தி இல்லையே, என்ன செய்வது?

ஊரெல்லாம் யார் யாரோ பணம் கொடுத்துப் பட்டாசு வெடி வாங்குகிருர்கள். யார் வீட்டுப் பிள்ளைகளோ அவற்றை வெடிக்கிருர்கள்: நம் வீட்டுப் பிள்ளைகள் காலணுச் செலவில்லாமல் அந்த வெடிச் சத்தங்களைக் கேட்டுவிட்டுச் சும்மா இருக்கக் கூடாதோ?

சமாதி அறைக்குள் இறுக்கம் தாங்கவில்லை. வியர்த்துக் கொட்டுகிறது. ஊதுவத்தி வாசனை மூக்கைத் துளைக்கிறது.

''அரே ரமேஷ் பாபு! இதர் ஆவ்'' - மார்வாரி ஸ்திரீகள் சிலர் வருகிருர்கள். அவர்கள் கால்களில் அணிந்துள்ள வெள்ளிக் கொலுசுகள் 'ஜலுக் ஜிலுக்!'கென்று ஒலிக்கின்றன. திரும்பிப் பார்க்கிருேம். பச்சையும் சிவப்புமாக ரங்கோலி வர்ணத்தில் வரும் அந்த ஸ்திரீகள் கூட்டம் மாடிக்கு ஏறிச் செல்கின்றது. நாமும் செல்கிருேம்.

மாடிமீதுள்ள வெங்காய வடிவ கோபுரத்தைச் சுற்றி நாலு

பக்கங்களிலும் விசாலமான பளிங்குத் தரைகள்! புட்பால் மாட்ச் விளையாடக்கூடிய அளவுக்கு அத்தனை பெரிய இடம்! அதைச் சுற்றி வளைத்துப் பின்பக்கம் சென்று பார்த்தால் கீழே யமுனை நதியில் வெள்ளம் இரு கரைகளையும் தொட்டுக்கொண்டு ஓடுவது தெரிகிறது.

"முழு நிலவுக் காலங்களில் யமுனை நதித் தண்ணீரில் தாஜ்மகால் பிரதிபலிக்கும்போது பார்க்க வேண்டும்'' என்கிறார் நண்பர்.

மொட்டை மாடிமீது மாணவர்கள் கூட்டம் ஒன்று சினிமா ஷூட்டிங் நடத்துவதுபோல நடித்துக் கொண்டிருக்கிறார்கள். ஒரு மாணவன் மும்தாஜ்! இன்னொருவன் ஷாஜஹான். ஒருவன் டைரக்டர்; இன்னொருவன் காமிராமேன், வேறொருவன் ஸவுண்ட் என்ஜினீயர், மற்றொருவன் கிளாப் ஸ்டிக் தட்டுகிறவன்!

காதலியாக நடிக்கும் பையன் இந்தி 'ட்யூன்' ஒன்றைப் பாடிக் கொண்டு நடனமாடுகிறான். ஷூட்டிங் நடக்கிறது.

''டமார்!'' - திடீரென்று அருகில் வெடிச் சத்தம் ஒன்று கேட்கிறது.

''கட் கட் . . . !''

திரும்பிப் பார்க்கிறோம்.

கீழே யமுனைக் கரையில் ஒருவன் நிஜமாகவே ஷூட் செய்கிறான் அதாவது கொக்கு சுட்டுக் கொண்டிருக்கிறான். அட சட்!

இதற்குள் அந்த வெள்ளைக்காரர்கள் கூட்டமும் அவர்களுடைய கய்டும் மேலே வந்து சேருகிறார்கள்.

கய்டு அவர்களிடம் சொல்லிக் கொண்டிருக்கிறான்: "மும்தாஜ் மேரீட் ஷாஜஹான் இன் 1612. ஷி டய்ட் இன் 1630. ஷாஜஹான் லவ்டு ஹிஸ் ஒய்ப் ஸோ மச். ஸோ ஹிஸ் பியர்ட் வெண்ட் க்ரே விதின் ஸிக்ஸ் மந்த்ஸ் . . . ''

கீழே இறங்கி, வந்த வழியாகவே திரும்பி நடக்கிறோம். திரும்பிச் செல்லும்போது பத்து அடிக்கு ஒரு தடவை நின்று நின்று தாஜ்மகாலைத் திரும்பித் திரும்பிப் பார்க்கிறோம்.

பின்னர் அங்கே ஏதாவது ஓர் இடத்தில் நின்றுகொண்டு தாஜ்மகாலை நம்முடன் சேர்த்துப் போட்டோ எடுத்துக்கொண்டதும்தான் தாஜ்மகாலுக்கு வந்த காரியம் முழுதும் பூர்த்தியானது போன்ற திருப்தி ஏற்படுகிறது. கடைசியாக வெளி வாசலில் போய் நின்றுகொண்டு மீண்டும் ஒரு முறை ஆசை தீரப் பார்த்துவிட்டு அந்த இடத்தைவிட்டுப் புறப்படுகிறோம்.

(ஐயா கம்பாஸிட்டர்! 'ஷா — ஜ — ஹா' இந்த எழுத்துக்களுக்கெல்லாம் வேலையே இல்லை என்று அடிக்கடி குறைப்பட்டுக் கொண்டிருந்தீர்களே! இப்போது திருப்திதானே?)

தீன் மூர்த்தி பவன்

23

'இந்த 'கேட்' வழியாக நேருஜி எத்தனை முறை உள்ளே போய் வந்திருப்பார் . . . .?'

அவருடைய அந்திம யாத்திரை இந்த வழியாகச் சென்றபோது ரேடியோவில் அந்தச் செய்தியை விவரித்தவர், துக்கம் தொண்டையை அடைக்க, நாக்குழற, உணர்ச்சிப் பெருக்குடன் 'நேருஜி இந்த 'கேட்'டைத் தாண்டுவது இதுவே கடைசி முறை' என்று கூறிய வார்த்தைகள் . . .

புது டில்லி தீன்மூர்த்தி மார்க்கத்திலுள்ள நேருஜி வீட்டு வாசலில் போய் நிற்கும்போது, நம் நினைவில் எழுவது இந்த எண்ணங்கள்தான்!

அந்த இல்லம் இப்போது ஒரு ஞாபககாரித்தக் கோயிலாக மாறி விட்டது.

வாசல் தோட்டத்திலுள்ள ரோஜாச் செடிகளைப் பார்த்துக் கொண்டே வராந்தாவில் காலடி எடுத்து வைக்கிறோம். மிகப் பெரிய மாளிகை. பிரிட்டிஷ் அரசாட்சிக் காலத்தில் கமாண்டர்-இன்-சீப் வாசஸ்தலமாக இருந்ததாயிற்றே!

'இவ்வளவு பெரிய வீட்டில் நேருஜியின் படுக்கை அறை எந்த மூலையில் இருக்கிறதோ?' என்று எண்ணியபடியே வராந்தாவில் நடக்கிறோம். அதோ, கடைசி நாளன்று, நேருஜியின் சடலத்தைப் பொதுமக்களின் பார்வைக்காக வைத்திருந்த இடம் . . .!

நம் கண்கள் பனிக்கின்றன. வாயிற் புறத்தை ஒட்டினாற் போலுள்ள ஆபீஸ் அறையில் நாலைந்து பேர் வேலை செய்து கொண்டிருக்கின்றனர்.

டப் . . . டிப் . . . டகடக டக . . . டிப் — டைப்ரைட்டர் சத்தம்.

''நீங்கள்தானே ஆனந்த விகடன். . .? இப்படி வாருங்கள் . . . ஹீரா லாலைப் பார்க்க வேண்டுமா?'' - பண்டிட்ஜியின் அலுவலகத்தில் பணிபுரியும் திரு. ராஜன் எங்களை வரவேற்று விசிட்டர் ஹாலுக்குள் அழைத்துச் சென்று உட்காரச் சொல்கிறார். அங்குள்ள விலை உயர்ந்த கம்பளங்களும், சோஃபாக்களும், நாம் அவற்றின் மீது

நடக்கவும் உட்காரவும் அருகதையுள்ளவர்கள்தானு என்ற எண்ணத்தை உண்டாக்குகின்றன.

இந்த இடத்திலே நேருஜி எத்தனை எத்தனையோ பேருக்குப் பேட்டி அளித்திருப்பார்!

"ஹீராலால் வருவதற்குச் சற்று நேரம் ஆகும் போலிருக்கிறது. இதற்குள் நீங்கள் மாடிக்குப் போய் நேருஜியின் அறைகளைப் பார்த்து விட்டு வந்து விடுங்கள். உங்களுக்குத் துணையாக ஒருவரை அனுப்பி வைக்கட்டுமா?'' - திரு ராஜன் எங்களிடம் கூறுகிறுர்.

அவர் அனுப்பி வைத்த ஆசாமியுடன் மாடிக்கு ஏறிச் செல்கிறோம்.

வழவழப்பான மாடிப் படிகள் . . . அதற்கேற்ற பள பளப்பான பொன் வண்ணக் கைப்பிடி . . . சே! வெள்ளைக்காரன் வெள்ளைக்காரன் தான்!

நேருஜியின் படுக்கை அறை, புத்தகங்கள் நிறைந்த அவருடைய லைப்ரரி அறை, வெளிநாட்டு விவகார இலாகா அறை - இவ்வளவே நாம் பார்க்கக்கூடியவை.

மாடியில் ஆங்காங்கே புத்தக அலமாரிகள். வெளி நாட்டுத் தலைவர்களின் படங்கள், நேருஜிக்கு அன்பளிப்பாக வந்த பரிசுப் பொருள்கள், இமயமலையின் வெள்ளிச் சிகரப் படங்கள் . . . புத்தரின் சித்திர உருவங்கள், சிலை உருவங்கள், காந்திஜி, கமலா நேரு, மோதிலால் நேரு, ஸ்வரூப் ராணி இவர்களின் போட்டோக்கள்!

ஒரு தெய்வத்தின் திருக்கோயிலுக்குள் நடமாடுவது போன்ற உணர்வு. கருவறையை பக்திப் பரவசத்துடன் பார்ப்பது போல் பண்டிட்ஜியின் படுக்கையறையை எட்டிப் பார்க்கிறோம். வெறிச்சோடிக் கிடக்கும் கட்டிலும், அதன் மீது விரிக்கப்பட்டுள்ள மென்மையான பஞ்சணையும், தலையணைகளும், திண்டுகளும் அநாதைகளாகிக் கிடக்கும் அவலக் காட்சியைக் காணும்போது, நம் நெஞ்சம் வேதனைக்குள்ளாகிறது.

ஆவடி காங்கிரஸில் அவர் ஒரு திண்டை எடுத்து ராஜாஜி மீது வீசி விளையாடியதும், மீரட் காங்கிரஸ் மகா சபைக் கூட்டத்தின் போது திடீரென்று அவர் மேடை மீது எழுந்து நின்று, பத்திரிகை நிருபர் ஒருவர் மீது திண்டை எடுத்து வீசியதும் நினைவுக்கு வருகின்றன,

படுக்கையின் வலது பக்கத்தில் ஒரு ஸ்டூல். அதன் மீது ஒரு சின்ன சீசா. அந்த சீசாவில் இரண்டு ரோஜாப் பூக்கள்!

அதே ஸ்டூல் மீது கைக் கடிகாரம், பகவத் கீதை, கர்ச்சீப், நீல பல்பு பொருத்தப்பட்ட டேபிள் லைட், குறிப்பு எழுதிக் கொள்ளும் சிறு நோட்டுப் புத்தகம் — இவ்வளவும் இருக்கின்றன,

இடது பக்கம் இன்னொரு ஸ்டூல், அதன் மீது சின்ன டைம்பீஸ், புத்தர் படம், நடுவில் ஒரு தட்டு, அதன் மீது பேனாவைப் போன்ற டார்ச் விளக்கு.

இடது பக்கச் சுவர் ஓரமாகப் புத்தக அலமாரி ஒன்று. அதன் மீது வெள்ளிக் குத்துவிளக்கு, மோதிலால் நேருவின் படம், விஜயலட்சுமி பண்டிட் படம், கண்ணாடி ஜார் ஒன்று.

கட்டிலுக்கெதிரில் கால்மாட்டில் இன்னொரு ஸ்டூல். அதன் மீது டேபிள் மின்சார விசிறி, அந்தப் பக்கச் சுவரில் புத்தர் சிலை, இந்திரா காந்தியின் இரு புதல்வர்கள், கமலா நேரு, ஸ்வரூப் ராணி இவர்களின் படங்கள். நேருஜியின் கையில் கட்டுவதற்கென அவருடைய சகோதரி கிருஷ்ணா ஹத்தீசிங் கொண்டு வந்த ரட்சாபந்தனம். (இந்தியில் இதை 'ராகி' என்கிறார்கள்.) எதிரில் ஒரு சோபா, நாற்காலி. அதன் பக்கத்தில் ஒரு டேபிள் லைட், கண்ணாடிக் கூடு, சிகரெட் கேஸ், தீப்பெட்டி, 'தி இல்லஸ்ட்ரேடட் லண்டன் நியூஸ்' என்னும் பத்திரிகை.

இன்னோர் அலமாரி நிறையப் புத்தகங்கள், நேருஜியின் உடைகள் வைக்கப்படும் பர்மாப் பெட்டி ஒன்று. மடித்து வைக்கப்பட்ட மூவர்ணக் கொடி ஒன்று. நேருஜியின் இல்லத்தின்மீது பறந்து கொண்டிருந்த அந்தக் கொடி அவர் மறைவுக்குப் பின் கீழே இறக்கப்பட்டது.

கட்டிலுக்குப் பின்புறத்துச் சுவரில் மிக அழகான இமாலயச் சிகரப் படம். இமயமலைச் சிகரங்களைக் காணும் போதெல்லாம் நேருஜி கட்டுக் கடங்காத பரவசத்தில் ஆழ்ந்து விடுவதுபற்றியும், மூன்றாண்டு காலம் பாதுகாப்புக் காவல் கைதியாக இருந்த அவர், 1945-ல் விடுதலை பெற்றதும் காஷ்மீருக்கு விரைந்து சென்று சில தினங்கள் அந்த மலைப் பகுதியில் தங்கியிருந்ததுபற்றியும் நம் நினைவுக்கு வருகின்றன.

அடுத்தாற்போல் புத்தக அலமாரிகளுக்குள் நம் கண்ணோட்டம் செல்கிறது:

The Ascent of Everest
The Art and Architecture of India
The Man Eater of Malgudi
Chemmeen
Buddhist Shrines in India
The Prophet
The Destiny of Civilization
Between Oxus and Jamna

திருக்குறள் ஆங்கில மொழி பெயர்ப்பு
இங்கிலீஷ் ஸான்ஸ்க்ரிட் டிக்ஷனரி
உலகம் சுற்றினேன்.

நம் பார்வையில் விழும் சில புத்தகங்கள் இவை.

நேருஜி இரவெல்லாம் கண் விழித்துப் படிப்பது, நல்ல புத்தகங்களின்மீது அவருக்குள்ள ஆர்வம், பீடர் செய்னி, அகாதா கிறிஸ்டீ ஆகிய ஆசிரியர்களின் நாவல்களைப் பிரயாணத்தின்போது படிக்கும் வழக்கம் இதெல்லாம் நம் ஞாபகத்துக்கு வருகின்றன. அத்துடன் திரு கே. பி. எஸ். மேனன் எழுதிய புத்தகத்துக்கு அவர் எழுதிய முன்னுரையில் சில வரிகளும் நம் நினைவில் தோன்றிக் கண்ணீர் சிந்த வைக்கின்றன.

''இப்போதெல்லாம் நான் அலமாரிகளில் நிறைந்திருக்கும் புத்தகங்களைக் காணும்போது மிகுந்த வருத்தத்துக்குள்ளாகிறேன். சிற்சில சமயங்களில் அவற்றில் ஏதேனும் ஒன்றை ஆசையோடு வெளியிலெடுத்துச் சற்று நேரம் என் கையிலேயே வைத்திருந்து விட்டு மீண்டும் பழையபடியே அது இருந்த இடத்தில் வைத்து விடுகிறேன்! பிறகு என்னுடைய உற்சாகமற்ற ஆபீஸ் பைல்கள் பார்க்கும் கடமையை நாடிச் செல்கிறேன். அப்புறம் அதைக் காட்டிலும் உற்சாகமற்ற 'பேட்டி'களுக்குப் போகிறேன். இது காலத்துடன் நான் தொடர்ந்து நடத்திக் கொண்டிருக்கும் ஒரு ரேஸ். இந்த ரேஸில் காலம்தான் எப்போதும் வெல்லும்.''

அடுத்தாற்போல் அவருடைய ஆபீஸ் அறைக்குச் செல்கிறோம். அங்கே அவருடைய மேஜைமீது டைப் செய்யப்பட்ட ஒரு தபால் இருக்கிறது. அதன்மீது ஒரு பேப்பர் வெயிட். அந்தக் கடிதத்தின் ஓரத்தில் சிறு குறிப்பு ஒன்று எழுதி அதன் கீழ் 'ஜவஹர்லால்' என்று கையெழுத்துப் போடப்பட்டிருக்கிறது, அதுதான் அவர் போட்ட கடைசிக் கையெழுத்தாயிருக்குமோ என்னவோ? அங்கிருந்து வெளிநாட்டு விவகார அலுவலக அறைக்குள் செல்கிறோம். அங்கே இரண்டு மூன்று விதமான வர்ணங்களில்-வெளிநாடுகளுடன் தொடர்பு கொள்ளக்கூடிய டெலிபோன்கள், நவீன மோஸ்தரில் வளைவாக அமைக்கப் பெற்ற ஒரு மேஜை; அயல் நாட்டு அரசியல் தலைவர்கள், ஸ்தானிகர்கள் எல்லோருக்கும் பேட்டி கொடுப்பது அந்த அறையில்தான்.

வர்ணப் பென்சில்கள், பேனாக்கள், பேப்பர் வெயிட்டுகள், பேப்பர் கட்டர்கள் எல்லாம் வருத்தமே வடிவமாகக் காட்சி தருகின்றன. டெலிபோன்கள் மௌனமாகத் துக்கம் கொண்டாடிக் கொண்டிருக்கின்றன.

லைப்ரரி அறையில் காந்திஜியும், தாகூரும், கலீல் கிப்ரானும், டாயின் பீயும், பெஞ்சமின் ரௌலண்டும், ஜான் ஹண்ட்டும், இன்னும் நூற்றுக்கணக்கான மேதைகளும், அறிஞர்களும், ஆசிரியர்களும் எழுதிய புத்தகங்கள் . . .

"ஹீராலால் தோட்டத்தில் ரெடியாக இருக்கிறார். நீங்கள் தோட்டத்தையும் பார்த்துவிட்டு, அங்கேயே அவருடன் பேசிவிடலாமென்று ராஜன் சொல்லச் சொன்னார்.''

நாங்கள் தோட்டத்துக்குச் செல்கிறோம்.

விசாலமான அந்தப் பெரிய தோட்டமெங்கும் பச்சைப் பசேரென்ற பசும் புல்தரை வெல்வெட்டைப் போல் பரந்து கிடக்கிறது. ஒரு பக்கத்தில் நேருஜிக்குப் பிடித்தமான ரோஜாச் செடிகள். இன்னொரு பக்கம் காய்கறித் தோட்டம், மற்றொரு பக்கம் நேருஜியால் அன்புடன் வளர்க்கப்பட்ட பிராணிகள் வாழும் இடம்,

ஒரு மரத்தின் கீழ் நேருஜியின் சிலை. பன்னிரண்டு ஆண்டு காலமாக பண்டிட்ஜிக்கு ரோஜா மலர் பறித்துக் கொடுத்துக் கொண்டிருந்த ஹீராலால் அந்தச் சிலைக்கு மலர் மாலை சூடிக் கொண்டிருக்கிறார். கண்ணியமும் நேர்மையும் கொண்ட தோற்றம். நேருஜியைப் பிரிந்துவிட்ட சோகம் இன்னமும் அவர் முகத்தில் தெரிகிறது.

''நேருஜிக்கு ஒரு நாளைக்கு எத்தனை முறை பூ கொடுப்பீர்கள்?''

நான் தமிழில் கேட்கும் கேள்விகளை, மதராஸ் ஹவுஸ் ரிஸப்ஷன் ஆபீசர் திரு தீனதயாள், அவரிடம் மொழி பெயர்த்துச் சொல்கிறார்.

ஹீராலால் ஹிந்தியில் பதில் கூறுகிறார்;

''நேரிடையாக யாருமே பூக்கொடுப்பதில்லை. பண்டிட்ஜியின் அறைக்குள், அவர் பார்வை விழுகின்ற இடங்களில், அங்கங்கே ரோஜா மலர்களை வைத்திருப்போம். ஒரு நாளைக்கு மூன்று முறை அவர் பூ வைத்துக் கொள்வார். சட்டைப் பித்தான் துவாரத்துக்குள், கழுத்திலிருந்து எண்ணினால் மூன்றாவது துவாரத்தில்தான் அவர் பூ அணிந்து கொள்வார். எட்டரை மணிக்கு ஒரு பூ! அப்புறம் பன்னிரண்டு மணிக்கு ஒரு பூ! மூன்று மணிக்கு இன்னொன்று. டிரஸ்ஸிங் டேபிள் மீது சின்ன சீசாவில் வைத்திருப்பேன். வாடாமலிருக்க வேண்டுமென்பதற்காக ஏர்கண்டிஷன் பிளாண்ட் பக்கத்திலும் வைத்திருப்பேன்.''

''எந்தக் கலர் ரோஜா அவருக்கு ரொம்பப் பிடிக்கும்?''

'லால் ரங் ஜாதா பஸந்த் கர்த்தா.'

'ரெட் ரோஸ்தான் ரொம்பப் பிடிக்குமாம்!' — மொழி பெயர்ப்பு.

''இஸ் கார்டன் மே ரெட் கலர் ஹை. பிங்க் ஹை. ஒய்ட், யெல்லோ, ஸப் ஹை! . . . . பண்டிட்ஜி சில சமயம் பால்கனியிலிருந்தபடியே தோட்டத்திலுள்ள செடிகளை மகிழ்ச்சியோடு பார்த்துக்கொண்டிருப்பார். காலையில் ஐந்தரை மணிக்கெல்லாம் எழுந்து விடுவார் . . . .''

''ஆசனம் செய்வாரா?''

''அதெல்லாம் எனக்குத் தெரியாது. பொய் பேச மாட்டேன். தெரிந்ததைத்தான் சொல்வேன் . . . என் மேல் பண்டிட்ஜிக்கு ரொம்ப விசுவாசம். எத்தனையோ பேர் இங்கே வேலை செய்கிறார்கள். இருந்தாலும் என் மேல் தான் அவருக்கு ரொம்பப் பிரியம். எனக்கும் அவரிடம் அளவு கடந்த விசுவாசம். வெறும் கூலிக்காக நான் வேலை செய்யவில்லை. இந்த வீட்டுக்குள் எந்த அறைக்கும் நான் சுதந்திரமாகப் போய் வருவேன். என்னை யாரும் தடுக்க மாட்டார்கள்!''

''தங்களுக்கு எப்போதாவது 'பக்ஷீஸ்' கொடுத்திருக்கிறாரா?''

''ஒரே ஒரு தடவை கொடுத்தார். எனக்கு மட்டுமில்லை. இங்கு வேலை செய்கிறவர்கள் எல்லோருக்குமே கொடுத்தார். அவருடைய பிறந்த நாள், ஹோலிப் பண்டிகை, ஜனவரி 26ந் தேதி இம் மூன்று நாட்களிலும் எல்லோருக்கும் மிட்டாய் கொடுப்பார்!''

''தினமும் எத்தனை மணிக்கு வேலைக்கு வருகிறீர்கள்?''

''ஆறரை மணிக்கு வருவேன். சைக்கிளில்தான் வருவேன். பன்னிரண்டு வருஷமாக வந்து கொண்டிருக்கிறேன். இதுவரை ஒரு நாள் கூட லேட்டாக வந்ததில்லை. 'ஏன் லேட்?' என்று கண்ட்ரோலர் எவரும் என்னைக் கேட்டதில்லை.''

''இங்கே வேலைக்கு வருவதற்குமுன் என்ன செய்து கொண்டிருந்தீர்கள்?''

''உருளைக் கிழங்கு, பழம் இதெல்லாம் பயிர் செய்துகொண்டிருந்தேன். டைனிங் டேபிள் ப்ளவர் டெகரேஷன் செய்யத் தெரியும் எனக்கு . . . .''

''குழந்தைகள் இருக்கிறார்களா?''

''ஒரு பையன் இருக்கிறான். அவன் எப்போதாவது இங்கே வருவான். பண்டிட்ஜி அன்போடு அவன் முகவாயைப் பிடித்துத் தடவி அவன் பெயர், படிப்பு இதெல்லாம் பற்றி விசாரிப்பார்.''

''இங்கே தோட்டத்துக்கு வருகிறபோது உங்களோடு பேசுவாரா?''

''ஊஹூம்; தோட்டத்திலுள்ள இலைகள், கிளைகள், பூக்கள், காய்ந்த குச்சிகள் இவற்றோடெல்லாம் பேசுவது போல் உறவாடி விட்டுச் செல்வார். அதோ அந்த மரத்தின் கீழே மஞ்சள் நிற நாற்காலி மீது உட்கார்ந்து சற்று நேரம் படிப்பார். அப்போது

நிழலுக்காக சிவப்பு வர்ணக் குடை ஒன்று கொண்டு வந்து வைப்பார்கள். இந்தத் தோட்டத்தில் பெரிய பெரிய பார்ட்டிகள் நடப்பது வழக்கம். படா படா ஆத்மிகளெல்லாம் வருவார்கள். அதற்கெல்லாம் நான்தான் டெகரேஷன் செய்வேன். அம்மாதிரி நாட்களில் பண்டிட்ஜி முன்னுடியே இங்கு வந்து ஏற்பாடுகள் சரியாயிருக்கிறதா என்று பார்ப்பார். பார்த்துவிட்டு, 'பஹுத் அச்சா ஹை!' என்று கூறிவிட்டுப் போவார்.''

''இந்தத் தோட்டத்துக்கு யாரெல்லாம் வந்திருக்கிறார்கள்?''

''எலிசபெத் ராணி, சவுதி அரேபிய அரசர், புல்கானின், குருஷ்சேவ், மிஸஸ் கென்னடி, நாசர் . . .''

''நேபால் ராஜா?'' என்று குறுக்கிட்டேன்.

''அவர்தான் அடிக்கடி வருகிறாரே! குருஷ்சேவ் விருந்து சாப்பிட வந்தபோது நான் இங்கே டேபிள் டெகரேஷன் செய்து கொண்டிருந்தேன். நேருஜியும் குருஷ்சேவும் லஞ்சுக்கு இந்தப் பக்கமாகப் போய்க் கொண்டிருந்தார்கள். அப்போது பண்டிட்ஜி என் கையைப் பிடித்து குருஷ்சேவிடம் காட்டி, 'இவர் தான் இங்கே டெகரேஷன் செய்கிறவர்' என்றார்.

''குருஷ்சேவ் மகிழ்ச்சியோடு என் கைகளைக் குலுக்கினார், குருஷ்சேவுடன் வந்தவர்கள் எனக்கு இரண்டு மெடல்கள் கொடுத்து விட்டுப் போனார்கள்.'' — ஹீராலால், முகத்தில் மகிழ்ச்சியும் பெருமையும் பொங்கக் கூறுகிறார்.

''நேருஜியின் கடைசி தினத்தன்று நீங்கள் என்ன செய்து கொண்டிருந்தீர்கள்?''

''தினமும் காலையில் வந்ததும் ப்ளவர் வாஸ் தண்ணியெல்லாம் மாற்றிவிட்டுப் பூ வைப்பேன். அன்றும் இந்த மாதிரி வேலை செய்து கொண்டிருந்தேன். மணி எட்டரை ஆகிவிட்டது. ஸெக்யூரிட்டி ஆபீசர் வந்து 'இன்று அவருடைய அறைக்குப் பூ எடுத்துப் போக வேண்டாம். அவருக்கு உடம்பு சரியில்லை' என்று கூறிவிட்டார். அப்புறம் எனக்கு எந்த வேலையும் ஓடவில்லை. ஒன்றுமே தோன்றவில்லை. பண்டிட்ஜியின் அந்திம யாத்திரைக்கு டெகரேஷன் செய்ய வேண்டிய துர்ப்பாக்கிய நிலை அன்றே ஏற்பட்டு விட்டது. அதையும் நான்தான் செய்தேன். கன் கேரேஜுக்கும் டெகரேஷன் செய்தேன். பண்டிட்ஜியை வராண்டாவில் கீழே கொண்டு வைத்த போதும் நான்தான் . . .'' —ஹீராலால் கண்கள் கலங்கி வார்த்தையை முடிக்க முடியாமல் திணறுகிறார்.

''இப்போது என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்?''

''அவர் போட்டோவும் சிலையும் இருக்கிற இடங்களுக்கெல்லாம் போய் ரோஜா மலர்களை வைக்கிறேன் . . . அவை வாடியதும் மறு

படியும் வைக்கிறேன். அவற்றை வைக்கும்போது அவர் உயிருடன் இருப்பதுபோல் தோன்றும் . . . .''

''இந்திரா காந்தி இந்த வீட்டுக்கு அடிக்கடி வருகிறார்களா?''

''எப்போதாவது வருவார்கள். என்னைக் கூப்பிட்டு பூக் கொண்டு வரச் சொல்லுவார்கள். நான் கொடுக்கும் பூவை அவர் படுக்கை மீது வைத்து விட்டுப் போவார்கள். நேற்று (14-9-64) கல்கத்தாவிலிருந்து பத்மஜா நாயுடு பூச்செண்டு கொண்டு வந்து நேருஜியின் கட்டில் மீது வைத்து விட்டுப் போனார்கள். இன்னும் கூட அந்தப் பூக்கள் வாடாமல் அப்படியே இருக்கின்றன. தயவு செய்து இனிமேல் என்னை ஒன்றும் கேட்காதீர்கள். எனக்குத் துக்கம்தாங்கவில்லை . . . '' - ஹீராலால் குரல் கரகரக்கிறது.

''போய் வருகிறோம். நமஸ்தே!''

''நமஸ்தே பாபு!''

ஊட்டி

24

சில்லென்று பச்சிலைக் காற்று வீசுகிறது. யூகலிப்டஸ் வாசனையும், காட்டுச் செடி கொடிகளின் அடர்ந்த நெடியும் மூக்கைத் துளைக்கின்றன. ரயில் பாதையின் இரு புறங்களிலும் சின்னஞ் சிறு மலர்கள், எண்ணற்ற வண்ண மலர்கள் பூத்துச் சிரிக்கின்றன. ஊதா, சிவப்பு, மஞ்சள், ஆரஞ்சு, ரோஸ் - இப்படி எத்தனை எத்தனையோ நிற பேதங்கள்!

பச்சைப் பசேலென்ற மலைச் சரிவுகள்; அதற்குப் பின்னால் நீல வானம்; பக்கங்களில் பார்த்தால் 'கிடு கிடு' பள்ளத்தாக்கு!

"குப் . . . குப் . . . குப்!"

ரெயில் வண்டி பல்லைக் கடித்துக்கொண்டு நீலகிரி மலைமீது ஏறிச் செல்கிறது. ஆமாம்; தண்டவாளங்களுக்கிடையே உள்ள பற்களைக் கடித்துக்கொண்டுதான்!

மலைச் சிகரங்களைத் தழுவிச் செல்லும் வெண்மேகக் கூட்டங்கள்! பாக்கு மரங்களும் தேக்கு மரங்களும் எழுப்பும் 'ஹோ'வென்ற ஓசை! சிற்றருவிகளின் சலசலப்பு! நம் உடலில் உள்ள கோடை உஷ்ணம் கொஞ்சம் கொஞ்சமாக மறைந்து லேசாகக் குளிரத் தொடங்குகிறது.

அட்டர்லி

லவ்டேல்

பர்ன்ஹில்ஸ்

வழியில் வரும் சில ஸ்டேஷன் பெயர்கள் இவை. ரயில் மெதுவாக ஊர்ந்து, நெளிந்து, வளைந்து, நின்று நிதானித்து, பெருமூச்சு விட்டபடியே அடி அடியாக முன்னேறிக் கடைசியில் ஏழாயிரத்து ஐந்நூறு அடியோடு நின்று விடுகிறது - ஆமாம்; அடியோடுதான் நின்று விடுகிறது. காரணம் அதற்குமேல் போவதற்குத் தண்டவாளம் இல்லை!

ஒத்தகமந்து என்ற ஸ்டேஷன் பெயரும், '7500 Feet Above Mean Sea Level' என்ற எழுத்துக்களும் கண்ணில் படுகின்றன.

"ஊ . . . ஊ . . . ஊட்டி வந்தாச்சு!" - ஒரு பெரியவர் குளிரில் நடுங்கியபடி கூறுகிறார்.

"வ . . . வ . . . வந்தாச்சா? அதுக்கு ஏன் இப்படி நடுங்கறீங்க?'' - இது அவர் மனைவி.

ஸ்டேஷனுக்கு வெளியே செல்கிறோம். டாக்ஸிக்காரர்கள் நம்மைச் சூழ்ந்து கொள்கிறார்கள். ரோடு முழுதும் மழையில் நனைந்து கிடக்கிறது. சற்று நேரத்துக்கு முன்தான் நல்ல மழை பெய்திருக்க வேண்டும் என்பதை உணர்கிறோம். மலை வாசஸ்தலங்களுக்கே உரிய கோளாறு இதுதான்.

சற்று நேரம் மழை பெய்யும்!

சற்று நேரம் வெயில் அடிக்கும்!

சற்று நேரம் குளிரும்!

ஆனாலும் சீசனுக்குச் செல்கிறவர்கள் இதைப் பொருட்படுத்துவதில்லை. மலைச் சரிவுகளில் ஏறிக்கொண்டும் இறங்கிக்கொண்டும் இருப்பார்கள். ஒன்று நிச்சயம்; மலைவாசிகள் ஏறினால் இறங்கி விடுவார்கள். இந்த விலை வாசிகள் ஏறினால்தான் இறங்குவதே இல்லை!

ஞாயிற்றுக்கிழமை. மழை விட்டு விட்டுப் பெய்கிறது. பெய்து பெய்து விடுகிறது. மலைச் சரிவுகளில், ரோடு ஓரங்களில் எங்கே பார்த்தாலும் பெருங் கூட்டம் கூடி நிற்கிறது. கொட்டுகிற மழையில் குடையைப் பிடித்துக்கொண்டு அப்படி என்னத்தை வேடிக்கை பார்க்கிறார்கள்?

''குடையை மடிச்சுப் போடுங்கய்யா! பின்னாலே இருக்கவங்க பார்க்க வேணும்?'' - கூட்டத்தில் ஒரு குரல்.

''நாலாம் நம்பர் வருதாம்?'' - இன்னொரு குரல்.

''யார் சொன்னது?'' - வேறொரு குரல்.

''இன்பர்மேஷன் . . . '' - முதல் குரல்.

''நாலாம் நம்பர் வராதாம்'' - இன்னொரு குரல்.

''யார் சொன்னது?'' - முதல் குரல்.

''இன்பர்மேஷன்'' - வேறொரு குரல்.

ரேஸ் மைதானத்தில் குதிரைகள் ஓட ஆரம்பிக்கின்றன. சில குதிரைகள் வழுக்கி விழுகின்றன. சில குதிரைகள் வழுக்காமலேயே விழுகின்றன. விழுந்தது போக மிஞ்சுவது ஒன்றிரண்டுதான். அவைதான், 'வின்' 'பிளேஸ்' எல்லாம்!

இப்போது அவற்றின்மீது பணம் கட்டியவர்களெல்லாம் ஓடுகிறார்கள் - கவுண்ட்டரை நோக்கி - பணம் வாங்க.

வட நாட்டுக்காரர்கள், தமிழ் நாட்டுக்காரர்கள், வெளிநாட்டுக்காரர்கள் எல்லோரும் சீசனுக்கு வந்திருக்கிறார்கள். அவ்வளவு பேரும் ரோடுகளில், ஓட்டல்களில், பொட்டானிகல் கார்ட

னில், ஏரியில் ஒருவரை ஒருவர் திரும்பத் திரும்பச் சந்தித்துக்கொள் கிறார்கள்.

இந்த சீசனில் ஊட்டியில் சந்தித்துக்கொள்ளும் நண்பர்கள் யாராயிருந்தாலும் அவர்கள் கேட்கக்கூடிய கேள்விகளும் சொல்லக் கூடிய பதில்களும் ஒரே மாதிரியானவைதான்.

''எப்போது வந்தீர்கள்?''

''இரண்டு நாளாச்சு!''

''எங்கே ஸ்டே? தாசப்பிரகாஷா?''

''இல்லே; உட்லண்ட்ஸ் . . . ''

''எப்போது ரிடர்ன் . . . ?''

''பிளவர் ஷோ முடிஞ்சதும்.''

''ராஜ்கபூர் ஷூட்டிங் பார்த்தீங்களா?''

''அதுக்குத்தான் போறேன். பொட்டானிகல் கார்டனில் தானே?''

நாமும் பொட்டானிகல் கார்டனுக்குச் செல்கிறோம்.

''அதோ பார் ராஜ்கபூர்!''

''வைஜயந்தி எங்கேடா?''

''வெயில் அடிக்கல்லயே?''

''வெயில் அடிச்சாத்தான் வருவாங்களா?''

''இல்லாட்டி எப்படி ஷூட்டிங் நடக்கும்? அவுட் டோராச்சே!''

''அதோ, அதோ வருது!''

''யாரு வைஜயந்தியா?''

''இல்லே - வெயில்!''

''வைஜயந்தியைக் காணோமேடா?''

''வருவாங்கடா . . . ''

''அதோ வராங்களே!''

''அது அவங்க அம்மா வசுந்தரா! பாட்டி எங்கே காணோம்?'',

கடைசியாக வைஜயந்தி வருகிறார். ராஜ்கபூர் முகம் மலரு கிறது.

''ஓய் டிலே . . . ?'' - ராஜ்கபூர் வைஜயந்தியைக் கேட்கிறார்.

''நோ ராஜ்! ஐ வாஸ் ஹியர் ஆல் தி டைம் . . .'' - வைஜயந்தி தன் இனிய குரலில் பேசுகிறார். அது வீணையில் இங்கிலீஷ் நோட் வாசிப்பது போலிருக்கிறது.

''கமான் லெட்டஸ் ஸ்டார்ட்! க்விக்! ஸ்டார்ட் கேமரா!'' - இது ராஜ்கபூர்.

''துனியா மே . . . '' என்ற ரிகார்ட் செய்யப்பட்ட பாட்டை வைக்கிறார்கள்.

'துனியா மே' இல்லாத இந்தி சினிமா ஏது?

இந்தச் சமயம் பார்த்து ஒரு போலீஸ்காரர் குறுக்கே போகிறார்.

''கட்! கட்!''

''க்யோம் ராஜ்?'' - வைஜயந்தி.

''போலீஸ் ஸாப்! பின்னாலே போ!'' - ராஜ்கபூர் தமிழில் கூறுகிறார். அவர் தமிழைக் கேட்டு வேடிக்கை பார்க்கும் கூட்டம் சிரிக்கிறது!

மதிய நேரத்தில் நாங்கள் ராஜ்கபூரைச் சந்திக்கிறோம்.

''ஊட்டி உங்களுக்குப் பிடித்திருக்கிறதா?'' — நான் கேட்கிறேன்.

''ஓ இடிஸ் லவ்லி! என் படங்களுக்காக நான் இங்கே ஏற்கெனவே மூன்று முறை வந்திருக்கிறேன்.''

''இன்னும் எத்தனை நாள் இங்கே தங்கப்போகிறீர்கள்?''

''மே பி ஒன் மந்த் . .''

''டான்ஸ் குருப்புடன் பெருங் கூட்டமாக வந்திருக்கிறீர்கள் போலிருக்கிறதே. இங்கே ரொம்பக் கஷ்டமாயிருக்குமே!''

''அதை ஏன் கேட்கிறீர்கள்?''

வைஜயந்தி உதட்டுச் சாயத்தைச் சரி செய்து கொள்கிறார். பவுடர் போட்டுக் கொள்கிறார். மேக் அப்பைச் சரி செய்துகொண்டு, மேலங்கியை வீசிக்கொண்டே கையில் ஒரு பெரிய பூச் செண்டுடன் பூங்கொடி போல் ஆடி வருகிறார்.

''ஐ ஆம் ரெடி ராஜ்!''

''துனியா மே . . .'' - மீண்டும் பாட்டு ஆரம்பமாகிறது.

புஷ்பக் காட்சி நடைபெறுகிறது. விதம் விதமான புஷ்பங்கள்! வண்ணங்கள்!

ஹாலி ஹாக், லார்க்ஸ்பர், லிலிஸ் கலெக்ஷன்! — இப்படி எத்தனையோ பெயர்கள்!

''ஏன் ஸார் பாதியிலேயே நின்னுட்டீங்க?'' — ஒருவர்.

''பார்த்துப் பார்த்துக் கண் பூத்துப் போச்சுங்சு'' - இன்னொருவர்.

''இது என்ன பிளவர் ஸார்?''

''காலி பிளவர்!''

ஜீன்ஸ் அணிந்த பெண்கள், புடவை அணிந்த மாதர்கள், கவுன் அணிந்த கன்னியர்கள், பஞ்சாபி உடை அணிந்த பாவையர்கள் — கண்ணைப் பறிக்கும் வண்ண ஓவியங்களாய், கந்தர்வப் பெண்களாய் அந்தப் பூங்கா எங்கிலும் சஞ்சரிக்கிறார்கள்.

"கலகலக்குது காத்து
சலசலக்குது கீத்து
பளபளக்குது சோலே யெல்லாம்
பருவப் பெண்ணைப் பார்த்து
ஆஆஆ — ஓஓஓ!'' —
புஷ்பக் காட்சியில் சினிமாப்பாட்டு ஒலிபரப்பாகிறது.
''ஐயோ சகிக்கலேயே!'' - கூட்டத்தில் ஒருவர்.
ஒரு சின்னத் தொட்டியில் ஒரு சாண் உயரத்துக்கு ஒரு மரம்.
Juniperus Prostrata
Miniature Tree
Age 23 Years
என்று அதன்மீது காகிதத்தில் எழுதி வைக்கப் பட்டிருக்கிறது.

"இதுக்கு இருபத்து மூணு வயசு இருக்குமா குமார்?'' — ஒரு பெண் கேட்கிருள்.

' ஏன் இருக்காது? ஒய் நாட்? இப்ப டீ பிளாண்ட் பார்க்கிறேம். அதுக்கு என்ன வயசு இருக்கும்னு தெரியுமா? அது மாதிரி தான்!''

கறி காய் மார்க்கெட்டுக்குள் செல்கிறோம். பட்டாணி, காலி பிளவர், ப்ளம்ஸ், வால்பேரி, கோஸ், பட்டர் பீன்ஸ், கேரட் — இவ்வளவும் மலே மலேயாய்க் குவிந்து கிடக்கின்றன.

பார்த்தால் பசி தீரும் காட்சி. "உருளைக் கிழங்கு என்னம்மா விலே?''

''கிலோ ஒண்ணேகால் ரூபா!''

''காய்கள் ரொம்ப ஒசத்தி!''

''அதைவிட ஒசத்தி விலே!''

''இது சீசன் விலே. செப்டம்பர்லே வாங்க. சீப்பா போடறேன்.'' — இது கறிகாய் வியாபாரம் செய்யும் 'பொம்பளே.'

''திராசு பிடிக்கத் தெரியாத பசங்கள்ளாம் வந்துட்டானுவ கிலோ போட்டுகிட்டு. போடா! மூணு தரம் கொட்டிக் கொட்டி அளக்கிருன் பட்டாணியை. பாத்தா தெரியல்லேடா உனக்கு தோராயம், பதினஞ்சு பவுண்டுன்னு. கண்ணு பாத்தா வாய் எடை சொல்லணும். அனுபோவம் பத்தாதுடா உங்களுக்கு. மலேயாளத்துலேருந்து வந்துட்டா ஆயிடுச்சா?'' — அதே 'பொம்பளே' பக்கத்துக் கடைக்காரனேப் பார்த்துப் பேசுகிருள்.

"காமராஜ் நாலேந்து நாட்களாக ஊட்டியில் தான் தங்கியிருக்கிருர். முதுமலேக் காட்டுக்குப் போயிருந்தார். இப்போது ராஜ்பவனில்தான் இருக்கிருர். வருகிறீர்களா, பார்க்கலாம்.'' - உதகை டூரிஸ்டு ஆபீசர் திரு தீனதயாள் தரும் செய்தி இது.

அவருடன் ராஜ்பவனுக்குச் செல்கிறோம்.

''வாங்க, உட்காருங்க.'' - காமராஜ்.

''முதுமலேக்குப் போயிருந்தீங்களாமே? மிருகங்கள் பார்த்தீங்களா?''

''மான் பார்த்தேன். புலிக்குட்டி முயலேத் துரத்திகிட்டுப் போச்சு. அதைப் பார்த்தேன்..''

''பைஸன் பார்க்கல்லயா?''

''பைஸன் பாக்கல்லே. காட்டுக்குள்ளே மொத நாள் 'ஸ்பாட் அவுட்' செஞ்சு வைச்சிருந்தாங்க, ஆனல் பாக்க முடியல்லே . . .''

''இங்கே இன்னும் இரண்டு நாள் இருப்பீர்களா?''

''ஆமாம்; குந்தா போயிருந்தேன். இப்படி சுத்தி இருக்க இடமெல்லாம் போய்ப் பார்க்கணுமில்லே? ஊட்டிக்கு வந்தா இங்கேயே உட்கார்ந்துடறுங்க. கார் வசதி இருக்கவங்க — நாலு இடத்துக்குப் போனுத் தானே அவங்களேப் பார்த்துக்கிட்டு நடுத்தர மக்களும் போவாங்க. ஊட்டியைச் சுற்றி நிறைய இடம் இருக்குது. முதுமலே, குந்தா, கூனூர், பைகாரா இப்படி எத்தனே இடமில்லே? அங்கங்கே டி. பி. இருக்குது. நடுத்தர மக்கள் குடும்பத்தோடு வந்து தங்கருப்பலே நிறைய விடுதி கட்டி வைக்கணும். பத்து ரூபாய்க்கு மேலே வாடகை இருக்கக் கூடாது. சமையல் செஞ்சு சாப்பிட வசதி இருக்கணும். அப்பத்தான் டூரிஸம் வளரும் . . .'' -

''ஊட்டியிலே உருளேக் கிழங்கைத் தவிர வேறே பயிர் செய்ய முடியாதா? உருளேக் கிழங்கு பயிர் செய்யறதுக்காக மரங்களேயெல்லாம் வெட்டிடறுங்களாமே?''

''மரங்களே வெட்டக் கூடாதுன்னு சட்டம் இருக்குது . . .'' — காமராஜ்.

''பிரைவேட் ஓனர் வெட்டினு அதை எப்படித் தடுக்க முடியும்?''

''ஏன் முடியாது? அதுக்கும் சட்டம் இருக்குது. கலெக்டரைக் கேட்காமே வெட்டக் கூடாது. ஆனல் அது சரியில்லே. அந்த அதிகாரத்தைக் காட்டிலாகாவுக்கு மாத்திடணும். அப்பத்தான் சரியா வரும்.''

''ஊட்டி நகர எல்லேக்குள்ளே உருளேக் கிழங்கு பயிர் செய்யாமல் தடுக்க முடியாதா?''

''பாக்கணும்; உருளேக் கிழங்கு உற்பத்தி செய்தா ஏகராவுக்கு ஆயிரம் ரூபாய் கெடைச்சுடுது. போதும்னு விட்டுடறுங்க. பூச்சி அடிச்சா ஆயிரம் ரூபாய் கிடைக்குது. இல்லேன்ன ஐந்நூறு. எப்படியும் லாபம்தானே!''

''டூரிஸ்ட் ஹவுஸ் கட்டிக்கிட்டிருக்கோம். நீங்க வந்து பார்க்

கணும்.'' - டூரிஸ்ட் அதிகாரி தீனதயாள் முதல் அமைச்சரைக் கேட்டுக் கொள்கிறார்.

"ஓ! போய்ப் பாப்பமே. அப்படியே ஏரியையும் பார்க்கலாம். வாங்க எல்லாரும் போவோம்.''

கார் டூரிஸ்ட் விடுதிகள் கட்டப்படும் இடத்துக்குப் போய் நின்றது.

''அடுத்த சீசனுக்குள் கட்டி முடிச்சிடுவீங்களா?'' - காமராஜ் கேட்கிறார்.

"முடிச்சிடுவோம் ஸார்!'' - திரு தீனதயாள் பதில் கூறுகிறார்.

"இந்த மரமெல்லாம் வெட்டிடுவீங்களா?''

''வெட்ட மாட்டோம்.''

''அசெம்பிளியை சம்மர்லே ஊட்டியிலே நடத்தலாமே?'' - நான்கேட்கிறேன்.

"நடத்தலாம். மெம்பர்ஸ் ஒத்துக்கிடலே. அவங்களுக்கு இங்கே வந்தா ரெண்டு நாளைக்கு மேலே இருக்க முடியல்லே.''

''ஏன்? இட வசதி இல்லையா?''

''அதைப் பத்திக் கவலை இல்லை. கட்டடத்தைக் கட்டிப் போட முடியாதா என்ன? அவங்களாலே முடியல்லே. சரி, 'லேக்'கைப் பாப்பமா?''

கார் ஏரிக்கரையில் போய் நிற்கிறது. சவாரிக் குதிரைகள் சில அங்கே நின்று கொண்டிருக்கின்றன. திரு காமராஜ் குதிரைக் காரர்களை அணுகி, ''இந்தக் குதிரையிலே ஏறிக்கிட்டு லேக்கைச் சுற்றிவர எவ்வளவு கேட்பீங்க?'' என்கிறார்.

''ஒண்ணரை ரூவாங்க . . .''

படகிலே ஏறிச் செல்கிறோம். ''பாதிலே திரும்பிடுங்க; பதினோரு மணிக்கெல்லாம் போகணும்?'' - திரு காமராஜ்.

படகில் ஏறிச் செல்லும்போது திரு தீனதயாள், ''கோடைக் கானல் மாதிரி இங்கேயும் ஏரியைச் சுற்றி ரோடு போடப் போகிறோம். ஜப்பானீஸ் கார்டன் வைக்கப் போகிறோம்'' என்று தகவல் தருகிறார்.

மறுநாள் காலை.

எங்கள் ஜீப் திரு சி. பி. ராமசுவாமி ஐயர் பங்களாவுக்குள் செல்கிறது.

''நான்தான் சி. பி. ராமசாமி ஐயர் பேசறேன். ட்வெல் தர்ட்டிக்கா?'' - உள்ளே அவர் டெலிபோனில் யாருடனோ பேசிக்கொண்டிருப்பது காதில் விழுகிறது.

அடுத்த நிமிஷம் அவர் வெளியே வருகிறார். தலையில் தலைப்பாகை இல்லை. ஸூட் மட்டும் அணிந்திருக்கிறார்.

''வாங்கோ, மேலே போகலாம்.'' - மாடிப்படிகளில் ஏறிச் செல்கிறார். பின்னோடு நாங்களும் போகிறோம்.

''இப்படி உட்காருங்கோ.''

"தாங்கள் இண்டக்ரேஷன் கௌன்ஸில் மீட்டிங்கிற்கு டில்லி போயிருப்பதாக யாரோ சொன்னார்கள்.''

''இல்லையே! நாளைக்குத்தானே போகப் போறேன்.''

''ஊட்டியைப்பற்றித் தங்கள் கருத்தைச் சொல்ல வேண்டும்."

"சொல்றேனே? எழுதிக்கிறேளா? வேண்டாமா? ஓ... ஞாபகத்திலேருந்தே எழுதி விடுவீர்களா? நான் ஊட்டிக்கு முதல் முதல் அறுபத்தைந்து வருஷத்துக்கு முன்னாலே வந்தேன். அப்புறம் திருவாங்கூர் திவான் பதவியை விட்ட பிற்பாடு இங்கேயே நிரந்தரமாகத் தங்கிவிட்டேன், 1917—ல்தான் இங்கே இந்த வீட்டை விலைக்கு வாங்கினேன். அது ஒரு தனிக் கதை. இதெல்லாம் அதற்கப்புறம் கட்டினது.

டார்ஜிலிங், சிம்லா, நைனிடால் இப்படி இந்தியாவிலுள்ள எல்லா ஹில் ஸ்டேஷனுக்கும் போயிருக்கேன். பிரான்ஸ், இட்டாலி, சுவிட்சர்லாண்ட் முதலிய வெளி நாடுகளுக்கும் போயிருக்கேன். ஆனால் ஊட்டி மர்திரி ஒரு நல்ல இடத்தைப் பார்த்ததில்லை. அதனாலேயேதான் ஊட்டியைத் தேர்ந்தெடுத்தேன். நான் இத்தனை வருஷம் ஆரோக்கியமா இருப்பதற்கே ஊட்டி வாசம்தான் காரணம்...''

''மெட்ராஸிலே இருப்பதே இல்லையா?''

''வருஷத்தில் பத்து நாட்கள் இருப்பேன். ஊட்டி கிளைமேட் எப்பவும் ஒரே நிதானமா இருக்கும். அதிகக் குளிரும் இல்லே. அதிக வெப்பமும் இல்லே. அதிக மழையும் இல்லே.''

''பொழுது போவதற்கு என்ன செய்வீர்கள்?''

''புஸ்தகம் எழுதிக் கொண்டிருப்பேன். இப்பக்கூட 'மெமாயர்' எழுதிக் கொண்டிருக்கேன். தினமும் நாலு மைல் நடக்கிறேன்.''

டெலிபோன் மணி அடிக்கிறது.

"இதோ பேசிட்டு வந்துடறேன். உள்ளே பெயிண்ட்டிங்ஸ், க்யூரியோஸெல்லாம் இருக்கு. பாருங்களேன். போய்ப் பாருங்க...''

உள்ளே போய் அங்குள்ள கலைப் பொருள்களையெல்லாம் பார்க்கத் தொடங்குகிறோம்.

அவர் திரும்பி வருகிறார்.

''பார்த்தீர்களா? இது திபேத்திலிருந்து வந்தது. அவலோகதீசுவரா! இது ஜப்பானிய 'ஹராகிரி'க் கத்தி! கேள்விப்பட்டிருப்பீர்களே!'' - உறையிலிருந்து கத்தியை உருவிக் காட்டுகிறார். ''இதோ பாருங்க. இதுவும் ஜப்பான் தேசத்தில் செய்ததுதான்,

ஒரே மூங்கிலில் செய்தது. புத்தர் சிலை. ஜப்பானியர்கள் வெளியே செல்லும்போது இதைக் கையோடு எடுத்துச் செல்வார்கள். சிங்கிள்பாம்பூ பீஸ்!

''நீங்க 'ஓக் ட்ரீ' பார்த்திருக்கீங்களா? வாங்க காட்டுகிறேன்.'' கீழே இறங்கித் தோட்டப் பக்கம் செல்கிறார். நாங்களும் அவரைத் தொடர்கிறோம்.

வழியிலே கிடக்கும் குச்சிகளைக் குனிந்து எடுத்து அப்பால் போடுகிறார்.

''அதோ அதுதான் ஓக் ட்ரீ! அதுக்கு வயசு இருநூற்றைம்பது. ஊட்டியிலேயே ஓல்டெஸ்ட் ட்ரீன்னு சொல்லலாம்.''

''ஊட்டியில் முக்கியமாகச் செய்ய வேண்டிய அபிவிருத்தி என்ன வென்று சொல்ல முடியுமா?''

''சர்க்கார், ரோடுகளுக்கு அதிகப் பணம் செலவழிக்கவில்லை. ட்ரீ கட்டிங்கை நிறுத்தணும். ட்ரெயினேஜ் போறாது. உருளைக் கிழங்கு பயிரை நகர எல்லைக்குள் நிறுத்த வேண்டும். அதனால் எலி வருகிறது.''

''தங்களைக் கண்டு பேசியதில் பெருமகிழ்ச்சி அடைகிறோம். நாங்கள் போய் வருகிறோம்.''

''போய் வாருங்கள். காட் ப்ளெஸ் யூ!'' என்கிறார் டாக்டர் சி. பி.

''இதுதான் தொட்டபெட்டா பீக்! பார்த்தீங்களா? சென்னை ராஜ்யத்திலேயே மிக உயரமான இடம் இதுதான். இங்கிருந்து கூனூர், வெலிங்டன், கோயமுத்தூர் சமவெளியெல்லாம் தெரியும். இந்தப் பக்கம் மைசூர் வரைக்கும் தெரியும். இதன் உயரம் 8640 அடி. மற்ற ஹில் ஸ்டேஷனுக்கும் ஊட்டிக்கும் ஒரு வித்தியாசம் உண்டு. இங்கே சம்மர்லே மட்டும் தான் வர முடியும்னு ரொம்பப் பேர் நினைக்கிறாங்க. அப்படியில்லே. வருஷம் பூராவும் வரலாம். பதினாலு சதுர மைல் விஸ்திரணம் உள்ள நகரம் இது. எங்கே வேண்டுமானாலும் காரில் போகலாம்.'' - டூரிஸ்ட் ஆபீஸர் தீனதயாள் கூறுகிறார்.

''அப்படியானால் ஊட்டிதான் மிக உயர்ந்த இடம் என்கிறீர்களா?''

''சந்தேகமில்லாமல். சி. பி.யே சொல்லிவிட்டாரே ஸார்!''

தொட்டபெட்டா உச்சியிலிருந்து கீழே இறங்குகிறோம். பிறகு ஊட்டியிலிருந்து மேட்டுப்பாளையத்துக்கு இறங்குகிறோம். அவ்வளவு தான்; நம் உடம்பிலிருந்த குளிரும் கொஞ்சம் கொஞ்சமாக இறங்கி உஷ்ணம் ஏறத் தொடங்குகிறது. கோடை வெயில் கொளுத்துகிறது. உஸ்ஸ்! அப்பப்பா! என்ன மெட்ராஸ் இது!

குடகு

25

இப்போது தலைக் காவேரிக்குப் புறப்படுகிறோம் — அதாவது காவேரி உற்பத்தியாகும் குடகு நாட்டுக்கு.

'கொச்சி மலை குடகு மலை எங்களது நாடு' என்று பாடக் கேட்டிருக்கிறோம் அல்லவா? அந்த நாட்டுக்குத்தான்.

மைசூருக்குப் போய்விட்டால் அப்புறம் குடகு நாட்டின் தலை நகரமான மெர்க்காராவுக்குப் போவது ரொம்பச் சுலபம். மைசூரி லிருந்து பஸ் புறப்படுகிறது. நாலே மணி நேரம் தான் பயணம். பஸ் பயணத்தின்போது கொஞ்சம் முதுகை வலிக்கும். அப்புறம் கொஞ்சம் கழுத்தை வலிக்கும். இன்னும் கொஞ்ச நேரம் போனால் இடுப்பையும் காலையும் வலிக்கும். அவ்வளவுதான். மற்றபடி அதிகச் சிரமம் ஒன்றும் கிடையாது. வழி நெடுகக் காப்பிச் செடி கள், பலா மரங்கள், தேக்கு மரங்கள், ஆரஞ்சு மரங்கள், அவற்றில் பழுத்துக் குலுங்கும் பொன்னிறமான பழங்கள் — இவற்றை யெல்லாம் கண் குளிரப் பார்த்துக்கொண்டே மெர்க்காரா போய்ச் சேர்ந்து விடுகிறோம்.

''குடகு நாட்டின் இயற்கைக் காட்சி ஸ்காட்லாந்து தேசத்தின் இயற்கை வளத்தை நினைவூட்டுகிறது'' என்று இங்கு வரும் இங்கிலீஷ் காரர்கள் கூறுவார்களாம்.

நாம் ஸ்காட்லாந்து தேசத்தைப் பார்த்ததில்லையாகையால் இங்கிலீஷ்காரர்கள் கூறுவதை ஒப்புக் கொள்கிறோம். ஒருமுறை நானும் ஸ்காட்லாந்துக்குப் போய், 'இது எங்கள் குடகு நாட்டைப் போல இருக்கிறது' என்று சொல்லிவிட்டு வராமலா போகிறேன்!

மழை பெய்கிறது. மெர்க்காராவாயிற்றே! வேறு என்ன பெய்யும்? பஸ் ஸ்டாண்டில் ஆரஞ்சுப் பழங்கள் கொட்டிக் கிடக் கின்றன. மெர்க்காராவாயிற்றே! வேறென்ன கொட்டிக் கிடக்கும்?

''குடகு நாட்டு ஆரஞ்சு ரொம்ப விசேஷம். பழத்தோலுக்கும், உள்ளிருக்கும் சுளைகளுக்கும் பற்றே இருக்காது'' என்கிறார் குடகு நண்பர்.

''இந்த உலகில் நாம் எப்படிப் பற்றுற்று வாழ வேண்டும் என்பதை அவை நமக்கு உணர்த்துகின்றன'' என்கிறேன் நான்.

''இங்கிருந்து தலைக் காவேரிக்குச் செல்ல இருபத்தைந்து மைல். டாக்சி வாடகை முப்பது ரூபாய்'' என்கிறார் பஸ் டிரைவர்.

''முதன் முதல் இமயமலையிலிருந்து வந்த அகத்திய முனிவர் குடகு மலையில்தான் குடியேறினார். அப்புறம்தான் பொதிகை மலைக்குச் சென்றார்'' என்கிறார் நண்பர்.

''அகத்திய முனிவர் தலைக் காவேரிக்கு எப்படிப் போயிருப் பார்?'' என்று கேட்கிறார் நண்பர்.

''அப்போதெல்லாம் டாக்சிகள் கிடையாதாகையால் ஸ்கூட்டரில் போயிருப்பார்!'' என்கிறேன் நான்.

டாக்சி பிடித்து பாக மண்டலம் என்னுமிடத்துக்குப் போகிறோம். அங்கிருந்து தலைக் காவேரிக்கு ஏழு மைல்! மேலே போகப் போக நல்ல குளிர் எடுக்கிறது. டாக்சியைத் தலைக் காவேரிக்கு இரண்டு பர்லாங் இப்பாலேயே நிறுத்தி விடுகிறார் டிரைவர்.

''இங்கிருந்து எவ்வளவு தூரம் நடக்க வேண்டும்?'' என்று டிரைவரை விசாரிக்கிறோம்.

''தண்டு பர்லாங் நடக் கொண்டு'' என்கிறார் டிரைவர்.

''அவர் பேசுவது கன்னடமா? தெலுங்கா? மலையாளமா?''

''எந்த இழவா இருந்தால் என்ன? இரண்டு பர்லாங் நடக்க வேண்டும் என்று சொல்கிறான். அது தெளிவாகப் புரிகிறது. அவ்வளவுதானே!''

நடக்கிறோம். செங்குத்தான மலை மீது ஏறிச் செல்கிறோம். மூச்சுத் திணறுகிறது. நமக்கும் முன்னால் சிலர் வேகமாக மலை ஏறிச் செல்கிறார்கள், தலைக் காவேரியில் தண்ணீரே அன்றோடு தீர்ந்து விடுகிற மாதிரி!

காவேரி உற்பத்தியாகும் அழகு மிக்க மலைச் சிகரத்தில் போய் நிற்கிறோம். முப்பது சதுர அடியில் ஒரு சின்னக் குளம். அதில் இரண்டரை அடி ஆழம் தண்ணீர். குளக் கரையின் மேல் பக்கத்தில் காவிரித் தாயின் திருக் கோயில்.

''இங்குதான் காவேரி ஆரம்பம்.'' - கோயில் குருக்கள் கூறுகிறார்.

''இந்தக் குளத்துக்கு எங்கிருந்து தண்ணீர் வருகிறது?'' என்று கேட்கிறோம்.

''நதி மூலம் ரிஷி மூலம் ஆராயக் கூடாது என்று கூறுவார்கள்.''

''இப்படியெல்லாம் தடுத்துத் தடுத்துத்தான் நமது பெரியவர்கள் நம்முடைய ஆராய்ச்சி அறிவையே மழுங்கச் செய்து விட்டார்கள். அதனுல் நமது இந்தியா தேசம் ஒரு பெரும் விஞ்ஞானியைப் பெற முடியாமற் போய்விட்டது. அந்த விஞ்ஞானி நான்தான்!'' என்கிறேன்.

தலைக் காவேரி பற்றிய தலபுராணம் கூறுகிறது :

''அகத்திய முனிவரைத் தெற்கே போய்த் தவம் புரியுமாறு சிவபிரான் பணித்தார். அகத்தியர் இங்கு வரும்போது கயிலையில் இருந்த புண்ணிய நீரைக் கமண்டலத்தில் எடுத்து வந்தார். வந்தவர் இந்தச் சைய மலை உச்சியிலே வந்து தவமிருக்கத் தொடங்கினுர். அவருடைய கமண்டலத்திலே உறையும் காவிரி நீர் உலகிலே பாயுமாறு செய்தால் நந்தவனம் செழிக்குமென இந்திரனுக்கு நாரத முனிவர் கூறினுர். இந்திரன் அப்போது சாபக் கேட்டினுல் மூங்கில் உருக் கொண்டிருந்தான். மழையின்மையால் நந்தவனம் வாடிக் கருகிக் கொண்டிருந்தது.

இந்திரன் விநாயகரை வேண்டினுன். விநாயகர் காகத்தின் உருக்கொண்டு அகத்தியர் கமண்டலத்தின் மீது போய் உட்கார்ந்தார். குரு முனிவர் காகத்தைத் தமது வலது கரத்தால் துரத்தும் போது கமண்டலம் கீழே சாய்ந்தது. சமயம் பார்த்திருந்த காவிரியும் தன்னை முனிவர் நிலவுலகில் பாயுமாறு பணிப்பதாகக் கருதி ஆறுகப் பெருக்கெடுத்தோடத் தொடங்கினுள்.

காகத்தால் கவிழ்க்கப் பெற்று ஆறுகப் பெருகினமையால் 'காகவிரி' என வழங்கிய பெயரே நாளடைவில் காவிரியாயிற்று...''

''இந்த இடத்தில் ஐப்பசி மாதத்தில் ஒரு பெரிய திருவிழாவே நடக்கும். குடகு நாட்டிலிருந்தும், தென்னுட்டிலிருந்தும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் இங்கு வந்து கூடுவார்கள். காதோலை, கருக மணி, மஞ்சள் குங்குமம் முதலிய மங்கலப் பொருள்களைப் பொங்கிவரும் தலைக்காவிரித் தண்ணீரில் போட்டுப் புதுப் பெண்ணை வாழ்த்தி வழி அனுப்பி வைப்பதுபோல் மகிழ்ச்சி அடைவார்கள். குடகுக்காரர்களுக்குக் காவிரி தங்கள் நாட்டில் உற்பத்தியாகிற பெருமை! மற்றவர்களுக்குக் காவிரி தங்கள் நாட்டைச் செழிக்க வைக்கும் புண்ணிய நதி என்னும் நன்றி உணர்ச்சி'' - கோயில் குருக்கள் கொடுக்கும் தகவல் இது.

இதற்குள் குளக் கரையில் பெரும் கூட்டம் கூடி விடுகிறது. பலர் குளத்தில் இறங்கிக் குளிக்கிறுர்கள். சிலர் குளிப்பவர்களை வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறுர்கள். சிலர் கரையிலிருந்த படியே செம்பிலே தண்ணிரை எடுத்துத் தலையில் ஊற்றிக் கொள்கிறுர்கள். சிலர் குளத்து ஜலத்தைக் கொஞ்சமாக எடுத்துத்

தலையிலே தெளித்துக் கொள்கிறார்கள்!

காவிரியைத் தரிசித்துக்கொண்டு, திரும்பி வரும்போது பாகமண்டலேசுவரரையும் வணங்கிவிட்டு மெர்க்காரா வந்து சேருகிறோம்.

"ஜெனரல் கரியப்பா, கமாண்டர் - இன் - சீப் திம்மய்யா போன்ற வீரர்களைப் பாரத நாட்டுக்கு அளித்த பெருமை குடகு நாட்டைச் சேர்ந்தது. காப்பிக்கும், அழகு மிக்க பெண்களுக்கும் குடகு நாடு பிரசித்தி பெற்றது." - நேருஜி மெர்க்காரா சென்ற போது கூறிய வார்த்தைகள் இவை.

"தேனுக்கும். ஆரஞ்சுக்கும் புகழ் வாய்ந்தது குடகு." - நேருஜி சொல்ல மறந்த வார்த்தை இது!

ஆயிரத்து எழுநூற்று எண்பதாம் ஆண்டிலிருந்து சுமார் பத்து வருட காலம் குடகு நாட்டை ஹைதர் அலியும் திப்பு சுல்தானும் ஆண்டு வந்தார்கள். அப்போது குடகு நாட்டின் அரசர், வீர ராஜேந்திர உடையார் திப்புவுக்கு எதிராகப் போரிட்டபோது பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனி, வீர ராஜேந்திர உடையாருடன் ஒப்பந்தம் செய்துகொண்டு திப்பு ஆட்சியை வீழ்த்தியது. பின்னர் சில காலம் கூர்க்க அரசர்கள், குடகு நாட்டை ஆண்டு வந்தார்கள்.

பிரிட்டிஷ் கமிஷனர்கள் மேற்பார்வையில் ராஜாக்கள் ஆட்சியில் சில காலம் குடகு தனி ராஜ்யமாக இருந்து வந்தது. இப்போது மைசூரின் பத்தொன்பது மாவட்டங்களில் குடகும் ஒன்று.

அந்த நாட்டில் வருடம் ஒன்றுக்கு 120 அங்குலத்திலிருந்து 250 அங்குலம்வரை மழை பெய்கிறது. இவ்வளவு மழை பெய்தபோதிலும் கோடை காலத்தில் மெர்க்காராவில் வாழ்பவர்களுக்குக் குடிதண்ணீருக்குப் பஞ்சம் வந்துவிடுகிறது. மலைச் சிகரங்களானதால் பெய்யும் மழையெல்லாம் கீழே போய்விடுகிறது. குடத்தைக் கவிழ்த்து வைத்திருக்கும்போது குழாயில் தண்ணீர் கொட்டுகிற மாதிரி!

மெர்க்காரா நகரம் 3800 அடி உயரத்தில் இருக்கிறது. குடகு நாட்டின் விஸ்தீரணம் 1500 சதுர மைல். மக்கள் தொகை ஐம்பதாயிரந்தான்.

இந்தியாவின் மொத்தக் காப்பி உற்பத்தியில் மூன்றில் ஒரு பகுதி குடகு ராஜ்யத்தில் விளைகிறது.

சுமார் முப்பதாயிரம் ஏகர் நிலத்தில் ஆரஞ்சு பயிரிடப்படுகிறது. அவற்றிலிருந்து பறிக்கப்படும் ஆரஞ்சுப் பழங்கள் இரண்டாயிரத்து ஐந்நூறு லாரிகளில் ஏற்றப்படுகின்றன.

இவை யாவும் நாம் தெரிந்துகொள்ள வேண்டிய தகவல்கள்.

சரி; இப்போது நாம் மெர்க்காரா டவுன் ஹாலுக்கு அருகே உள்ள குடகு சமாஜத்துக்குச் செல்கிறோம். அங்கே ஒரு கலியாணம் நடக்கிறது.

அழைப்பு இல்லையே என்று சங்கோஜப்படாதீர்கள். கூர்க்க நாட்டுக் கலியாணங்களில் அழைப்பில்லாமல் வருகிறவர்களுக்குத் தான் மரியாதை அதிகம்! ஆரஞ்சு வர்ண நிறமுடைய அழகிய பெண்கள், குடகுப் பெண்களுக்கே உரிய பாணியில் ஆடை அணிந்த வர்கள் பலரை அங்கு பார்க்கிறோம்.

ஆண்கள் வக்கீல்களைப்போல் கறுப்பு கவுன் அணிந்திருக்கிறார் கள். இடுப்பிலே பெல்ட், அந்தப் பெல்டிலே வீரர்கள் வைத்திருப் பது போன்ற கூரிய வாள். கலியாண காலங்களில் எல்லா ஆண் களும் இப்படி 'டிரஸ்' செய்துகொண்டு வருவது தொன்றுதொட்டு இருந்துவரும் வழக்கம் என்று தெரிந்து கொள்ளுகிறோம். க்ஷத்திரிய அரசர்கள் அணியும் உடை இப்படித்தான் இருக்கும் என்பதையும் அறிந்துகொள்கிறோம். கலியாணம் மூன்று நாட்கள் நடக்கிறது. மாப்பிள்ளை வீடு, மணமகள் வீடு - இரண்டு இடங்களிலும் நடக்கு மாம். முகூர்த்தம் நடப்பதற்கு முன்னால் பலவிதமான திருமணச் சடங்குகள் நடக்கின்றன. முகூர்த்தம் முடிந்து விருந்துச் சாப்பாடு ஆனதும், ஆண்களும் பெண்களும் கூடி இஷ்டப்படி கோஷ்டியாக நடனமாடுகிறார்கள். இப்படித்தான் ஆடவேண்டுமென்ற கட்டாயம் இல்லை. அவரவர்களுக்குத் தெரிந்த முறையில் ஆடலாம்!

மாப்பிள்ளை 'குப்புசம்' என்னும் நீளமான வெள்ளைக் கோட்டும் தோளிலே சிவப்புப் பட்டும் அணிந்து கொள்கிறார்.

மணமகள் தன் கணவனுடைய கையிலுள்ள வாளினால் இளநீர்க் காயை வெட்டி, வெற்றிலை பாக்குடன் அதைக் கிணற்று நீரிலே விடு கிறாள். பிறகு மணப்பெண் மூன்று வெள்ளிச் செம்புகளில் கிணற்று நீரை நிரப்பித் தன் தலைமீது ஒன்றின்மேல் ஒன்றாக அடுக்கிக் கொண்டு வந்து சமையலறையில் வைக்கிறாள். இதற்குக் காவேரி பூஜை என்று பெயர்.

நாம் புறப்பட வேண்டிய நேரம் நெருங்கிவிட்டது. ஏனெனில், கலியாண வீட்டில் நம்மையும் சாப்பிடச் சொல்லி உபசரிக்கிறார்கள். சாப்பிட்டால் அப்புறம் ஒருவேளை நடனமாடச் சொல்லுவார்கள்; ஆகையால் மெதுவாக நழுவி வந்துவிடுகிறோம்!

அதோ, மைசூர் போகும் பஸ் புறப்படத் தயாராயிருக்கிறது மீண்டும் முதுகு வலிக்குத் தயாராயிருங்கள்!

சாத்தனூர் அணைக்கட்டு

26

ஐந்தாண்டுத் திட்ட சாதனைகளில் சாத்தனூர் அணைக்கட்டும் ஒன்று. இந்த அணைக்கட்டு, வட ஆற்காடு மாவட்டம், திருவண்ணா மலைக்கு இருபது மைல் தொலைவில் உள்ளது.

இப்போது நாம் போய்க் கொண்டிருப்பது அங்கேதான்.

வட ஆற்காடு மாவட்டத்தில் எத்தனையோ அதிசயங்கள் உண்டு.

கோயில் இருக்கும், சாமி இருக்காது! கோட்டை இருக்கும், ராஜா இருக்க மாட்டார்! ஆறு இருக்கும், தண்ணீர் இருக்காது . . . !

இத்தகைய புகழ்பெற்ற மாவட்டத்தில் அணை கட்டியிருக் கிறார்களே, ஒரு வேளை அதிலும் தண்ணீர் இருக்காதோ என்று அஞ்சியபடியே செல்கிறோம். நல்ல வேளை! அங்கே அணையும் இருக் கிறது; அதில் தண்ணீரும் இருக்கிறது!

இருபது மைல் பிரயாணத்திற்குப் பிறகு, அணைக்கட்டை அடையும்போது இரவு மணி ஒன்பதரைக்கு மேல் ஆகி விடுகிறது. குன்றுகள் சூழ்ந்த அணைக்கட்டுப் பிரதேசம் இருள் மண்டிக் கிடக்கிறது.

"இன்று சனிக்கிழமை ஆயிற்றே! அணைக்கட்டில் 'லைட்' போட மாட்டார்களா?'' - அணைக்கட்டைச் சேர்ந்த ஆசாமி ஒருவரை விசாரிக்கிறோம்.

''ஏழு மணியிலிருந்து ஒன்பது மணி வரைதான் 'லைட்' . . .''

"அப்புறம் . . . ?"

''நைட் . . . ! ஒரே இருட்டுத்தான்!''

''இங்கே தங்குவதற்கு இட வசதி இருக்கிறதா?''

''நிறைய விடுதிகள் இருக்கின்றன. ஒரு ரூமுக்கு இரண்டேகால் ரூபாய் வாடகை . . !"

பணத்தைக் கொடுத்துவிட்டு 'இரேண்டே காலில்' விடுதிக்குப் போய்ச் சேருகிறோம்.

மரங்களும் புதர்களும் சூழ்ந்த காட்டுப் பிரதேசமாயிருப்பதால் அங்கே ஒரு பயங்கர அமைதி நிலவுகிறது.

''இந்தக் காட்டில் புலி கரடிகளெல்லாம்கூட இருக்குமோ?'' என்று கேட்கிறார் நண்பர்.

''இருக்கும் . . . இருக்கும்! யார் கண்டது?'' என்கிறார் இன்னொரு நண்பர்.

''ஜன்னல் கதவைச் சாத்தி வைக்கவேண்டும்'' என்கிறார் முதல் நண்பர்.

''ஏன்?''

''காற்று பலமாக வீசுகிறது; மழை வந்தாலும் வரலாம் . . .''

''புலி வராதே?''

வெளியூர் வாசிகள் பலர் பக்கத்து விடுதிகளில் தங்கியிருக்கிறார்கள் என்பதை அவர்களுடைய பேச்சுக் குரல் மூலம் அறிகிறோம்.

''புலிக்கு இப்படியே ஒவ்வொரு ஆடாக விட்டுக் கொண்டிருந்தால் எப்படி?'' - அடுத்த விடுதியிலிருந்து வரும் குரல் இது.

நண்பர்களின் முகம் பயத்தால் மாறுகிறது. ''பயப்படாதீங்க, 'ஆடு - புலி' ஆட்டம் நடக்கிறது'' என்று தைரியம் கூறுகிறேன் நான்.

பொழுது விடிகிறது. விடுதிக் குழாயிலிருந்து அருவிபோல் கொட்டும் தண்ணீரில் குளித்துவிட்டு, ஓட்டலில் காலை உணவை முடித்துக்கொண்டு அணைக்கட்டைப் பார்க்கப் புறப்படுகிறோம். மலைப் பிரதேசமானதால் ஏறியும் இறங்கியும் செல்லும் பாதையில் நடக்கிறோம்.

அணையின் கீழ்ப் பகுதியில் மலர்கள் சொரியும் செடி கொடிகளும் திவலைகள் உதிர்க்கும் பூம் பொழில்களும் கோலம் காட்டுகின்றன.

''ராத்திரியிலே பாக்கணும் நீங்க இந்த இடத்தை!'' - யாரோ ஒருவர் தம்முடைய நண்பரிடம் சொல்லிக்கொண்டு போகிறார்.

''மைசூர் பிருந்தாவனம் மாதிரி இருக்குமா?''

''அது பெரிசு. இது சிறிசு . . . அவ்வளவுதான்.''

ஆங்காங்கே மனிதர்களைப்போலவே தத்ரூபமாகக் காட்சி தரும் சிலைகள் நம்மைத் திகைக்க வைக்கின்றன. தோட்டக்காரர் ஒருவர் தரையில் குந்திக்கொண்டு நீளமான கத்தியை வீசி வீசிப் புற்களைச்

சீவுகிறுர். அது நிஜ ஆளா அல்லது சிலையா என்று தெரிந்து கொள்ளச் சற்று நேரம் திகைக்க நேரிடுகிறது. கைகால் அசைவி லிருந்து 'சிலையல்ல, நிஜ ஆசாமிதான்' என்று நிச்சயப்படுத்திக் கொள்கிறோம்!

அந்த ஆசாமியை நெருங்கி, ''இன்று இரவு 'லைட்' போடுவாங் களா?'' என்று கேட்கிறோம்.

''சனி ஞாயிறு ரெண்டு நாளும் 'லைட்' போடுவாங்க. ஆனு ஏழுலேருந்து ஒன்பது வரைக்குந்தான். முன்னெல்லாம் பதினேரு மணி வரைக்கும் போட்டுக்கிட்டிருந்தாங்க. சீனு சண்டைக்கப்பறம் நிறுத்திட்டாங்க. அதுக்குப் பின்னுடி கரண்டு கட்டு வந்தது. அப்பாலே இப்பத்தான் மறுபடி போட ஆரம்பிச்சிருக்காங்க.''

''இந்த அணைக்கு எங்கிருந்து தண்ணி வருது?''

''இந்தப் பக்கம் மேக்காலேருந்து வருது . . .''

''அது தெரியும்; எந்த ஆற்றுத் தண்ணீரை இங்கே தேக் கருங்க?''

''பெண்ணையாறுதான் . . . கார்த்தி மாசத்திலே பார்க்கணுமே இந்த இடத்தை - தண்ணி புல்லா ரொம்பி வழிஞ்சி ஓடும் . . .

''ஷூட்டிங் நடக்குதே அப்பப்போ! படம் எடுக்கணும்னு ஒரு நாளைக்கு ஐந்நூறு ரூவா சார்ஜ்! . . . பாவமன்னிப்பு, சுமைதாங்கி, தங்கம் மனசு தங்கம், எல்லாம் உனக்காக . . . அதெல்லாம் இங்கே எடுத்ததுதான். இப்பக்கூட பூஜைக்கு வந்த மலர், கறுப்புப் பணம் ஷூட்டிங் நடந்திச்சு. அப்பப்ப இந்திப் படம்கூட எடுக்கருங்களே! அதெல்லாம் பேர் தெரியல்லே. ஆஷா பரேக் கூட வந்திருந்திச்சு சார்! அதோ தெரியலே ரவுண்டா மோடையாட்டம், கொக்கு சிலை இருக்குதே . . . அதும் பக்கத்துலே ஆஷா பரேக் ஆடருப்பலே எடுத்தாங்களே . . . இந்த இடத்திலே, அணைக்கு இந்தப் பக்கம் எப்பவும் படம் புடிச்சுக்கிட்டேதான் இருப்பாங்க . . . ''

''அந்தப் பக்கத்திலே . . . ?''

''மீன் பிடிப்பாங்க. பிஷரீஸ் டிபார்ட்மெண்ட் இருக்குது. சமுதாய கூடத்துக்குப் பக்கத்திலே அக்குவேரியம்கூட இருக்குது. கண்ணுடிக்குள்ளே நீல மீன் அலை அடிக்கிற மாதிரி இருக்கும். போய்ப் பாருங்க . . . சமுதாய கூடத்திலே விசிடர் புக் வச்சிருக் காங்க. அந்தப் புக்குலே எல்லாரும் ஒரே மாதிரி எழுதியிருப் பாங்க. நேரு சிலை வெக்கணும்னு. . . . நீங்களும் எழுதிட்டு வாங்க . . . போங்க.''

நேரமாக ஆக கார்களும், டூரிஸ்ட் பஸ்களும், ஸ்கூட்டர்களும் வந்துகொண்டே யிருக்கின்றன.

பதினேந்து பேர் அடங்கிய ஒரு சிறுகூட்டம். அவர்கள் பேசு கிருர்கள்:

''வேட்டைக்காரன்லே, இத பாரு இப்படித்தாண்டா கத்திரிக் கிருன் . . . '' - செடியைக் கத்திரிப்பதுபோல அபிநயம் காட்டுகிருர் ஒருவர்.

''சந்திரபாபு ஓடியாருனே, அது இந்த இடம்தாங்கறேன் . . .''

''சுமைதாங்கியிலே பார்க்கணும், தேவிகா அந்தப் படிக்கட்டு வழியா என்ன வேகமா ஓடியாரு தெரியுமா?''

''அல்லி பார்த்திருக்கியா நீ?''

''அதோ தண்ணீலே பூத்திருக்குதே!''

''அல்லி படத்தைச் சொல்றேம்பா நான் . . . அதிலே விஜய குமாரி வர்ற இடம் இங்கேதான் . . .''

''அட! அதோ பாருடா! சாமியாரு தண்ணி ஊத்தருரு . . .!''

''அது சாமியார் இல்லேடா! அகஸ்திய முனிவர் . . .''

''அவர் ஏன் இங்கே வந்து தண்ணி ஊத்திக்கிட்டு நிக்கிருரு?''

''அது ஒரு சாபமாக இருக்கும் . . . யாருக்குத் தெரியுது அதெல்லாம் . . .?''

அந்தக் கூட்டத்தில் ஒருவர் அணைக்கட்டு மேலே ஏறி நிற்கிருர்.

''எத்தனை அடி உயரம் இருக்கும் இந்த அணை?''

''நூற்றைம்பது அடி இருக்கும் . . .''

''சிவகுமார்! மேலேருந்து பார்க்கறதுக்கு இந்த இடமெல்லாம் எப்படி இருக்குதப்பா?'' - கீழே நின்று கொண்டிருப்பவர்களில் ஒருவர் அணைமீது நிற்பவரைக் கேட்கிருர்.

''கிடு கிடுன்னு இருக்குது!'' — மேலிருந்து வரும் குரல் இது!

''அதோ பாருடா, அவர் போட்டோ எடுக்கருரு நம்பளை யெல்லாம் . . .''

''அது சிலேடா! நிஜ ஆள்னு நினேச்சுட்டியா நீ?''

''கரடி சிலே ஒண்ணு வெச்சிருக்காங்க. அதுங் கையிலேருந்து தண்ணி கொட்டுது. அதுலே ஒரு சின்ன தப்பு செஞ்சுட்டாங்க . . .''

''என்னடா அது?''

''தேன் கொட்ருப்பலே வச்சிருந்தா ரொம்ப நல்லா யிருக்கும் . . .!''

''டேய்! வரீங்களாடா அணைக்கு மேலேயே நடந்து அந்தக் கோடி வரைக்கும் போகலாம் . .'' - கூட்டத்தில் ஒருவர்.

''போயிட்டு . . .?''

''மறுபடியும் இந்த இடத்துக்கே வந்துடலாம்.''

''அதுக்கு ஏன் அங்கே போகணும்? இங்கேயே இருந்துட்டாப் போச்சு.''

''காலே வலிக்குதப்பா . . . என்னாலே இனிமே நடக்க முடியாது . . .''

''ஒரே தண்ணி தாகமா இருக்குது.''

''அகஸ்தியர் கிட்டே போ, தண்ணி கொடுப்பாரு!''

''கால் வலிக்கு மருந்து கொடுக்கறதுக்கு இன்னொரு முனிவர் இருந்தா பரவாயில்லே . . .''

''நாம் கை நீட்டியதும் அகஸ்தியர் கமண்டலத்திலிருந்து தண்ணி கொட்டுதே, அது எப்படி?''

''அகஸ்தியராச்சே! ஞானதிருஷ்டியிலே தெரிஞ்சுக்குவாரு . . .''

''அதெல்லாம் இல்லே; அது ஒரு ட்ரிக்கு . . .!''

காந்திஜியின் படம் ஒன்று உயரமான ஓரிடத்தில் வைக்கப் பட்டிருக்கிறது. அங்கே போய்ப் பார்க்கிறோம். அங்கிருந்து அணைக்கட்டுப் பகுதியிலுள்ள எல்லா இடங்களையும் நன்கு பார்க்க முடிகிறது. ஆங்காங்கே மனிதர்கள் கூட்டம் கூட்டமாக நகர்ந்து கொண்டிருக்கின்றனர். அந்தக் குன்றின் உச்சியிலிருந்து இறங்கி பாலத்தின் பக்கம் செல்கிறோம்.

டூரிஸ்ட் பஸ்ஸில் வந்தவர்கள் அங்கே வேடிக்கை பார்த்துக் கொண்டு நிற்கிறார்கள். . . திடீரென்று பேய்க் காற்று வீசி விட்டுச் செல்கிறது.

''ஒத்தைக் கண்ணிலே தண்ணி வருது பாரும்மா . . .!''

''காத்தடிச்சதில்லே . . . தூசு பட்டிருக்கும் . .''

''அணைக்கட்டுலே ஒரு கண்ணைத் தான் திறந்து விட்டிருக் காங்க . . . அதனாலே ஒத்தைக் கண்ணுலேந்து தண்ணி கொட்டுதுன்னு . . .''

''என்ன மாதிரி கல் கட்டடம் கட்டியிருக்கான் பார்த்தியா?''

''ஏன் கட்டாதே! இங்கேதான் கல்லுங்க ஏராளமாக் கிடக்குதே!''

''இந்த இடந்தாம்பா ஆண்டவன் கட்டலே!''

''இதெல்லாம் வந்து ஆண்டவன் கட்டிக்கிட்டிருப்பாரா? என்ஜினீயருங்கதான் கட்டுவாங்க . . .''

இரவு ஏழு மணி. பளிச்சென்று விளக்குகள் எரியத் தொடங்கு கின்றன. எங்கே பார்த்தாலும் வண்ண விளக்குகள்! ஆண்களும்

பெண்களும் கந்தர்வர்களைப் போல் உலாவிக் கொண்டிருக்கிறார்கள். சற்று நேரத்துக்கெல்லாம் ''வாங்க வாங்க . . . கிளப்பலாம் . . . பஸ்ஸுக்கு நேரமாச்சு. .'' என்று அத்தனை பேரும் கிளம்புகிறார்கள்.

''லைட்டுக்காக நாள் பூராவும் காத்திருந்துட்டு, இப்ப லைட் போட்டதும், சரியாக்கூடப் பார்க்காமல் கிளம்பிட்டா எப்படி?'' - ஒருவர் கேட்கிறார்.

''இல்லாட்டி பஸ் கிளம்பிடுமே!''

அணைக்கட்டுப் பகுதியில் நாம் எந்த இடத்தில் இருந்தாலும் நம் பார்வையில் பட்டுக் கொண்டிருப்பது காந்திஜியின் 'கட் அவுட்' படம்தான்.

வெறும் கரடிக்கும், ஆளுக்கும் சிலை செய்து வைத்துள்ள இந்த அணைக்கட்டில் காந்திஜிக்கு மட்டும் ஒரு சிலை இல்லையே என்ற வருத்தத்துடன் வீடு திரும்புகிறோம்.

குற்ருலம்

27

ஆற்று வளமும், காற்று வளமும் உடைய குற்ருவம் மலையடி வாரத்தில் போய் நிற்கிறேம்.

தென்றல் வீசுகிறது; அருவி சொரிகிறது. 'ஜல ஜல' என்ற பேரிரைச்சலுடன், 'உஸ்ஸ்' என்ற காற்றுச் சத்தமும் கலந்து வருகிறது. 'ஜல ஜல' என்ற சொல்லிலேயே ஜலம் கொட்டுவது போலவும், 'உஸ்ஸ்' என்ற சத்தத்திலேயே காற்று வீசுவது போலவும் தோன்றுகிறதல்லவா?

தமிழ் மொழியைத் தவிர வேறு எந்த மொழியில் இவ்வளவு அழகாகச் சொல்ல முடியும்?

அருவிக் கரையில் பன்னீர் தெளிக்கும் பூம்பனிச் சாரல் நம் உடலையும், உள்ளத்தையும் குளிர்விக்கிறது.

இத்தனை நாளும் கோடை வெப்பத்தில் காய்ந்து, கருகி, வறுபட்டுப்போன நமக்குக் குற்ருலத்துச் சாரலின் குளிர்ச்சியும், அருவியில் குளிக்கப் போகும் மகிழ்ச்சியும் சேர்ந்து எக்களிப்பை உண்டாக்குகின்றன.

அடி அடியாக அருவியை நெருங்கிச் செல்கிறேம். அடிவயிற்றிலிருந்து, குளிரின் குலைப்பு எழுகிறது. அருவியில் குளிக்க ஆவலோடு வந்தவர்கள் இப்போது குளிருக்குப் பயந்து அடியெடுத்து வைக்கத் தயங்குகிறேம். குளியலைத் தட்டிக் கழித்துவிடக் காரணங்களைத் தேடுகிறேம்.

''இருட்டுகிற சமயமாகி விட்டதே! ஒரேயடியாக நாளைக்குக் குளித்துக் கொள்வோமா?'' - நம்முடன் வந்த நண்பர்களைக் கேட்கிறேம்.

''பேஷான யோசனை! நாளைக்கே வருவோம்'' என்கிருர்கள் நண்பர்கள்.

அருவியில் ஒரு பெரும் கூட்டம் குளிக்கிறது, குளிரின் வேகத்தில் வரும் எக்காளச் சிரிப்புடன்.

அருவியின் இரைச்சலையும் மீறிக்கொண்டு நம் காதில் விழும் ஒலிகள் இவை:

'கெக்கெக்கே . . . . !' - தமிழர் ஒருவர் கெக்கலிக்கிறர்.

'ஆவ் வீவ் ஆவ் . . . ' - வட நாட்டுக்காரர் ஒருவர்.

'ஹாஹ்ஹாஹ்ஹா!' - சம்ஸ்கிருத மொழியில் சிரிப்பு!

கூச்சல், கும்மாளம், கூப்பாடு இவ்வளவும் அருவியின் இரைச்சலோடு சங்கமமாகி, புரியாத ஒரு குழப்ப ஒலியாகக் கேட்கிறது.

எங்கிருந்தோ இன்னெரு புதிய கூட்டம் 'திமு திமு' வென்று ஓடி வந்து அந்தக் கூட்டத்தோடு சேர்ந்து விடுகிறது. வட நாட்டுக்காரர்கள், தென்னுட்டுக்காரர்கள், இந்தி, தெலுங்கு, தமிழ், கன்னடம், கேரளம் எல்லா மொழிக்ககாரர்ளும் ஒன்ருகக் கலந்து அருவியின் கீழ் ஒற்றுமையாகக் குளிக்கிருர்கள். அடாடா! தேசிய ஒருமைப்பாட்டை இங்கல்லவா காணவேண்டும்!

நாங்கள் மூவரும் யோசிக்கிருேம்: 'குளிக்கலாமா அல்லது குளியலேத் தள்ளிப் போடலாமா?' என்று . . .

டிபன் சாப்பிட்டுவிட்டுக் குளிக்கலாமா அல்லது குளித்து விட்டு டிபன் சாப்பிடலாமா?'' - நான் கேட்கிறேன்.

''டிபன் சாப்பிட்டுவிட்டுக் குளிப்போம். குளித்துவிட்டு, மறுபடியும் டிபன் சாப்பிடுவோம்'' என்கிருர் நண்பர்களில் ஒருவர்.

சில குரல்கஃக் கேட்போம்:

''அருவியிலே குளிக்கணும்ஞ — தலேயிலே எண்ணெய் வெச்சுக்காம குளிக்கக் கூடாது . . . ''

''குளிச்சா எண்ணெய் வெச்சுக்கணும். எண்ணெய் வெச்சுக்கிட்டா குளிக்கணும். குளிக்காமலே இருந்துட்டா எண்ணெய்ச் செலவு மிச்சம்தானே?''

'' . . . மூக்காலே மூச்சு விடாதே அண்ணே! தண்ணி மூக்குக் குள்ளாற போயிடும் . . . '' - அருவியில் குளிப்பவரைக் கரையில் இருப்பவர் எச்சரிக்கிருர்.

'' . . . என்னய்யா இது? இத்தனே நேரமாக் குளிச்சதுலே இப்பத்தான் ஒரு தினுசா எண்ணெய்ப் பிசுக்குப் போச்சு. மேலே வந்து விளுந்து மறுபடியும் உடெம்பெல்லாம் எண்ணெயாக் கிட்டியே!'' - வெள்ளேத் துண்டுக்காரர் சிவப்புத் துண்டுக்காரரைப் பார்த்துச் சொல்கிருர்.

''ஃபோர்ஸ் இல்லே! தலேயிலே வெச்ச ஆயில் அப்படியே இருக்கே . . . !''

''சீக்கா இருக்கா தம்பி?'' - ஒரு குரல்.

''ஆமாங்க . . . இருக்குங்க . . . !'' - இன்னெரு குரல்.

''சீக்காளிங்களெல்லாம் எதுக்கய்யா குளிக்க வாறீங்க?'' வேருெரு குரல்.

'' . . . புலி அருவியிலே தண்ணி வருதாமா?''

''மழை பெய்தால் வருமாம் . . .''

''கொஞ்சம் தள்ளி நில்லுங்கய்யா.''

'' . . . அருவியிலே தண்ணி கொட்டுதா, சொட்டுதா?''

'' . . . என் துண்டைக் காணோம்யா!''

''இடுப்பிலே கட்டிக்கிட்டிருக்கியே அது என்னவாம்?''

''ஓகோ! இடுப்பிலே கட்டிக்கிட்டிருக்கேனு? அதை மறந்துட்டேன்.''

'' . . . ஒரு தடவை குளிக்கிறதுக்குள்ளே சோப்புக் கட்டி முழுசும் கரைச்சுப்பிட்டியே!''

''என் உடம்புன்னு நெனச்சுகிட்டு பக்கத்திலே நிண்ணவர் உடம்புலே சோப்பைத் தேச்சுட்டேன்யா. விசயம் அப்புறம்தான் தெரிஞ்சுது.'' - இது சோப்பைக் கரைத்தவர் பதில்!

'' . . . இந்த வருஷம் சீசனே மோசம் பண்ணிடும் போல இருக்கே . . . ! குற்றுலத்துக்கு வந்து சீக்காய் போட்டுக் குளிக்கிறதை இந்த வருஷம்தான் பார்க்கிறேன் . . .'' - குற்றுலத்துக்கு வழக்கமாக வரும் ஒருவர் கூறுகிறுர்.

''அந்த நாள் முதல் இந்த நாள் வரை வானம் மாறவில்லே . .'' டிரான்ஸிஸ்டரிலிருந்து வரும் பாட்டு இது.

''ஆமாம், மாறல்லே. இவர் கண்டாரு! பாடறவரைக் குற்றுலத்துக்கு வந்து பார்க்கச் சொல்லு . . . !''

''ஏண்டா பாதியிலே குளியலே நிறுத்திட்டு ஓடியாந்துட்டே?''

''திடீர்னு தலே மேலே கல்லு வந்து விளுந்துச்சுன்னு என்ன பண்றதுன்னு ஒரு பயம் வந்துச்சு பாரு! அப்படியே ஓடியாந்துட்டேன் . . . ''

''மழை சரியாப் பெய்யாததாலே, இனிமே தினமும் நாலு மணி நேரம்தான் அருவியிலே தண்ணி விடப் போறுங்களாம் கவர்மெண்டுலே . . .''

''நீ 'டுப்' விடாதே, போ . . . !''

சிலர் குளித்துக் கொண்டிருக்கிறுர்கள். சிலர் எண்ணெய் தேய்த்துக் கொண்டிருக்கிறுர்கள். வேறு சிலர் குளிப்பவர்களேயும், எண்ணெய் தேய்த்துக் கொள்பவர்களேயும் வேடிக்கை பார்த்துக் கொண்டு நிற்கிறுர்கள்.

சிலர் பாலத்தின்மீது நின்றவண்ணம் அருவியின் உயரத்தை அண்ணுந்து பார்க்கிறுர்கள். வேறு சிலர் கீழே குனிந்து பாலத்தின் அடியில் ஓடும் எண்ணெய் மிதக்கும் தண்ணீரைப் பார்க்கிறுர்கள்.

''இவ்வளவு எண்ணெயும் வேஸ்ட்தானே?'' - ஒருவர் கேட்கிறுர்.

''இல்லேயே, அதோ பாருங்க . . . அந்த எண்ணெயெல்லாம்

அங்கே துவைக்கிறுங்களே துணி, அந்தத் துணிகளில் ஏறிக் கொள்ளும் . . .'' - மற்ருெருவர் பதில்.

இருபது முப்பது பேர் அடங்கிய கூட்டம் ஒன்று அருவியை நோக்கி வரிசையாக; ஒழுங்காக, சாதுவாக வந்து கொண்டிருக் கிறது. அவ்வளவு ஒழுங்காக வருகிறவர்கள் வேறு யாராயிருக்க முடியும்? பயித்தியக்காரர்கள் தான்!

"குற்ருலம் மெயின் அருவியில் கொட்டும் தண்ணீரில் மூலிகை கலந்திருக்கிறதாம். அந்தத் தண்ணீரில் தொடர்ந்து குளித்தால் பயித்தியம் தெளிகிறதாம்'' என்ற தகவலைக் கொடுக்கிருர் ஒருவர்.

மெயின் அருவியில் கூட்டம் அதிகமாக இருப்பதால் ஐந்தருவிக்குச் செல்கிறேம். போகிற வழியில் ரசிகமணி டி. கே. சி. யின் இல்லம் தென்படுகிறது. அந்த வீட்டை இப்போது பொது வாசக சாலையாக்கி யிருக்கிருர்கள். ஒரு காலத்தில் அங்கே டி. கே. சி.யின் கவிதை வெள்ளம் அருவியாகப் பொழிந்து கொண் டிருந்ததும், இட்லி தோசையுடன் தமிழ் விருந்து நடந்து கொண் டிருந்ததும் நினைவுக்கு வருகிறது. டி. கே. சி. யின் இன்முகத்தை எண்ணிப் பார்த்துக்கொண்டே ஐந்தருவியை அடைகிறேம்.

வட்டமான ஓரிடத்தில் பத்துப் பதினைந்து கார்கள் வரிசை யாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. மெயின் அருவியை 'ஜனதா' அருவி'என்ருல் இதை 'முதல் வகுப்பு' அருவி என்று கூறலாம்.

''இதுக்கு ஏன் அஞ்சருவின்னு பேரு வந்தது?'' - ஒருவர் கேட்கிருர்.

''பஞ்ச பாண்டவங்க இந்த இடத்திலேதான் குளிச்சாங்க. அவங்க அஞ்சு பேருக்கும் அஞ்சு அருவி . . . !''

''அப்படின்ஞ துரோபதை. . .?''

''துரோபதை குளிச்ச இடத்தைத்தான் இப்ப பெண் களுக்குன்னு தனியா ஒதுக்கிட்டாங்க . . .''

''அதோ பெரிசாக் கொட்டுதே ஒரு அருவி . . . அங்கேதான் பீமன் குளிச்சாரு.''

''ஆமாம்; இவர்தான் பக்கத்துலே இருந்து குளிப் பாட்டிஞரு . . .''

''ஐந்தருவியிலே இப்ப மூணு அருவிதானே கொட்டுது?''

''ஜனங்க நிறைய வறப்போ இன்னும் இரண்டு அருவியிலும் கொட்டும் . . .''

பருத்த மனிதர் ஒருவர் தலையில் எண்ணெய் தேய்த்துக் கொண்டு சிவப்புத் துண்டுடன் அருவியின் கீழ் போய் நிற்கிருர். அவர் முகத்தில் எண்ணெய் வழிகிறது.

யாருக்கும் இடம் விடாமல் வெகு நேரம் குளித்துக்கொண்டே இருக்கிறார். அப்படியும் எண்ணெய் போகாததால், தாம் கொண்டு வந்த சோப்பை எடுக்கப் போகிறார். குரங்கு ஒன்று அவர் வைத்த சோப்பை எடுத்துக்கொண்டு போய்விட்டிருக்கிறது.

அதை அறிந்ததும், எண்ணெய் வழிந்து கொண்டிருந்த அவர் முகத்தில் அசடு வழிகிறது!

"எண்ணெய் விலை என்னப்பா?" - கடைக்காரரைக் கேட்கிறார் ஓர் ஆசாமி.

சின்ன ஆழாக்கு ஒன்றை எடுத்துக் காட்டி, 'எட்டணா' என்கிறார் கடைக்காரர்.

"எனக்கு ஒரு 'ஐடியா' தோணுதுடா!"

"என்னடா அது?"

"இந்த அஞ்சு அருவியிலே ஒரு அருவியை எண்ணெய் அருவியா மாத்திட்டா, எண்ணெய்ச் செலவே இல்லாமெ போயிடும்."

டூரிஸ்ட் பஸ் ஒன்று வருகிறது. கல்லூரி மாணவிகள் அதிலிருந்து இறங்கி வருகின்றனர். அவர்களைத் தொடர்ந்து குதூகலம், கும்மாளம், அரட்டை, சிரிப்பொலி எல்லாம் வருகின்றன. அவர்கள் வந்ததும் அருவியின் சத்தம் அமுங்கிப் போகிறது!

கார்களும், குதிரை வண்டிகளும் மேலும் மேலும் வந்து கொண்டேயிருக்கின்றன. அருவியில் போதிய தண்ணீரும் வேகமும் இல்லாததால், எல்லோருடைய முகத்திலும் ஏமாற்றம் பிரதிபலிக்கிறது. ஏமாற்றம் குற்றாலத்துக்கு வருகிறவர்களுக்கு மட்டுமல்ல. எண்ணெய்க் கடைக்காரர்கள், ஓட்டல்காரர்கள், பழக் கடைக்காரர்கள், டவல் வியாபாரிகள் எல்லோருக்குமேதான்.

"சீஸன் சரியாக இல்லாததால் இந்த வருஷம் பிஸினஸே ரொம்ப டல்லுங்க . . ." என்கிறார் ஒரு டவல் வியாபாரி.

எல்லோருமே இயற்கையைச் சபிக்கிறார்கள்.

நாம் மட்டும் "வாழ்க குற்றாலம்! வீழ்க நீர்வீழ்ச்சி!" என்று கூறிவிட்டு ஊருக்குத் திரும்புகிறோம்!

மகாபலிபுரம்

28

ஒரு வேடிக்கைக்காகச் சொல்கிறேன்; திடீரென்று ஒரு நாள் மகாபலிபுரம் கடலில் மூழ்கி விடுகிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். அப்போது என்ன நடக்கும்? புதிதாகக் காமிரா வாங்கி போட்டோ எடுக்கப் பழகுகிறவர்கள், சினிமாப் பட முதலாளிகள், தீபாவளி மலர் போடும் பத்திரிகைக்காரர்கள், மகாபலிபுரம் கைடுகள், இளநீர் வியாபாரிகள் - இவ்வளவு பேருடைய கதியும்என்ன ஆகும்?

பல்லவ மன்னர்கள் தீர்க்க தரிசனம் வாய்ந்தவர்கள். பிற்காலத்தில் இவர்களெல்லாம் திண்டாடிப் போவார்கள் என்பதை எப்படியோ பல நூறு ஆண்டுகளுக்கு முன்பே ஊகித்தறிந்து கற்களிலே அற்புதம் நிகழ்த்திவிட்டுப் போயிருக்கிறார்கள் அல்லவா?

நானும் நண்பரும் மாமல்லபுரம் பாறைச் சிற்பங்களுக்கு எதிரில் போய் நிற்கிறோம். அங்கே பகீரதன் கங்கையைக் கொண்டு வருவதற்காகத் தபஸ் செய்கிறான் - அவனது விலா எலும்புகள் தனித் தனியாகத் தெரிகின்றன.

பஸ் ஸ்டாண்டிலும் சிலர் தவமிருக்கிறார்கள். பஸ்ஸிலிருந்து இறங்கும் பிரயாணிகளை அழைத்துச் சென்று சிற்பங்களைக் காட்டுவதற்காக!

சர்க்கார் பஸ் ஒன்று வருகிறது; வங்காளிகள், ஆந்திரர்கள், தமிழர்கள், வெளிநாட்டுக்காரர்கள் இவ்வளவு பேரும் அதிலிருந்து இறங்கி வருகிறார்கள். அவ்வளவுதான்; ஒரு கூச்சல் கிளம்புகிறதே பார்க்கலாம்!

“ஸார், கைடு ஸார்!”

‘‘ஆவோஜி சாப்! கைடு ஒனு!”

‘‘ஏமண்டி! கைடு காவல்னு!”

கைடுகள் பிரயாணிகளைத் துரத்திச் செல்கின்றனர்.

“தீன் ஆனு! தீன் ஆனு! வா சேட்டோ!” - இளநீர் விற்கும் ‘பொம்பளை’ கூவுகிறாள்.

"நாரியேல் பானி! தோ ஆனு!" - இது இன்னொரு இளநீர் வியாபாரி.

ஸ்கூட்டர்கள் வருகின்றன. அவற்றில் ஆணும் பெண்ணும் ஜோடி ஜோடியாக வருகிறார்கள். காதலர்களா, கலியாணமானவர்களா என்று கண்டுபிடிக்க முடியவில்லை. காலேஜ் பஸ்கள், டூரிஸ்ட் பஸ்கள் இவ்வளவும் வந்துகொண்டேயிருக்கின்றன.

ஒவ்வொருவர் கையிலும், அல்லது தோளிலும், காமிராக்கள், பைனாகுலர்கள், டம்பப் பைகள், டிரான்ஸிஸ்டர்கள் இப்படி ஏதாவது ஒன்று. ஆங்காங்கே நிறுத்தப்பட்டுள்ள கார்களுக்குப் பின்புறத்தில் உள்ள கண்ணாடி வழியாக நாம் பார்ப்பவை:

மலை வாழைப் பழம்; சாத்துக்குடி, டிபன் பொட்டலம்; தர்மாஸ் பிளாஸ்க்; இத்யாதி . . . இத்யாதி . . .

ஒரு கூட்டம் கடற்கரைக் கோயிலை நோக்கிச் செல்கிறது. இன்னொரு கூட்டம் லைட் ஹவுஸ் பக்கம் செல்கிறது. மற்றொரு கூட்டம் பஞ்ச ரதங்களை நோக்கிச் செல்கிறது. சிலர் குன்றுகளின் மேலே நடக்கிறார்கள். சிலர் அடிவாரத்தில் உலாவுகிறார்கள். சற்று நேரத்துக்கெல்லாம் அங்கே இருக்கிற கூட்டம் இங்கே வருகிறது. இங்கே இருக்கிற கூட்டம் அங்கே போகிறது.

நாலைந்து இங்கிலீஷ்காரர்களுக்கு கைடு விளக்கம் தருகிறார்:

"தேர் யூ ஸீ அர்ஜுனாஸ் பெனன்ஸ்! நாகாஸ் அண்ட் நாகினிஸ்! அண்ட் தேர் யூ ஸீ அனிமல்ஸ், டீர்ஸ், கேட்ஸ், எலிபெண்ட்ஸ், தட் இஸ் இந்திராஸ் எலிபெண்ட்! ஐராவதம்! தட்டீஸ் மங்கீஸ் . . ."

"ஓ! மங்கீஸ்! ஒண்டர்புல் ஸ்கல்ப்சர்ஸ்! வாட் ஆர் தே டூயிங்?"

"பிக்கிங் பேன் மாஸ்டர்!" - கைடு சொல்கிறார்.

"பேன்! வாட்?" - இங்கிலீஷ்காரர் விழிக்கிறார்.

"ஹி மீன்ஸ் வர்மின்." - இது கூட்டத்தில் ஒருவர்.

"இன்னாடா பேனுன்னா புரியலையா துரைக்கு? பேனுக்கு இன்னாடா இங்கிலீஸ்?" - ஒரு கைடு இன்னொரு கைடை கேட்கிறான்.

"பேன்ஸ்டா!" இது முதல் கைடு.

வேறொரு கூட்டம் வருகிறது. அவர்களுடன் வேறொரு கைடு வருகிறார். அவர் சொல்கிறார்:

" . . . . . அதாகப்பட்டது பகீரதன்! பகீரதனாகப்பட்டவர், தவம் புரிகிறார். தவமாகப்பட்டது எதற்கு என்று கேட்டால், சொர்க்கத்திலிருந்து கங்கையைக் கொண்டு வருவதற்காக! அதாகப்

பட்டது அந்தக் காலத்திலே மக்களாகப்பட்டவர்கள் குடிக்கத் தண்ணீர் இல்லாமல் பட்ட துன்பங்களைப் பார்த்துவிட்டு பகீரதனாகப்பட்டவர் . . . . .''

குன்றின் மீது ஏறிச் செல்கிறோம்.

''இது தாங்க சிவகாமி நடனமாடின இடம் . . .'' - கைடு நம்மிடமே கதை அளக்கிறான்.

''எந்த சிவகாமி?'' - நான் கேட்கிறேன்.

''கல்கி சிவகாமி!'' - இது கைடு.

''கல்கி எங்கே உட்கார்ந்து எழுதினார்?'' - நான் கேட்கிறேன்.

''இதோ இந்தப் பாறை மீது தான்!'' - கைடு சளைக்கவில்லை.

''அவருக்கு ஏன் கல்கி என்று பெயர் வந்தது?'' - நான் மேலும் கேட்கிறேன்.

''கல்லைப்பற்றி எழுதினதால் 'கல்கி' என்றும், 'ராக்'கைப் பற்றி எழுதினதாலே ரா. கி. என்றும் சொல்லுவாங்க . . .'' - இது பதில்.

''அப்படி போடு ஒரு போடு!'' - இது நண்பர்.

''உம் . . . உம் . . . வாங்க சீக்கிரம். அடுத்த பாட்சி பார்க்க வேணுமா?'' - அவனும் அவன் பின்னோடு வரும் கூட்டத்தாரும் போகிறார்கள்.

ஆங்காங்கே பெரிய பெரிய பாறைகள். அவற்றில் அரை குறையான சிற்பங்கள் . . .!

''இன்னா மாதிரி கல்லுங்கடா!'' - கூட்டத்தில் ஒருவன் வியக்கிறான்.

''எடம் செலக்ஷன் பண்ணான் பாருடா!''

''இங்கேதாண்டா சிவாஜி குதிரை மேலே போனாரு . . .'' இடத்தைப் பற்றி, கல்லைப் பற்றி, சினிமாவில் சிவாஜி கணேசன் குதிரை சவாரி செய்தது பற்றியெல்லாம் பேசுகிறார்களே தவிர சிற்பங்களைப்பற்றி ஒரு ஆசாமியாவது மூச்சுவிட வேண்டுமே! ஊஹும்!

எங்கே போனாலும் இளநீர் வியாபாரிகள் நம்மை விடுவதில்லை. ஒரு வேளை நம்மை விட்டாலும் விட்டுவிடுவார்கள். இங்கிலீஷ்காரர்களைக் கண்டுவிட்டால் அப்படியே வளைத்துக்கொண்டு போய் விடுகிறார்கள்.

''ஏம்பா வெள்ளைக்காரங்க வந்தால் மட்டும் இப்படித் துரத்திக்கிட்டு ஓடறீங்க?'' - நான் ஒரு இளநீர்க்காரரை விசாரிக்கிறேன்.

''யூரோப்பியன்ஸ் வந்தாத்தான் சார் காசு! ஒரு யூரோப்பியன்ஸ் வந்தாரு சார், அவரோட மூணு தமிழ் மன்ஷால்

வந்தாங்க. நாலு பேரும் எள்நீ சாப்பிட்டாங்க. அந்த யூரோப் பியன்ஸ் ஒரு ரூவா குடுத்தான் சார்! மிச்சமே கேக்கலே. கூட வந்த தமிழ் மன்ஷால் சும்மாப் போலாமில்லையா? மிச்சம் கேக்கச் சொல்லி அவனுக்குக் கத்துக் குடுக்கறுங்க சார்! இன்ஞ தமிழ் மன்ஷாளுங்க இவங்க . . .?''

ஒரு ரசமான சம்பாஷணை காதில் விழுகிறது.

''ஏம்பா! ரதங்களுக்கு சக்கரத்தையே காணுமே?'' - கூட்டத்தில் ஒருவர் கைடைக் கேட்கிறுர்.

''என்னைக் கேட்டா நான் இன்ஞ சார் சொல்லுவேன்? மண்ணுக் குள்ளே போயிடுச்சுன்னுவேன். நாஞ சிலுப்பி!'' - இது கைடு.

''ஊபர் தேகோ! அன்பினிஷ்ட் அர்த்தநாரீசுவரா! நரசிம்ம பல்லவா பீரிட்! ஆல் இன் ஒன் ஸ்டோன் . . . . .'' கைடு சக்கைப் போடு போடுகிறுன்.

''ஏ கியா ஹை?'' ஒரு பஞ்சாபி.

''ரிஷபா! புல்! ராக் புல்! காளை . . .'' - இது கைடு.

சில ரதங்களில் பாலி பாஷையில் ஏதேதோ எழுதப்பட்டிருக் கின்றன.

''வாட் இஸ் தட் இன்ஸ்க்ரிப்ஷன்?''

''பாலி பாஷா!''

பல மண்டபங்களில் ஆங்கிலம், தமிழ் ஆகிய இரண்டு மொழி களிலும் எழுதப்பட்டிருக்கின்றன.

''கே. எஸ். ஒ. எஸ். டி. எஸ். வி. எம்! டபிள்யூ. வேலன். ஜி. கோவிந்தன் . . .'' - இப்படியெல்லாம் பலவிதமான இனிஷியல் கள், பெயர்கள்!

மாமல்லபுரத்துச் சிற்பங்களைச் செய்த மகா சிற்பிகள் தங்கள் பெயரைக் கல்லிலே பொறித்து வைக்கவில்லை. ஆனுல் ஒரு முறை மகாபலிபுரத்துக்கு வருகிறவர்களோ தங்கள் பெயர்களைக் கற்களில் செதுக்கி வைக்கத் தவறுவதில்லை!

''ஐ லவ் யூ!'' - கல்லிலே காதல் இலக்கியம் வேறு! எந்த 'நரசிம்ம பல்லவன்' எந்த 'சிவகாமிக்கு' எழுதி வைத்ததோ?

''அந்தக் காலத்திலேயே பதினெட்டாம் புள்ளி உண்டு போல இருக்கு சார்!'' - விசிட்டர்களில் ஒருவர்.

''அட நீங்க ஒண்ணு! இப்ப யாரோ செதுக்கி வைச்சதுங்க!'' விசிட்டரின் நண்பர்.

அதோ ஒரு போர்டு காணப்படுகிறது. அதைப் படிப்போம்;

விளம்பரம்

பாதுகாக்கப்பட்ட ஞாபகச் சின்னங்கள்

''1904-ம் வருஷத்து 7-வது ஆக்டாகிய புராதன ஞாபகச் சின்னங்களின் ரக்ஷக ஆக்டிற் கண்ட நிபந்தனை களின்படி இந்த ஞாபகச் சின்னத்தைச் சேதப்படுத்துகிற அல்லது விகாரப்படுத்துகிற யாதொரு நபர் மூன்று மாதத் துக்கு மேற்படாமல் காவல் தண்டனையாவது 5000 ரூபாய்க்கு மேற்படாமல் அபராதமாவது இவ்விரண்டு மாவது விதிக்கப்படுவதற்கு உள்ளாவார்.''

''டேய், வரதாச்சாரி! என்னடா கொண்டு வந்திருக்கே . . .? எங்கடா சாப்பிடலாம்?''

''புளியோதரை கொண்டு வந்திருக்கேண்டா! வாடா, பீமன் குகையிலே போய் உட்கார்ந்துகிட்டு நிம்மதியா ஒரு புடி புடிக்க லாம் . . .!''

அடுத்தாற்போல் மகிஷாசுரமர்த்தனி மண்டபத்துக்குச் செல் கிறோம்.

''மூன்றுழிகளும், முகமண்டலமும் கொண்ட குடைதளி சிவனுக் குரியது. வெளி மண்டபத்தின் வலது சுவற்றிலுள்ள மகிஷ மர்த்தனி சிற்பத்தால் அப்பெயர் கொண்டது. இடது சுவற்றில் திருமாலின் கிடந்த கோலத்தைக் காண்க . . . மாமல்லன் காலத் திருப்பணி கி. பி. 640 — 674 . . .''

''சுவரில் என்பதற்குச் சுவற்றில் என்று எழுதியிருக்கிறார் களே?'' - நண்பர் என்னைக் கேட்கிறார்.

''வலிமை மிக்க கல் சுவர் அல்லவா? அதனால் வல்லின றகரம் போட்டு 'சுவற்றில்' என்று உறுதியாக எழுதியிருக்கிறார்கள் '' - இது என் பதில்!

கடற்கரைக் கோயிலுக்கருகில் பெருங் கூட்டம். பல பேர் கும்பல் கும்பலாக அந்தக் கோயிலைச் சுற்றி அலைகிறார்கள். சர்க்கார் காவலாளி ஒருவன் மற்றொரு காவலாளியிடம் சொல்கிறான்:

''அண்ணே! கொஞ்சம் கோயிலைப் பார்த்துக்கோ; நான் போய் டீ குடிச்சுட்டு வந்துடறேன்!''

''ஏம்பா! கோயிலை நாங்க தூக்கிட்டா போயிடுவோம்?'' - நான் காவலாளியைக் கேட்கிறேன்.

''அதுக்கு இல்லீங்க. கொஞ்சம் ஏமாந்தா கல்லிலே பேர் அடிச் சுட்டுப் போயிடுவான்க சார், இங்கே வர ஆளுங்க, அதுக்குத் தான் . . .''

பஸ் ஸ்டாண்ட் பக்கம் செல்கிறோம். மற்றொரு ரசமான சம்பாஷணை காதில் விழுகிறது:

"ஓட்டல்லே என்னடா சாப்பிட்டே?"

"ரவா உப்புமா, வடை!"

"எப்படி இருந்தது?"

"ஒரே கல்லுடா!"

"மகாபலிபுரமாச்சே!"

பெரும்பாலோர் மகாபலிபுரத்துக்குச் செல்லும்போது எடுத்துச் செல்வது: சாப்பாட்டு மூட்டை, டிபன் வகையறு . . .

திரும்பி வரும்போது கொண்டு வருவது:

கால் வலி!

பம்பாய் – மாதுங்கா

29

நானும் நண்பரும் பம்பாய்க்குப் போனபோது அங்கு வாழும் தமிழர்கள் யாரும் எங்களைக் கண்டு கொள்ளவில்லை. எங்களைப் பார்த்து 'எப்போது வந்தீர்கள்?' என்றுகூடக் கேட்கவில்லை. நாங்களாகவே அவர்கள் எதிரில் போய் நின்றுகூடப் பார்த்தோம். அப்போதும் அவர்கள் எங்களைப் பார்த்தும் பார்க்காததுபோல் இருந்து விட்டார்கள்.

எனக்குக் கோபம் கோபமாக வந்துவிட்டது.

"சே! இந்த மாதுங்கா தமிழர்களுக்கு மரியாதையே தெரியவில்லை. நெடுந் தூரம் பயணம் செய்து ஆவலோடு இங்கே வந்திருக்கிறோம். ஒருவராவது நம்மை கவனிக்கவில்லையே!" என்று நண்பரிடம் குறைப்பட்டுக் கொண்டேன்.

"அப்படியெல்லாம் ஒன்றுமில்லை; இங்குள்ள தமிழர்கள் மிகவும் நல்லவர்கள். நம் இருவரையும் அவர்கள் மாதுங்கா வாசிகள் என்றே எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். இங்கே பல்லாயிரக் கணக்கான தமிழர்கள் வாழ்கிறார்கள் அல்லவா? அதனால்தான் அவர்களுக்கு நாம் வெளியூர்க்காரர்கள் என்பது தெரியவில்லை. திருப்பதியில் மொட்டைத் தாதனைக் கண்ட மாதிரிதான்" என்றார் நண்பர்.

தென்னிந்தியர்கள் பலர் ஒன்று சேர்ந்து கூட்டுறவு முறையில் நடத்தி வரும் 'சௌத் இண்டியன் கன்ஸர்ன்ஸ்' கட்டடத்தின் மூன்றாவது மாடியில் நாங்கள் தங்கியிருந்தோம். இந்தக் கூட்டுறவு ஸ்தாபனத்தை மாதுங்கா தமிழர்கள் சுருக்கமாகவும் செல்லமாகவும் 'கன்ஸர்ன்ஸ்' என்று சொல்கிறார்கள்!

கன்ஸர்ன்ஸ் மாடியில் உட்கார்ந்தபடியே தெருவில் நடக்கும் விவகாரங்களைக் கவனித்துக் கொண்டிருந்தால் போதும்; மாதுங்கா தமிழர்களின் அன்றாட வாழ்க்கை என்னவென்பதை எளிதில் அறிந்து கொண்டு விடலாம்.

மாதுங்கா நிகழ்ச்சி நிரல் இதுதான்:

விடியற்காலம் நாலரை மணிக்குக் காகம் கரையும்.

சற்று நேரத்துக்கெல்லாம் கோயில் மணி அடிக்கும்.

அடுத்தாற் போல் சின்னஞ் சிறு குழந்தைகள் கையில் புத்தகப் பையுடன் ஐந்து மணி 'ஷிப்ட்' பள்ளிக்கூடத்திற்குப் போய்க் கொண்டிருப்பார்கள்.

சிறிது நேரத்துக்கெல்லாம் தெரு வியாபாரிகளின் கூக்குரல் தொடங்கிவிடும். இதற்குள் பம்பாய் நகரமே விழித்துக் கொண்டு விடுமாகையால், நகரத்தின் நானுவித ஓசைகளும் ஒலிகளும் சத்தங் களும் கனத்து 'ஓகோ' என்றுகிவிடும்.

மணி ஆக ஆக சாலையில் நடந்து செல்வோரின் வேகமும் அதிக மாகிக்கொண்டே போகும். ஒருவரையொருவர் திரும்பிப் பார்க்க மாட்டார்கள். நடுத் தெருவில் நின்று பேசிக் கொண் டிருக்க மாட்டார்கள். 'ஆச்சா போச்சா' என்று தலை தெறிக்க ஓடிக் கொண்டேயிருப்பார்கள். பஸ்ஸைப் பிடிப்பார்கள். ரயிலைப் பிடிப்பார்கள். ஆபீசுக்குப் போவார்கள். மாலையில் வீடு திரும்பி வந்து சேருவார்கள்! இவ்வளவுதான் மாதுங்கா வாழ்க்கை. சுருங்கச் சொன்னுல் மாதுங்கா தமிழர்கள் தங்களுக்காக வாழ வில்லை. தங்கள் ஆபீசுக்காக வாழ்கிறுர்கள்!

இவர்கள் குடியிருக்கும் வீடுகளைப்பற்றியோ சொல்லவேண்டி யதில்லை. புறுக் கூண்டுகளைப் போல் இருக்கும். ஓர் அறை! அதற் குள்ளே இன்னெரு சிறிய அறை! - இதுதான் அவர்கள் குடியிருக் கும் 'சால்' இரண்டு பேர் உள்ளே போக வேண்டுமென்றுல் உள்ளே யிருக்கும் இரண்டு பேர் வெளியே வந்தாக வேண்டும்! அந்தச் சின்ன இடமும் லேசில் கிடைத்துவிடுமா? பம்பாயில் ஓர் உத்தியோகம் தேடிப் பிடிப்பது சுலபம். ஆனுல் குடியிருக்க ஓர் இடம் பிடித்துவிட முடியாது. 'புரோக்கர்'களிடம் சொல்லி வைக்க வேண்டும். வருடக் கணக்கில் காத்திருக்க வேண்டும். ஐயாயிரம், பத்தா யிரம் 'பகடி' கொடுக்கத் தயாராயிருக்க வேண்டும். 'பகடி'க்கு ரசீது கிடையாது. அந்தப் பணம் திரும்பியும் வராது!

இப்போதெல்லாம் பம்பாயில் உத்தியோகம் பார்க்கும் பிள்ளைகளுக்குப் பெண் கொடுப்பதென்றுல், பெண்ணைப் பெற்றவர் கள் ரொம்ப ரொம்ப யோசிக்கிறுர்கள். பையன் தனிக்குடித்தனம் செய்வதற்கு இடவசதியோடு இருக்கிறுஞ என்று தெரிந்து கொண்ட பிறகே பெண் கொடுக்க முன்வருகிறுர்கள்!

மாதுங்காவில் எவ்வளவுதான் இட நெருக்கடி இருந்தபோதி லும் சங்கங்களுக்கும், மன்றங்களுக்கும், சமாஜங்களுக்கும், சங்கீத சபைகளுக்கும் குறைவேயில்லை. ஆஸ்திக சமாஜம், தென்னிந்திய

பஜனே சமாஜம், ஷண்முகானந்த சபை, பாரதி கலா மன்றம், மாதுங்கா நாடக மன்றம், தமிழ் எழுத்தாளர் சங்கம் என்று பல்வேறு சங்கங்கள் நடைபெறுகின்றன.

ஆஸ்திக சமாஜத்திலும், பஜனே சமாஜத்திலும் எந்த நாளிலும் காலட்சேபமோ, உபந்நியாசமோ ஏதேனும் நடந்தபடியேதான். இரவு நேரங்களில் மாதுங்கா வீதிகளில் நடக்கும்போது பம்பாயில் இருப்பதாகவே தோன்றவில்லே. மயிலாப்பூரிலோ, மாம்பலத்திலோ இருப்பதாகவே எண்ணுகிறோம்.

“இங்குள்ள தமிழர்கள் எத்தனை சந்தோஷமாக வாழ்க்கை நடத்துகிறார்கள்? எவ்வளவு ஒற்றுமையாக நட்புரிமை பூண்டு நல்ல காரியங்களைச் செய்கிறார்கள்!'' என்று வியந்து பாராட்டினேன் நான்.

''உண்மைதான்; நாங்களெல்லாம் இப்படிப் பொது இடங்களில் கூடிப் பொழுது போக்குவதற்கு இன்னொரு காரணமும் உண்டு'' என்றார் மாதுங்கா வாசி ஒருவர்.

''அது என்ன?'' என்று விசாரித்தேன் அவரை.

''நாங்கள் வாழ்வதோ எட்டடி அறைக்குள். அந்தக் குறுகிய இடத்தில் குழந்தை குட்டிகளுடன் எத்தனை நேரம் அடைபட்டுக் கிடப்பது? அதனால்தான் அவ்வளவு பேரும் சமாஜம், சங்கம் என்று வெளியே புறப்பட்டு வந்து விடுகிறோம்'' என்றார் அவர்.

மாதுங்காவில் தமிழர்களே அதிகமாக வசித்தபோதிலும், குஜராத்திகள், பார்சிகள், மராத்தியர்களும் வாழ்கிறார்கள். நாலு மொழியினர் சேர்ந்து வாழ்ந்தாலும் ஒற்றுமையாக வாழ முடியும் என்பதை மாதுங்காவில் கண்கூடாகக் காண்கிறோம்.

தமிழர்களுக்கென்று இங்கே கல்விக் கூடங்களும், கலாசாலைகளும் நடைபெறுகின்றன. பரத நாட்டியப் பயிற்சிக் கூடம் ஒன்று கூட இருக்கிறது. அது மட்டுமல்ல; இங்கே கிடைக்காத பொருளே கிடையாது. ஊத்துக்குழி வெண்ணெய், கும்பகோணம் வெற்றிலை, கொட்டைப்பாக்குச் சீவல், தஞ்சாவூர்க் கதம்பம், காஞ்சீபுரம் பட்டுச் சேலை, இட்லி சாம்பார், டிகிரி காப்பி இவ்வளவும் கிடைக்கின்றன.

ஞாயிற்றுக்கிழமைகளில் காலை வேளையில் கன்ஸர்ன்ஸைச் சேர்ந்த 'மெஸ்'ஸில் இட்லி போடுகிறார்கள். இட்லிக்குச் சட்னி, மிளகாய்ப் பொடி எண்ணெய், சாம்பார் இவ்வளவும் உண்டு! ஆபீஸ் நாட்களில் அவரவர்கள் காலையிலேயே எழுந்து எட்டரை மணிக்குள் அவசர அவசரமாக (ஆறாமல் அமராமல்) சாப்பிட்டு விட்டு மின்சார ரயிலைப் பிடிக்க ஓட்டம் பிடிக்கிறார்களா? ஞாயிற்றுக் கிழமை ஒரு நாளாவது நிம்மதியாகத் தூங்கலாமென்றால் கன்

ஸர்ன்ஸ் இட்லி அவர்களைத் தூங்கவிடாமல் செய்து விடுகிறது! ஆறு மணிக்குள் எழுந்து போகாவிட்டால் 'இட்லி தீர்ந்து விட்டது' என்று கையை விரித்து விடுவார்களே!

கன்ஸர்ன்ஸில் இட்லி சாப்பிடுவதை மாதுங்கா வாசிகள் ஒரு பெருமையாக எண்ணுகிறார்கள். முதல் நாள் சனிக் கிழமையன்றே அதைப்பற்றிப் பேசியும் சர்ச்சை செய்தும் ஆனந்தப்படுகிறார்கள்.

தெரு முனைகளில் வேட்டியை மடித்து 'டப்பா' கட்டுக் கட்டிக் கொண்டு, ''என்னய்யா! நாளைக்கு ஸண்டே யாச்சே! கன்ஸர்ன்ஸ்லே இட்லி சாப்பிட வருவீர் அல்லவா?'' என்று ஒருவருக்கொருவர் விசாரித்துக் கொள்ளும்போது அவர்கள் முகத்தில் பொங்கும் பெருமையைப் பார்க்க வேண்டுமே!

ஞாயிற்றுக்கிழமை பொழுது விடிய வேண்டியதுதான் தாமதம். கன்ஸர்ன்ஸில் திருவிழா மாதிரி கூட்டம் கூடிவிடுகிறது. மாதுங்கா தமிழர்கள் ஞாயிற்றுக்கிழமைகளிலும் சீக்கிரமே எழுந்துவிட வேண்டும் என்பதில் கன்ஸர்ன்ஸ் நிர்வாகிகள் மிகுந்த அக்கறை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இல்லாவிட்டால் இப்படிச் செய்வார்களா? இட்லிக்குத் தமிழர்களோடு குஜராத்திகளும் பார்சிகளும் கூடப் போட்டி போடுகிறார்கள். "இவர்கள் எதற்கு இங்கே வருகிறார்கள்?'' என்று விசாரித்தேன்.

"அதை ஏன் கேட்கிறீர்கள்? நம் ஊர் இட்லியும் சாம்பாரும் இவர்களுக்கு ரொம்பப் பிடித்துவிட்டது. சாம்பாரை இவர்கள் அப்படியே பாயசம் மாதிரி குடித்து விடுகிறார்கள்!'' என்றார் மெஸ் வெங்கட்ராமன்.

''அப்படியா? தேசீய ஒருமைப்பாடு'' என்றேன் நான்.

''நல்ல ஒருமைப்பாடு! என் பாடு பெரும்பாடாகி விடுகிறது'' என்றார் அவர் சிரித்துக்கொண்டே.

முன்னால் சங்கர மடம், பின்னால் லட்சுமி நாராயணன் கோவில், ஒரு பக்கம் பஜனை சமாஜம், இன்னொரு பக்கம் சிவன் கோவில். இவற்றுக்கு நடுவே அமைந்திருப்பதுதான் சௌத் இண்டியன் கன்ஸர்ன்ஸ்.

பக்கத்திலுள்ள சிவன் கோவிலுக்கு குஜராத்திப் பெண்மணிகள் பக்தி சிரத்தையோடு தினமும் வந்துவிட்டுப்போவதை கன்ஸர்ன்ஸிலிருந்தபடியே கவனிக்கலாம். அப்படி வந்துவிட்டுப் போகிறவர்கள் சும்மாப் போவதில்லை. பசுமாட்டுக்குப் புல் கொடுப்பதையும் ஒரு வழக்கமாகக் கொண்டிருக்கிறார்கள்.

பம்பாய்த் தெருக்களில் மாடுகள் நடமாட்டம் அபூர்வமாகையால் இந்த குஜராத்திப் பெண்மணிகள் புண்ணியம் சம்பாதித்துக் கொள்ள வேண்டுமே என்பதற்காக, மாட்டுக்குச் சொந்தக்காரி

ஒருத்தி தன்னுடைய மாட்டை அந்தக் கோயில் வாசலில் கொண்டு வந்து கட்டி விடுகிறுள். அவளே சிறு சிறு புல் கட்டுகளேயும் கட்டிக் கொண்டுவந்து அருகில் வைத்துக் கொள்கிறுள். கோவிலுக்கு வரு கிறவர்கள் அவளிடம் ஒரணுக் கொடுத்து ஒரு புல் கட்டை வாங்கி அதை அவளுடைய மாட்டுக்கே போட்டுவிட்டுப் போகிருர்கள்.

மாட்டுக்காரி தன்னுடைய மாட்டை வீட்டிலேயே கட்டி வைத்துப் புல் போட்டால் லாபம் கிடையாது. இங்கே கோவிலுக்கு முன்ஞல் கட்டி வைத்துப் போட்டால் மாட்டுக்கும் வயிறு நிரம்பு கிறது. புல்லுக்கும் விலே கிடைத்து விடுகிறதல்லவா!

மாதுங்காவில் கண்ட மற்ருெரு காட்சியையும் சொல்ல வேண்டும்.

எந்த பஸ் ஸ்டாப்பிலும் எந்த நேரத்திலும் கூட்டம் மிகப் பெரிய க்யூ வரிசையில் நின்று கொண்டிருக்கிறது. அதைப் பார்க் கும்போது, 'இவர்களுக்கெல்லாம் எப்போது பஸ் கிடைத்து எப் போது வீடு போய்ச் சேருவார்களோ?' என்று தோன்றுகிறது. ஆனுல் அடுத்த நிமிஷமே ஒரு பஸ் வந்து அவ்வளவு பேரையும் ஏற்றிச் சென்றுவிடுகிறது. 'அடாடா! இது என்ன அதிசயம்!' என்று வியப்பதற்குள் இன்னெரு பெரிய க்யூ வரிசை அந்த இடத்தில் சேர்ந்துவிடுகிறது!

பஸ்ஸைப் போலவே டாக்ஸிகளும் நிறைய ஓடுகின்றன. நினைத்த நேரத்தில் நினைத்த இடத்தில் டாக்ஸி கிடைக்கிறது. டாக்ஸி டிரைவர்கள் அநேகமாக சர்தார்ஜிக்கள்தான். இவர்களைக் கூப்பிடுவதற்கு 'டாக்ஸி டாக்ஸி!' என்று நாம் நடுத்தெருவில் அலற வேண்டியதில்லை. கையைத் தட்டி (டாக்ஸியைத் தவிர) ரோடில் போகும் மற்றவர்களையெல்லாம் திரும்பிப் பார்க்கச் செய்யவேண்டி யதுமில்லை! 'ஸ்...ஸ்...ஸ்...ஸ்!' என்ருல் போதும்; 'பட் பட்' என்று நாலைந்து டாக்ஸிகள் நின்றுவிடும். அவற்றில் ஏதாவது ஒன்றில் ஏறிக்கொண்டு போகலாம். ஒரு பர்லாங் தூரம் வேண்டு மாஞலும் போகலாம். 'எட்டணு கிராக்கியா?' என்று சர்தார்ஜிக் கள் நம்மைக் கேலி செய்ய மாட்டார்கள்.

அவ்வளவுதான்! அதோ காகம் கரைகிறது! கோயில் மணி அடிக்கிறது. குழந்தைகள் பள்ளிக்கூடம் கிளம்பி விட்டார்கள். இயந்திர கதியில் இயங்கும் பம்பாய் வாழ்க்கை மீண்டும் ஆரம்ப மாகிவிட்டது!

எல்லோரா

30

ஒரு காலத்தில் நைஜாம் ராஜ்யத்துக்குள்ளிருந்த அஜந்தா எல்லோரா குகைகள் இப்போது மகாராஷ்டிர எல்லைக்குள் போய் விட்டன. குகைகள் யாவும் இருந்த இடத்திலேயேதான் இருக் கின்றன. எல்லையைத்தான் மாற்றி அமைத்திருக்கிருர்கள்!

எல்லோராவுக்குப் பதினெட்டு மைல் தூரத்திலுள்ள அவுரங்கா பாத் நகரத்தை அடைய ஹைதராபாத் வழியாகவும் போகலாம்; பம்பாயிலிருந்து மன்மாத் வழியாகவும் போய்ச் சேரலாம். நானும் நண்பர்களும் ஹைதராபாத் வழியாகப் போவதெனவும் ஹைதரா பாத்தில் ஒரு நாள் தங்கி அங்குள்ள ஸலார்ஜங் மியூசியத்தைப் பார்த்துவிட்டுப் புறப்படுவதென்றும் முடிவு செய்தோம்.

உலகப் புகழ் பெற்ற ஸலார் ஜங் மியூசியத்தை நுணுக்கமாகவும் விவரமாகவும் பார்த்துத் தெரிந்து கொள்ள வேண்டுமானுல் அதற்கு ஒரு நாள் போதாது. இந்தக் காட்சிச் சாலையில் சுமார் அறுபது அறைகள் இருக்கின்றன. உலகத்தின் அதிசயப் பொருள் களெல்லாம் இங்கே சேகரித்து வைக்கப்பட்டுள்ளன. விலை உயர்ந்த கம்பளங்களும், மதிப்புமிக்க வண்ண ஓவியங்களும், சிலை களும், அதிசயமான அபூர்வப் பொருள்களும் அறைக்கு அறை குவிந்து கிடக்கின்றன.

வைரக் கற்கள் பதிக்கப் பெற்ற உடைவாள் ஒன்று தனியாக ஓர் அறையில் காட்சிப் பொருளாக வைக்கப்பட்டுள்ளது. ஒப்புயர் வற்ற அந்த வைர வாள் வீசும் ஒளி நம் கண்களைப் பறிக்கின்றது. அந்த அறைக்கு வெளியே காவலாளி ஒருவன் நின்றுகொண்டிருக் கிருன்.

''இந்த வைரக் கத்தி யாருடையது?'' என்று ரகசியமாக அந்தக் காவலாளியிடம் விசாரித்தேன்.

''அக்பர் சக்ரவர்த்தியுடையது'' என்ருன் அவன்.

''இதன் மதிப்பு என்ன இருக்கும்?''

''பத்து லட்சம் ரூபாய்!''

''அக்பரின் வாள் இங்கே எப்படி வந்தது?''

''தெரியாது.''

அந்தக் கத்தியை வெகு நேரம் வியப்புடன் உற்றுப் பார்த்துக் கொண்டிருந்த நண்பர், ''ஆகா! மடிந்தால் இந்த அக்பரின் கத்தியால் வெட்டுப்பட்டு மடிய வேண்டும்'' என்றார்.

''இந்த வைரக் கத்தியை நாம் எடுத்துக்கொண்டு போனால் என்ன?'' என்று நண்பரிடம் கேட்டேன்.

''போகலாம்; இந்தக் காவல்காரன் விட மாட்டானே!''

''அவன் தடுத்தால் 'இது அக்பரின் கத்திதானே? நீ யார் தடுப்பதற்கு?' என்று சொல்லி விட்டால் போகிறது'' என்றேன்.

''ரொம்ப சரி; எடுத்துக்கொண்டு புறப்படுவோம்'' என்றனர் நண்பர்கள்.

நான் சற்றுத் தயங்கினேன்.

''ஏன் தயங்குகிறீர்கள்?''

''இப்போது வேண்டாம்; நாம் எல்லோரா அஜந்தா முதலிய இடங்களுக்கெல்லாம் போகிறோம். இதையும் கையோடு எடுத்துக் கொண்டு அலைய முடியாது .... திரும்பி வரும்போது பார்த்துக் கொள்ளலாம்'' என்றேன்.

''அதுவும் சரிதான்!'' என்றனர்.

மியூசியத்தைவிட்டு வெளியே வந்ததும், ''நீங்கள் ரொம்பத் தயங்கினீர்களே! அக்பரின் கத்தியை நான் எடுத்துக்கொண்டு வந்து விட்டேன்'' என்றார் போட்டோகிராபர்.

''எப்படி?''

''போட்டோ எடுத்துக்கொண்டு வந்து விட்டேன். அக்பரின் கத்தி இப்போது என்னுடைய காமிராவுக்குள் இருக்கிறது!'' என்றார் அவர்.

மறு நாளே அவுரங்காபாத் போய்ச் சேர்ந்தோம்.

அன்றிரவு எங்கள் மூவருக்கும் தூக்கமே இல்லை. அவுரங்காபாத் கொசுக்கள் எங்கள் கண்ணருகே வந்து வட்டமிட்டபடி விடிய விடியப் பாடிக் கொண்டிருந்தன. இப்போது தெரிகிறதல்லவா; சங்கீதத்துக்கும் அவுரங்கசீப்புக்கும் ஏன் அத்தனை பகை என்று!

''காலையில் ஆறு மணிக்கெல்லாம் எல்லோரா புறப்பட்டு விடவேண்டும். லேட்டாகி விடக்கூடாது. அங்கே மொத்தம் முப்பத்து நான்கு குகைகள் இருக்கின்றனவாம். ஒவ்வொரு குகையையும் பார்த்து முடிக்கக் குறைந்தது அரை மணி நேரம் என்றாலும் ஒரு நாள் போதாதே!'' என்றார் நண்பர் கோபுலு.

''எல்லோராவில் சாப்பாடு டிபன் ஏதாவது கிடைக்குமா?'' என்று கேட்டேன் நான்.

''டாக்ஸி டிரைவரை விசாரித்து விட்டேன். அங்கே ஒரே ஒரு டீக் கடைதான் இருக்கிறதாம். அதில் டீ மட்டும்தான் கிடைக்கு

மாம். ஆகையால் இங்கிருந்தே ஏதாவது உணவு வகைகளை வாங்கிக் கொண்டு போக வேண்டியதுதான்'' என்றார் போட்டோகிராபர்.

''எனக்கு ஒன்றுமே வேண்டாம். எல்லோராச் சிற்பங்களைப் பார்த்துக் கொண்டிருந்தால் போதும் எனக்கு, பசி தாகமே தெரியாது'' என்றார் கோபுலு.

பொழுது விடிந்ததும் ஒரு டாக்ஸி பிடித்துக்கொண்டு எல்லோராவுக்குப் புறப்படுவதற்குள் மணி எட்டுக்கு மேல் ஆகிவிட்டது. நடு வழியில் தௌலதாபாத் நகரமும் கோட்டையும் குறுக்கிட்டன. எல்லோராவுக்குப் போகும் சாலை தௌலதாபாத் நகருக்குள் புகுந்து கோட்டையைச் சுற்றி வளைத்துக் கொண்டு செல்கிறது.

''இதுதான் சரித்திரப் புகழ் வாய்ந்த தௌலதாபாத் நகரம். டில்லியில் முகம்மது துக்ளக் ஆட்சி பீடம் ஏறியதும் தலைநகரை இந்த ஊருக்குத்தான் மாற்றினான். அதாவது டில்லியிலுள்ள குடி மக்கள் அவ்வளவு பேரையும் எழுநூறு மைல் தொலைவிலுள்ள இந்த நகருக்குப் போக வேண்டுமென உத்தரவு போட்டுவிட்டான்!'' என்றார் நண்பர்.

''அப்புறம் தலைநகரை இங்கிருந்து டில்லிக்கே மாற்றி விட்டான் இல்லையா?'' என்று கேட்டேன்.

''ஆமாம்; அது உங்களுக்கு எப்படித் தெரிந்தது? சரித்திரப் புத்தகத்தில் படித்தீர்களா?'' என்று கேட்டார் நண்பர்.

''இதற்குச் சரித்திரம் படிக்க வேண்டுமா என்ன? துக்ளக் ஆயிற்றே! அவன் விஷயம் தெரிந்ததுதானே?''

வழி நெடுக 'எல்லோரா எங்கே? எங்கே?' என்று அடிக்கடி டிரைவரைக் கேட்டுக் கொண்டிருந்தார் போட்டோகிராபர்.

''ஸாத் மைல் ஹை! ஆட் மைல் ஹை!'' என்று பதில் சொல்லிக் கொண்டிருந்தான் டாக்ஸி டிரைவர்.

போகும் வழியில் ஓரிடத்தில் காரை நிறுத்தி, மிக எளிய தோற்றத்தில் சிதிலமாகக் காட்சியளித்த சமாதி ஒன்றைச் சுட்டிக் காட்டி, ''தேகோ!'' என்றான் அவன்.

''ஏ க்யா?'' என்று விசாரித்தேன் நான்.

''அவுரங்கசீப் டோம்ப் தேகோ!'' என்றான் டிரைவர்.

''ஆனைப்பட்ட அவுரங்கசீப் சக்ரவர்த்தியின் சமாதியா இது? நம்ப முடியவில்லையே!'' என்றேன்.

''ஆமாம்; அவுரங்கசீப் மாபெரும் சக்ரவர்த்திதான் என்றாலும், அவர் தம்முடைய சமாதியை மிகச் சாதாரணமாகவே கட்ட வேண்டும் என்று தான் கூறியிருந்தாராம். தம் கையாலே குல்லாய்கள் தைத்து அவற்றின் மூலமாகக் கிடைத்த சிறு தொகையைச்

சேர்த்து வைத்து அதைக் கொண்டே தம் சமாதி கட்டப்பட வேண்டுமென விரும்பினாராம். அதனால்தான் மண்ணாலேயே இந்தச் சமாதியைக் கட்டியிருக்கிறார்கள்'' என்றான் டிரைவர்.

தௌலதாபாத் கோட்டையை அப்பிரதட்சணமாகச் சுற்றிக் கொண்டு போயிற்று எங்கள் டாக்ஸி.

''இந்துக்கள் ரோடு போட்டிருந்தால் பிரதட்சணமாகப் போட்டிருப்பார்கள்!'' என்றார் நண்பர்.

"எல்லோராவைக் காணோமே! எங்கே, எங்கே?'' என்று அவசரப்பட்டார் போட்டோகிராபர்.

''தேகோ! உதர் பகாட் தேகோ!'' என்று சற்று தூரத்தில் சுட்டிக் காட்டினான் டாக்ஸி டிரைவர்.

அவன் காட்டிய திசையில் நீளமாக ஒரு மலைத் தொடர் தெரிந்தது.

''அதுவா எல்லோரா?" என்றோம்.

"ஹாஹாம்!'' என்று கூறிய டிரைவர் அந்த மலைத் தொடரின் தெற்கு முனைத் தொடக்கத்தில் கொண்டுபோய்க் காரை நிறுத்தினான்.

வடக்கு தெற்காக அமைந்திருந்த அந்த நீளமான மலைத் தொடர் வெகு தூரத்துக்கு வெகு தூரம் கம்பீரமாகக் காட்சி அளித்தது. அந்த மலைத் தொடரில் அடுத்தடுத்து குடைந்தெடுக்கப்பட்டிருந்த குகை வாயில்களைத் தொலைவிலிருந்து பார்த்தபோது சிங்கங்கள் வாயைத் திறந்துகொண்டு படுத்திருப்பதுபோல் தோற்றமளித்தன. குகை வாயில்கள் மேற்குத் திசையை நோக்கிக்கொண்டிருந்தன.

'இந்தக் குகைகளுக்குள்ளே மாமல்லபுரத்தில் உள்ளவை போல் சிற்பங்கள் இருக்கும் . . . இவ்வளவுதானே?' என்று ஒரு கணம் சர்வ சாதாரணமாக எண்ணத் தோன்றுகிறது. ஆனால் அது எவ்வளவு பெரிய பிசகு என்பதை குகைக்குள் சென்று பார்த்த பிறகே உணர்கிறோம்.

மகான்களும், உலகப்புகழ் வாய்ந்த மேதைகளும் வெளித் தோற்றத்துக்கு எவ்வளவு எளிமையாக, சர்வ சாதாரணமாகக் காட்சி அளிக்கிறார்கள்! அவர்களுக்குள் மறைந்து கிடக்கும் அறிவு வெளித் தோற்றத்துக்குப் புலப்படுவதில்லையல்லவா? அதைப் போலத்தான் ஈடு இணையற்ற பொக்கிஷத்தைத் தன்னுள் அடக்கி வைத்துக் கொண்டிருக்கும் எல்லோரா மலைத் தொடரும் காட்சி அளிக்கிறது.

''ஒண்ணும் நம்பர் குகையிலிருந்து பார்த்துக்கொண்டு போகலாமா?'' என்று கேட்டார் நண்பர்.

"வேண்டாம்; முதலில் 16-ம் நம்பர் குகைக் கோயில் வாசலுக்குப்போய் அங்கிருந்து ஒவ்வொன்ருகப் பார்த்துக்கொண்டே முதல் நம்பர் குகைக்கு வருவோம். அப்புறம் மீண்டும் பதினுரும் நம்பர் குகை வாயிலுக்குப் போய் முப்பத்து நாலு வரை பார்க்கலாம்" என்றேன்.

"டீக் கடை எங்கே இருக்கிறது?" என்று டாக்ஸி டிரைவரை மெதுவாக விசாரித்தார் போட்டோகிராபர்.

"கைலாசத்துக்கு எதிரில்" என்ருன் டிரைவர்.

"கைலாசம் கிதர் ஹை?"

"பதினுரும் நம்பர் குகைதான் கைலாசம்!" என்ருன் டிரைவர்.

"வண்டியை முதலில் கைலாசத்துக்கு விடு!" என்ருேம்.

எங்கள் வண்டி கைலாசத்துக்கு முன்னுல் போய் நின்றபோது மணி பத்தேகால்!

"நேரமாகி விட்டது; வாருங்கள் சிற்பங்களைப் பார்க்கலாம்!" என்று துடித்தார் கோபுலு.

மூவரும் கைலாசத்துக்குள் புகுந்தோம். அவ்வளவுதான்; அந்த மாபெரும் குகைக் கோயிலின் கவர்ச்சியில், கம்பீரத்தில், சிற்ப அதிசயங்களில் மெய்மறந்து போனுேம்.

கடிகாரத்தைப் பார்க்கிருேம்; மணி ஒன்று.

"ரொம்ப லேட்டாக வந்து விட்டோம். இன்னும் முன்னுடியே வந்திருக்க வேண்டும்" என்ருர் கோபுலு.

"ஆமாம்; ஆயிரத்தைந்நூறு வருடங்கள் லேட்! அப்போதே வந்திருந்தால் இந்த குகைக் கோயில்களையும் இங்குள்ள சிற்பங்களையும் புது மெருகு அழியாமல் பார்த்திருக்கலாம்!" என்றேன் நான்.

"வெளியே போய் ஆளுக்கொரு கப் டீ சாப்பிட்டுவிட்டு வருவோம், வாருங்கள். பசி பிராணன் போகிறது" என்ருர் போட்டோகிராபர்.

"கோபுலுவுக்குப் பசி தாகம் தெரியாது. அவருக்குச் சிற்பங்களைப் பார்த்துக்கொண் டிருந்தால் போதும்" என்றேன் நான்.

"ஆமாம்; இன்னும் கொஞ்ச நேரத்தில் மயக்கம் வந்து விழப் போகிறேன். அப்புறம் பசி, தாகம், இங்குள்ள சிற்பங்கள், உலகம் எதுவுமே தெரியப் போவதில்லை எனக்கு" என்ருர் அவர்.

இந்தச் சமயத்தில் கெய்டு ஒருவன் எங்களைத் தேடி வந்தான். அவனைக் கூப்பிட்டு, "முதலில் மூனு கப் டீ வாங்கி வா!" என்று காசு கொடுத்தனுப்பினுேம்.

அவன் வரும்வரை பார்த்துக்கொண்டே இருந்தோம்; சிற்பங்களை அல்ல! அவன் வரும் வழியை!

"இங்கே மொத்தம் பதினேழு இந்துக் கோயில்கள் இருக்கின்றன. இந்தக் கைலாசக் கோயில்தான் எல்லாவற்றிலும் மிகப் பெரிது. இதை வெட்டி முடிப்பதற்கு (கட்டி முடிப்பதற்கல்ல) சுமார் நூறு ஆண்டுக் காலம் ஆயிற்று. இதில் இன்னொரு விசேஷம் என்னவென்றால் இங்குள்ள மற்றக் கோயில்களெல்லாம் பக்கவாட்டிலிருந்து குடையப்பட்டவை; இது மட்டும் மலை உச்சியிலிருந்து கீழ் நோக்கு வெட்டி எடுக்கப்பட்டது" என்று கூறினர் வழிகாட்டி.

"ஏன்? கீழிருந்து மேல் நோக்கிப் போயிருக்கலாமே!" என்றேன்.

"சாதாரணமாக அஸ்திவாரம் போட்டுக் கட்டப்படும் கோயில்களுக்குத்தான் கீழிருந்து மேலே போக வேண்டும். கற்கோயில்களுக்கு அஸ்திவாரம் தேவையில்லையே! அத்துடன் கீழிருந்து வெட்டிக்கொண்டு மேலே போக வேண்டுமானல் பரண் கட்டிக் கொண்டு வேலை செய்ய வேண்டும். மேலிருந்து கீழ் நோக்கி வருவதற்குப் பரண் அவசியமில்லையல்லவா?"

"இன்னொரு சௌகரியமும் உண்டு. மலை உச்சியிலிருந்து வெட்டிக் கொண்டு வந்தால் வெளிச்ச வசதி நிறைய இருக்கும்!" என்ருர் போட்டோகிராஃபர்.

"ஆனல், காயும் வெயிலும் பெய்யும் மழையும் சிற்பிகள் தலையில்தான்!" என்றேன் நான்.

இடது பிராகாரச் சந்தியிலுள்ள துவஜஸ்தம்பத்துக்கு அருகில் போய் நின்றுகொண்டு அதை அண்ணாந்து பார்த்தோம். வானுற ஓங்கி நிற்கும் அந்த ஸ்தம்பத்தின் உயரமும் கம்பீரமும் எங்களைப் பிரமிக்க வைத்தது. புகைப்படங்களில் சுண்டு விரல் கனம் கூட இல்லாத ஸ்தம்பமா இங்கே இப்படி விசுவரூபம் எடுத்து நிற்கிறது! பத்து பேர் கை கோத்துக்கொண்டு அணைக்க முயன்றாலும் முடியாது போலிருக்கிறதே!

துவஜஸ்தம்பத்தின் உச்சிக்கு மேல் ஆகாசம் துண்டாகத் தெரிந்தது. லேசாகக் கொசுத் தூறல் போட்டுக் கொண்டிருப்பதால் மலை உச்சியிலிருந்து பெருகும் தண்ணீர் ஆங்காங்கே சிறு சிறு அருவிகளாய் வீழ்ந்து கொண்டிருந்தது.

"ஒரே கல்லில் செதுக்கப்பட்ட இவ்வளவு பெரிய கோயிலுக்கு இணையான கோயிலை உலகில் வேறு எங்குமே காணமுடியாது" என்ருர் கோபுலு.

"எந்த மகா சிற்பிகள் இதைக் கற்பனை செய்தார்களோ?"

"எப்படித்தான் இவ்வளவு கற்களையும் வெட்டி எடுத்தார்களோ?"

"வெட்டிய கற்களை எங்கே கொண்டு போய்க் கொட்டினார்களோ!"

"ராட்சதர்களைப் போல் மாபெரும் அளவில் திட்டமிட்டு பொற்கொல்லர்களைப் போல் நுணுக்கமாக வேலை செய்திருக்கிறார்கள்."

"எல்லோரா குகைகளில் வெட்டி எடுக்கப்பட்ட கற்கள் மட்டும் இரண்டு லட்சம் டன்களாம்!"

"இது எல்லோரா அல்ல; கல்லோரா!" என்றேன்.

"முதன் முதலில் கல்லிலே கோயிலைக் குடைந்தவன் மகேந்திர பல்லவன்தான். அவனுக்கு முன்னால் யாருமே கல்லிலே கோயில்கள் கட்டியதில்லையாம். அப்படிச் செய்வது சாஸ்திர விரோதம் என்று எண்ணினார்களாம்" என்றார் கோபுலு.

"அதெப்படிச் சொல்ல முடியும்?"

"மகேந்திர பல்லவனே கல்வெட்டு மூலம் சொல்லியிருக்கிறான்."

"அப்படியா? என்ன சொல்லியிருக்கிறான்?"

" 'மரம், ஆணி, செங்கல், சுண்ணாம்பு இவையின்றி முதன் முதலில் கல்லிலே கோயில் செய்தவன் நான். எந்த ஒரு புதிய காரியத்தை யார் முதலில் செய்தபோதிலும் அவன் பயித்தியக்காரனாகக் கருதப்படுகிறான். ஆகவே நான் ஒரு பயித்தியக்காரன்' என்று சொல்லியிருக்கிறான்" என்றார்.

"அப்படியானால் மகேந்திர பல்லவன் காலத்துக்குப் பின்னர் தான் எல்லோராக் கோயில்கள் கட்டப்பட்டனவா?"

"ஆமாம்; ராஷ்டிரகூட அரசர்கள் காலத்தில்தான் இந்தக் கைலாசம் உருவாக்கப்பட்டது. இதற்கு முன்னால் கற்கோயில்கள் எதுவுமே இந்தப் பக்கத்தில் கிடையாது."

"அப்படியானால் முன் மாதிரி எதுவுமின்றி இவ்வளவு பிரம்மாண்ட முறையில் கோயில் அமைப்பது எப்படி சாத்தியம் ஆயிற்று? ஒருவேளை அவர்கள் பரம்பரை இங்கே வந்து உதவி செய்திருக்குமோ?" என்றேன்.

"இருக்காது; பட்டாடக்கல்லில் உள்ள விருபாட்ச ஆலயம் சாளுக்கிய அரசன் ஒருவன் காலத்தில் நிர்மாணிக்கப்பட்டது. அந்தப் பட்டாடக்கல் கோயில் பல்லவர்கள் பாணியை ஒத்திருக்கிறது. பல்லவர்களை வெற்றிகொண்ட சாளுக்கியர்கள் காஞ்சியிலிருந்து சிற்பிகளைக்கொண்டுவந்து அதைக் கட்டியிருக்கலாம். சாளுக்கியர் காலத்தில் கட்டப்பட்ட பட்டாடக்கல் கோயிலைப் பார்த்து ராஷ்டிரகூடர்கள் இந்தக் கைலாசக் கோயிலை அமைத்திருக்கலாம்."

வெளிப்புறச் சுவர்களில் உள்ள ராமாயணக் காட்சிகளையும் பாரதக் காட்சிகளையும், கிருஷ்ணாவதாரக் காட்சிகளையும் பார்த்து மகிழ்ந்துகொண்டே கோயிலை வலமாகச் சுற்றி வந்தோம்.

தெற்குப் பகுதியில் உள்ள சுவரில், ஹனுமான் தமது வாலைச் சுருட்டி உயரமான ஆசனமாக அமைத்துக்கொண்டு ராவணனுக்கு எதிரில் அமர்ந்திருப்பதும், குரங்குகள் சேதுக்குப் பாலம் கட்டுவதும் மறக்க முடியாத காட்சிகளாகும்.

வட மேற்கில் உள்ளது போலவே தென் மேற்கிலும் ஒரு துவஜஸ்தம்பமும் யானையும் நின்று கொண்டிருக்கின்றன. கால வெள்ளத்தில் கரைந்து போய் நிற்கும் யானையின் உருவம் விவரமற்றுக் காண்கிறது.

பிராகாரத்தின் எல்லையில் மதிள் சுவர்கள் போல் நிற்கும் பாறைச் சுவர்களைக்கூடச் சிற்பிகள் சும்மா விட்டு வைக்கவில்லை. அந்தப் பாறைகளையும் குடைந்து பெரிய பெரிய மண்டபங்களாக்கி அந்த விசாலமான மண்டபங்களுக்குள்ளே பார்வதி பரமசிவனுடைய திருமணக் கோலத்தையும், சொக்கட்டான் விளையாடும் காட்சியையும், சிற்ப வடிவங்களாக்கி மகிழ்ந்திருக்கிறார்கள். இவற்றைத் தவிர ராவணன் தன் தலைகளை வெட்டி, சிவனுக்கு அர்ப்பணிப்பது, குபேரன் பண மூட்டையைத் தோளில் சுமந்து கொண்டு நிற்பது, ராவணன் கைலாசத்தைப் பெயர்த்தெடுக்க முயலுவது, ராம - லட்சுமணர்கள் சிவனை பூஜிப்பது, சிவன் யமனிடமிருந்து மார்க்கண்டேயனைக் காப்பாற்றுவது போன்ற பல அபூர்வக் காட்சிகள் நம்மை மெய் சிலிர்க்க வைக்கின்றன. உண்மையாகவே நிஜக் கைலாசத்துக்குப் போகும்போது இடை வழியில் காணக் கூடிய அவ்வளவு காட்சிகளையும் இந்தக் கைலாசநாதர் கோயிலுக்குள் பார்த்து விடுகிறோம்.

"அடாடா! இந்த யானையைப் பார்த்தீர்களா?" என்று கூறியபடியே பக்கத்தில் திரும்பிப் பார்க்கிறேன். நண்பர்களைக் காணவில்லை. சிற்பங்களின் அதிசயத்தில் லயித்துவிட்ட நாங்கள் மூவரும் இதற்குள் மூலைக்கு ஒருவராகப் பிரிந்து போய் விட்டோம் என்பதை அப்போதுதான் தெரிந்து கொண்டேன்.

கடைசியில், நாங்களாகவே ஒருவருக்கொருவர் தற்செயலாகச் சந்தித்துக் கொண்டபோது, "நீங்கள் ராவணனைப் பார்த்தீர்களா?" என்று கேட்டார் கோபுலு.

"நீங்கள் மீனாட்சி கல்யாணம் பார்த்தீர்களா?" என்று கேட்டார் போட்டோகிராபர்.

"நீங்கள் ராம - ராவண யுத்தம் பார்த்தீர்களா?" என்று கேட்டேன் நான்.

நாலு பிராகாரங்களின் நடுவே அமைந்துள்ள கைலாசநாதர் கோயில் சுமார் நூறு அடி உயரம் கொண்டதாயிருக்கிறது. கோயிலுக்கு மேலே மச்சுகளும் அவற்றை அடைவதற்குப் படிக்கட்டுகளும் வெட்டியிருக்கிறார்கள். மச்சு மண்டபங்களையும் பிராகார மண்டபங்களையும் இணைக்க மேல் பாலங்கள் அமைத்திருக்கிறார்கள்.

கோயிலின் அடியிலே சிங்கங்களும், யாளிகளும், யானைகளும் தங்கள் முதுகின் மீது கோயிலைத் தாங்கிக் கொண்டிருப்பது போல் நிற்கின்றன.

"நான்தான் இந்தக் குடும்பத்தைத் தாங்குகிறேன்; நான் இல்லையானால் இந்த ஆபீஸ் இல்லை" என்று சிலர் எண்ணிக் கொண்டிருக்கவில்லையா? அந்த மாதிரிதான் இந்த யாளிகளும் யானைகளும் எண்ணிக் கொண்டிருக்கின்றன!

கோயிலையும், கோயில் பிராகாரங்களையும் பக்கத்திலுள்ள மண்டபங்களையும் துளி இடம்கூடக் காலியாக விட்டு வைக்காமல் உள்ளும் புறமும் நுணுக்கமான சிற்பங்களை வடித்தெடுத்த மகா சிற்பிகளை எண்ணி வியப்பில் ஆழ்ந்து நின்றேன்.

"இதோ இந்தச் சிற்பத்தை இப்படித்தான் நின்று கொண்டு வெட்டியிருப்பார்கள்" என்று கோபுலு ஒரு சிற்பத்தின் எதிரில் போய் நின்றுகொண்டு அந்தச் சிற்பியைப் போலவே 'போஸ்' காட்டினார்.

"ஆயிரத்தைந்நூறு ஆண்டுகளுக்கு முன்னால் இங்கே ரோடுகள் இருந்திருக்காது. டீக்கடைகள் இருந்திருக்காது . . ." என்றேன் நான்.

"இப்போதுகூட என்ன? அதிகம் ஒன்றும் மாறி விடவில்லை. ஒரே ஒரு டீக் கடைதான் இருக்கிறது!" என்றார் போட்டோகிராபர்.

"இந்த இடமெல்லாம் காடுகளாயிருந்திருக்கும். வண்டிப் போக்குவரத்து இல்லாத, மனித நடமாட்டமற்ற இந்த இடத்துக்கு அந்தச் சிற்பிகள் எப்படி வந்தார்களோ? எங்கே தங்கினார்களோ? எவ்வாறு சாப்பிட்டார்களோ? பல நூற்றாண்டு காலம் தலைமுறை தலைமுறையாக அல்லவா தொடர்ந்து வந்து இந்தத் தெய்வத் திருப்பணியைச் செய்திருக்கிறார்கள்! பணத்துக்கும் புகழுக்கும் மட்டும் ஆசைப்பட்டவர்கள் இந்தக் காரியத்தைச் செய்திருக்க முடியாது. கலையின் மீது அவர்களுக்குள்ள அளவற்ற பற்றுதலும், மதத்தின் மீதும் தெய்வத்தின் மீதும் உள்ள பக்தியுமே இந்த அரும்பெரும் சாதனைக்குக் காரணமா யிருக்க வேண்டும்" என வியந்தோம்,

அத்தனை குகைகளும் அவற்றிலுள்ள எண்ணற்ற சிற்பங்களும் மனிதனுடைய ஐந்து விரல்களால் ஆனவை என்பதை எண்ணிப் பார்த்தபோது எங்கள் வியப்பு இரட்டிப்பாயிற்று!

''பசிக்கிறது; இன்னொரு டீ கொண்டு வரச் சொல்லட்டுமா?'' என்றார் போட்டோகிராபர்.

''கைலாசத்தை இன்னும் பாதிகூடப் பார்த்து முடிக்கவில்லை. இதற்குள் நாம் மூன்று முறை டீ குடித்து விட்டோம். அந்தக் காலத்தில் இந்தக் கோயிலை நிர்மாணித்தவர்கள் எவ்வளவு கஷ்டப் பட்டிருப்பார்கள்? எவ்வளவு களைத்துப் போயிருப்பார்கள்? அவர்களெல்லாம் நம்மைப் போல் டீயா குடித்துக் கொண்டிருந்தார்கள்?'' என்று கேட்டார் கோபுலு.

''இந்தக் கைலாசத்திலேயே பொழுதைப் போக்கி விட்டால் மற்றக் கோயில்களை எப்போது பார்ப்பது?'' என்று துரிதப்படுத்தினார் போட்டோகிராபர்.

''அதுவும் சரிதான். மற்றக் கோயில்களைப் பார்த்துவிட்டு மீண்டும் இங்கு வரலாம்'' என்று புறப்பட்டோம்.

எல்லோராவில் மொத்தம் முப்பத்துநான்கு குகைகள் இருப்பதாகக் கூறினேன் அல்லவா? அந்தக் குகைகள் அடங்கிய மலையின் நீளம் ஒன்றே கால் மைல் தூரம் உள்ளது. தெற்கே பன்னிரண்டு புத்த குகைகளும், இடையே பதினேழு இந்துக் கோயில்களும், வடக்கே ஐந்து ஜைன ஆலயங்களும் அடுத்தடுத்து இடம் பெற்றுள்ளன. முதலில் தெற்குப் பக்கத்திலுள்ள புத்த குகைகளைப் பார்க்கப் புறப்பட்டோம்.

போகும் வழியில், ''அதோ ஆரஞ்சு வர்ணத்தில் பூத்திருக்கின்றனவே, அந்தச் செடிகளைப் பார்த்தீர்களா?'' என்று காடாக மண்டிக் கிடந்த பூச்செடிகளைச் சுட்டிக் காட்டினார் கோபுலு.

''ஆமாம்; அதெல்லாம் என்ன செடிகள்?''

''பேர் தெரியாது; ஆனால் அந்த இலைகளைப் பறித்துச் சாறு பிழிந்து வெட்டுக் காயங்களுக்குப் போட்டால் உடனே ஆறிவிடும்!'' என்றார்.

''இந்த இடத்தில் நூற்றுக்கணக்கான சிற்பிகள் உளியினால் கற்களை வெட்டிக் கொண்டிருந்தபோது அவர்களில் பலருக்கு வெட்டுக் காயம் ஏற்பட்டிருக்கலாம். அவர்களுடைய காயத்தை ஆற்றுவதற்காகவே இந்தச் செடிகள் இங்கே வளர்க்கப்பட்டிருக்கலாம்'' என்றேன் நான்.

திடீரென்று ''ஆ!'' என்றபடியே கீழே குனிந்தார் கோபுலு.

''என்ன, என்ன? காலில் அடிபட்டதா?'' என்று கேட்டேன்.

''இல்லை; இதோ பாருங்கள், நீலம் பச்சை, மஞ்சள் நிறக் கற்கள்! அஜந்தா சித்திரங்களுக்கு இந்தக் கற்கள்தான் வர்ணங்களாக உபயோகப்பட்டிருக்க வேண்டும். இவற்றைப் பொடி செய்து பச்சிலை மூலிகைகளைச் சாறு பிழிந்து வண்ணக் குழம்பாக்கித் தீட்டியிருப்பார்கள்'' என்றார் அவர்.

''கூக்கூ'' என்று காட்டுப் பட்சிகள் குரல் கொடுத்தன. தொலைவில் மயில்கள் கர்ண கடூரமாகச் சப்தித்தன. ஆகாயத்தில் மேகங்கள் சூழ்ந்து வந்தன. எந்த நிமிஷத்திலும் மழை கொட்டும் என்ற சூழ்நிலை உண்டாயிற்று,

''முதல் நம்பர் குகைதான் எல்லோராவியிலேயே மிகப் பழமையான குகை. ஆனால் புத்த குகைக்குள்ளே பத்தாம் நம்பர் குகைதான் மிகவும் முக்கியமானது. புத்த சைத்தியம் அல்லது கோயில் என்று இதைச் சொல்வார்கள். 'விசுவகர்மா' என்று இதற்குப் பெயர்'' என்றார் வழிகாட்டி.

''முதலில் விசுவகர்மா குகைக்கே போவோம்'' என்றேன்,

''அந்தக் குகைக்குள் நுழைந்ததும் அங்குள்ள சிற்பங்கள் எங்களை ஊமைகளாக்கி விட்டன!

வியப்பு தெளிந்ததும், ''இதுவா புத்தர் கோயில்?'' என்று மெதுவான குரலில் வழிகாட்டியைப் பார்த்துக் கேட்டேன். என்ன ஆச்சரியம்!

அவன் பதில் கூறுவதற்குள்,

''இதுவா புத்தர் கோயில்?''

''இதுவா புத்தர் கோயில்?''

''இதுவா புத்தர் கோயில்?''

என்று என்னையே திருப்பிக் கேட்டது ஒரு பயங்கரமான குரல். நான் நடுங்கிவிட்டேன். அந்தக் குரல் வேறு யாருடையதுமல்ல; என்னுடையதேதான்! குகை போன்ற அந்தப் புத்த சைத்தியத்தில் எழுந்த எதிரொலியே என்னை நடுங்க வைத்தது என்பதை அடுத்த கணமே உணர்ந்து கொண்டேன்.

புத்த சைத்தியத்தில் எழுந்த எதிரொலியைக் கேட்பதில் மகிழ்ச்சியுற்ற நாங்கள் சிறு குழந்தை போல் திரும்பத் திரும்ப 'ஓம் . . . ஓம்' எனக் குரல் கொடுத்துக் கொண்டிருந்தோம்.

எங்கள் குரல் பல நூறு மடங்காகப் பெருகி பயங்கரமாக ஓங்காரமிட்டது.

''இந்தக் குரல் எங்கிருந்து எப்படி வருகிறது? எவ்வாறு மறைகிறது?'' என்று நண்பரிடம் கேட்டேன்.

''நாம் எங்கிருந்து வருகிறோம்? எவ்வாறு மறைந்து போகிறோம்? அதைப் போலத்தான் . . .'' என்றார் நண்பர்.

''இந்த வேதாந்தம் உங்களுக்கு எப்போது வந்தது?'' என்று கேட்டேன்.

''எல்லாம் இடத்தின் விசேஷம்!'' என்றார் அவர்.

''கூரையைப் பார்த்தீர்களா?'' என்று மேலே சுட்டிக் காட்டினார் பேட்டோகிராபர்.

யானை முதுகைப் போன்ற வடிவத்தில் அமைக்கப் பெற்றிருந்த அந்தக் கூரை, மரக்கழிகளை வளைத்துக் கட்டப்பட்டது போல் தோற்றமளித்தது. உண்மையில் குகைப் பாறையைத்தான் அப்படிக் குடைந்து ஜாலம் புரிந்திருந்தார்கள் சிற்பிகள்.

கர்ப்பக்கிருகம் இருக்கக்கூடிய இடத்தில் மிக உயரமான 'தாகோபா' அமைத்துள்ளார்கள். அதன் உயரம் 27 அடி. அதன் முன் பக்கத்தில் மிகப் பெரிய புத்தர் சிலை ஒன்றைக் குடைந்திருக்கிறார்கள். இளமைப் பொலிவுடன், மோன நிலையில், கருணையே வடிவமாக அமர்ந்திருக்கும் புத்த பகவானைக் காணும்போது நம் உள்ளம் தூய்மை பெறுகிறது.

''புத்தர் இங்கே ஏன் உட்கார்ந்திருக்கிறார்?'' என்று கேட்டார் போட்டோகிராபர்.

''எழுந்து நின்றால் கூரை தலையில் இடிக்குமே!'' என்றேன் நான்.

''அடுத்தாற் போலுள்ள விஹாரங்கள் இரண்டையும் பார்த்து விட்டால் புத்த குகைகள் எல்லாவற்றையுமே பார்த்த மாதிரி தான்'' என்றான் வழிகாட்டி.

''அவை விஹாரங்களா அல்லது சைத்தியங்களா?'' என்று வழிகாட்டியிடம் கேட்டேன்.

''இரண்டும் கலந்த மாதிரி'' என்றான் வழிகாட்டி.

''சைத்தியங்களுக்கும் விஹாரங்களுக்கும் என்ன வித்தியாசம்?'' என்று கேட்டார் போட்டோகிராபர்.

''சைத்தியம் என்பது யானை முதுகு போன்ற தோற்றம் கொண்ட பௌத்த ஆலயம். விஹாரம் என்பது பிட்சுக்கள் தங்கிப் பிரார்த்தனை செய்யும் மடாலயம்.''

''அடுத்தாற் போலுள்ள இரண்டு விஹாரங்களுக்கும் என்ன பெயர்?'' என்று வழிகாட்டியிடம் கேட்டேன்.

''பதினோராம் நம்பர் குகைக்கு 'தோ தால்' என்று பெயர். பன்னிரண்டுக்கு 'தீன் தால்' என்று பெயர்'' என்றான் வழிகாட்டி.

'இரண்டடுக்கு மாடி', 'மூன்றடுக்கு மாடி' என்பதைத்தான் 'தோ தால்', 'தீன் தால்' என்று இந்தியில் சொல்கிறார்கள்.

ஆயினும் 'தோ தால்' என்று கூறப்படும் பதினேராம் நம்பர் குகை மூன்றடுக்கு மச்சுகள் கொண்டதாயிருந்தது.

"ஜூட் போல்தா ஹை! உதர் தேகோ! தோ தால் கேவ் மே தீன் தால் ஹை!" என்றேன் நான்.

"ஆமாம், கொஞ்ச காலமாகத்தான் மூன்று மச்சு. அதற்கு முன்னல் இரண்டு மச்சுதான்" என்ருன் வழிகாட்டி.

"அப்படியானல், மூன்ருவது மச்சு எப்போது வெட்டினர் கள்?"

"*1877*-ல். அது வரை இந்தக் கீழ்க் குகையைக் கல்லும் மண்ணும் மறைத்து வைத்திருந்தன."

"ஓகோ! அப்படியா விஷயம்?" என்று சொல்லிக்கொண்டே கீழ்க் குகைக்குள் புகுந்தோம். உள்ளே போதிசத்துவர்கள் வரிசை யைச் சேர்ந்த பத்மபாணியும், வஜ்ரபாணியும் புத்தரின் அருகே சேவை செய்வது போலக் கோலம் கொடுத்துக் கொண்டிருந்தனர்.

சுவரோடு ஒட்டிக்கொண்டு நின்ற பத்மபாணியின் வலது கையிலிருந்த தாமரை மலரைத் தொட்டுப் பார்த்த கோபுலு, "ஆ! வெரி ஸாஃப்ட்! வெரி ஸாஃப்ட்!" என்று சொல்லிச் சொல்லி மகிழ்ந்து கொண்டிருந்தார்.

"தாமரை மிருதுவாகத்தானே இருக்கும்? மகிழ்ச்சிக்கோ வியப்புக்கோ இதிலென்ன இருக்கிறது?" என்றேன்.

"தாமரையைச் சொல்லவில்லை; இந்த எல்லோராப் பாறை யைத்தான் சொல்கிறேன். நம்முடைய மாமல்லபுரத்துப் பாறை தான் ரொம்பக் கடினம்! ஹார்ட் கிரானைட்! அதைக் குடைந்தெடுப் பதுதான் ரொம்பக் கஷ்டம். இது ரொம்ப ஸாஃப்ட் ஸ்டோன். பொரை பிஸ்கட் மாதிரி!" என்ருர் கோபுலு.

"ஆ! இந்தப் பசிக்கு ஒரு பொரை பிஸ்கட்டும் டீயும் கிடைத் தால் எப்படி இருக்கும்? பொரை பிஸ்கட்டை டீயில் தோய்த்துச் சாப்பிட்டால் எவ்வளவு 'ஸாஃப்'டாயிருக்கும்!" என்ருர் போட் டோகிராபர்.

"தீன் தால் ஜானு?" என்று கேட்டான் வழிகாட்டி.

"தீன் தால் மே கித்னு தால் ஹை?" என்று கேட்டார் போட் டோகிராபர்.

"தீனே தீன் ஹை!" என்ருர் கோபுலு.

"ஒரு வேளை நாலாவது தால் பூமியில் மறைந்திருக்கிறதோ என்னவோ? சரியாகப் பார்த்து விட்டார்களாமா?" என்று கேட்டுக் கொண்டே தரையைக் குச்சியால் குத்திப் பார்த்தேன்.

"குச்சியால் குத்துகிறீர்களே இது மண் இல்லை, கல்!" என்ருர் கோபுலு.

"ஸாஃப்ட் ஸ்டோன்தானே!'' என்றேன் நான் சிரித்துக் கொண்டே.

புத்த விஹாரங்களுக்குள்ளேயே மிகப் பெரிது பன்னிரண்டாவது குகைதான். ஐம்பதடி உயரமுள்ள இதன் முகப்புத் தோற்றம் கம்பீரமாக எழுந்து நிற்கிறது. முகப்பிலே சித்திர விசித்திரமான வேலைப்பாடுகள் கொண்ட நுட்பமான உருவங்களும் காட்சிகளும் அடங்கியுள்ளன. செங்கல்லும் சுண்ணும்பும் வைத்துக் கட்டிய கட்டடம்போன்ற பிரமையைக் கல்லிலே உண்டாக்கியிருக்கிருர்கள் அந்த மாயச் சிற்பிகள்!

கீழே உள்ள ஹாலைப் பார்த்து முடிந்ததும் மேல் மச்சுக்கு ஏறிச் சென்ருேம்.

அங்கே வரிசை வரிசையாக நிற்கும் தூண்களையும் அவற்றுக்கிடையே அமைந்துள்ள மிக மிக விசாலமான கூடங்களையும் அந்தக் கூடங்களின் கோடியில் காட்சி தரும் புத்த சிற்பங்களையும் காணும் போது நாம் ஒரு குகைக்குள்ளேதான் இருக்கிருேமா என்ற சந்தேகம் எழுகிறது. 115 அடி நீளம், 70 அடி அகலம், 12 அடி உயரம் — இதைப்போல் அடுக்கடுக்காக மூன்று மச்சுக்கள், ஆங்காங்கே விதம் விதமான புத்தர் சிலைகள், அவற்றிலே பெரிய வடிவங்கள், சிறிய வடிவங்கள், நிற்கிற மாதிரி, உட்கார்ந்திருக்கிற மாதிரி, கையைக் கட்டிக்கொண்டு, கையைச் சாதாரண நிலையில் வைத்துக்கொண்டு, தபோ நிலையில், சாந்த நிலையில், உபதேச நிலையில் - இப்படி எத்தனை எத்தனையோ தோற்றங்களில் . . . !

''இவ்வளவு பெரிய கூடத்தை அரண்மனைகளில்கூடக் காண முடியாது'' என்ருர் கோபுலு.

''இடத்தை அப்பழுக்கின்றி எவ்வளவு சுத்தமாக வைத்துக் கொண்டிருக்கிருர்கள் . . . !''

''இங்கே ஆயிரம் பேருக்கு ஒரே சமயத்தில் பந்தி போடலாம்.''

''அந்தக் காலத்தில் இந்த இடத்தில் ஆயிரக்கணக்கான பிட்சுக்கள் உட்கார்ந்து பிரார்த்தனை நடத்தியிருப்பார்கள். பக்கத்திலுள்ள கைலாசர் கோயில் மணியோசை முழங்கியிருக்கும். அதற்கடுத்தாற்போல் வடகோடியிலுள்ள குகைகளில் ஜைனர்களின் பிரார்த்தனைக் குரல் ஒலித்திருக்கும். இம் மூன்றும் காற்றிலே கலந்து விண்ணேக்கி எழுகின்றபோது, மூன்றும் வெவ்வேறு மதங்களானபோதிலும், அவற்றின் வழி முறைகள் வெவ்வேறு முறையாயிருந்தபோதிலும் கடைசியாக அவை போய்ச் சேரும் இடம் ஒன்றேதான் என்று கூறுவது போலிருக்கும்.''

''ஒரு பிசகு செய்து விட்டோம். முதலில் கைலாச குகைக்குப் போயிருக்கக்கூடாது. திருவாவடுதுறை ராஜரத்னம் பிள்ளையின் நாதஸ்வரக் கச்சேரி கேட்ட பிறகு மற்ற நாயனங்களைக் கேட்டால் திருப்தி ஏற்படுகிறதா? அந்த மாதிரிதான்! கைலாச குகையைப் பார்த்த பிறகு எந்தக் குகைக்குப் போனாலும் எவ்வளவு பெரிய சிலைகளைப் பார்த்தாலும் மனம் திருப்தி அடையவில்லை!''

''ஆமாம்; கைலாசம் போக வேண்டியது கடைசியில்தானே?'' என்று மறைபொருளாகக் கூறினார் போட்டோகிராபர்.

''புத்த விஹாரங்கள் பார்த்தாயிற்று. இனிமேல் இந்துக் கோவில்களும் ஜைன மண்டபங்களும்தான்'' என்றான் வழிகாட்டி.

''புத்த விஹாரங்கள் தீர்ந்துவிட்டனவா? இவ்வளவுதானா?'' - கோபுலுவின் கேள்வியில் ஏமாற்றம் தொனித்தது.

''கவலைப்படாதீர்கள்; அஜந்தா போகப் போகிறோம். அங்கே முழுக்க முழுக்க புத்த மதக் கோயில்கள்தான். பௌத்த மதம் அங்கே தனிக் கச்சேரி நடத்தியிருக்கிறது'' என்றேன் நான்.

''இங்குள்ள இந்துக் கோயில்களில் முக்கியமானது எது?'' என்று விசாரித்தார் போட்டோகிராபர்.

''கைலாசத்துக்கு அடுத்தது ராமேஷ்வர் டெம்பிள்!'' என்றான் வழிகாட்டி.

''கித்னா நம்பர்?''

''ட்வெண்டி ஒன்!''

கைலாசத்தைத் தாண்டி, வடக்கே இரண்டு பர்லாங் தொலைவிலுள்ள ராமேசுவர்குகையை அடைவதற்குள் எங்கள் பாடு போதும் போதுமென்றாகி விட்டது. ஒரு தடவை குகைகளைச் சுற்றிப் பார்ப்பதற்கே இவ்வளவு பாடுபடுகிறோமே, அந்தக் காலத்தில் இந்தக் கோயில்களைக் குடைந்தெடுத்த சிற்பிகள் எத்தனை முறை இப்படி அலைந்திருப்பார்கள்? எத்தனை முறை மலைச் சரிவுகளில் ஏறி இறங்கியிருப்பார்கள்? எவ்வளவு பிரயாசைப்பட்டு இந்த அரும் பெரும் காரியத்தைச் சாதித்திருப்பார்கள்?'' என்றார் கோபுலு.

''என்ன பிரமாதம்? ஸாஃப்ட் ஸ்டோன்தானே?'' என்றேன் நான்.

''ஸாஃப்ட் ஸ்டோன்தான்; ஆனால், அதன் மேல் ஏறி வருவதற்குள் கால் ஒடிந்து போகிறதே!'' என்றார் அவர்.

கைலாசத்தின் தெற்குப் பக்கத்தில் உள்ள குகைகள் எவ்வளவுக்கெவ்வளவு அடுத்தடுத்து நெருக்கமாக இடம் பெற்றுள்ளனவோ அவ்வளவுக்கவ்வளவு வடக்குப் பக்கத்திலுள்ள குகைகள் விலகி விலகிப் பரவலாக அமைந்துள்ளன.

"நாக்கை வறட்டுகிறது. தாகம் சொல்லித் தரமில்லை" என்றார் போட்டோகிராபர்.

வழிகாட்டியை டீ கொண்டு வரச் சொல்லி அனுப்பிவிட்டு நாங்கள் மூவரும் ராமேசுவரம் குகை மண்டப வாயிலை அடைந்தோம். அங்கே இடது பக்க மூலையில், பாறையின் ஓரத்தில் காட்சி அளித்த கங்காதேவியின் சிற்பத்தைக் கண்டதும் எங்கள் இமைகள் செயலற்றுப் போயின.

"அடாடா! அற்புதமான சிற்பம்!"

"மண்ணையும் விண்ணையும் இணைப்பது போல் எத்தனை உயரம்?"

"சிற்பத்தின் அமைப்பே, வானிலிருந்து விழும் நீர்த்தாரைகளுக்குப் பெண்ணுருவம் கொடுத்தது போல் அல்லவா தோன்றுகிறது!"

"எந்த மகா சிற்பி இந்த வடிவத்தைக் கற்பனை செய்தாரோ!"

"கீழே மகர வாகனத்தைப் பார்த்தீர்களா!"

"ஊன்றிய இடது கால் உடலின் கனத்தையெல்லாம் தாங்கிக் கொண்டிருப்பது போல் செய்திருக்கும் நயத்தைக் கவனியுங்கள்!"

"இடையிலே ஒரு நெளிவு கொடுத்திருக்கிறானே அந்தக் கவர்ச்சியைச் சொல்லுங்கள்!"

"கூந்தலை எத்தனை அழகாகப் பின்னிக் கொண்டை போட்டிருக்கிறான்!"

"ஒரு குள்ள உருவத்தின் தலை மீது கங்கை தனது இடது கையைத் தாங்கி நிற்கும் அழகைப் பாருங்கள்!"

"கங்காதேவியைத் தாங்கும் பாவனையில் கைகள் இரண்டையும் கட்டிக்கொண்டு பெருமையுடன் நிற்கும் அந்தக் குள்ளனைக் கண்டீர்களா?"

"எல்லாம் சரிதான். இந்தச் சிற்பத்தை மண்டபத்தின் வெளியிலே எதற்காகச் செய்து வைத்தனர்?"

"எத்தனையோ முன் யோசனையுடன் திட்டமிட்டுக் காரியங்களைச் சாதித்துள்ள சிற்பிகள் கங்காதேவியைக் காரணமின்றி இங்கே செய்திருக்க மாட்டார்கள். அந்தக் காரணத்தைக் கண்டு பிடிக்கும் திறமை கூட நமக்கு இல்லை!"

"உள்ளே போய்ப் பார்க்கலாம். அங்கே இன்னும் என்னென்ன அதிசயங்கள் காத்திருக்கின்றனவோ?"

"இதோ பார்த்தீர்களா, இந்த மூலையில் கங்கைக்கு எதிராக யமுனையின் சிற்பத்தை . . .!"

"அப்படியானால் சரஸ்வதியும் இருக்க வேண்டுமே!"

''சரஸ்வதி கண்ணுக்குத் தெரியமாட்டாள். திரிவேணி சங்கமத்தில் கூட நாம் கங்கையையும் யமுனையையும் மட்டும் தானே பார்க்கிறோம்!''

''அடாடா, என்ன அற்புதம்?''

''தெய்வங்களேதான் சிற்பிகளாகப் பிறந்து இந்தக் குகைக் கோயில்களைச் செய்திருக்க வேண்டும். சாதாரண மனிதர்கள் இதைச் செய்திருப்பார்கள் என்று எண்ண முடியவில்லை . . .''

குகைக்குள்ளே எத்தனை எத்தனையோ காட்சிகள்! அவற்றுள் கலியாணசுந்தரரின் திருமண நிகழ்ச்சியும் கீழே சீர் வரிசைகளுடன், மேளதாளங்களுடன் செல்லும் ஊர்வலக் காட்சியும் என்றென்றும் மறக்க முடியாதவை!

இன்னொரு இடத்தில் பார்வதியும் பரமசிவனும் உட்கார்ந்து சொக்கட்டான் ஆடுகிறார்கள். கீழே சிவ கணங்கள் நந்தியை ஒட்டிச் செல்லும் காட்சி நம்மைக் குலுங்கி நகைக்க வைக்கிறது. குள்ளன் ஒருவன் மாட்டின் வாலைக் கடிக்கிறான். இன்னொருவன் தும்பைப் பிடித்து இழுக்கிறான். மற்றொருவன் காலைப் பிடித்துத் தள்ளுகிறான். வேறொருவன் மாட்டின் மீதே ஏறிக் கொண்டிருக்கிறான். ஒருவன் காதைப் பிடித்துத் திருகுகிறான். ஒருவன் தன் இரு விழிகளையும் கைவிரல்களால் அகற்றி மாட்டுக்குப் பூச்சாண்டி காட்டுகிறான். வேறு இருவர் ஒருவரையொருவர் கட்டிப் பிடித்துக் கொண்டு பயத்தோடு பார்க்கிறார்கள்!

ஜைன ஆலயங்களில் முப்பதாவது குகையைச் 'சின்னக் கைலாசம்' என்று கூறுகிறார்கள். கைலாசத்தைப் போலவே இங்கு சிறிய அளவில் ஒரு கோயிலைக் குடைந்தெடுத்திருக்கிறார்கள் அதைப் போலவே 32-ம் குகையான இந்திர சபை குகை வாயிலிலும் இத்தகைய கோயில் ஒன்றைக் குடைந்திருக்கிறார்கள். ஆனாலும் கைலாசம் கைலாசம்தான் . . . !

ஜைனக் குகைகளில் பெரும்பாலும் நிர்வாணச் சிற்பங்களே இடம் பெறுகின்றன. ஜைன முனிவர்கள் எனக் கூறப்படும் இருபத்து நான்கு தீர்த்தங்கரர்களும் திகம்பர வடிவத்தில் பார்க்குமிடமெல்லாம் நின்று கொண்டிருக்கிறார்கள். ஒருவருக்கொருவர் அதிக வித்தியாசம் ஏதுமில்லையாகையால் கொஞ்சம் அலுப்பாகக் கூட இருக்கிறது.

இங்கும் சில குகைகள் இரண்டு மச்சுகள் கொண்டதா யிருக்கின்றன. மாடிப்படிகள் ஏறி அங்குள்ள சிற்பங்களையும் பார்த்தோம். மச்சுகளில் உள்ள சிற்பங்கள் பலவற்றுக்குக் கால்கள் உடைந்து போயிருந்தன.

''இவற்றுக்கெல்லாம் ஏன் கால்கள் உடைந்து போயிருக் கின்றன?'' என்று கேட்டார் போட்டோகிராபர்.

''இத்தனை படிகளிலும் ஏறி வருவதற்குள் நம் கால்கள் ஒடிந்து போகவில்லையா? அந்த மாதிரி இந்தச் சிற்பங்களும் மாடி ஏறி வந்திருக்கலாம்!'' என்றேன்.

எங்களுக்கு முன்பாகவே முப்பத்தோராம் குகையைப் பார்த்து விட்டு வந்த கோபுலு, ''அங்கே விசேஷமாக எதுவுமில்லை. இதைப் போலவே அங்கும் சில சிற்பங்கள் நின்று கொண்டிருக்கின்றன. எல்லாம் ஸ்டாண்டிங் போஸ்தான். அவுட்ஸ்டாண்டிங்கா ஒன்று மில்லை'' என்றார்.

திடீரென்று ஓர் இடி முழக்கம் கேட்டது.

''மழை வரும் போலிருக்கிறது. திரும்பிப் போகலாம்'' என்றேன்.

''பர்ஸாத் ஆதாஹை! ஜல்தி ஜல்தி'' என்று துரிதப்படுத்தினன் வழிகாட்டி.

மூவரும் பரபரப்புடன் அவனைப் பின்தொடர்ந்தோம். கொஞ்ச தூரம் செல்வதற்குள் கனத்த மழை பிடித்துக் கொள்ளவே வழியி லிருந்த ராமேசுவரம் குகைக்குள் அடைக்கலம் புகுந்தோம்.

மலைச் சிகரங்களிலிருந்து பெருகிய வெள்ளம் ஆங்காங்கே குகைச் சரிவுகளில் 'ஜோ'வென்று கொட்டிக் கொண்டிருந்தது.

''அடாடா! அதோ பார்த்தீர்களா?'' என்றார் போட்டோ கிராபர்.

அவர் காட்டிய கங்கைச் சிலைக்குப் பக்கத்தில் நீர்வீழ்ச்சி போல் கொட்டிக் கொண்டிருந்த வெள்ளத்தைக் கண்டபோது எங்கள் மெய் சிலிர்த்தது.

''சிற்பிகள் கங்காதேவியை இந்த இடத்தில் ஏன் அமைத்தார் கள் என்பதற்கு இப்போது காரணம் விளங்குகிறதா? வானத்தி லிருந்து வீழ்கின்ற அமுத தாரையை கங்கை என்று சொல்வதுண் டல்லவா? அதனால்தான் இந்த இடத்தில் கங்காதேவியை அமைத் தார்கள். நிஜ கங்கையும் சிற்ப கங்கையும் இந்த இடத்தில் ஒரு மித்து ஐக்கியமாகும் ஜாலத்தைப் பாருங்கள்! எந்த மகா சிற்பி இதைக் கற்பனை செய்தானோ?'' என்றேன்.

''ஆயிரம் ஆண்டுகளுக்குப் பிறகும் வெள்ளத்தின் ஓட்டம் திசை மாறாமல் இதே இடத்தில் வந்து விழும் என்று அந்தச் சிற்பிகள் எப்படித்தான் ஊகித்தார்களோ?'' என்றார் கோபுலு.

''அதுதான் விந்தை! இந்த விந்தைகளை யெல்லாம் புரிந்து விட்டுத் தாங்கள் யார் என்பதையே சொல்லாமல் போய் விட்டார் களே!'' என்றேன்.

''அது இன்னும் பெரிய விந்தை!'' என்றார் அவர்.

மழை நின்றதும் கைலாசக் கோயிலுக்குச் சென்று மீண்டும் ஒரு முறை அக் கோயிலைச் சுற்றிப் பார்த்துவிட்டு அவுரங்காபாத் புறப் பட்டோம். அப்போது எங்கள் நெஞ்சத்தில் மிஞ்சி நின்றது ஒரே ஒரு எண்ணம்தான். மிக மிக அற்பமான காரியங்களைச் செய்து விட்டு 'நான் செய்தேன்', 'நான் செய்தேன்' என்று சொல்லிக் கொள்ளுகிறோமே, அந்த 'நான்' என்னும் அகம் நம்மைவிட்டு எப்போது ஒழியப் போகிறது என்பதே அந்த எண்ணம்!

கோவா

31

நம்முடைய மூக்கை நாமே தொடுவதற்கு இரண்டு வழிகள் உண்டு. முதல் வழி, நேர்முகமாகத் தொடுவது; இரண்டாவது வழி, கையைத் தலைக்குப் பின்னால் சுற்றி வளைத்துக்கொண்டு போய்த் தொடுவது!

நாங்கள் இருவரும் கோவாவை அடைவதற்கு இரண்டாவது வழியைப் பின்பற்றினோம். எதையுமே சுலபமாக அடைந்து விடுவதில் இன்பமென்ன இருக்கிறது?

கோவாவுக்குப் போய் வருவது அப்படி ஒன்றும் கஷ்டமான காரியமல்ல. ஆனாலும் நாங்களாகவே அதைக் கடினமான காரியமாக்கிக் கொண்டோம். நல்லபடியாக இருந்த நூலைச் சிக்கலாக்கி விட்டுப் பின்னர் சிக்கலைப் பிரிக்கச் சங்கடப்படுவது உண்டல்லவா? அந்தக் கதைதான்!

கோவாவுக்குச் செல்ல வேண்டுமென்றால் டில்லியிலுள்ள வெளி நாட்டு விவகார இலாகாவுக்கு எழுதி இந்திய சர்க்காரின் அனுமதி பெற்றாக வேண்டும். சர்க்காரின் அனுமதி வேண்டுமென்றால் அதற்குரிய காரணங்களைச் சொல்ல வேண்டும்.

''கோவாவில் என்ன வேலை? எத்தனை நாள் தங்கப் போகிறீர்கள்? எந்த வழியாகப் போகப் போகிறீர்கள்? எங்கே தங்கப் போகிறீர்கள்?'' என்றெல்லாம் கேட்பார்கள். இவ்வளவுக்கும் பதில் கூறினால், 'பர்மிட்' அனுப்பி வைப்பார்கள்.

நாங்கள் கோவாவுக்குப் போக எண்ணிய சமயம் பெல்காம் கலெக்டரே 'பர்மிட்' கொடுப்பதாகத் தகவல் கிடைக்கவே, நேராக பெல்காமுக்கே போய்ச் சேர்ந்து விட்டோம். பெல்காம் கலெக்டரை அணுகியபோது அவர், ''அடாடா! நான் ஒன்றும் செய்வதற்கில்லையே! இப்போதெல்லாம் டில்லி சர்க்காரே அல்லவா அனுமதி கொடுக்கிறார்கள்? கொஞ்ச நாள் முன்புவரை நான்தான் கொடுத்துக்கொண்டிருந்தேன். இப்போது அந்த அதிகாரம் என்னிடம் இல்லை'' என்று கூறிக் கையை விரித்து விட்டார்.

''நாங்கள் பத்திரிகைக்காரர்கள்'' என்று சொல்லிப் பார்த்தோம்,

''யாராயிருந்தாலும் நான் ஒன்றும் செய்ய இயலாதவனுயிருக்கிறேன். டில்லிக்கு எழுதிக் கேளுங்களேன். பத்திரிகைக்காரர்கள் என்ருல் உடனே 'பர்மிட்' அனுப்பி விடுவார்கள்'' என்று யோசனை கூறிய அவர் டில்லியில் யாருக்கு எழுத வேண்டும் என்ற விவரத்தையும் சொன்னுர்.

ஆனுலும் நாங்கள் டில்லிக்கு எழுதிக் கேட்கவில்லை. சம்பந்தப்பட்ட இலாகாவை டிரங்க் டெலிபோனிலேயே கூப்பிட்டுப் பேசினேம்.

''கோவா செல்ல பர்மிட்தானே வேண்டும்?'' என்று கேட்டது டில்லி.

''ஆமாம்'' என்ரேம் மகிழ்ச்சியுடன்.

''பர்மிட் 'பாரத்'திற்கு ஆபீஸ் மூலமாக 'அப்ளை' செய்யுங்கள். பாரம் வந்ததும் அதைப் பூர்த்தி செய்து அனுப்புங்கள்'' என்று கூறி விட்டது டில்லி.

நாங்கள் இருப்பது பெல்காமில். ஆபீஸ் இருப்பது மெட்ராஸில். போக வேண்டிய இடமோ கோவா. பர்மிட் கொடுக்க வேண்டிய இடமோ டில்லி. விஷயத்தை எவ்வளவு சிக்கலாக்கி விட்டோம் பார்த்தீர்களா! தலையைச் சுற்றி மூக்கைத் தொடுகிற கதைதானே!

மேற்கொண்டு என்ன செய்வது?

பாரம் வாங்கி அனுப்பும்படி டில்லியில் உள்ள நண்பர் ஒருவருக்கு போன் செய்தோம். ஆபீஸ் மூலமாகவும் கடிதம் எழுதிப் போடச் செய்தோம்.

''சரி; பர்மிட்|பாரம் வருகிற வரையில் பெல்காமில் உட்கார்ந்து கொண்டு என்ன செய்வது? சென்னைக்கே திரும்பிப் போய்விடலாமா?'' என்று கேட்டார் நண்பர்.

''முன் வைத்த காலைப் பின் வைப்பது வீரர்க் கழகல்ல. முதலில் பம்பாய்க்குப் போய், அங்கே சில நாட்கள் தங்கி, நமக்குள்ள வேலைகளை முடித்துக் கொண்டு விடலாம். இதற்குள் பர்மிட்டும் நம் கைக்குக் கிடைத்துவிடும். எப்படியும் கோவா வேலையை முடித்துக்கொண்டு பம்பாய்க்குப் போவதாகத் திட்டமிட்டிருக்கிரேமல்லவா?'' என்றேன்.

''ஆமாம்; பர்மிட் பாரத்தை பெல்காம் போஸ்ட்மாஸ்டர் விலாசத்துக்கல்லவா அனுப்பச் சொல்லியிருக்கிரேம்?''

''அதனுலென்ன? பெல்காம் போஸ்ட் மாஸ்டரை பம்பாய் விலாசத்துக்கு அனுப்பிவிடச் சொன்னுல் போகிறது?''

ஐந்தாறு நாட்கள் பம்பாயில் தங்கி எங்கள் அலுவல்களை முடிப்பதற்குள் பர்மிட்டும் கைக்கு வந்து சேர்ந்தது. அதை எடுத்துக் கொண்டு மீண்டும் பெல்காமுக்கே திரும்பிச் சென்ரேம்.

பம்பாயிலிருந்து கோவாவுக்குச் செல்ல மூன்று மார்க்கங்கள் இருக்கின்றன, தரை மார்க்கம், கடல் மாாக்கம், ஆகாய மார்க்கம்! கப்பலிலோ, விமானத்திலோ பயணம் செய்ய டிக்கட் கிடைக்காததால், ரயில் ஏறி பெல்காம் வழியாக லோண்டாவை அடைந்தோம். லோண்டாவிலிருந்து இன்னொரு ரயில் பிடித்து கோவாவுக்குப் போய்ச் சேர வேண்டும். லோண்டாவிலிருந்து வாஸ்கோ - ட - காமா என்னும் நகரத்துக்கு எழுபது எண்பது மைல் தூரமே இருந்தபோதிலும், அந்தக் குறுகிய தூரத்தைக் கடந்து செல்வதற்குள் எட்டு மணி நேரம் தீர்ந்து விடுகிறது! கோவா ரயில் மலைகளின் மீது ஏறியும் இறங்கியும் செல்வதால் ரயிலுக்கு முன்னும் பின்னும் இரண்டு என்ஜின்களைப் பூட்டி ஓட்டுகிறார்கள்.

''இரண்டு என்ஜின்களும் சேர்ந்து இழுத்துமா எட்டு மணி நேரம் ஆகிறது? ஒரு வேளை ஒன்றுக்கொன்று முரணாக இழுத்துக் கொண்டிருக்கின்றனவோ?'' என்று எங்களுடன் பயணம் செய்து கொண்டிருந்த கோவா நண்பரைக் கேட்டோம்.

''அதெல்லாம் இல்லை. 'கேஸல் ராக்' என்னுமிடத்தில் (கோவாவுக்கும் இந்திய மண்ணுக்கும் இடையே உள்ள எல்லைப் பகுதி) இந்த ரயிலை மூன்று மணி நேரம் காக்கப் போட்டு விடுவார்கள். அங்கேதான் கோவாவுக்குச் செல்கிறவர்களையும், கோவாவிலிருந்து வெளியே செல்கிற்வர்களையும் சோதித்து அனுப்புவார்கள்'' என்றார் அவர்.

கோவாவில் என்னென்ன சாமான்கள் மலிவாகக் கிடைக்கின்றன என்பதை நாம் கேஸல் ராக்கில் கஸ்டம்ஸ் சோதனைகளுக்குள்ளாகும் சாமான்களைப் பார்த்தே சுலபமாகத் தெரிந்து கொண்டு விடலாம்! கோவா செல்கிறவர்கள் தங்களிடமுள்ள முக்கியப் பொருள்கள் என்னென்ன என்பதை இங்கே 'டிக்ளரேஷன்' பாரத்தில் எழுதிக் கொடுக்க வேண்டும். இல்லையென்றால் திரும்பி வரும்போது அந்தச் சாமான்களுக்கு சுங்க வரி விதித்து விடுவார்கள்.

நாங்கள் உட்கார்ந்திருந்த வண்டிக்குள் ஏறி வந்த கஸ்டம்ஸ் அதிகாரி எங்களைப் பார்த்து, ''டெம் அல்குமா கோய்ஸா - அ - டிக்ளேரா! (டிக்ளேர் செய்துகொள்ள வேண்டிய சாமான்கள் ஏதேனும் உங்களிடம் இருக்கின்றனவா?)'' என்று கேட்டார்.

''அப்ஸல்யூட்மெண்டேநாடா (ஒன்றுமே கிடையாது)'' என்றேன் நான். நண்பர் வியப்புடன் என்னை ஏற இறங்கப் பார்த்துவிட்டு, ''எனக்குத் தெரியாமல் எப்போது போர்ச்சுகீஸ் கற்றுக் கொண்டீர்கள்?'' என்றார்.

''அந்த ரகசியத்தை அப்புறம் சொல்லுகிறேன்'' என்றேன் நான்.

சோதனைகளுக்கெல்லாம் ஈடு கொடுத்துவிட்டு, 'கேஸல் ராக்' கைத் தாண்டிச் சில மைல் தூரம் சென்றதும், அழகிய இயற்கைக் காட்சிகள் நம் உள்ளத்தைக் கவர்கின்றன. வானுற ஓங்கி நிற்கும் மலை உச்சியினின்று பொங்கி வரும் 'தூத் ஸாகர்' என்னும் பால் அருவியைக் காணும்போது நம் பசி தாகம் எல்லாம் பறந்தோடி விடுகின்றன.

காடு மலைகளையெல்லாம் கடந்து சமவெளியை அடையும் போது வறண்ட செம்மண் பூமியைக் காண்கிறோம். செந்நிறம் என்றால், சூரியன் மலைவாயில் விழும் வேளையில் வான முகட்டில் மேகங்கள் சிவந்திருக்குமே, அம்மாதிரியான நிறம்! அதைக் கண்ட போது; கோவாவின் விடுதலைப் போராட்ட காலத்தில் தியாகிகள் பலர் தங்கள் குருதியை இந்த மண்ணிலே சிந்தியது என் நினைவுக்கு வந்தது.

சாலைகள் மிக மோசமான நிலையில் காட்சி அளித்தன. சாலை மரங்கள் யாவும் செம்புழுதி அபிஷேகத்தால் பசுமை மறைந்து சந்நியாசிகள் போல் தோற்றமளித்தன.

நானூற்றைம்பது ஆண்டு காலம் போர்ச்சுகீசியரின் அவல ஆட்சிக்கு அடிமைப்பட்டுக் கிடந்த கோவாவின் பரிதாபத் தோற்றத்தைப் பற்றி அந்தச் சாலைகளே கட்டியம் கூறிக் கொண்டிருந்தன.

''இதற்கு முன் ரயில் பாதை கூட மோசமான நிலையிலேயே இருந்தது. தண்டவாளங்களுக்கு அடியில் கிளைத்திருந்த பெரிய பெரிய மரங்கள் தண்டவாளங்களைப் பெயர்த்துப் பிளந்து விட்டிருந்தன. இப்போதுதான் அவற்றையெல்லாம் சீர் செய்து செப்பனிட்டிருக்கிறார்கள். இந்தியாவுக்கும் கோவாவுக்கும் நேரடியான ரயில் போக்குவரத்துக்கூட இப்போது ஏற்பட்டதுதான்'' என்றார் ஒரு கோவா நண்பர்.

''இது என்ன ஸ்டேஷன்?''

''மர்காம் . . .''

''மர்கோவா என்று எழுதியிருக்கிறதே . . .''

''உச்சரிப்பது மர்காம் என்றுதான் . . .''

மர்காம் ஸ்டேஷனில் நாங்கள் கண்ட மற்றொரு புதுமை பெண்களே போர்ட்டர் வேலை செய்து கொண்டிருந்ததுதான்!

''போர்ச்சுகீசிய ஆட்சி இவ்வளவு மோசமாகவா நடை பெற்றுக் கொண்டிருந்தது?'' என்று கோவா நண்பரிடம் விசாரித்தோம்.

"அதை ஏன் கேட்கிறீர்கள்? கோவாவில் மொத்தமே ஆறு லட்சம் பேர்தான் வாழ்கிறார்கள். அவர்களில் பாதிப் பேர் இந்துக் கள். மற்றப் பாதிப் பேர் கிறித்துவர்களும், முஸ்லிம்களும். இந்த ஆறு லட்சம் பேருக்கு வேண்டிய அரிசியைக்கூட கோவாவில் உற்பத்தி செய்வதில்லை. மூன்றில் ஒரு பங்கு நிலங்களே பயிர் செய்யப்படுகின்றன. இவ்வளவு பெரிய ஊரில் மருந்துக்குக்கூட ஒரு தொழிற்சாலை கிடையாது. என்ன சொன்னேன்? மருந்துக்குக் கூட என்று சொன்னேன்? தப்பு. இரண்டொரு மருந்துத் தொழிற் சாலைகள் இருக்கின்றன" என்றார்.

"அப்படியானால் இங்குள்ளவர்கள் என்ன தொழில் செய் கிறார்கள்?"

"கால்வாசிப் பேருக்கு மேல் இந்தியாவின் பல்வேறு இடங் களில் உத்தியோகம் பார்க்கிறார்கள். அவர்கள் மூலமாக கோவா வுக்கு ஆண்டு ஒன்றுக்கு நாலு கோடி ரூபாய் வந்து சேருகிறது. அந்தப் பணம் இல்லை என்றால் கோவாவின் பொருளாதார நிலையே சீர்கேடடைந்து போயிருக்கும்."

"போர்ச்சுகீசியர் இத்தனை காலமும் இங்கே என்ன செய்து கொண்டிருந்தார்கள்?"

"இரும்புக் கனி வளம் இங்கே மலை மலையாகக் கிடக்கிறது. கடந்த நானூறு ஆண்டுகாலமாக அந்த மலைகளையெல்லாம் வெட்டி எடுத்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து கொண்டிருந்தார்கள். இரும்புக் கனி என்றால் ஏதோ பாதாளச் சுரங்கம் என்று எண்ணி விடாதீர்கள். மலைகளை அப்படியே வெட்டி எடுக்க வேண்டும். அவ்வளவுதான்..."

"இரும்பை வெட்டி வெட்டி அனுப்பிக் கொண்டிருந்ததால் தான் போர்ச்சுகீசியரின் இதயமும் இரும்பாகவே ஆகிவிட்டதோ?" - இது நண்பரின் கேள்வி.

ரயில் இன்னும் சற்று தூரம் நகர்ந்ததும், தென்னை மரங்களும் மாமரங்களும் சூழ்ந்த பசும் சோலைகள் தென்படத் தொடங்கின.

"இதென்ன கேரள ராஜ்யம் மாதிரி இருக்கிறதே?" என்றேன்.

"மலையாளத்தைக் காட்டிலும் அழகிய இயற்கைக் காட்சிகள் சூழ்ந்ததுதான் கோவா!" என்றார் அவர்.

"கோவா, மல்கோவா, அல்பான்ஸோ, பாதிரி" என்றெல் லாம் மாம்பழங்களுக்குப் பெயர் வைத்திருக்கிறார்களே, அந்தப் பெயர்களெல்லாம் இங்கிருந்து வந்தவைதானே?"

"ஆமாம்; அல்பான்ஸோ டீ அல்புகெர்க் என்னும் போர்ச்சுகீசியன் தான் 1509-ம் ஆண்டில் முதல் முதலாக இந்தியாவுக்கு வந்தவன். அவனுக்குப் பிறகே வாஸ்கோ - ட - காமா வந்தான்.

அல்பான்ஸோ, கீழ்த்திசையில் போர்ச்சுகீசிய சாம்ராஜ்யத்தை நிறுவ முயற்சி எடுத்துக் கொண்டான். அவனுடைய பெயரைக் கொண்டது தான் அந்தப் பழம். பாதிரி என்பது கிறித்துவப் பாதிரி மார்களைக் குறிப்பது. போர்ச்சுகீசிய மொழியில் 'பாதிரியை' Padre என்று கூறுவார்கள்'' என்றார்.

முக்கி, முனகி மூச்சு விட்டபடியே நகர்ந்து கொண்டிருந்த அந்த ரயில் கடைசியாக கோவாவுக்குப் போய்ச் சேர்ந்தது.

''இதுதான் வாஸ்கோ ஸ்டேஷன்'' என்றார் கோவா நண்பர்.

''அம்மாடி! ஒரு வழியாக வந்து சேர்ந்தோம் என்று சொல்லுங்கள். வாஸ்கோ - ட - காமாகூட இந்த இடத்துக்கு வந்து சேர இவ்வளவு கஷ்டப்பட்டானோ, என்னவோ? நாங்கள் ரொம்பக் கஷ்டப்பட்டு விட்டோம்'' என்றேன்.

ஸ்டேஷனைவிட்டு வெளியே சென்றபோது சுவர்களில் பளிச் சென்று எழுதப்பட்டிருந்த 'ஜெய் ஹிந்த்' என்ற ஆங்கில எழுத் துக்கள் கண்ணில் தென்பட்டன.

மேல்நாட்டு முறையில் உடையணிந்த ஆண்களும் பெண்களும் தெருக்களில் உல்லாசமாக நடமாடிக் கொண்டிருந்தார்கள்.

கோவா, இந்தியாவின் ஒரு பகுதியே என்றாலும், அங்கு வாழும் மக்கள் யாவரும் நம்மைப் போலத்தான் இருக்கிறார்கள் என்றாலும், மரங்களின்மீது செம்மண் படிந்திருப்பது போல் போர்ச்சுகீசியரின் கலாசாரப் பூச்சு அவர்கள்மீது படிந்து நிற்பதை நாம் காணத் தவற வில்லை.

''கோவாவில் புதுப்புது அழகிய டாக்ஸிகள் கிடைக்கும் என்று சொன்னார்களே; அவையெல்லாம் எங்கே?'' என்று விசாரித்தோம்.

''இன்றைக்கு டாக்ஸி ஸ்டிரைக். சினிமாக் கொட்டகைகளில் கட்டணத்தைக் குறைக்க வேண்டும் என்று சிலர் கிளர்ச்சி செய்தார் கள். அந்தக் கிளர்ச்சியில் இரண்டொரு டாக்ஸி டிரைவர்களும் கலந்துகொண்டனர். ஒரு டிரைவரைப் போலீசார் கைது செய்தார் கள். அவ்வளவுதான்; அதை ஆட்சேபித்து மற்ற டாக்ஸி டிரைவர் கள் வேலைநிறுத்தம் செய்துவிட்டார்கள்!''

''பேஷ்! போர்ச்சுகீசிய ஆட்சிக் காலத்தில் இப்படி ஒரு கிளர்ச்சி செய்ய முடியுமா? இதுவன்றோ சுதந்திரம்!'' என்றேன்.

எங்களுடன் ரயிலில் வந்த நண்பர் வாஸ்கோ ஸ்டேஷனில் விடை பெற்றுக்கொண்டு போய் விட்டார். பின்னர் நாங்கள் இரு வரும் எங்கே எப்படிப் போவதென்பதறியாமல் ஸ்டேஷன் வாசலில் சற்று நேரம் தயங்கிக் கொண்டிருந்தோம்.

''கொஞ்சம் இங்கேயே நில்லுங்கள்; நான் போய் யாரிடமாவது விசாரித்துக் கொண்டு வருகிறேன்'' என்று நண்பரிடம் கூறிவிட்டு

சற்று தூரத்தில் நின்று கொண்டிருந்த ஓர் ஆசாமியை அணுகி, 'போஸ் நோய்டே!' (குட் ஈவினிங்) என்றேன்.

''போஸ் நோய்டே!'' என்றார் அவர் பதிலுக்கு.

''பாஸ் - மி - ஒ - பேவர் - டி - மி - டிஸர் - ஒண்டே பொடேரே - என்கொண்ட்ரே உம் மொகோ டி ரிகோடாஸ் பரா லிவா அ மின்ஹா பெகாகம் அ எஸ்டாகோ - டு - ஒடேலே ஸுவாரி?'' என்று கேட்டேன்.

உடனே அவர் ''எஸ்டாவ் ஸம்ப்ரே அல்கன்ஸ்'' என்று போர்ட்டர்கள் நின்று கொண்டிருந்த திசையைச் சுட்டிக் காட்டினார்.

நான் போர்ச்சுகீசில் சக்கைப் போடு போடுவதைக் கண்ட நண்பருக்கு வியப்புத் தாங்கவில்லை.

''அவரோடு என்ன பேசினீர்கள்? அவர் என்ன பதில் சொன்னார்?'' என்று கேட்டார்.

''ஸுவாரி ஓட்டலுக்குப் போகப் போர்ட்டர் கிடைப்பார்களா, எங்கே இருப்பார்கள் என்று விசாரித்தேன். அவர் போர்ட்டர்கள், நிற்குமிடத்தைச் சுட்டிக் காட்டினார்'' என்றேன்.

''ஆமாம்; எனக்குத் தெரியாமல் எப்போது போர்க்சுகீஸ் கற்றுக் கொண்டீர்கள்? அந்த ரகசியத்தைச் சொல்ல மாட்டீர்களா?''

''அப்புறம் சொல்கிறேன், வாருங்கள்'' என்றேன்.

ஒரு போர்ட்டரைப் பிடித்து இருவரும் ஸுவாரி ஓட்டலுக்குப் போய்ச் சேர்ந்தோம்.

கோவாவில் ஓடும் இரண்டு முக்கிய நதிகளுக்கு 'ஸுவாரி' 'மண்டோவி' என்று பெயர். இவ்விரண்டு ஆறுகளும் அரபிக் கடலில் போய்ச் சங்கமமாகின்றன. அந்த இடங்களில்தான் கோவாவின் இரண்டு பிரசித்தி பெற்ற நகரங்களும் உள்ளன. கோவாவின் தலை நகரமான பஞ்சிம், மண்டோவி நதிக் கரையின் இயற்கைச் சூழ்நிலையில் அமைந்துள்ளது. சரித்திரப் புகழ் வாய்ந்த வாஸ்கோ-ட-காமா நகரம் ஸுவாரி நதிக் கரையில் உள்ளது.

பிரசித்தி பெற்ற மர்மகோவா துறைமுகத்துக்கும் வாஸ்கோ நகரத்துக்கும் இரண்டு மைல் தூரமே இருக்கிறது. இயற்கை வசதிகளுடன்கூடிய மிகச் சிறந்த கப்பல் துறைமுகங்கள் உலகிலேயே மூன்றே மூன்றுதான் இருக்கின்றனவாம். அவற்றில் மர்மகோவாவும் ஒன்று என்பதை அறிந்தபோது எனக்கு மகிழ்ச்சி தாங்கவில்லை. இதுகாறும் அந்நியர் வசம் இருந்த அந்தத் துறைமுகம் இப்போது இந்தியாவுடன் அல்லவா சேர்ந்துவிட்டது? போர்ச்சுகீசியர் கோவா மண்ணில் முதல் முதல் காலடி எடுத்து

வைத்தது இந்தத் துறைமுகத்தின் வழியாகத்தான். கடைசியாக விட்டுச் சென்றதும் இதே வழியாகத்தான்.

நதிகளைப் போலவே, கோவாவில் வழக்கிலிருந்து வரும் முக்கிய மொழிகளும் இரண்டுதான். ஒன்று கொங்கணி, மற்றொன்று மராத்தி. படித்த வகுப்பார் மட்டுமே போர்ச்சுகீஸ், ஆங்கிலம் இரண்டு பாஷைகளும் பேசுகிறார்கள்.

பம்பாயிலிருந்து நாங்கள் கோவாவுக்குப் புறப்படுமுன் கோவாவில் ஆங்கிலம் தெரிந்த யாரேனும் ஒருவரை அறிமுகம் செய்து கொள்ள விரும்பினோம். ஆகையால் மிஸ்டர் 'கேயெஸ்' என்னும் கோவாக்காரர் ஒருவருக்கு பம்பாய் நண்பர் மூலம் அறிமுகக் கடிதம் எழுதிப் போடச் சொல்லியிருந்தோம்.

எனவே, நாங்கள் கோவாவுக்குச் சென்றவுடனே மிஸ்டர் 'கேயெஸ்' எங்களைத் தேடிக்கொண்டு வந்து விட்டார். அவருக்கு ஆங்கிலம் சுமாராகத்தான் பேசத் தெரிந்திருந்தது.

கோவாக்காரர்கள் கொங்கணியில் சொல்வதை அவர் எங்களுக்கு ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துச் சொல்லவும், நாங்கள் ஆங்கிலத்தில் சொல்வதை அவர்களுக்குக் கொங்கணியில் மொழி பெயர்த்துச் சொல்லவும் இவர் பயன்படுவார் என்று முதலில் எண்ணினோம். ஆனால் காரியம் நேர் விபரீதமாகப் போய் விட்டது! இவருடைய மொழி பெயர்ப்பு காரணமாக எங்களுக்குள் பல குழப்பங்கள் ஏற்பட்டு விட்டன!

"டாக்ஸிக்கு என்ன சார்ஜ்?'' என்று கேட்கச் சொல்வோம், அவரோ டாக்ஸியின் விலையையே பேசி முடித்துக்கொண்டு வந்து எங்களைப் பணம் கட்டச் சொல்வார்!

''இப்போது பசிக்கவில்லை. சாப்பாடு வேண்டாம்'' என்று சொல்வோம். அவர் உடனே எங்களை ஓட்டலுக்கு அழைத்துச் சென்று, "பசிக்கிறது என்றீர்களே! என்ன சாப்பிடுகிறீர்கள்?" என்று கேட்பார். அழகாயிருக்கிறதல்லவா? மிஸ்டர் 'கேயெஸ்' ஸிடமிருந்து தப்பித்துக் கொள்ள ஏதேதோ உபாயங்கள் செய்து பார்த்தோம்! ஆனால் ஒன்றும் பலிக்கவில்லை!

''மிஸ்டர் கேயெஸ்! உங்களுக்கு சிரமம் வேண்டாம். நாங்களே ஊரைச் சுற்றிப் பார்த்துக் கொள்ளுகிறோம்'' என்று நாசுக்காகச் சொல்லிப் பார்த்தோம்.

''யூ ஸி! மை பாம்பே பிரண்ட் லெட்டர் போஸ்டெட்! ஃபார் தட் பர்ப்பஸ் ஐ ஆம் கமிங்'' என்றார்.

''இல்லை; உங்களுக்கு வீண் அலைச்சல் எதற்கு? நாங்களே சமாளித்துக் கொள்கிறோம்'' என்றோம்.

"யூ நாட் நோ — கொங்கணி! ஃபார் தட் பர்ப்பஸ் ஒன்லி, ஐ நோ இங்கிலிஷ் . . . ஐ ஆம் கமிங்'' என்றார்.

இப்படி எதைச் சொன்னாலும் அதற்கு 'ஃபார் தட் பர்ப்பஸ் ஒன்லி,' 'ஃபார் தட் பர்ப்பஸ் ஒன்லி' என்று தமது அரை குறை ஆங்கில ஞானத்தை வைத்துக்கொண்டு எங்கள் உயிரை எடுத்து விட்டார் அவர்.

வேறு வழியில்லாமல் போகவே மறுநாள் காலை மிஸ்டர் கேயெஸ்ஸுடன் பஞ்சிம் நகருக்குப் புறப்பட வேண்டியதாயிற்று. நல்ல வேளையாக நண்பர் 'கேயெஸ்' தன்னுடன் 'டிஸில்வா' என்றொரு நண்பரையும் அழைத்து வந்திருந்தார். இதற்குள் டாக்ஸி ஸ்டிரைக் தீர்ந்துவிடவே ஒரு டாக்ஸியைப் பிடித்து நாலு பேரும் ஏறிக் கொண்டோம். டாக்ஸி பஞ்சிமை நோக்கிப் புறப் பட்டது.

அடாடா! டாக்ஸி என்றால் எத்தனை அழகான டாக்ஸிகள்? புத்தம் புது மேனியுடன் பளபளக்கும் அந்த உயர்தரமான டாக்ஸி களுக்கும் கோவாவின் கரடுமுரடான ரோடுகளுக்கும்தான் கொஞ்சம் கூடப் பொருத்தமில்லை. அழகு மிக்க பெண் ஒருத்தியை அவலட்சணம் மிக்க முரடன் ஒருவனுக்குக் கலியாணம் செய்து கொடுத்த மாதிரிதான்!

''இந்த ரோடுகளையெல்லாம் எப்போது சீர் செய்யப் போகிறீர் கள்?'' என்று டிஸில்வாவிடம் கேட்டேன்.

''ஃபார் தட் பர்ப்பஸ் ஒன்லி . .'' என்று ஆரம்பித்து விட்டார் மிஸ்டர் கேயெஸ்!

''ரோடுகளைச் சீர் செய்வது இருக்கட்டும். அதற்கு முன்னால் இங்கே பல பாலங்களைச் சீர்செய்தாக வேண்டும். கோவாவில் குறுக்கிலும் நெடுக்கிலும் நதிகள் வலை பின்னியது போல் ஓடிக் கொண்டிருக்கின்றன. அவற்றின் மீது கட்டப்பட்டிருந்த பெரிய பெரிய இரும்புப் பாலங்கள் அவ்வளவையும் போர்ச்சுகீசிய ராணு வத்தினர் வெடி குண்டு வைத்து உடைத்து விட்டுப் போய் விட்டார் கள். போகும் வழியில், அத்தகைய உடைந்த பாலங்கள் பலவற்றை நாம் நேரிலேயே பார்க்கலாம்'' என்றார் டிஸில்வா.

"அட பாவிகளா! அத்தனை பாலங்களையுமா உடைத்து விட்டார்கள்? எதற்காக உடைத்தார்கள்?''

''இந்திய ராணுவத்தினர் கோவாவுக்குள் வருவதைத் தடுப் பதற்காகத்தான்.''

''பாலங்கள் உடைக்கப்பட்ட இடங்களில் இப்போது போக்கு வரத்து எப்படி நடக்கிறது?''

''நம்முடைய ராணுவத்தினர் ஒரே வாரத்தில் அத்தனை இடங்களிலும் புதிய பாலங்கள் போட்டுவிட்டார்கள். ஆனால் அவையெல்லாம் தாற்காலிகமானவைதான். சீக்கிரமே நிரந்தரமான பாலங்கள் கட்டியாக வேண்டும் . . . .''

"ஃபார் தட் பர்ப்பஸ் . .!'' என்று ஆரம்பித்தார் கேயெஸ்.

எங்கள் டாக்ஸி இதற்குள் ஸுவாரி நதிக்கரையில் போய் நின்றது.

''இந்த டாக்ஸி இதற்குமேல் போகாது. இங்கிருந்து நாம் படகு ஏறி அக்கரைக்குப் போக வேண்டும். நதிக்கு அக்கரையில் பஞ்சிமுக்குச் செல்ல இன்னொரு டாக்ஸி பிடித்தாக வேண்டும்.''

டாக்ஸியை விட்டுக் கீழே இறங்கி படகுக்காகக் காத்திருந்தோம். அக்கரையிலிருந்து வரவேண்டிய படகு வந்து சேருவதற்குச் சற்று நேரமாயிற்று. இதற்குள் நதிக்கரையில் ஏகக் கார்கள் வந்து சேர்ந்து விட்டன. நவநாகரிக நாரீமணிகளும், வாலிபர்களும் ஆளுக்கொரு டிரான்ஸிஸ்டரைக் கையில் வைத்துக்கொண்டு படகின் வருகையைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

''கோவாவில் ஸிஸ்ட்டர்களுக்கும் டிரான்ஸிஸ்டர்களுக்கும் குறைவே கிடையாது!'' என்றார் டிஸில்வா.

"ஆமாம்; போக்குவரத்து நெரிசல் இவ்வளவு அதிகமாயுள்ள இந்த இடத்தில் மட்டும் ஏன் இரும்புப் பாலம் கட்டவில்லை?'' என்று கேட்டேன்.

"ஏனோ கட்டவில்லை'' என்றார் டிஸில்வா.

''நல்ல வேளை! அப்படிக் கட்டாமலிருந்ததற்காக இப்போது சந்தோஷப்படலாம்'' என்றேன்.

''ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்?''

''கட்டியிருந்தால் அதையுமல்லவா போர்ச்சுகீசியர் உடைத்துப் போட்டிருப்பார்கள்!''

"போர்ச்சுகீசியர் போன வழி பாலங்களெல்லாம் தவிடு பொடி!'' என்று புதுப் பழமொழி ஒன்றைக் கூறினார் நண்பர்.

படகு வந்து கரையில் நின்றதும் அதற்குள் நாலைந்து கார்களை ஏற்றினார்கள். அவற்றுடன் கரையில் காத்திருந்த பிரயாணிகளும் ஏறிக் கொண்டனர். படகில் பயணம் செய்தபோது கோவா மக்கள் கொங்கணியிலும் போர்ச்சுகீஸிலும் ஏதோ சர்ச்சை செய்து கொண்டிருந்தார்கள். சர்ச்சைக்குரிய விஷயம் கோவா விடுதலையைப் பற்றியதுதான் என்பது மட்டும் தெளிவாகப் புரிந்தது.

''கோவா அந்நிய ஆட்சியிலிருந்து விடுதலை பெற்றது பற்றி இங்குள்ள மக்கள் என்ன நினைக்கிறார்கள்?'' என்று கேட்டேன்.

''ரொம்பவும் மகிழ்ச்சியே அடைகிறார்கள். ஆனால், எதற்கெடுத்தாலும் இராணுவ கவர்னர் திரு கேண்டசத்திடம் போய் விடுகிறார்கள். தோட்டத்தில் நாலு தேங்காய் திருட்டுப் போய் விட்டதென்றால் உடனே அந்தத் தோட்டத்தின் சொந்தக்காரர் 'ஹாட்'டைத் தூக்கித் தலையில் வைத்துக்கொண்டு கவர்னரிடம் புகார் சொல்லக் கிளம்பி விடுகிறார். கவர்னர் உடனே விசாரிக்கவில்லையென்றால் அப்படியே தபலாபீசுக்குப் போய் நேருவுக்குத் தபால் எழுதிப் போட்டு விட்டு வீடு திரும்புகிறார்!''

படகின் மற்றொரு மூலையில் கவுன் அணிந்த பெண்மணிகள் நாலைந்துபேர் பேசிக் கொண்டிருந்தார்கள்.

''எஸ் டாவ் அக் வி.''

''துகா ஒ பகார் பரேபசின் பாவுட்டா.''

''இரி கம் எலிஸ் ஒண்டே எலில் குவிஸ்ரம்.''

''இதெல்லாம் என்ன பாஷை?''

''கொங்கணி, போர்ச்சுகீஸ்.''

''இவர்களெல்லோரும் கோவானீஸ்தானே?''

''ஆமாம்'' என்றார் டிஸில்வா.

''இவர்களெல்லாம் கோவானீஸ் இல்லை; 'கவுனீஸ்' '' என்றார் நண்பர்.

பஞ்சிம் நகரை நோக்கிச் செல்லும்போது பசுமை சூழ்ந்த அழகிய இயற்கைக் காட்சிகளையும் அவற்றுக்கிடையே ஆங்காங்கே உயர்ந்து நிற்கும் வெண்ணிறமான கிறித்துவ ஆலயங்களையும் கண்டோம்.

''இவ்வளவு காலம் ஆண்டு அனுபவித்த இந்த அழகிய பூமியை விட்டுப் போவதென்றால் போர்ச்சுகீசியருக்குக் கஷ்டமாகத்தான் இருக்கும்'' என்றேன்.

''கஷ்டம்தான்; ஆனாலும் அவர்கள் இந்த இடத்தை விட்டுப் போக மறுத்ததற்குக் கூறிய காரணம்தான் ஒப்புக்கொள்ளக் கூடியதாயில்லை.''

''அது என்ன?''

''போச்சுகீசியர் இங்கிருந்து போய்விட்டால் அப்புறம் இங்குள்ள கிறித்துவ மத உணர்ச்சி அடியோடு அழிந்து போய்விடுமாம். ஆசியாவிலேயே கத்தோலிக்க மதத்துக்குத் தலைநகரம் போல் விளங்குவது கோவாதானம். ஆகவே இதை விட்டுப் போக மாட்டோம் என்றார்கள்.''

''எஸ், எஸ். ஃபார் தட் பர்ப்பஸ் ஒன்லி..'' என்றார் கேயெஸ்.

''அதுதான் இல்லை. போர்ச்சுகீசியர் இங்கு காலடி எடுத்து வைப்பதற்கு முன்பே இந்தியாவில் கிறித்துவ மதம் தழைத்து

வளர்ந்து கொண்டுதானிருந்தது. இப்போதும் வளர்ந்து கொண்டு தானிருக்கிறது. எம்மதத்தினரும் இந்தியாவில் எந்த இடத்திலும் சுதந்திரமாக வாழ்வதற்கு நம் அரசியல் சட்டம் உரிமை அளித் திருக்கிறது....''

டாக்ஸி பஞ்சிம் நகரை அடைந்தது.

''கியூ ஹோரா ஸாவ்!'' (மணி என்ன?) என்று டிஸில்வாவிடம் விசாரித்தேன்.

''இ - மியோ -டியா?'' என்ருர் டிஸில்வா.

''பன்னிரண்டு மணியா?''

''எஸ். நௌ ட்வெல்வ் ஓ கிளாக். ஃபார் தட் பர்ப்பஸ் வி டேக் மீல்ஸ் நௌ'' என்ருர் கேயெஸ்.

''ஆமாம்; நீங்கள் எனக்குத் தெரியாமல் எப்போது போர்ச்சு கீஸ் கற்றுக்கொண்டீர்கள்? அதைச் சொல்லப் போகிறீர்களா இல்லையா?'' என்று கேட்டார் நண்பர்.

அந்த ரகசியத்தை நண்பரிடம் சொல்லிவிட்டேன்.

ஆங்கில மொழி பெயர்ப்புடன் கூடிய முக்கியமான போர்ச்சுகீசிய வார்த்தைகள் அடங்கிய புத்தகம் ஒன்றை நண்பருக்குத் தெரியாமல் வாங்கி வைத்திருந்தேன். அதிலுள்ள சில வார்த்தைகளையும் உருப்போட்டு வைத்திருந்தேன். சமயம் நேர்ந்தபோதெல்லாம், சந்தர்ப்பங்களுக்கேற்ப அந்த வார்த்தைகளை உபயோகித்து நண்பரைத் திணற அடித்துக் கொண்டிருந்தேன். கட்டிக் கொடுத்த சாப்பாடும், சொல்லிக் கொடுத்த வார்த்தையும் வெகு நாளைக்குத் தாங்காது அல்லவா? நான் உருப்போட்டிருந்த வார்த்தைகள் தீர்ந்து போகவே, என் குட்டு வெளிப்பட்டு விட்டது! அப்புறமும் ரகசியத்தைச் சொல்லாமலிருக்க முடியுமா?

போர்ச்சுகீசிய மொழி எனக்குத் தெரியாததுபற்றி நான் சிறிதும் கவலைப்படவில்லை. ஏனெனில், கோவாவில் வசிப்பவர்களில் பெரும்பாலோருக்கும் அந்த மொழி தெரியவில்லை. அங்கே வாழும் சுமார் ஐந்தரை லட்சம் மக்களில் போர்ச்சுகீசிய மொழியில் நன்கு எழுதவும், படிக்கவும் தெரிந்தவர்கள் எத்தனை பேர் இருப்பார்கள் என்று எண்ணுகிறீர்கள்?

ஒன்றரை சதவிகிதம்தான்!

இவ்வளவுக்கும் தங்களுடைய மொழியைப் புகுத்துவதற்குப் போர்ச்சுகீசிய சர்க்கார் பட்டுள்ள பாடு கொஞ்ச நஞ்சமல்ல.

ஆரம்ப காலத்தில், கோவாவில் கிறிஸ்துவ மதத்தைப் பரவச் செய்ய பலாத்கார முறையைக் கடைப் பிடித்தனர். அதைப் போலவே தங்கள் மொழியைப் பரப்புவதிலும் பல 'கெடுபிடி'களைக் கையாண்டார்கள்.

''கிறிஸ்துவ மதத்துக்கு மாறிய இந்துக்கள் துளசிச் செடி வைத்துப் பயிர் செய்யக் கூடாது. வேட்டி கட்டிக் கொள்ளக் கூடாது. தாய்மொழியில் பேசக் கூடாது. சொந்தப் பெயரை வைத்திருக்கக் கூடாது'' என்று நிபந்தனை விதித்தார்கள்.

அதே மாதிரி, 'திருமணம் செய்துகொள்ளப் போகும் ஜோடிகள் போர்ச்சுகீசிய மொழி தெரிந்தாலொழிய மணம் புரிந்துகொள்ளக் கூடாது என்று கட்டளை யிட்டிருந்தார்கள்.

எத்தனை நிபந்தனைகள் விதித்தபோதிலும், எவ்வளவு சூழ்ச்சிகள் செய்தபோதிலும், போர்ச்சுகீசியரின் எண்ணம் ஈடேறவில்லை. அவர்களுடைய மொழியும் பரவவில்லை. கோவாவில் வாழும் கிறிஸ்துவர்களில் பலர் கொங்கணி மொழியே பேசுகிறார்கள். கொங்கணிக்கென்று சொந்த லிபி கிடையாதாகையால் ரோமன் லிபியில் எழுதுகிறார்கள். இந்துக்களில் பெரும்பாலோர் போவதும் கொங்கணிதான் என்றாலும் அவர்கள் மராத்தி மொழியில் கல்வி அறிவைப் பெறுகிறார்கள்: கோவாவில் மொத்தம் 250 மராத்திப் பள்ளிக் கூடங்கள் இருக்கின்றன. கொங்கணி மொழிப் பள்ளிகள் இல்லாததால் அங்குள்ள கிறிஸ்துவர்களைக் காட்டிலும் இந்துக்களே அதிகம் கல்வி அறிவு பெற்றவர்களா யிருக்கிறார்கள். இன்று மராத்தி எழுத்தாளர்களில் பெரும் புகழ் பெற்று விளங்குபவர்கள் பலர் கோவா இந்துக்களே.

தவிர, கோவா இந்துக்களுக்கும், இந்தியாவின் இதர பகுதிகளில் வாழும் இந்துக்களுக்கும் எவ்வித வேறுபாடும் இருக்கவில்லை. நானூற்றைம்பது ஆண்டு கால அந்நிய ஆட்சி அவர்களிடையே எவ்வித மாறுதலையும் ஏற்படுத்திவிட முடியவில்லை. இந்துக்கள் வாழும் இடங்களிலெல்லாம் கோயில்களும், குளங்களும், துளசி மாடங்களும் நிறைய இருக்கின்றன.

ஒருபுறம் கிறிஸ்துவ மதமும், அதற்குரிய சின்னங்களும், கலாசாரங்களும், பழக்க வழக்கங்களும் மலிந்து கிடந்தபோதிலும், இன்னொருபுறம் இந்து மதம் தனக்குரிய புராதனப் பெருமையோடு தலை நிமிர்ந்து நிற்கிறது.

கோவாவை, பழைய கோவா என்றும் புதிய கோவா என்றும் Old Conquests and New Conquests) இரண்டு பகுதிகளாகப் பிரித்துக் கூறுகிறார்கள். முதன் முதலில் போர்ச்சுகீசியர் வந்து பிடித்த பகுதியைப் பழைய கோவா என்றும், பின்னால் சேர்ந்த பகுதியைப் புதிய கோவா என்றும் அழைக்கின்றனர். நிர்வாக வசதியை முன்னிட்டு அவ்விரு பகுதிகளையும் பதினொரு பாகங்களாகப் பிரித்துள்ளார்கள். அவற்றில் போண்டோவும் (Ponda) ஒன்று.

காஞ்சீபுரத்தில் கால் வைத்த இடமெல்லாம் கோயில் என்பார்கள். அதைப் போலவே, இந்தப் போண்டாப் பகுதியிலும் கோயில்

கள் அதிகம். மங்கேஷ் ஆலயம், சாந்த துர்க்கை கோயில், ராம் தாத், மகா லட்சுமி, நாகேஷ், தேவகி கிருஷ்ணு ஆகிய அத்தனை தேவாலயங்களும் இங்தோன் இருக்கின்றன.

“பஞ்சிம் நகரைப் பார்த்தீர்களா, எவ்வளவு அழகாகவும் அமைதியாகவும் இருக்கிறது!'' என்ருர் டிஸில்வா. நாங்கள் போன சமயம் நல்ல வெயில் வேளையாகையால் மண்டோவி நதிக் கரையி லுள்ள அந்நகரம் அமைதியான உறக்கத்தினுள் ஆழ்ந்திருப்பது போலிருந்தது. ஒரு நகரத்துக்குரிய இரைச்சலோ, போக்கு வரத்து நெரிசலோ அங்கு துளிக்கூட இல்லை. முக்கியமாக டீக் கடைகளில் சினிமா ரிகார்டுகள் கதறவில்லை.

''கோவா, இவ்வளவு அமைதியாக இருப்பதற்கு என்ன காரணம் தெரியுமா?'' என்று கேட்டார் டிஸில்வா,

''என்ன?''

''இங்கே ஆட்டோ ரிக்ஷாக்கள் கிடையாது. அத்துடன் அரசி யல் கட்சிகளும் இல்லை; அதனுல்தான்!'' என்ருர் அவர்.

''கவலைப்படாதீர்கள்; சீக்கிரமே அரசியல் கட்சிகள் தோன்றி விடும்!'' என்றேன் நான்.

பஞ்சிம் நகரின் பசிய காட்சிகளைப் பார்த்துக் கொண்டிருந்தால் பொழுது போவதே தெரியவில்லை. துறைமுகத்தைச் சுற்றி நிற்கும் கப்பல்கள் கவர்ச்சி மிக்க கட்டடங்கள், நேர் நேரான வீதிகள், விசாலமான சாலைகள், அழகிய சோலைகள், குளுமை மிக்க குன்று கள், அந்தக் குன்றின் மீது உயர்ந்து நிற்கும் ஆர்ச்பிஷப் அரண்மனை இவ்வளவையும் பார்த்தால் பசி தீரும். நகருக்குள் மண்டிக் கிடக் கும் 'பார்' களைப் பார்த்தாலோ பழக்கமுள்ளோருக்கு தாகமெடுக் கும்!

கோவா பஸ்களைப் பற்றி ஒரு வார்த்தை சொல்ல வேண்டும். அந்த ஊர் பஸ்கள் நம் ஊர் பஸ்களைப் போலன்றி மாறுபட்ட அமைப்பும் தோற்றமும் கொண்டிருக்கின்றன. இங்கெல்லாம் கிறிஸ்துவர்கள் சவப் பெட்டியை ஏற்றிச் செல்லுமே ஒரு மோட்டார் வாகனம், அம்மாதிரி அமைப்பில் உள்ளன அந்த பஸ் கள்! ஆனுல் தங்க வர்ணம் பூசப்பட்டு பளபளப்புடன் மின்னு கின்றன. கோவாவின் போக்குவரத்து நெருக்கடியைத் தீர்த்து வைப்பதில் இந்தத் தங்க பஸ்கள் செய்துவரும் சேவை பொன் னெழுத்தில் பொறிக்கத்தக்கவை!

மூன்று மணிக்கு மேல் கடை வீதிகளுக்குச் சென்று ஒவ்வொரு கடையாகப் புகுந்து துருவித் துருவித் தேடினேம். வேருென்று மில்லை; வெளி நாட்டினின்றும் அபூர்வ அதிசயப் பொருள்கள் ஏதேனும் வந்திருக்கின்றனவா என்றுதான்.

ஆனல் அங்குள்ள கடைக்காரர்களோ என்னை ஓர் அதிசயப் பொருளாக மதித்துப் பார்க்கத் தொடங்கி விட்டார்கள்! அதற்குக் காரணம், அவ்வளவு பெரிய நகரத்தில் வேட்டி கட்டிய பைத்தியக்காரன் நான் ஒருவன்தான்!

பஞ்சிம் நகரைப் பார்த்து முடித்ததும் போண்டோவை நோக்கிப் புறப்பட்டது எங்கள் டாக்ஸி.

போகும் வழியில் நண்பர் டிஸில்வா டாக்ஸியை ஓரிடத்தில் நிறுத்தச் சொல்லி, ''அதோ அங்கே பார்த்தீர்களா? அவ்விடத்தில் தான் போர்ச்சுகீஸ் ராணுவத்தினர் காவலில் வைக்கப்பட்டிருக் கிருர்கள்'' என்று சுட்டிக் காட்டி விட்டுத் தாமாகவே ஒரு முறை சிரித்துக் கொண்டார்.

"எதற்காகச் சிரிக்கிறீர்கள்?'' எனக் கேட்டோம்.

''பாவம், அந்தப் போர்ச்சுகீஸ் சோல்ஜர்களைக் கண்டால் நீங்க ளும்தான் சிரிப்பீர்கள். அவர்களெல்லாம் பெரிய வெண்ணெய் வெட்டிச் சிப்பாய்கள்! 'வார்' என்ருல் 'ஸ்பெல்லிங்' என்னவென்று கேட்பார்கள். மதுபானம் அருந்துவதிலேயே வாழ்நாளைக் கழித் தவர்கள். குடித்துக் குடித்து 'தொந்தி' பருத்துப் போனவர்கள். அவர்களால் ஓட முடியாது. 'மார்ச்' என்ருல் 'மார்ச்சாவது ஏப்ர லாவது?' என்று சொல்லக் கூடியவர்கள். சில மாதங்களுக்கு முன் இராணுவ முகாமைப் பஞ்சிமிலிருந்து போண்டோவுக்கு மாற்றிய பொழுது 'ஐயோ! பதினேழு மைல் தூரமா 'மார்ச்' செய்ய வேண்டும்?' என்று தலையில் கையை வைத்துக்கொண்டு உட் கார்ந்து விட்டார்கள்! சமீபத்தில் போர்ச்சுகீஸ் இராணுவ டாங்கி ஒன்றை நம் இந்திய வீரர்கள் கைப்பற்றியபோது அந்த டாங்கி நிறைய மதுபான புட்டிகள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தனவாம்'' என்ருர் டிஸில்வா.

மதுபான புட்டிகள் இராணுவ முகாமில் மட்டும் இருக்கவில்லை. கோவா முழுவதுமே பார்த்த இடங்களிலெல்லாம் 'பார்'கள்தான்! 'பாட்டில்' மலைகள்தான். சிலர் அந்தப் புட்டிகளைக்கொண்டே தோட்டத்துக்குக் காம்பவுண்டுச் சுவர் போட்டிருக்கிருர்கள்!

''ஆமாம்; இந்திய இராணுவத்தினர் கோவாவுக்குள் வந்த போது இந்த சோல்ஜர்கள் என்ன செய்தார்கள்?''

''என்ன செய்தார்கள்? நம் வீரர்களைப் பூர்ண கும்பம் வைத்து அழைக்காத குறைதான்!''

''கடைசி சோல்ஜர் உள்ள வரை, கடைசி குண்டு இருக்கிறவரை இந்திய ராணுவத்தினரை எதிர்த்துப் போரிட வேண்டும் என்று டாக்டர் ஸலாஸார் லிஸ்பனிலிருந்து உத்தரவு போட்டாரே!''

"ஆமாம்; ஆனல் கோவாவின் கவர்னர் ஜெனரலோ இதற்கு நேர் விரோதமாக, 'இந்திய ராணுவத்தினருடன் நாம் போரிட வேண்டாம். அவர்கள் கோவாவுக்குள் முன்னேற முடியாதபடி வழியிலுள்ள பாலங்களை உடைத்துவிட்டால் போதும்' என்று உத்தரவு போட்டு விட்டார்."

"பாலங்களையெல்லாம் உடைத்துவிட்டு ஓடிப் போனவர்கள் நம் துருப்புகளிடம் எப்படிச் சிக்கிக் கொண்டார்கள்?"

"அப்படிக் கேளுங்கள், சொல்கிறேன்" என்று உற்சாகமாகக் கூறத் தொடங்கினர் டிஸில்வா.

"சென்ற ஆண்டு டிசம்பர் மாதம் பதினெட்டாம் தேதி காலை மணி ஆறரை இருக்கும். திடீரென்று இரண்டு குண்டுகள் கோவா மண்ணில் வந்து வீழ்ந்தன.

ஒன்று ரேடியோ ஸ்டேஷன் உள்ள 'பம்போலிம்" என்னும் இடத்திலும் மற்ருென்று விமானகூடம் உள்ள 'டபோலிம்' என்னும் இடத்திலும் போடப்பட்டன.

இந்த குண்டு வீச்சை அடுத்த முப்பத்தாறே மணி நேரத்துக்குள் காதும் காதும் வைத்தாற் போல் கோவாவின் ஆட்சி நம் கைக்கு மாறிவிட்டது!

உலகமே கண்டிராத புதுமை அல்லவா இது? கோவா மக்களி லேயே பலருக்கு கோவாவின் ஆட்சி மாறி விட்ட விஷயம் அப்புறம் தான் தெரிய வந்தது!

சுவர்களிலுள்ள 'ஜெய்ஹிந்த்' வாசகத்தைப் படித்துப் பார்த்து விட்டு "இதெல்லாம் என்ன?" என்று பலர் கேட்டார்கள். விஷயத்தைச் சொன்ன பிறகு தான் "ஓகோ! அப்படியா சங்கதி"! என்று அகமகிழ்ந்தார்கள்.

உதாரணத்துக்கு ஒரு சம்பவம் சொல்கிறேன், கேளுங்கள். உண்மையாக நடந்த சம்பவம் இது:

டிசம்பர் பதினெட்டாம் தேதியன்று இந்தியத் துருப்புகள் வெகு வேகமாக முன்னேறிக் கொண்டிருந்த போது, கோவா மக்களில் பலர் பகல் உறக்கம் உறங்கிக் கொண்டிருந்தார்கள். ஒரு நர்சும் டாக்டரும் நம்முடைய ஸோல்ஜர்கள் முன்னேறுவதைக்கூட கவனிக் காமல் சாலையின் குறுக்கே சாவகாசமாகப் போய்க் கொண்டிருந் தார்கள்.

நம் ராணுவத்தினர் அவர்களை நிறுத்தி, 'எங்கே போகிறீர்கள்?' என்று விசாரித்த போது, 'சம்பளம் வாங்குவதங்காக சர்க்கார் கஜானுவுக்குச் செல்கிறோம்' என்று அந்த நர்ஸ் பதில் கூறினுள்.

"போர்ச்சுகீஸ் சர்க்கார் போய் வெகு நேரம் ஆகிறதே! கோவாவை இந்திய சர்க்கார் பிடித்து விட்டார்களே" என்று நம்

சிப்பாய்கள் கூறிய போது அந்த நர்ஸ் "ஐயோ! என் சம்பளப் பணம் போய்விட்டதே!'' என்று கூறியபடி நடு ரோடிலேயே மயங்கி விழுந்து விட்டாள். நமது ஸோல்ஜர்கள் அந்தப் பெண் மணியை ஒரு ஜீப்பில் ஏற்றிச் சென்று வீட்டில் கொண்டு போய் விட்டு ''கவலைப்படாதீர்கள்! உங்கள் சம்பளத்தை இனி நமது இந்திய சர்க்கார் கொடுப்பார்கள்'' என்று தைரியம் கூறிய பின்னர் தான் அந்தப் பெண்மணியின் முகத்தில் புன்முறுவல் பூத்தது!''

போண்டா செல்லும் மார்க்கத்தில் ஒரு பாலத்தின் கீழ் இரண்டு பேர் தூண்டில் போட்டு மீன் பிடித்துக் கொண்டிருந் தார்கள். இன்னும் நாலைந்து பேர் சுற்றி நின்று அதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர்.

''கோவா மக்களின் முக்கிய தொழில் மீன் பிடித்தல்தானே?'' என்று கேட்டேன்.

''இல்லை; முக்கிய தொழில் சோம்பலா யிருத்தல். சோம்பலாக இருந்த நேரம் போக மிச்ச மிருந்தால் அந்த ஒய்வு நேரத்தில் மீன் பிடிப்பார்கள்'' என்றார் நண்பர்.

''இப்போது நாம் எங்கே போய்க் கொண்டிருக்கிறோம்?'' என்று கேட்டார் நண்பர்.

''மங்கேஷ் ஆலயத்துக்கு.''

''அந்தக் கோயில் எங்கே இருக்கிறது?''

"பிரபல சினிமாப் பின்னணிப் பாடகி லதா மங்கேஷ்கரின் வீட்டுக்குப் பக்கத்தில் இருக்கிறது'' என்று கூறினர் டிஸில்வா.

லதா மங்கேஷ்கர் கோவாவைச் சேர்ந்தவர் என்னும் சேதியை அறிந்ததும், ஆலய தரிசனத்தைக் காட்டிலும் அந்தப் பாடகியின் வீட்டைக் காண்பதில் எங்களுக்கு ஆர்வம் அதிகமாகி விட்டது!

''லதாவின் வீடு மங்கேஷ் ஆலயத்தின் பக்கத்திலா இருக்கிறது? அதனால் தான் மங்கேஷ் என்று பெயர் வைத்துக் கொண்டாரா?'' என்று விசாரித்தோம்.

''எஸ், எஸ்! ஃபார் தட் பர்ப்பஸ் ஒன்லி'' என்றார் நண்பர் கேயெஸ்.

''லதா மங்கேஷ்கர் மட்டுமில்லை. பம்பாயில் உள்ள பிரபல சினிமா சங்கீத டைரக்டர்கள் பலரும் கூட கோவாவைச் சேர்ந்தவர் கள்தான்'' என்றார் டிஸில்வா.

குளிர் நிழல் தரும் மரங்களும், வாழையும், தென்னையும் சூழ்ந்த தோப்புகளுக்கிடையே அமைந்துள்ளது மங்கேஷ் ஆலயம். சந்தை இரைச்சல், தெருக் கூச்சல், வண்டிச் சத்தம் இவற்றையெல்லாம் கடந்த அமைதி மிக்க ஓரிடத்தில் அந்த ஆலயத்தை நிர்மாணித்துள்

ளார்கள். வீதிகளையெல்லாம் கடந்து கோயிலை அடைவதற்கு வெகு தூரம் நடக்க வேண்டியிருக்கிறது. அந்த நீண்ட பாதையில் நடந்து செல்லும்போது நமக்குத் திருச்செந்தூர் முருகன் கோயிலுக்குச் செல்லும் பாதை நினைவுக்கு வருகிறது. மூலஸ்தானத்துக்குச் செல்வதற்குக் கோயிலிக்குள்ளேயே மேலும் கொஞ்ச தூரம் நடக்க வேண்டும்.

ஆலயத்துக்குள்ளே அமைதி, அழகு, புனிதம். தூய்மை, பக்தி இவ்வளவும் ஒன்று சேர்ந்து குடி கொண்டுள்ளன. கீழே உள்ள தரையோ அப்பழுக்கற்ற கண்ணாடி போல் பளபளக்கிறது! அந்தத் தரைமீது நாம் கால் வைத்து நடப்பதால் தரை அழுக்காகி விடுமோ என்று அஞ்சுகிறோம். தலைக்கு மேலே 'கிளு கிளு'வென 'கிண்கிணி' நாதம் எழுப்பும் 'சாண்ட்லியர்' விளக்குகளின் கண்ணாடிச் சரக் கொத்துகள் நம் கவனத்தைக் கவர்கின்றன. இத்தகைய கிறிஸ்துவ மத சம்பிரதாய விளக்குகள் இடம் பெற்றிருக்கும் அபூர்வ அதிசயத்தை, கோவாவிலுள்ள இந்துக் கோயில்களில்தான் காண்கிறோம்.

அந்த விசாலமான இடத்தையும் அங்கே ஊசலாடும் கண்ணாடி விளக்குகளையும் கண்டபோது ''அடாடா! இந்த இடத்தில் நமது தமிழ் சினிமாக்களில் வரும் வில்லன்களை விட்டல்லவா வேடிக்கை பார்க்க வேண்டும்! இந்த விளக்குகளை அவர்கள் அட்டகாசத்துடன் கத்தியால் வெட்டி வீழ்த்தும் வீரச் செயல்களை அல்லவா காண வேண்டும்!'' என்று எண்ணிக் கொண்டேன்!

ஆலயங்களின் நிர்மாணத்திலும் அமைப்பிலும் நம் ஊர்க் கோயில்களுக்கும் இந்தக் கோயில்களுக்கும் அதிக வித்தியாசம் காணப்படுகிறது.

நம் ஊர்க் கோயில்களைப் போல் முன் வாசலிலோ, மூலஸ்தானத்தின் மீதோ உயர்ந்த கோபுரங்கள் இல்லை. அதற்குப் பதிலாக கோபுரத்தைத் தனியாக வேறொரு இடத்தில் கட்டி வைத்திருக்கிறார்கள். அந்தக் கோபுரங்கள் தோற்றத்திலும் உயரத்திலும் ஏறக்குறைய நாகூர் தர்க்காவிலுள்ள கோபுரத்தை ஒத்திருக்கின்றன.

''கோவாவிலுள்ள இந்துக் கோயில்கள், தூரத்தில் நின்று பார்த்தால் தர்க்காவைப் போலவும், கோயிலுக்குள் சென்று பார்த்தால் மாதா கோயிலைப் போலவும், மூலஸ்தானத்தை நெருங்கினால் இந்து ஆலயங்களைப் போலவும் காட்சி அளிக்கின்றன.''

சைத்திரிகர் கோபுலுவின் கருத்து இது.

ஒவ்வோர் ஆலயத்துக்கும் ஒவ்வொரு தேர் செய்து வைத்திருக்கிறார்கள். வாமன வடிவம் கொண்டு விளங்கும் அந்தத் தேர்கள், நம் கண்களுக்கு ஒரு விளையாட்டு பொம்மையாகவே தோற்றமளிக்கின்றன.

மங்கேஷ் ஆலயத்தைப் பார்த்து முடித்ததுதான் தாமதம்! ''லதா மங்கேஷ்கரின் வீடு எங்கே? எங்கே?'' என்று கேட்கத் தொடங்கி விட்டோம்.

''எஸ், எஸ். ஃபார் தட் பர்ப்பஸ் ஒன்லி ஐ ஆம் வெயிட்டிங்'' என்ருர் கேயெஸ்.

அந்த வீட்டை நெருங்கிச் சென்று பார்த்தபோது 'லதா மங்கேஷ்கர் இந்தச் சின்ன வீட்டிலா பிறந்து வளர்ந்தார்?' என்று வியந்து போனேம். ஒரு குயிலின் கூட்டைப் போலவே மிக எளிய முறையில் அமைந்திருந்தது அந்த வீடு. இதுவும் ஒரு குயிலின் வீடு தானே!

இதற்குள் மணி ஏழுக்கு மேலாகி விடவே, பஞ்சிம் நகருக்குப் புறப்பட்டு விட்டோம்.

பஞ்சிம் நகர வீதிகள், உச்சிப்பகல் நேரத்தைப் போலன்றி மிகவும் சுறுசுறுப்புடன் காட்சி அளித்தன. வீதி விளக்குகள் சிந்திய மின்சார ஒளியில் விதம் விதமான கார்கள் மின்னிப் பிரகாசித்தன. 'சர்வ தேசக் கார்கள் கண்காட்சியே நடைபெற்றுக் கொண்டிருக்கிறதோ?' என்று ஐயுறும்படி அத்தனை விதமான கார்கள் அங்கு உலாவிக் கொண்டிருந்தன. பிரிட்டன். பிரான்ஸ், ஜெர்மனி, ஜப்பான் - இத்தனை தேசங்களினின்றும் இறக்குமதியான பல்வேறு 'மாடல்'கள்!

''செவர்லே கார் இங்கு என்ன விலை?'' என்று விசாரித்தேன்.

''பன்னிரண்டாயிரம்'' என்று பதில் கிடைத்தது.

''என்ன சொன்னீர்கள்! பன்னிரண்டாயிரமா?

''ஆமாம்; பன்னிரண்டே ஆயிரம் தான். அதுவும் மொத்தமாகப் பணம் கட்ட வேண்டியதில்லை. தவணைகளில் செலுத்தினுல் போதுமானது. இவ்வளவு வசதியாகக் கிடைப்பதால்தான் கோவாவில் பலபேர் கார் வாங்கி வைத்திருக்கிருர்கள்.''

கோவாவில் எவ்வளவுக்குப் புதுப் புது மாடல் கார்களைக் காண்கிருேமோ, அவ்வளவுக்குப் பழைய ஓட்டை உடைசல் மோட்டார்கள் குவிந்து கிடப்பதையும் பார்க்கலாம்! குன்று போல் குவிந்து கிடக்கும் இத்தப் பழைய கார்களெல்லாம் வருங் காலத்தில் மண்ணேடு மண்ணுகி, அந்த மண்ணே இரும்பாக மாறி, கோவாவின் இரும்புக் கனி வளத்தை இரட்டிக்கச் செய்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை!

''பசிக்கிறது; பசிக்கிறது'' என்ருர் நண்பர்.

''எஸ்! எஸ்! ஃபார் தட் பர்ப்பஸ் ஒன்லி வீ டேக் மீல்ஸ் நௌ'' என்ருர் 'கேயெஸ்.

"சைவ உணவு சாப்பிட வேண்டும். ஏதாவது ஒரு நல்ல ஓட்டலைப் பார்த்து அழைத்துச் செல்லுங்கள்'' என்றோம். அவ்வளவுதான்; நண்பர் கேயெஸ் ஊரைச் சுற்றிச் சுற்றி வலம் வரத் தொடங்கி விட்டார்.

''எதற்காக இப்படிச் சுற்றுகிறீர்கள்? பசிக்கிறதே!'' என்றோம்.

''யூ வாண்ட் ஸிவில் மீல்ஸ்; ஃபார் தட் பர்ப்பஸ் ஒன்லி . . .'' என்றார் கேயெஸ்.

கடைசியாக சைவ உணவு விடுதி ஒன்றைத் தேடிப் பிடித்தார் அவர்.

அங்கு படைக்கப்பட்ட அரிசிச் சாப்பாட்டைக் கண்டபோது அளவற்ற மகிழ்ச்சி அடைந்தோம். அது மட்டுமா? அடுத்தாற் போல் சாம்பார் வந்தது. அதுவும் வெங்காய சாம்பார் என்றால் சொல்ல வேண்டுமா?

சாம்பாரிலுள்ள வெங்காயத்தை ஆசையோடு கையில் எடுத்துப் பார்த்தேன். என்ன அதிசயம்! அந்த வெங்காயத்துக்குக் கண் கள் இருந்தன.

''இதென்ன வேடிக்கை! இந்த ஊர் ஆனியனுக்குக் கண்கள் உண்டோ?'' என்று டிஸில்வாவிடம் ரகசியமாகக் கேட்டேன்.

''ஆனியனா! யார் சொன்னது? இது மீன் குழம்பல்லவா?'' என்றார் அவர்.

''சிவ சிவா! சைவ சாப்பாடு என்று கூறி அழைத்து வந்தாரே?''

''இது சைவ சாப்பாடுதான்; இந்த ஊரில் மீன் குழம்பு சைவ சாப்பாட்டைச் சேர்ந்ததுதான்'' என்றார் கேயெஸ்.

''ஆமாம்; காண்டாமிருகத்துக்குக் குறைந்த பிராணி எதுவானா லும் அது சைவ வகையைச் சேர்ந்ததுதான்!'' என்றார் டிஸில்வா.

''நாசமாய்ப் போச்சு!'' என்று நாற்காலியை விட்டு எழுந்தோம்.

மறுநாள் காலை மணி பதினொன்று இருக்கும்.

''இன்று இராணுவ கவர்னர் கேண்டத் அவர்களைப் பார்க்க முடியுமா?'' என்று கேட்டேன்.

''கவர்னரை அவ்வளவு எளிதில் கண்டுவிட முடியாது. பத்து நாட்களுக்கு முன்பே பேட்டிக்கு ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும்.''

'எதற்கும் முயற்சித்துப் பார்க்கலாம்' என்ற எண்ணத்துடன் சர்க்கார் மாளிகையை நோக்கிப் புறப்பட்டோம். சர்க்கார் மாளிகை வாயிலில் துப்பாக்கி ஏந்திய இராணுவ வீரர்கள் காவல் புரிந்து கொண்டிருந்தனர்.

வாயிற்படி அருகே கறுப்பு நிற கெடிலாக் கார் ஒன்று நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

''ஏற்கெனவே போர்ச்சுகீசிய கவர்னர் ஜெனரல் சவாரி செய்து கொண்டிருந்த இந்தக் கார், இப்போது நம் இராணுவ கவர்னரின் உபயோகத்தில் இருந்து வருகிறது.''

''நீங்க மெட்ராஸிலேருந்து வரீங்களா?'' - தமிழ்க் குரல் வந்த திசையில் திரும்பிப் பார்த்தோம். பேசியது காவல் புரிந்துகொண்டிருந்த ஸோல்ஜர்களில் ஒருவர்.

''உங்களுக்கு எப்படித் தெரிந்தது?'' என்று கேட்டேன்.

''உங்க வேட்டியைப் பார்த்தாலே தெரியுதே! நானும் தமிழ் நாட்டைச் சேர்ந்தவன்தான். இங்கு தமிழர்கள் பல பேர் இருக்கிறோம்'' என்றார் அவர்.

''கவர்னரைப் பார்க்க முடியுமா?''

''உள்ளே போய் விசாரியுங்க.''

வாசல் முகப்பு அறையிலேயே எங்களை மடக்கி, ''என்ன விஷயம்?'' என்று கேட்டார் ஒருவர்.

''கவர்னரைப் பார்க்க வேண்டும்.''

''அப்படியெல்லாம் நினைத்தாற்போல் பார்த்துவிட முடியாது. பாரம் ஒன்று கொடுப்போம். முதலில் அந்த பாரத்தைப் பூர்த்தி செய்து கொடுக்க வேண்டும்'' என்று சொல்லி, எங்களிடம் பாரத்தை எடுத்துக் கொடுத்தார். அதைப் பூர்த்தி செய்து அவரிடமே கொடுத்தோம்.

சற்று நேரத்துக்கெல்லாம் இரண்டு பேர் வந்து எங்களை அழைத்தார்கள். அவர்களோடு வளைந்து வளைந்து செல்லும் வழிகளையும் மாடிப் படிகளையும் கடந்து சென்றோம்.

மாடியில் ஒரு ஹால். மிகப் பெரிய ஹால். அங்கே ஒரு மூலையில் எட்டடி பத்தடி உயரமுள்ள படங்கள் சுவர் ஓரமாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. டிசம்பர் பத்தொன்பதாம் தேதிவரை அந்த மாளிகையை அலங்கரித்துக்கொண்டிருந்த பழைய வைசிராய்களின் படங்கள், இன்று கீழே இறக்கி வைக்கப்பட்டுக் கிடக்கின்றன.

ஓர் ஆட்சி மாறி இன்னொரு ஆட்சி தொடங்கப்படும் இடைவேளை விசித்திரங்களில் இதுவும் ஒன்று!

அந்தப் படங்களைப் பார்த்துக்கொண்டே ஹாலைக் கடந்து உள்ளே சென்றோம்.

ஓர் அறைக்குள் நாலைந்து இராணுவ அதிகாரிகள், மிடுக்காக உடுப்பணிந்து முறுக்கிய மீசையுடன் உட்கார்ந்திருந்தார்கள். 'அவர்களில் யார் கவர்னர் கேண்டடத்?' என்னும் சந்தேகம் எழுந்தது.

அடுத்த கணமே அவர்களெல்லாம் கேண்டத்தின் உதவியாளர்கள் என்பதை ஊகித்தறிந்து கொண்டேன்.

"நீங்கள் யார்?" அவர்களில் ஒருவர் கேட்டார்.

பத்திரிகைக்காரர்கள் என்று பதில் கூறியதும் அவர் முகம் பளிச்சிட்டது.

"என்ன விஷயமாக இங்கே வந்திருக்கிறீர்கள்?"

"கோவா வந்திருக்கிறோம். அப்படியே கவர்னரையும் பார்த்துவிட்டுப் போகலாமென்று வந்தோம்."

"இன்னும் ஒரு வாரம் கழித்து பேட்டிக்கு ஏற்பாடு செய்கிறோம். அதுவரை கவர்னருக்கு ஒய்வு இல்லை; மன்னிக்க வேண்டும்."

"நாங்கள் நாளை மறு தினமே சென்னை திரும்பியாக வேண்டும். இரண்டே நிமிஷம் பேட்டிக்கு ஏற்பாடு செய்தால் போதுமானது."

இராணுவ அதிகாரி டைரியைப் பார்க்கிறார். கைக் கடியாரத்தைப் பார்க்கிறார், கூரையைப் பார்க்கிறார். கடைசியாக டெலிபோனை எடுத்துப் பேசுகிறார்.

"சென்னை ஆனந்தவிகடன் பத்திரிகையிலிருந்து வந்திருக்கிறார்கள். தங்களுடன் இரண்டு நிமிஷம் பேச வேண்டுமாம்."

அவருக்கு என்ன பதில் கிடைத்தது என்று தெரியவில்லை. அவர் முகம் மலர்கிறது.

"சரி; நீங்கள் உள்ளே போகலாம். இப்போதே கவர்னர் உங்களை வரச் சொல்கிறார். இந்த வழியாகப் போங்கள் . . ."

இராணுவ கவர்னர் திரு கே. பி. கேண்டத் அவர்கள் அறைக்கு அழைத்துச் செல்லப்படுகிறோம்.

ஊசி விழுந்தால் சத்தம் கேட்கும் என்பார்களே, அத்தகைய மௌனம் நிலவுகிறது அங்கே. சிம்மாசனம் போன்ற நாற்காலி. அதில் அமர்ந்துள்ள திரு கேண்டத் மலர்ந்த முகத்துடன் எங்களை வரவேற்று உட்காரச் சொல்கிறார்.

முறுக்கி விட்ட மீசை! சாந்தம் ததும்பும் முகம்; பேச்சோ, பச்சை வாழைத் தண்டு போல் ஒரே குளுமை!

"ஆனந்த விகடன் பத்திரிகையிலிருந்து வந்திருக்கிறோம்."

"தெரியும்; எஸ். எஸ். வாசன்தானே அதன் ஆசிரியர்? நான் மயிலாப்பூர் சாந்தோமில் இருந்திருக்கிறேன். பி. எஸ். ஹைஸ்கூலில் படித்திருக்கிறேன் . . ." - கவர்னர் கேண்டத் கூறிய வார்த்தைகளைக் கேட்டு வியப்படைந்தோம்!

ஆடம்பரம் எதுவுமின்றி அடக்கமாக உட்கார்ந்திருந்த திரு கேண்டத் அவர்களுடன் பேசிக் கொண்டிருந்த போது ஓர்

இராணுவ கவர்னருடன் பேசிக் கொண்டிருக்கிறோம் என்ற எண்ணமே துளிக்கூட ஏற்படவில்லை.

'இவ்வளவு எளிமையாகப் பழகுகிறீர்களே, தயவு செய்து கொஞ்சம் 'கெடுபிடி' யாக இருங்களேன்' என்று சொல்லவேண்டும் போல் தோன்றியது. ஆனால் சொல்லவில்லை.

''கோவாவைச் சுற்றிப் பார்த்தீர்களா? இன்னும் எத்தனை நாட்கள் இங்கே தங்கி இருப்பீர்கள்?'' என்று விசாரித்தார் அவர்.

"பல இடங்களைச் சுற்றிப் பார்த்தோம். நாங்கள் அறிந்த வரை இங்கே இராணுவ ஆட்சி நடப்பதாகவே யாரும் எண்ண வில்லை!'' என்றேன்.

''அப்படியா! அதற்குக் காரணம், இங்கே பாகிஸ்தான் போல் 'மார்ஷல் லா' ஒன்றுமில்லையே? நான் ஒருவன்தானே இங்கு மிலிடரி ஆசாமி! மற்றவர்கள் எல்லோரும் சிவில் அதிகாரிகள்தானே?'' என்றார்.

''நீங்கள் கோவாவுக்குள் வந்தபோது நிலைமை எப்படி இருந்தது? இப்போது எப்படி இருக்கிறது?''

''நாங்கள் வந்தபோது இங்கே நிலைமை மோசமாகத்தான் இருந்தது. ரோடுகள் இல்லை. மின்சாரம் இல்லை. ரேடியோ இல்லை. பாங்குகள் இல்லை. பாங்குகள் இருந்தாலும் அவற்றில் பணம் இல்லை. இரண்டே நாட்களில் ரோடுகள் போட்டோம். பாலங்கள் அமைத்தோம். ரேடியோ ஸ்டேஷனை இயங்க வைத்தோம். பாங்குகள் திறப்பதற்கு ஏற்பாடு செய்தோம்.''

''அப்புறம் நிலைமை சீரடைந்து விட்டதா? இப்போது பிரச்னைகள் எதுவுமில்லையே?''

''இல்லையாவது! பொழுது விடிந்தால் நூறு பிரச்னைகள்! ஒருவர் வருகிறார். தாம் பாங்கியில் போட்டு வைத்திருந்த பணம் வேண்டும் என்கிறார். இன்னொருவர் வருகிறார்; பாங்கில் அடமானம் வைத்திருந்த நகைகள் வேண்டும் என்கிறார். போர்ச்சுகீசியரோ, பாங்குகளில் அடமானம் வைக்கப்பட்டிருந்த நகைகளையெல்லாம் மூட்டை கட்டிக்கொண்டு கப்பலேறிப் போய்விட்டார்கள். இப்போது நாங்கள் என்ன செய்வது? நகைகளுக்கு எங்கே போவது?''

''கோவா மக்களைப்பற்றித் தங்கள் கருத்து என்ன?''

''ரொம்ப நல்லவர்கள். போர்ச்சுகீசிய ஆட்சியில் அவர்கள் எவ்வித முன்னேற்றமும் காணவில்லை.''

''இப்போது நீங்கள் காவலில் வைத்துள்ள போர்ச்சுகீசிய ஸோல்ஜர்கள் எப்படி இருக்கிறார்கள்?''

''அவர்களுக்கென்ன கவலை? மிகவும் நிம்மதியாகவும் சந்தோஷமாகவும் இருக்கிறார்கள். அவர்களுக்கு இப்போது எவ்விதப் பிரச்னையும் இல்லை அல்லவா?''

சைத்திரிகர் கோபுலு இதற்குள் இராணுவ கவர்னரையும்; அவர் அமர்ந்திருந்த சிற்ப வேலைப்பாடுகள் மிக்க சிம்மாசனத்தையும் படம் எழுதி முடித்து விட்டார்!

அதை மகிழ்ச்சியுடன் வாங்கிப் பார்த்த திரு கேண்டத், ''ஆமாம்; இந்த நாற்காலியை எதற்காகத் தனியாக வரைந்திருக்கிறீர்கள்?'' என்று கேட்டார்.

''இந்த நாற்காலிதான் பழைய ஆட்சிக்கும் புதிய ஆட்சிக்கும் இடையே இணைப்பு கொண்ட முக்கிய சின்னமாக விளங்குகிறது. இதற்கு சரித்திர முக்கியத்துவம் உண்டு'' என்றார் கோபுலு.

அதை ஆமோதிப்பதுபோல் புன்முறுவல் பூத்தார் இராணுவ கவர்னர்!

''திரு கேண்டத் 1916-ம் ஆண்டில் பிறந்தவர். புகழ் பெற்ற ஸர் சங்கரன் நாயர் அவர்களின் பேரப் புதல்வர். சென்னை மயிலாப்பூர் பி. எஸ். ஹைஸ்கூலில் நாலு வருஷ காலம் படித்து விட்டு, பின் டேராடூன் மிலிடரி காலேஜில் சேர்ந்து இராணுவப் பயிற்சி பெற்றவர். இரண்டாவது உலக யுத்தத்தின்போது, எகிப்து, இராக், பாரசீகம் முதலிய நாடுகளில் பணி புரிந்தவர். பின்னர் படிப்படியாக முன்னேறி மேஜர் ஜெனரலாகி பதினேழாவது இந்திய ராணுவப் பகுதியின் (17th Indian Division) தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். இப்போது கோவாவின் இராணுவ கவர்னராகப் பதவி வகிக்கிறார்.'' - இந்த விவரங்களையெல்லாம் நண்பர் கூறியபோது நான் பெருமூச்சு விட்டேன்.

''ஏன் பெருமூச்சு விடுகிறீர்கள்?'' என்று கேட்டார் நண்பர்.

''ஒன்றுமில்லை; நானும்தான் 1916-ம் ஆண்டில் பிறந்தேன்! ஆனாலும் என்ன பிரயோஜனம்? இதுவரை என்னை அழைத்து யாராவது ஒரு கவர்னர் பதவி கொடுத்தார்களா? குறைந்த பட்சம் டெல்லியில் ஒரு டெபுடி மந்திரிப் பதவியாவது உண்டா?'' என்றேன்.

''சரித்திரம் எப்படியெல்லாம் மாறுகிறது பார்த்தீர்களா? அல்பான்ஸோ அல்புகெர்க்கின் கையால் அடிகோலப்பட்ட போர்ச்சுகீசிய ஆட்சிக்கு திரு கேண்டத் அவர்களின் கையால் முற்றுப் புள்ளி வைக்க வேண்டும் என்று எழுதி வைத்திருக்கிறதே! . . .'' என்றார் நண்பர்.

''போர்ச்சுகீசிய கவர்னர் ஜெனரல் இப்போது எங்கே இருக்கிறார்?'' என்று கேட்டேன்.

''இங்கே கோவாவில்தான் பாதுகாப்பில் இருந்து வருகிறார். பல போர்ச்சுகீசிய அதிகாரிகளும், சிவில் உத்தியோகஸ்தர்களும் தப்பி ஓடிக் கப்பலேறி விட்டார்கள். கவர்னர் ஜெனரல் மட்டும் தப்பி ஓடவில்லை. டிசம்சர் பத்தொன்பதாம் தேதி இரவு பத்து மணி

சுமாருக்கு மிகவும் கண்ணியமான முறையில் தங்களுடைய சரணு கதிப் பத்திரத்தை இந்தியத் துருப்பினரிடம் ஒப்படைத்து விட்டார். இப்போது நமது சர்க்காரும் அவரை மிகவும் கண்ணியமாகவே நடத்துகிறுர்கள்'' என்ருர் டிஸில்வா.

"ஃபார் தட் பர்ப்பஸ் இப்போது நாம் என்ன செய்ய வேண்டும்?'' என்று கேட்டார் நண்பர் கேயெஸ்.

''ஸெயின்ட் சேவியரின் புனித உடலை வைத்துப் பாதுகாக்கும் சர்ச்சுக்குப் போய்விட்டு வரவேண்டும்'' என்றேன் நான்.

அவ்வளவுதான்; பிரசித்தி பெற்ற அந்தக் கிறிஸ்துவ ஆலய வாயிலில் போய் நின்றது எங்கள் டாக்ஸி.

''ஆண்டுதோறும் டிசம்பர் மூன்ரும் தேதியன்று இங்கே மாபெரும் திருவிழா நடைபெறுவது வழக்கம். அதைத் தவிர ஸெயின்ட் சேவியரின் புனித உடலைப் பன்னிரண்டு ஆண்டுக்கொரு முறை பொது மக்களின் தரிசனத்துக்காக வெளியே கொண்டு வருவார்கள். அச்சமயம் சேவியரின் உடலைக் காண உலகத்தின் பல இடங்களினின்றும் மக்கள் பக்தியுடன் இங்கே வந்து கூடுவார்கள்'' என்ருர் டிஸில்வா.

''போர்ச்சுகீசியர் கோவாவை விட்டுச் செல்ல மறுப்பதற்கு இந்த செயின்ட் சேவியர் சர்ச்சும் ஒரு காரணம் அல்லவா?'' என்று கேட்டேன்.

''ஆமாம்; இந்த சர்ச்சை அவர்கள் மிகவும் முக்கியமாகக் கருது கின்றனர். இதை விட்டுச் செல்ல அவர்களுக்கு மனமில்லை, தாங்கள் போய்விட்டால் கோவாவில் கிறிஸ்துவ மதத்தின் பெருமையே குன்றிவிடும் என்று கூறுகிறுர்கள்.''

"அதெல்லாம் வெறும் பேச்சு. கோவாவில் மொத்தமே சுமார் இரண்டரை லட்சம் கத்தோலிக்கர்தான் இருக்கிறுர்கள். இந்தியாவின் இதர பகுதிகளில் எண்பது லட்சம் கிறிஸ்துவ மதத்தினர் வாழ்கிறுர்கள். சென்னைக்கு அருகில் செயின்ட் தாமஸ் சர்ச் இருக்கிறது. செயின்ட் தாமஸின் புனித உடல் அங்கே புதைக்கப்பட்டுள்ளது. அதன் புனிதம் காக்கப்படவில்லையா? இந்தியாவின் இதர பகுதிகளில் உள்ள கிறிஸ்துவர்கள் மத சுதந்திரத்துடன் வாழவில்லையா?'' என்றேன்.

கறுப்பு உடை அணிந்த கிறிஸ்துவர்கள் பலரை கோவாவில் பல இடங்களில் கண்டோம்.

''இவர்களெல்லாம் ஏன் கறுப்பு உடை அணிந்து கொண்டிருக்கிறுர்கள்?''

"இவர்களுடைய உறவினர்கள் யாராவது காலமாகி விட்டிருப்பார்கள். அந்த துக்கத்தின் அறிகுறியாக ஒரு வருட காலம்

கறுப்பு உடை அணிந்து கொள்வது இங்குள்ள கிறிஸ்துவர்களின் வழக்கம்....'' என்றார் டிஸில்வா.

''இதுதான் 'எமிஸ்ஸோரா -டி - கோவா'' என்றார் கேயெஸ்.

''அப்படியென்றால்? ...''

'' 'ரேடியோ கோவா' என்று பொருள். போச்சுகீசிய மொழியில் அதை அப்படிச் சொல்வார்கள்'' என்று கூறினார் டிஸில்வா.

''இங்குதானே நம் ராணுவத்தினர் முதல் முதல் குண்டு போட்டார்கள்?''

''ஆமாம்; விமான நிலையத்தையும் ரேடியோ ஸ்டேஷனையும் வெளி உலகத் தொடர்பின்றித் துண்டித்துவிட்டால் போச்சுகீசியர்கள் விமானம் மூலம் தப்பி ஓடவோ, ரேடியோ மூலம் தங்கள் நாட்டுக்குச் சேதி அனுப்பவோ முடியாதல்லவா?''

''இப்போது ரேடியோ ஸ்டேஷன் வேலை செய்கிறதா?''

''இரண்டே நாளில் மீண்டும் வேலை செய்யத் தொடங்கிவிட்டது, சென்னை வானொலி நிலையத்தின் டைரக்டராக இருந்த திரு எஸ். என். மூர்த்தி அவர்கள்தான் இங்கே வந்திருக்கிறார். கோவா மக்கள் விரும்பி வரவேற்கும் பல அம்சங்களை அவர் ஒலி பரப்பி வருகிறார். ரேடியோ நிகழ்ச்சிகளை இன்னும் கவர்ச்சிகரமாகவும், எல்லோரும் விரும்பிக் கேட்கும் வகையிலும் செய்வதற்கு முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறார்.''

ரேடியோ ஸ்டேஷனுக்குள் சென்று திரு எஸ். என். மூர்த்தி அவர்களைச் சந்தித்துச் சற்று நேரம் பேசிக் கொண்டிருந்தோம். கடைசியாக கோவா மக்களின் சார்பில் எங்கள் பாராட்டுதலையும் மகிழ்ச்சியையும் அவருக்குத் தெரிவித்துவிட்டு வந்தோம்.

''கோவா மக்கள் எப்போதுமே ஆடல் பாடலில் விருப்பம் அதிகம் உள்ளவர்கள். கோவா நாட்டுப் பாடல்கள் மிகவும் பிரசித்தமானவை. இங்கே பிரபலமாயுள்ள 'மாண்டோ' சங்கீதம் மேல் நாட்டுப் பாணியைத் தழுவியிருந்தபோதிலும் இந்திய சங்கீதத்துக்கே உரிய லயமும் நயமும் அதில் பொதிந்து கிடக்கும்'' என்றார் டிஸில்வர்.

''அதாவது இங்குள்ள கோவாப் பெண்கள் மேல்நாட்டு முறையில் கவுன் அணிந்திருப்பது போல்!'' என்று கூறினேன்.

''அடாடா! ரொம்பப் பொருத்தமான உதாரணம்!'' என்று பாராட்டினார் நண்பர்.

ஒவ்வொரு இந்து ஆலயத்தைச் சுற்றிலும் பல தேவதாசிக் குடும்பங்கள் இருக்கின்றன. அவர்களெல்லோரும் அந்தக் கோயிலைச் சேர்ந்தவர்கள். திருவிழாக் காலங்களிலும் விசேஷ நாட்களிலும்

அவர்கள் கோயிலுக்கு முன்னுல் ஆடிப் பாடி விட்டு வருவார்கள். இதர சமூகத்தினர் இவர்களை மதிப்புக் குறைவாக எண்ணுவதில்லை இவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளும் சட்டத்துக்குப் புறம்பாகக் கருதப்படுவதில்லை. நாங்கள் பார்க்கப் போயிருந்த குடும்பம் பெரிய மிராசுதார் குடும்பம் மாதிரி இருந்தது. அந்த வீட்டுக்குப் பெரியவர் எங்களை அன்புடன் வரவேற்று விசாரித்து உள்ளே. அழைத்துச் சென்ருர். தாமாகவே தம்முடைய பெண்களை அழைத்து தாகத்துக்குத் தண்ணீர் கொண்டு வரும்படி கூறினுர்.

"உங்களுக்கு எத்தனை பெண்கள்?''

''மூன்று பேர்; ஒருத்தி பெல்காமில் பத்தாவது படிக்கிருள். இப்போது லீவுக்கு இங்கே வந்திருக்கிருள். அவளுக்கும் பாடத் தெரியும்.'' - அவள் பெயரைச் சொல்லி அழைத்து கொங்கணியில் அவளிடம் ஏதோ கூறினுர். அதைக் கேட்டதும் அந்தப் பெண் வெட்கத்தோடு தலையைக் குனிந்து கொண்டாள். அவளுடைய சகோதரிகள் வந்தார்கள். ஒருவரை ஒருவர், நீ பாடு, நீ பாடு என்று சொல்லிக் கொண்டிருந்தார்கள். கலியாணங்களின்போது நமது வீட்டுப் பெண்கள் நலங்குப் பாட்டுப் பாட ஆயிரம் 'பிகு' செய்து கொள்வார்களே, அந்த மாதிரி பிகு செய்துகொண்டார் கள். கடைசியாக ஒரு பெண் நாட்டுப் பாடல் ஒன்றைப் பாடினுள். இன்னொரு பெண் கிருஷ்ணனைப் பற்றிய பஜனைப் பாடலைப் பாடி னுள். மொழி கொங்கணியாயிருந்த போதிலும் கிருஷ்ணனுடைய பெயர் இடையிடையே வந்து கொண்டிருந்ததிலிருந்து இது தெரிந்தது!

பாட்டு முடிந்ததும் ''போய் வருகிருேம்'' என்று விடை பெற்றுக்கொண்டு வாசலுக்கு வந்து டாக்ஸியில் ஏறிக்கொண் டோம். நண்பர் கேயெஸ் மட்டும் அந்தப் பெண்களுடன் ஏதோ பேசிக் கொண்டிருந்தார். பேச்சுக்கிடையே அந்தப் பெண்கள் 'கல கல'வெனச் சிரிக்கும் ஒலி எங்கள் காதில் விழுந்தது! நண்பர் கேயெஸ் வெளியே வந்ததும், ''அவர்கள் என்ன சொன்னுர்கள்? ஏன் சிரித்தார்கள்?'' என்று கேட்டோம்.

'' 'இவர்களெல்லாம் எந்த ஊர்க்காரர்கள்? ஏன் இவ்வளவு வெட்கப்படுகிருர்கள்? வாயைத் திறந்து பேசவே இல்லையே!' என்று சொல்லிச் சிரித்தார்கள்.''

''நீங்கள் என்ன சொன்னீர்கள்?''

''அவர்களெல்லாம் ஊமைகள். பேசத் தெரியாது!'' என்று பதில் சொல்லிவிட்டுப் பத்து ருபாயை அவர்களிடம் கொடுத்து விட்டு வந்தேன்'' என்ருர்.

''பத்து ருபாயா! எதற்கு?''

''பாட்டுப் பாடினார்கள் அல்லவா? ஃபார் தட் பர்ப்பஸ் ஒன்லி'' என்றார்.

கோவா முழுதும் சுற்றிப் பார்த்தபோது நாங்கள் திரும்பத் திரும்பக் கண்ட காட்சி வயல்களும் மலைகளும் காடுகளும் தான். வயல்களிலும் பெரும் பகுதி பாழ்பட்ட தோற்றமே அளித்தன.

''போர்ச்சுகீசிய ஆட்சியில் இங்கே எந்த விதமான தொழிலும் முன்னேற்றம் அடையவில்லை. விவசாயம் மிகவும் மோசமான நிலையில் உள்ளது. அதற்குக் காரணம் நிலத்தில் பாடுபட்டுப் பயிர் செய்கிறவர்கள் மிகக் குறைவு'' என்றார் டிஸில்வா.

''அப்படியானால் இங்குள்ள மக்கள் பிழைப்புக்கு என்ன செய்கிறார்கள்?''

''சுமார் நாற்பதாயிரம் பேர் சுரங்கங்களில் வேலை செய்கிறார்கள். சுரங்கத் தொழிலில் நாள் ஒன்றுக்கு ஆறு ரூபாய் வரை கூலி கிடைக்கிறது. நிலத்தில் பாடுபட்டால் இன்றைக்கெல்லாம் ஒன்றரை ரூபாய்க்கு மேல் கிடைப்பதில்லை.''

''மற்றவர்கள் என்ன செய்கிறார்கள்?''

''சிலர் வியாபாரம் செய்கிறார்கள். சிலர் பள்ளிக்கூட ஆசிரியராயிருக்கிறார்கள். வேறு சிலர் பாங்குகளிலும் தபாலாபீசுகளிலும் வேலை பார்க்கிறார்கள். பள்ளிக்கூட ஆசிரியராக வேலை பார்த்தால் கோவாவில் பார்க்க வேண்டும். தபால்காரராக வேலை செய்தால் கோவாவில் செய்ய வேண்டும்'' என்றார் அவர்.

''அதென்ன அப்படிச் சொல்கிறீர்கள்?''

''ஆமாம்; இவர்களுக்கெல்லாம் இங்கே என்ன சம்பளம் தெரியுமா? தபால்காரருக்கு 220 ரூபாய்! பள்ளிக்கூட ஆசிரியருக்கு 400 ரூபாய்! போச்சுகீசிய சர்க்கார் போகிற போக்கில் இவர்களுக்கெல்லாம் சம்பளத்தை உயர்த்திவிட்டுப் போய்விட்டார்கள். 'நாம் தான் நாட்டை விட்டுப் போகப் போகிறோமே, போகு முன் சம்பளத்தையாவது உயர்த்தி விட்டுப் போகலாம்' என்று எண்ணிச் செய்தார்களோ என்னவோ!

இங்குள்ள வியாபாரிகளைப் பற்றியோ சொல்ல வேண்டியதே இல்லை. வெளிநாடுகளிலிருந்து ஆடம்பரப் பொருள்களை இறக்குமதி செய்து கள்ளக் கடத்தல் மூலமாகக் கொள்ளை விலைக்கு விற்றுக் கொண்டிருந்தார்கள். டிரான்ஸிஸ்ட்டர் ரேடியோ, மதுபான வகை, கைக் கெடிகாரம், தங்கம், பௌண்டன் பேனா, நைலான் போன்ற சட்டைத் துணி இவ்வளவும் வந்து கொண்டிருந்தன. உலகத்திலுள்ள நவ நாகரிகப் பொருள்கள் அனைத்தும் கோவா மக்களுக்குக்

கிடைத்துக்கொண்டிருந்தன. ஆனல் ஒன்று மட்டும்தான் இல்லை . . .''

''அது என்ன?''

''சுதந்திரம்! பேச்சுரிமை கிடையாது. பொதுக் கூட்டம் போட முடியாது. எதற்கெடுத்தாலும் அடக்கு முறைதான். 1948-ல் மகாத்மாஜி சுட்டுக் கொல்லப்பட்ட சேதி கேட்டு நாங்கள் துடி துடித்துப் போனேம். மகாத்மாஜி மறைந்த துக்கத்தைக் கொண்டாட பொதுக் கூட்டம் நடத்த விரும்பினேம். ஆனல் போர்ச்சுகீசிய சர்க்கார் அனுமதி அளிக்க மறுத்து விட்டார்கள். கெஞ்சிக் கூத்தாடிய தன் பேரில் பேச்சாளர்கள் பட்டியலையும் அவர்கள் என்ன பேசப் போகிருர்கள் என்னும் விவரத்தையும் தெரிந்து கொண்ட பிறகே அனுமதி கொடுத்தார்கள். அதுவும் எப்படி? கூட்டத்தில் 'மகாத்மா காந்திக்கு ஜே!' என்று யாரும் கோஷம் செய்யக்கூடாது என்ற நிபந்தனையுடன்.''

''கோவா மக்களின் சுதந்திரம் பற்றி மகாத்மாஜியே ஒரு முறை கவர்னர் ஜெனரலுக்குக் கடிதம் எழுதியிருந்தாரே, அது தெரியுமா உங்களுக்கு?'' என்று கேட்டேன்.

''அப்படியா? அது என்ன?'' என்று ஆவலுடன் கேட்டார் டிஸில்வா.

18-7-1946-ல் காந்திஜி கோவாவின் அப்போதைய கவர்னர் ஜெனரலான ஜோஸ் போஸ்லாவுக்கு ஒரு கடிதம் எழுதினுர். அந்தக் கடிதத்தின் சுருக்கத்தைச் சொல்கிறேன், கேளுங்கள் :

'கோவாவில் வாழும் இந்தியர்கள் வாய் மூடி மௌனிகளாயிருப்பதற்கு போர்ச்சுகீசிய ஆட்சியின் பெருந்தன்மை காரணமல்ல. அவர்களுடைய பயங்கர ஆட்சியே காரணம். கோவா மக்கள் பூர்ண சுதந்திரத்துடன் வாழ்கிருர்கள் என்று நீங்கள் கூறுவதை நான் ஒப்புக் கொள்வதற்கில்லை . . . . . . பாரத தேசம் சுதந்திரம் பெறும் வரை கோவா மக்கள் கோவாவின் விடுதலைக்காகக் காத்திருக்க முடியும். ஆயினும் அவர்கள் தங்களுக்குள்ள மனித உரிமைகளையும் சுயமரியாதையையும் இழந்துவிட முடியாது.''

அவ்வளவுதான்; கோவாவை விட்டுப் புறப்பட வேண்டிய காலம் நெருங்கி விட்டது. எனவே, நானும் நண்பரும் கோவா அன்பர்களிடம் விடை பெற்றுக்கொண்டு சென்னைக்குப் புறப்பட்டோம்.

வழியெங்கும் 'அட்டென்சோ' என்னும் எச்சரிக்கை போர்டுகள் எங்கள் கண்களில் தென்பட்டன. கார் ஓட்டிகளை எச்சரிக்கும் இத்தகைய போர்டுகள் கோவாவில் எந்த ரோடுகளைப் பார்த்தாலும் நிறையக் காணப்படுகின்றன.


அவற்றைக் கண்டபோதெல்லாம் எனக்கு ஒரே எண்ணம் தான் உண்டாயிற்று.

அதாவது, இனி இந்த போர்டுகள் மோட்டார் ஓட்டிகளை மட்டும் எச்சரிக்கும் போர்டுகள் அல்ல. கோவாவின் அரசியல் வாதிகள், ஆட்சியாளர்கள், பொது மக்கள் எல்லோருமே வருங் காலத்தில் எச்சரிக்கையாக நடந்து கொள்ள வேண்டும் என்பதைத் தான் எச்சரிக்கின்றன என்று எண்ணிக்கொண்டேன்.

''விவா கோவா லிவ்ரே!''

''வாழ்க கோவா சுதந்திரம்!''

முற்றும்





ஆசிரியர் சாவி

ஆசிரியர் 'சாவி' எழுதிய 'வாஷிங்டனில் திருமண'த்தைப் படிக்காதவர்களோ, அல்லது அதைப் பற்றித் தெரியாதவர்களோ, தமிழ் நாட்டில் மட்டுமல்ல தமிழ் பேசும் மக்கள் வசிக்கும் இடங்களிலும் கூட இருக்க முடியாது.

சா. விசுவநாதன் என்பது இவரது இயற்பெயர். 1942 ஆகஸ்ட் சுதந்தரப் போராட்டத்தில் ஈடுபட்டு, ஒன்பது மாத காலம் சிறைவாசம் அனுபவித்த அரசியல் தியாகி. 1947-ம் ஆண்டில் கிழக்கு வங்காளத்தில் மூண்ட வகுப்புக் கலவரத்தின் போது, அங்கே காந்தி மகாத்மா நடத்திய அகிம்சா யாத்திரையில் நேரில் கலந்துகொண்டு, இவர் கல்கியில் எழுதிய 'நவகாளி யாத்திரை' என்னும் கட்டுரைகள் புத்தகமாகவும் வந்துள்ளது.

சோவியத் ருஷ்யா, கிழக்கு ஜெர்மனி, ஜப்பான், ஹாங்காங்; தாய்லாந்து, சிங்கப்பூர், மலேசியா, பங்களா தேஷ் முதலிய நாடுகளில் சுற்றுப்பயணம் செய்து இவர் தினமணி கதிரில் எழுதிய கட்டுரைகள் வாசகர்களால் பெரிதும் வரவேற்கப்பட்டன. புத்தக வடிவிலும் வந்துள்ளன.



பூம்புகார் பிரசுரம்

சென்னை-600 013.